ஸ்ரீ:

கலி : 4370
விபவஸு
1268

கலி : 5070
நீலகஸு
1968

ஸ்ரீ தேசிகன் ஏழாவது நூற்றாண்டு விழா

ஸ்ரீ ஸக்திகள்

வெளியீடு

நாலாவது விபாகம்

பாகம் – 1

அம்ருதரஞ்ஜனீ
ரஹஸ்யங்கள்
(17)

ரஹஸ்யங்கள்

ஸ்ரீமான் நாராயணன் ஒருவனுமே
ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்

முத்திக்குருள் சூட மூன்றாறுத் தெளி முன்னம்
இத்திக்கால் ஏற்கும் இதம்

ஸ்ரீ அகில தம: கர்சந
தேசிக தர்சந ஸபை
பராங்குச மந்திரம்
சென்னை - 5

ஸ்ரீ தேசிகன் ஆண்டு 696 ஸு
குரோதி : மார்கழி : திருவோணம

விலை] 5 - 1 - 65 [ரூ. 5

ஸம்புடம் 5

ஸ்ரீ:

இந்த ஸம்புடம்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும்

ஸ்ரீ தேசிக பக்தர்கள் செய்யும் த்ரவ்ய ஸஹாயத்தினால்

அவர்கள் அநுமதியுடன்

ஆசார்யனை அநுக்ரஹிப்பதற்கென்றே

அயிந்தை மாநகரில் முன்னிவந்து அமர்ந்த

அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வ நாயகன்

அநுக்ரஹமாக வெளியிடப்படுகிறது

இந்த ஸம்புட ஶோதநகைங்கர்யத்தில் அந்வயித்தருளிய ஸ்வாமிகளின் திருநாமங்கள்.

ஸ்ரீ உப வே.

வேங்கடாத்ரி அகரம் அநந்தாசார்யர் ஸ்வாமி, மதராஸ்
டி. டி. தாதாசார்யா ஸ்வாமி, திருப்பதி
அக்நிஹோத்ரம் நாராயணாசார்யர் ஸ்வாமி, நாவல்பாக்கம்
ஐயா தேவநாத தாதாசார்ய ஸ்வாமி, நாவல்பாக்கம்
உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, மாம்பலம்
தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்
வ. ந. ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி, திருவிண்ணகரம்
சக்ரவர்த்தியாசார்யர்ஸ்வாமி. ஸ்ரீஅஹோபில மடம்,
முக்கூர்(முகாம்)
மேல்மா நரஸிம்ஹ தாதாசார்யர் ஸ்வாமி, மதராஸ்
வில்லிவலம் நாராயணாசார்யர்ஸ்வாமி, மதுராந்தகம்
கோழியாலம் சடகோபாசார்யர் ஸ்வாமி. திருப்பதி
நல்லூர் ஸ்ரீநிவாஸராகவாசார்யர் ஸ்வாமி, வில்லிவாக்கம்
ஜி. கே. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதராஸ்
ஆர். கோபாலஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்
டி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதராஸ்
ஏ. ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி மதுரை
வீ. கே. ஶேஷாத்ரியாசார்யர் ஸ்வாமி, அண்ணாமலைநகர்

பதிப்பாளர்கள்—

கோமடம் எஸ். எஸ். ஐயங்கார்,
வ. ந. ஸ்ரீராமதேசிகாசார்யர்.

இந்த ஸம்புடம் அச்சிடுவதற்கு த்ரவ்ய ஸஹாயம் செய்தருளிய ஸ்ரீ தேசிக பக்தர்களின் திருநாமங்கள்

	ரூ
1 ஸௌ. சம்பக லக்ஷ்மி அம்மாள் * 50, டி. பி. கோயில்தெரு, சென்னை—5	105
2 ஸ்ரீ உப. ஆர். நரஸிம்ஹன், 52, டி. பி. கோயில் தெரு, சென்னை—4	110
3 ஸ்ரீ உப கே. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீபுரம், சென்னை—14	350
4 ஸ்ரீ ஆர். கோபாலஸ்வாமி ஐயங்கார், அட்வகேட், சென்னை—17	350
5 ஸ்ரீ உப டி. ராமஸ்வாமிஐயங்கார் அட்வகேட், செனனை—7	350
6 ஸ்ரீ உபசேட்டலூர் ஸ்வாமி திருவடிஸம்பந்தி * 67, மௌப்ரேஸ் ரோட், மெட்ராஸ்—18	56
7 ஸ்ரீ உப டி. என். ஸுந்தரராஜ ஐயங்கார், 50, டி. பி. கோயில்தெரு, மெட்ராஸ்—5	60
8 ஸ்ரீமான் ஆதிநாராயண ரெட்டியார் * 4, நாதமுனிநாயுடு தெரு, மெட்ராஸ்—30	105
9 ஸ்ரீ உப வி. டி. வேதாந்த ராமாநுஜாசார்யர், அட்வகேட், பூவிருந்தவல்லி	56
10 ஸ்ரீ உப ஸீ. ஆர். ராஜகோபாலாசார்யர், அட்வகேட், திருப்பாப்புலியூர்	110
11 ஸ்ரீ உப கே. எஸ். ஸ்ரீநிவாஸாசார்யர், திருவஹீந்த்ரபுரம்	60
12 ஸ்ரீமான் கே. வீரநாராயண தாஸ், நைனார் குப்பம்	60
13 ஸ்ரீமான் கே. தம்புஸாமி: தேவங்குடி	60
14 ஸ்ரீமான் ஆர். வேங்கடாசலமழவராயர், குளக்குடி கிராமம்	60
15 ஸ்ரீ உப சடகோபாசார்யர், அட்வகேட், திருப்பாப்புலியூர்	60
16 ஸ்ரீ உப என். டி. ஸ்ரீராமாசார்யர், அட்வகேட், திருப்பாப்புலியூர்	60

17 ஸ்ரீ உப என். கோபால ஐயங்கார், 60
அட்வகேட், புதுப்பாளையம்

18 ஸ்ரீ உப எஸ். ஆர். தாதாசார்யர்,
அட்வகேட், புதுப்பாளையம் 60

19 ஸ்ரீ உப வீ. ஆர் ஸ்ரீநிவாஸஐயங்கார்,
12 ஏ, மெயின் ரோட். கடலூர் 60

20 ஸ்ரீ உப ஸீ. பி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,
8, ரிவர் ஸைட், ரோட், புதுப்பாளையம் 60

21 ஸ்ரீ உப டீ. எஸ் ஸ்ரீநிவாஸாசார்யர்,
8, ரிவர் ஸைட் ரோட், புதுப்பாளையம் 60

22 ஸ்ரீ உப ஆர். ஸம்பத்குமார்,
அட்வகேட். கடலூர் 60

குறிப்பு—1. பணம் கொடுத்த தேதியின் க்ரமத்தை அனுஸரித்ததாயிருக்கும் கீழ்க் கூறப்பட்ட திருநாமங்களின் வரிசை.

2 * குறியிட்ட திருநாமங்கள் திருவஹீந்திரபுரம் மஹாமஹோபாத்யாய சேட்டலூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் நினைவுக்காக அளித்தவர்கள

ஸ்ரீ:

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

பதிப்பாளர்களின் விண்ணப்பம்:—

ஆசார்ய ஸார்வ பௌமன் (ஆசார்யர்களில் ஶ்ரேஷ்டர்) எனப் பின்புள்ளோரால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில்

' ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாமந்யாம் ந மந்யாமஹே '

என்று ஆசார்யனே பரதேவதை எனறும், அவருடைய திருவடிகளே பரமபதத்திலும் நமக்கு உத்தேஶ்யம் என்றும், இருள் அனைத்தையும் மாற்றி, மனத்தில் ஞானவிளக்கை ஏற்றியதற்குக் கைம்மாறு மாயனும் காணகில்லானுகிலும் ஶிஷ்யன் தன்பேருக அவரைப் போற்றி உகந்து புந்தியில் கொண்டு சாற்றி வளர்க்க வேண்டும் என்றும், அப்படி வளர்ப்பது எப்படி என்பதை

'அஶிதில குருபக்தி: தத் ப்ரஶம்ஸாதிஶீல:
ப்ரசுர பஹுமதி: தத் வஸ்து வாஸ்த்வாதிகேபி '

என்றும் நிர்ணயித்துள்ளார்.

இது ஆசார்யர்கள் எல்லோருக்கும் பொதுவானுலும் ஸ்ரீதேசிகன் விஷயத்தில் இது கைமுதிக ந்யாயஸித்தமாகும். ஆகையினுல் அவர் திருவவதாரம் செய்தருளிய ஏழாவது நூற்ருண்டு வருகிற கீலக ஹு புரட்டாசித் திருவோணமாகிற திருநன்ருளை விஶேஷித்துக்கொண்டாடவேண்டியது அவருடையதிருவடிஸம்பந்திகளான தம்முடைய கடமை என உணர்ந்த சில தேசிக பக்தர்கள் ஸ்ரீ அகில தம:கர்சந தேசிக தர்சந ஸபை என்கிற ஒரு ஸபை ஏற்படுத்தி, அதின் ஆதரவில் அக்கைங்கர்யத்தைச் செய்ய முன் வந்திருக்கிருர்கள். அதில் ஒரு அம்சம் அவருடைய ஸ்ரீ ஸூக்திகளை ப்ரசுரிப்பது. இதை அடியொற்றி அவற்றில் ரஹஸ்ய விபாகத்தில் முதல் பாகமாகும் இந்த ஸம்புடம்.

இதை, ஸ்வாமிதேசிகன் விஶேஷித்து அபிமானித்துத்தம்முடைய விபவ தஶையில் வெகு காலம் எழுந்தருளியிருந்ததும் அதின் சின்னங்களாக அவர் எழுந்தருளியிருந்த திருமாளிகை, அவர் நிர்மாணம்செய்தருளிய திருக்கிணறு முதலியவைகள் ஸுரக்ஷிதமாக இருப்பதும், அவருடைய நிர்ணயத்தின்படி அவருக்குப் பகவானுக்குப் போலே ப்ரஹ்மோத்ஸவம் முதலான ஸகல வைபவங்களும் நடத்தப்பட்டு வருகிறதும், அடியவர்க்கு மெய்யனுடைய நியமனத்தை ஶிரஸா வஹித்து அருளிச்செய்த ஸூக்திகள் முதல் முதல் ஆரம்பித்த ஸ்தலமுமான திருவஹீந்திரபுரத்திலே வெளியிடுவது மிகவும் பொருத்தமானது எனக்கருதி, அவர் திருவவதார நாளாகிய ஶ்ரவணமாத்ரமன்றிக்கே, அவர் ஶிபியை ஜயிப்பது என்கிற வ்யாஜத்தை முன்னிட்டு திருவரங்கத்து எம்பெருமானுடைய நியமனத்தினால் ஸர்வலோகோஜ்ஜீவநார்த்தமாக ஏறியருளப் பண்ணிய தம்முடைய திவ்ய அர்ச்சா விக்ரஹம் அவதரித்த மார்கழிஶ்ரவணத்தன்று வெளியிடுவதுமிகவும் பொருத்தமாகுமெனக்கருதி அது வரையில் அச்சிடப்பட்ட பாகம் மட்டும் வெளியிடப்பட்டது. மிகுதியையும் அச்சிட்ட பிறகு அவர் விஷயமான 'ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய:' என்னும் தனியன் அவதார தினமான சித்திரை புனர்வஸுவில் பெண்டு செய்யப்பட்டு வெளியிடப்படுகிறது.

இனி மற்றைய ஸம்புடங்கள் யதா க்ரமம் வெளியிடப்படும். இந்த மஹாகைங்கர்யத்தைப் பூர்த்தி செய்து வைக்கும்படி (அன்று தன் விஷயமான ஸ்தோத்திராதிகளை அருளிச்செய்யாமல் அயிந்தையை விட்டுப் புறப்பட்டுப்போன ஆசார்யனை இடைமறித்து

'முந்தைமறை மொய்யவழி மொழி நீ'

என நியமித்தருளிய அடியவர்க்கு மெய்யனே, இந்த ப்ரசாரகைங்கர்யம் நம் போலியர்களினால் நிறைவேற்ற முடியாதென இருந்த அடியோங்களை இதில் ப்ரவர்த்திக்கும்படி சில பாகவதர்கள் மூலமாய் ஆஜ்ஞாபித்தபடியினால்) அவனையேப்ரார்த்திக்கும

6 5 65 பதிப்பாளர்கள்

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

முகவுரை

ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய சரித்ராம்ருதமும், அவருடைய ஸ்ரீஸூக்திகளின் ஸங்க்ரஹம் முதலியவைகளும்

ஸ்ரீ தேசிகனும் அவருடைய ஸ்ரீ ஸூக்திகளும்

என்று தலைப்பு வெளியிடப்படப் போகிறபடியினால் அந்த அம்சங்கள் இங்கு கூறப்படவில்லை.

ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸ்ரீஸூக்திகள் 116 என்று கணக்கிடப்பட்டிருக்கிறன. அவற்றை எட்டு விபாகங்களாக்கி அவை ஒவ்வொன்றிலுமுள்ள ஸ்ரீ ஸூக்திகளின் விளக்கம் கீழே (விஸ்தரமாக) கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இப்பொழுது இந்த ஸம்புடத்தில் வெளியிடப்படும அம்ருதரஞ்ஜனீ ரஹஸ்யங்கள் — நாலாவது விபாகத்தில், முதல் பாகத்தைச் சேர்ந்ததாகும். இதற்கு அவச்யாபேக்ஷிதமான அம்சங்களே இங்கு நிரூபிக்கப்படுகின்றன.

அநந்தங்கள் எனக் கூறப்படும் ஸம்ஸ்க்ருத வேதங்கள், நாலாயிரம் எனப்படும் சந்த மிகு தமிழ் மறைகள் என இரண்டையும் சேர்த்தே ஸ்ரீ வைஷ்ணவர்கள் உபயவேதாந்தங்கள் என்று அங்கீகரித்துத் தங்களை உபய வேதாந்தாசார்யர்கள் என்று வ்யவஹரித்துக் கொண்ட போதிலும் தாம்ரபர்ணீ நதிக் கரையில் திருவவதரித்தருளிய ஆழ்வாரால் ப்ரத்யக்ஷீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஸர்வீய சாகைக்கு ஒரு ஏற்றம் உண்டு என்பது ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம். இதைப் பல இடங்களில் பல படிகளில் அவர் தாமே நிரூபித்தருளியிருக்கிறார். ஸ்ரீ ப்ரதானசதகத்தில்,

'சித்தரஞ்ஜனத்தோடே ஸர்வரையும் எளிதாகத்தெளிவிக்குமவற்றில் தொண்டர்க்கமுதுண்ணலாய்ப்பொய்யில் பாடலான ஆழ்வார்கள் அருளிச்செயல்ப்ரதானம்'

என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே, அதாவது ஸர்வரும் அதிகரிக்கலாம்படியும் சித்தரஞ்ஜனத்தோடு தெளிவிக்கும்படியும் இருக்கிறபடியினால் உபய

முகவுரை

வேதாந்தார்த்த ஸங்க்ரஹமான ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளிலும் ரஹஸ்யங்கள் என்பவை ஒரு விஷேச மேன்மை பெற்றிருக்கும்.

இருள் தருமா ஞாலத்துள்ள அனைவர்க்கும் சாஸ்த்ரமாகிய ஜ்ஞானக் கண்ணைக் கொடுத்து மண் மேல் நின்ற நோய்கள் தவிர்ப்பதற்காக, அன்றிவ்வுலகினையாக்கி, அரும்பொருள் நூல் விரித்து நின்று,

தண் நீள் புகழ் வேங்கடமாமலை மேவி நின்றவனே,
மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறைமார்பன்தாளாம்
தூமலர் சூடிய தொல்லருள் மாறன் துணையடிக் கீழ் வாழ்வையுகக்கும்

இராமாநுச முனி வண்மை போற்றும் சீர்மையனாய்,

எப்பாலைக்கும் சேமத்ததான திருத்தண்கா என்னும் திவ்யதேசத்தில் தூப்புல் குலத்திற்கு ஒரு மணியாய் வென்றிப் புகழ் திருவேங்கடநாதன் என்னும் குருவாய்த் தோன்றி,

காவலன் எங்கள் கிடாம்பிக்குலபதி அப்புளார் தம்தேமலர்சேவடி சேர்ந்து பணிந்து அவர் தம்மருளால் நாவலரும் தென் வடமொழி நற்பொருள்பெற்று,

மாநிலத்தோதிய மாமறை மன்னிய நற்கலைகள் ஆனவை செய்யும் அரும்பொருள் அத்தனையே அருளும் தூநெறி காட்டும் இராமாநுச முநியைத் தோத்திரம் செய்து,

வியன்கலைகள் மொய்த்திடுநாவின் முழக்கொடு வாதியர் மூலமறக் கைத்தவன்,

ஆருக எண்ணும் அரும் சருமமும் ஞானமும் காதல் கொண்டு வேருக நிற்கும் விரகும் விரத்தியும் இல்லாமல்சீரார்கதியிலும் திண்மதி தேருது பொருளானது ஒன்றும் பொருந்தாது மருளே மிகுத்து மறையவர் நல்வழி மாற்றி நின்று,

'தெருளார் மறைமுடித் தேசிகனே ! எங்கள் தூப்புல் தேவே !
அருளாய், உன்னருளன்றி எனக்குஆறில்லையே ' என்றும்,
'இடர்தரும் இப்பிறவிக்கடலில் வீழ்ந்தலமர்ந்த என்னைக்
கடையறப் பாசம் கழற்றி நின் தாளிணை காணும் வண்ணம்
உடையவனே அருளாய் ' என்றும் தன்னை ஆச்ரயித்தவர்களுக்குக்
கற்பகமாய் நின்று, தன் படியே அருள் புரிந்து, இரு வல் வினையும் விலக்கி, இதம் கருதி, மன்னிய திருமந்திரம் ஓதும் பொருள் நிலையைப் பொன்னருளால் அருளி, களக்காதல் செய்யும் நிலை கடிந்து, காத்தருளி, தன் தொண்டரையே எண்ணும் உள்ளம் தந்து. பொங்கும் இவ்டர்க் கடலைத் தாண்டுவித்து, நரகின் இடர் மாற்றி, தம் தாளிணை காணும் வண்ணம் அருளி,

தொண்டர் உகக்கும் துணை ஆடி வாழி . . . வாழி நின்வடிவே '
என்று பின்புள்ளோர் அநுஸந்தித்து மகிழும்படி தம் அர்ச்சா விக்ர

ஹத்தை ஏறியருளப் பண்ணி, அத்தைத் தாம் விசேஷித்து அபிமானித்துப் போந்த திவ்ய தேசத்தில் திருப்ரதிஷ்ட்டை செய்தருளி, தன்னடிச் சோதிக்கு எழுந்தருளினர் என்பது அனேகமாய் அனைவரும் அறிந்த விஷயம்.

இப்படிப்பட்ட மேன்மையையுடைய இவ்வாசார்யன் ஸர்வலோக ஹிதார்த்தமாக அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகள் 116. அவற்றில் 34 ரஹஸ்யங்கள் என்னப்படும். ஸாமாந்யமாய் ரஹஸ்யங்களும் ஸதஸ்யங்களும் பரஸ்பரம் முரண்படுமவை என்று தோன்றலாம்.

'திரளிலே சொல்லுமவைகளில் சிலஅர்த்தங்களை ஏகாந்தத்திலே சொல்ல விதிக்கையாலே அவற்றை ரஹஸ்யங்கள் என்கிறது' என

ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தியில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக கீதையில் 18 - 66 ம் ச்லோகம் ஸதஸ்யமேயானாலும்(திரளிலே சொல்லக் கூடியதானாலும்) அதின் விசேஷார்த்தங்கள் ரஹஸ்யங்கள்(ஏகாந்தத்தில் சொல்லப்படவேண்டியவைகள்). இப்படியே ராமாயணாதிகளிலுள்ள சரணாகதி விஷயமான ச்லோகங்கள் ஸதஸ்யங்களாயும் அவற்றின் அர்த்த விசேஷங்கள் ரஹஸ்யங்களாயும் நிற்குமவைகளாகும். இந்த வரையறை கீதாசார்யனாலேயே விதிக்கப்பட்டதாயிருக்கும்.

இந்த ரஹஸ்யங்கள் விஷயமாகக் கூறவேண்டிய அம்சங்கள் எல்லாம் ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய சரித்ரத்தில் பரக்க நிரூபிக்கப்படுகிறபடியினால் இங்கு ப்ரசுரிக்கப்படும் 'அம்ருத ரஞ்ஜனீ' ரஹஸ்யங்களைப் பற்றிய அம்சங்கள் மாத்ரம் நிரூபிக்கப்படுகின்றன. 'ரஞ்ஜனீ' என்னும் பதம் ஆஹ்லாதகரமான என்னும் அர்த்தத்தைச் சொல்லும். இந்தத் திருநாமத்திற்கு ஏற்ப எல்லோருக்கும் சித்தரஞ்ஜகமாய் இருக்கும்படி ஸம்ப்ரதாயார்த்தங்கள் ஸங்க்ரஹ விஸ்தரப்ரக்ரியையிலே நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

இவை 17 ரஹஸ்யங்கள். இவற்றில் ஸார தீபம் என்னும் பதினேழாவது ரஹஸ்யம் லுப்தம். முதலில் இந்த ஸம்ப்ரதாயவிஷயமான அம்சங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. மிகுதியான பதினைந்தையும் பதவீ, நவநீதம், மாத்ருகை, ஸந்தேசம், ரத்னாவளீ, களஙம் என்று ஆறு பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் முதலில் தத்த்வ விஷயமாயும், அதற்கு மேல் ரஹஸ்ய விஷயமாயும் மாறி மாறி அர்த்த விசேஷங்கள் நிரூபிக்கப்படுகிறன. ஸ்ரீ ரஹஸ்ய ஸந்தேசத்திற்கும். தத்த்வ ரத்னாவளிக்கும் ஸங்க்ரஹமாக ஸ்வாமி தாமே விளக்கம் காட்டியுள்ளார். ஸ்ரீ ரஹஸ்ய ரத்னாவளிக்கு மிகவும் விஸ்தரமான வ்யாக்யானம் அருளிச்செய்திருக்கிறார். இந்த ரஹஸ்யங்களிலுள்ள ஆத்யந்தப் பாட்டுக்களை மட்டும்

சேர்த்து ஸ்ரீ தேசிக ப்ரபந்நத்தில் 'அம்ருத ரஞ்ஜனீ' என்று ஒரு ப்ரபந்தமாக அநுஸந்திக்கப்படுகிறது.

இந்த ஸம்புடத்தில் அடங்கிய ரஹஸ்யங்களில் ஸ்ரீ ஸம்ப்ரதாயபரிசுத்தி, தத்த்வ பதவீ, ரஹஸ்ய ரத்னாவளீ, ரஹஸ்ய ரத்னாவளீ ஹ்ருதயம், தத்த்வ த்ரய சுளகம், ரஹஸ்ய த்ரய சுளகம், ஸார தீபம், என்கிற எட்டும் காஞ்சீபுரத்திலும், ஸ்ரீ ரஹஸ்ய நவநீதம், திருவேங்கடத்திலும், ஸ்ரீ தத்த்வ மாத்ருகை ரஹஸ்ய மாத்ருகை தத்த்வ ஸந்தேசம், தத்த்வ ஸந்தேச விவரணம், தத்த்வ ரத்னாவளீ, தத்த்வ ரத்னாவளீ ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம், இவைகள் ஏழும் ஸ்ரீரங்கத்திலும் அருளிச்செய்யப்பட்டவைகளாயிருக்கும்.

இவைகளுள் ஒன்றுக்கும் ப்ராசீனமானவ்யாக்யானமில்லை. பாட்டுக்களுக்குமட்டும் இரண்டு வ்யாக்யானங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. மூலம் மாத்திரம் அடங்கிய நாலு பதிப்புக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவைகள் அகப்படுவது துர்லபமாய்ப் போய்விட்டது. இந்த துஸ்ஸ்த்திதியைப் பார்த்து மிகவும் சோகித்து, ஆசார்யனுடைய ஸ்ரீஸூக்திகளின் ப்ரவசனத்திலேயே தம் ஆயுள் முழுவதையும் கழித்தவர் என்கிற ப்ரக்யாதியையுடைய திருவஹீந்த்ரபுரம் மஹாமஹோபாத்யாய சேட்டலூர் ஸ்வாமி இதில் ப்ரசுரிக்கப்படுகிற ரஹஸ்யங்களுக்கு வ்யாக்யானம் அருளிச்செய்திருக்கிறார். இதில் கீழ்க் கூறப்பட்ட பதிப்புக்கள் ஆதாரமாகக் கொள்ளப்பட்டிருப்பதினால் இதை அச்சிட்டு வெளியிட்ட நிகமபரிமளம்ஆபீஸ் மானேஜரின் அநுமதியுடன்மூலபாடமும் பாட்டு ச்லோகங்களுக்கு அர்த்தமும் எழுதப்பட்டிருக்கின்றன. இதினுடைய சோதந கைங்கர்யத்தில் அந்வயித்தருளிய சில ஸ்வாமிகள் சில பாடபேதங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவையும், இவற்றின் அர்த்தங்களும், ப்ரமாண அகாராதிகளும் மேல் ஸம்புடமாக வெளியிடப்படப்போகிற 'அம்ருதாஸ்வாதினீ' ரஹஸ்யங்களுடன் சேர்த்து வெளியிடப்படும்.

இந்த ரஹஸ்யங்கள் ஸம்ஸ்க்ருத பரிசயமில்லாதவர்களுக்கும் ப்ரயோஜனப்படுவதற்காக இதற்கு முன்புள்ள பதிப்புக்களில் போலில்லாமல் ச்லோகங்களைத் தவிர மற்றவையெல்லாம் தமிழிலேயே அச்சிடப்பட்டிருக்கிறன. ச்லோகங்களும் தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. சிற்சில பதங்களைப் படிக்கும்பொழுது உச்சரிப்பில் கொஞ்சம் விகாரம் ஏற்படும். ஆனாலும் இதைப் படிப்பவர்களுக்கு ஸம்ப்ரதாய பதங்கள் கேள்வியில் பழகியிருக்குமாதலால் அதிக ச்ரமமுண்டாகாது என்று நம்பப்படுகிறது.

ஒவ்வொரு ரஹஸ்யத்தின் ஆரம்பத்தில் அதில் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்த விசேஷங்கள் ஸங்க்ரஹமாகக் காட்டப்பட்டிருக்கிறன. இவைகளே மறுபடியும் பாராக்களில் மூலத்தை விட வேறு என்றுநன்றாகத் தெரியும்படி அச்சிடப்பட்டிருக்கிறன. இந்தமுறைஆங்கிலப்பதிப்பாளர்களினால் கையாளப்படுகிறது. இது தத்காலத்தியவர்களுக்கும்

முகவுரை

உபயோகமாயிருக்குமெனக்கருதி சேட்டலூர் மஹாமஹோபாத்யாய ஸ்வாமியின் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் பின்பற்றப்பட்டிருக்கிறது.

எவ்வளவோ அவதானத்துடன் சோதனம் நடத்தப்பட்டாலும் சில காரணங்களினால் பிழைகள் ஏற்பட்டுவிடுகின்றன. இவற்றை க்ஷமித்துக்கொள்ளவும். மேல் ஸம்புடங்களில் இவைகளை இன்னம் குறைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இப்ப்ரசுர கைங்கர்யத்திற்குநன்கொடை அளித்து உபகரித்தவர்களுக்கும், சோதன கைங்கர்யத்தை ஸ்வயம்ப்ரயோஜனமாகக்கருதிச்செய்யும் பண்டிதாக்ரேஸரர்களுக்கும், மற்றும் நன்கொடை வசூல் விஷயத்தில் உதவி செய்தருளுகிற ஸ்வாமிகளுக்கும் ஸபையின் சார்பில் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்ளும்

6 5 65 கார்யதர்சி

இது சென்னை, திருவல்லிக்கேணி, ஜகன் மோஹினி அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸபையின் கார்யதர்சி கோமடம் எஸ். எஸ் ஐயங்காரால் பராங்குச மந்திரத்தினின்றும் வெளியிடப்பட்டது.



अखिलभुवनरक्षा साधनायावतीर्णं कुमति कलिविलास ध्वान्त तिग्मांशुजालं ।
निरवधिकरुणाब्धौ वेदचूडागुरौ मे भवतु परमभक्तिः श्रीनिधौ वेङ्कटेशे ॥

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

இந்தக் கலியுக ஆரம்பத்தில் நம்மாழ்வாரால் ப்ரவர்த்திக்கப்பட்டதும்
அவர் தம்மாலேயே ஸ்ரீமந் நாத முநிகளுக்கு உபதேசிக்கப்பட்டதும்
ஸ்ரீமத் யாமுந முநியினால் பஹுமுகமாக வ்ருத்திசெய்யப்பட்டதும்
ஸ்ரீமத் ராமாநுஜமுநியினால் நன்றாக ரக்ஷிக்கப்பட்டதுமான

ஸ்ரீவிஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை

அகிலதமகர்ஶநதர்ஶநமாக ப்ரதிஷ்டாபநம் செய்தருளிய

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

தாரணிவாழ்வார்க்கு வானேறப்போமளவும் வாழ்வாகப்

பார் ஒன்றச்சொன்ன பழமொழிகளாகிய

ஸ்ரீ ஸூக்திகள் -116

இந்த ஸ்ரீ ஸூக்திகள் எல்லாம்

சுந்த மிகு
தமிழ் மறை

மங்நா தயாமுந
ராமாநுஜமுநிகளின்
க்ரந்தங்கள்
எதிவரனுர்
மடைப்பள்ளிவந்த
மணங்களாகிய
ரஹஸ்யார்த்தங்கள்

வேதங்கள்
அங்கங்கள்
உபப்ரும்ஹணங்கள்

எம்பெருமானுர் காலக்ஷேப
ஸங்க்ரஹமாய்ப் பிள்ளான் பணித்தருளிய
திருவாருயிரம்
மற்றுமுள்ள பூர்வாசார்யர்களின் க்ரந்தங்கள்
இவற்றுக்கெல்லாம் ஐககண்ட்யம் செய்பவைகளாயும்
இவற்றின் உபப்ரும்ஹணங்களாயும்
இவற்றின் உட்கருத்தை உறதைத்து உரைப்பவைகளாயும் இருக்கும்.

ஸ்ரீ ஸூக்திகளின் விபாகம்

விபாகம்—1	ஸ்தோத்திரங்கள்	29
விபாகம்—2	ப்ரபந்தங்கள்	18
விபாகம்—3	ரக்ஷா க்ரந்தங்கள்	5
விபாகம்—4	ரஹஸ்யங்கள்	34
விபாகம்—5	வாத க்ரந்தங்கள்	3
விபாகம்—6	காவ்ய நாடகாதிகள்	12
விபாகம்—7	ஸித்தாந்த ப்ரகரண க்ரந்தங்கள்	6
விபாகம்—8	உபயவேதாந்த க்ரந்தங்கள்	9
ஆக மொத்தம்		116

ஸ்ரீ ஸூக்திகளின் திருநாமங்கள்

[குறிப்பு—இங்குக் கூறப்பட்டிருக்கும் ஸ்ரீஸூக்திகளின் முன் பின் க்ரமம் அவற்றின் நிர்மாண காலக்ரமத்தைப் பற்றியதாயிருக்கும்]

1 ஸ்தோத்ரங்கள்—29

ஸ்ரீ தேவநாயக பஞ்சாசத், கோபாலவிம்சதி, ஸ்ரீஸ்துதி, தேஹ ளீஶ ஸ்துதி, வரதராஜ பஞ்சாசத், சரணாகதி தீபிகை, அஷ்ட புஜாஷ்டகம், வேகா ஸேது ஸ்துதி, காமாஸிகாஷ்டகம், பர மார்த்த ஸ்துதி, ந்யாஸ தசகம், தயாசதகம், பகவத் த்யாநஸோ பாநம், தசாவதார ஸ்தோத்ரம், ந்யாஸ திலகம், பூஸ்துதி, ஸுதர் சநாஷ்டகம், கருடதண்டகம், கருடபஞ்சாசத், ஹயக்ரீவஸ்தோத் ரம், மஹாவீரவைபவம் (ரகுவீர கத்யம்), அச்யுத சதகம், வை ராக்ய பஞ்சகம், கோதா ஸ்துதி, யதிராஜ ஸப்ததி, ந்யாஸவிம் சதி, தத்வ்யாக்யா, ஷோடசாயுத ஸ்தோத்ரம், அபீதி ஸ்தவம்,

2 ப்ரபந்தங்கள்—18 மும்மணிக்கோவை, பந்து(ப்பா), கழல் (பா),அம்மானை(ப்பா), ஊசல் (பா),ஏசல்(பா),அடைக்கலப்பத்து, அர்த்த பஞ்சகம், வைணவ தினசரி, பன்னிரு நாமம், திருச் சின்ன மாலை, கீதார்த்த ஸங்க்ரஹம், நவ மணி மாலை, ஆஹார நியமம், திருமந்திரச் சுருக்கு, துயச் சுருக்கு, சரம சுலோகச் சுருக்கு, பிரபந்த ஸாரம்.

3 ரக்ஷைகள்—5 ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை, நிக்ஷேப ரக்ஷை, பாஞ்சராத்ர ரக்ஷை, கீதார்த்தஸங்க்ரஹ ரக்ஷை, ரஹஸ்யரக்ஷை.

4 ரஹஸ்யங்கள்—34 ஸ்ரீ ஸ்தேயாவிரோதம், ஸம்ப்ர தாய பரிசுத்தி, தத்த்வ பதவீ, ரஹஸ்ய பதவீ, தத்த்வ நவநீதம், ரஹஸ்ய நவநீதம், தத்த்வ மாத்ருகை, ரஹஸ்ய மாத்ருகை, தத் த்வ ஸந்தேசம், ரஹஸ்யஸந்தேசம், ரஹஸ்ய ஸந்தேசவிவரணம் தத்த்வ ரத்னாவளீ, தத்த்வ ரத்னாவளீ ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம், பரமத பங்கம், ரஹஸ்ய ரத்னாவளீ, ரஹஸ்ய ரத்னாவளீ ஹ்ருதயம், தத்த்வ த்ரய சுளகம், ரஹஸ்ய த்ரய சுளகம், ஸார தீபம், ஸார ஸாரம், பரம பத ஸோபாநம், அபய ப்ரதாந ஸாரம், தத்த்வ சிகா மணி, ரஹஸ்ய சிகாமணி, அஞ்ஜலி வைபவம், ப்ரதாந சதகம்

உபகார ஸங்க்ரஹம், ஸார ஸங்க்ரஹம், ஹஸ்திகிரிமாஹாத்ம்யம், மதுர கவி ஹ்ருதயம், முனிவாஹனபோகம், குருபரம்பரா ஸாரம், ரஹஸ்யத்ரய ஸாரம், விரோத பரிஹாரம்.

5 வாத க்ரந்தங்கள்—3 ஸ்ரீ சத தூஷணீ, வாதித்ரய கண்டனம், சகாரஸமர்த்தனம்.

6 காவ்ய நாடகாதிகள்—12 ஸ்ரீ ஸுபாஷித நீவீ, ஸங்கல்ப ஸூர்யோதயம், யாதவாப்யுதயம், பாதுகா ஸஹஸ்ரம், ஸமஸ்யா ஸஹஸ்ரீ, ஹம்ஸ ஸந்தேசம், ஹரி தின திலகம், ஆராதனகாரிகை, யஜ்ஞோபவீத ப்ரதிஷ்ட்டை, பூகோள நிர்ணயம், தத் வ்யாக்யா, ஶில்பார்த்த ஸாரம்.

7 ஸித்தாந்த ப்ரகரண க்ரந்தங்கள்—6 ஸ்ரீ ந்யாயபரிசுத்தி, தத்த்வ முக்தா கலாபம், ஸர்வார்த்த ஸித்தி, ஸேஶ்வர மீமாம்ஸை, மீமாம்ஸாபாதுகை, ந்யாயஸித்தாஞ்ஜநம்.

8 உபய வேதாந்த க்ரந்தங்கள்—9 ஸ்ரீ அதிகரண தர்ப்பணம், கீதா பாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை, வேதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யானம், ஈஶாவாஸ்யோபநிஷத் பாஷ்யம், நிகமபரிமளம், த்ரமிடோபநிஷத் ஸாரம், த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்ன வளீ, தத்த்வ டீகை, அதிகரண ஸாராவளீ

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழிகளாகிய

ஸ்ரீ ஸூக்திகள் 116

அவற்றில்

நான்காவது விபாகம்

ரஹஸ்யங்கள்

[34]

தனி ரஹஸ்யங்கள்	7
அம்ருதரஞ்ஜனீ ரஹஸ்யங்கள்	17
அம்ருதாஸ்வாதினீ ரஹஸ்யங்கள்	10

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

ரஹஸ்யங்களின் திருநாமங்கள்

[இங்கு குறிப்பிடப்படுகிற க்ரமம் க்ரந்தங்களின் நிர்மாண காலத்தைப் பின்பற்றியதாயிருக்கும்.]

1 ஸ்ரீ ஸ்தேயாவிரோதம்
2 ஸம்ப்ரதாய பரிசுத்தி
3 தத்த்வ பதவீ
4 ரஹஸ்ய பதவீ
5 தத்த்வ நவநீதம்
6 ரஹஸ்ய நவநீதம்
7 தத்த்வ மாத்ருகா
8 ரஹஸ்ய மாத்ருகா
9 தத்த்வ ஸந்தேசம்
10 ரஹஸ்ய ஸந்தேசம்
11 ரஹஸ்ய ஸந்தேச விவரணம்
12 தத்த்வ ரத்னாவளீ
13 தத்த்வ ரத்னாவளீ ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம்
14 பரமத பங்கம்
15 மெய்விரத நன்னிலத்து மான்மியம்
16 ரஹஸ்ய ரத்னாவளீ
17 ரஹஸ்ய ரத்னாவளீ ஹ்ருதயம்
18 தத்த்வத்ரய சுளகம்
19 ரஹஸ்யத்ரய சுளகம்
20 ஸார தீபம்
21 ஸார ஸாரம்
22 பரமபத ஸோபானம்
23 அபயப்ரதான ஸாரம்
24 தத்த்வ சிகாமணி

25 ஸ்ரீ ரஹஸ்ய சிகாமணி
26 அஞ்ஜலி வைபவம்
27 ப்ரதான சதகம்
28 உபகார ஸங்க்ரஹம்
29 ஸார ஸங்க்ரஹம்
30 மதுரகவி ஹ்ருதயம்
31 முனிவாஹனபோகம்
32 குருபரம்பரா ஸாரம்
33 ரஹஸ்யத்ரய ஸாரம்
34 விரோத பரிஹாரம்

இவற்றில் 1, 14, 15, 22, 31, 32, 33 என்கிற ஏழும் தனி ரஹஸ்யங்கள் என்றும், 2—13, 16—20 இவை பதினேழும் அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்கள் என்றும், 21, 23—30, 34 இவை பத்தும் அம்ருதாஸ்வாதினீ ரஹஸ்யங்கள் என்றும் சொல்லப்படும். இவைகளில் 1, 20, 24, 30 என்பவை நான்கும் லுப்தங்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீ:

தனியன்கள்

श्रीमान् वेंकटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் *
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் *—ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு*
வானேறப் போமளவும் வாழ்வு.

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणम् ।
श्रीमद्वेंकटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

ஸ்ரீ:

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழிகளுள்

முதலாவது ரஹஸ்யம்

ஸ்ரீ ஸ்தேயாவிரோதம்

[இதுவே ஸ்வாமி அருளிச்செய்த ரஹஸ்யங்களிலும், தனி ரஹஸ்யங்களிலும் முதலாவதாகும். இது திருவஹீந்திர புரத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

ஸ்ரீ பரமத பங்கத்தில் ஸ்வாமி 6-ம் அதிகாரத்தில் 'अर्थकामङ्कळै प्रयोजनमाकक्कॊण्डु प्रवृत्तमान नीतिशास्त्रमुम் अनापत्तिल् धर्मविरुद्धविषयत्तै अभ्यनुज्ञै पण्णुदु. स्तेय शास्त्रमुम்

1 'योऽसाधुभ्योऽर्थमादाय साधुभ्यः संप्रयच्छति'

2 'प्रसह्य वित्ताहरणं न कल्कः'

என்கிறபடியே क्षत्रियादिकळुक्कु परकालादि न्यायत्तालै धर्मोपयुक्तमाक प्रवृत्तम்' என்று அருளிச்செய்திருக்கிறார்.

ஸ்ரீகோபாலதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ தேசிக ஸஹஸ்ரநாமத்திலும்

'परकालकृतस्वर्णस्तेयशास्त्राविरोधदृक्'

என்று அனுஸந்திக்கப்பட்டுத் திருவஹீந்திரபுரத்தில் அருளிச்செய்யப்பட்ட மற்ற ஸ்ரீ ஸூக்திகளுடன் சேர்த்துப் படிக்கப்பட்டிருக்கிறது. இதில் கலியன் செய்தருளிய ஸ்தேயம் சாஸ்த்ர விருத்தமன்று என்று நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்லுவர்கள்.] இது லுப்தம்

---

1 மனு—11 19 அஸாதுக்களிடமிருந்து பணத்தை வாங்கி, ஸாதுக்களுக்கு எவன் கொடுக்கிறானோ, (அவன் அவ்விருவர்களையும் கரையேற்றுகிறான்) 2 பாரதம்—ஆதி—1—301 (துஷ்டர்களிடமிருந்து) கட்டாயப்படுத்திப் பணத்தைப் பறிப்பது தோஷமாகாது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

இரண்டாவது ரஹஸ்யம்

ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தி

[அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் முதலாவது.
இது காஞ்சீபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

[ஸத்ஸம்ப்ரதாயத்தின் ஆவச்யகதை—ஸத்ஸம்ப்ரதாய லக்ஷணம்—ஸத்ஸம்ப்ரதாய க்ரமம்—கலியுகத்தில் நம்மாழ்வாரின் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகத்வம்—நாதமுநிகள் முதலாக ஆசார்ய பரம்பரை—ப்ரதாந ஆசார்ய லக்ஷணம்—ஸ்ரீபாஷ்யகார ஸம்ப்ரதாயத்தில்ஆபாதப்ரதீதியில் தோன்றும் ஸந்தேஹங்களுக்குப் பரிஹாரம்—திருமந்த்ர விஷயமான விளக்கம்—த்வய விஷயமான விளக்கம்—சரமச்லோக விஷயமான விரோத சங்கா பரிஹாரம்—நிகமனம்]

கட்டளைக் கலித்துறை

தம்பரம் என்றிரங்கித் தளரா மனம் தந்து * அருளால்
உம்பர் தொழும் திருமால் உகந்து ஏற்குமுபாயமொன்ருல் *
நம் பிறவித் துயர் மாற்றிய ஞானப் பெருந்தகவோர்
சம்பிரதாயமொன்ருல்(றிச்) * சதிர்க்கும் நிலை சார்ந்தனமே.

ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலே அத்யாத்ம ஶாஸ்த்ரார்த்த விஶேஷநிர்ணயம் பண்ணவேண்டும் என்னுமிடம் உபநிஷத்துக்களிலும் உபப்ரும்ஹணங்களிலும் ப்ரஸித்தம். ஶாஸ்த்ரார்த்த நிரூபணம் பண்ணும்இடத்தில் ஶக்தி இல்லாதவர்களுக்கு

ஸத் ஸம்ப்ரதாயத்தின் ஆவச்யகதை

1 'उपदेशात् हरिं बुद्ध्वा' (உபதேஶாத் ஹரிம் புத்த்வா) என்கிறபடியே ஶாஸ்த்ரஜ்ஞ ஸம்ப்ரதாயமாத்ரமும் அபேக்ஷிதார்த்த நிர்ணயகமாம். ஸத்ஸம்ப்ரதாய ரஹிதமான ஶாஸ்த்ரத்தால் அர்த்தநிர்ணயம் துஷ்கரம். ஸுகரந்தானுகிலும் உபயுக்தமாகாது.

அத்யந்த அதீந்த்ரிய விஷயத்தில் ஶாஸ்த்ரமூலமல்லாத ஸம்ப்ரதாயமும் ஸம்ப்ரதிபந்த ஶாஸ்த்ரவிருத்தமான ஸம்ப்ரதாயமும் ப்ரம விப்ரலம்ப ஸம்பாவனையுண்டாகையாலே பாஹ்யதுல்யமாகையால் அவிஶ்வஸநீயம். பரஸ்பர விருத்தமாக ஸதஸ்யமும் ரஹஸ்யமும் என்று சொல்லுமவை யிரண்டும் ஸ்வவாக்யத்தாலே பாதிதங்களாம். திரளிலே சொல்லுமவைகளில் சில அர்த்தங்களை ஏகாந்தத்தில் சொல்ல விதிக்கையாலே அவற்றை ரஹஸ்யங்கள் என்கிறது. ப்ரஜாபதி வாக்யம், முற்பட அஸுரேந்த்ரனை விரோசநனை மோஹிப்பிக்கைக்காகச் சொல்லப்பட்டு, பிற்பட தேவேந்த்ரனைப் பர்வ க்ரமத்தாலே பரிஶுத்தாத்மவிஷயத்திலேப்ரதிஷ்டிதபுத்தியாக்குகிறது. உபகோஸல வைஶ்வாநராதிவித்யைகளிலே முற்பட வேத்யோபாதேயங்களைப்பற்ற ஏகதேச உபதேஶம் க்ரமேண ஶேஷபூரணார்த்தம். ஸர்வேஶ்வரன்தானும் தான் உபதேஶித்தஜ்ஞாநத்தைப்பின்னையும்

ஸத் ஸம்ப்ரதாய லக்ஷணம்

2 'तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया'

(தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா)

---

1 (சாஸ்த்ரத்தைத் தெரிந்து கொள்வது அதிகக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது, புத்தி சலிப்பதற்குக் காரணம், ஆகையினாலே ஆசார்யனுடைய) உபதேசத்தினால் பகவானைத் தெரிந்து கொண்டு (எல்லாக்கர்மங்களிலிருந்தும் ஓய்வடையவேண்டும்)

2 கீதை—4- 34 நன்றாக நமஸ்கரிப்பதினாலும், விநயமாகக் கேட்பதினாலும் சுச்ரூஷை செய்வதினாலும் (ஜ்ஞாநிகளிடமிருந்து) அந்தத் தத்துவார்த்தத்தை அறிந்துகொள்.

என்று பல ஜ்ஞாநிகள் பக்கலிலே கேட்க விதித்தானிறே. இப்படிகளால் ஸம்ப்ரதிபந்ந சாஸ்த்ர விரோதமின்றிக்கே ஶாஸ்த்ர மூலத்வ ஸம்ப்ரதிபத்தியுண்டான ஸம்ப்ரதாயம் உபஜீவ்யம்.

இப்படிப்பட்ட ஸத்ஸம்ப்ரதாயத்தில் தோற்றும் விரோதம் தத்த்வ விஷயமாகில் தாத்பர்யபேதத்தாலே விரோத ஶாந்தியுண்டாம். அநுஷ்ட்டாந விஷயமாகில் அவ்வோ அதிகாரிக்கு அநுகுணமாக வ்யவஸ்த்தித அவ்யவஸ்த்திதப்ரக்ரியையாலே விகல்பமாம். ந்யாஸ உபாஸநங்களிலே அதிகாரிபேதத்தையிட்டு வ்யவஸ்த்தித விகல்பம் என்று பார்க்கிலும், பலஸாம்யத்தையிட்டுத் துல்ய விகல்பம் என்று பார்க்கிலும் விரோதமில்லை.

ஸத் ஸம்ப்ரதாய க்ரமம்

ஸர்வலோகஹிதமான அத்யாத்ம ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகன் ஸர்வேஶ்வரன். மற்றுள்ளார் எல்லாரும் அவன்தன்னாலேயாதல் சேதநாந்தர முகத்தாலேயாதல் மயர்வறமதிநலம் அருளப்பட்டு ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள்.

இப்படி அநஸூயாதி குணயுக்தராய்

1 ' प्रणिपत्याभिवाद्य च ' (ப்ரணிபத்யாபிவாத்ய ச)

கலியுகத்தில் நம்மாழ்வாரின் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகத்வம்

இத்யாதிகளிற்படியே ஸம்யக் உபஸந்நரான அதிகாரிகளைப் பற்ற யதார்த்ததர்ஶிகளாய் யதாத்ருஷ்டார்த்த வாதிகளான வ்யாஸபோதாயநாதிகளாலே யதாதிகாரம் ப்ரவர்த்திதமான வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்மநந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்.

2 ' प्राप्यं ज्ञानं ब्राह्मणात् क्षत्रियाद्वा वैश्याच्छूद्राद्वऽपि नीचादभीक्ष्णम् '
(ப்ராப்யம் ஜ்ஞாநம் ப்ராஹ்மணாத் க்ஷத்த்ரியாத்வா வைஶ்யாத்

---

1 விஷ்ணு புராணம்—1-1-1 (மைத்ரேயர் பராசர முனிவரை) ஸேவித்து அபிவாதநம் செய்து(கேட்டார்) 2 பார – சாந்தி – 323-98 பரமாத்மாவைப் பற்றிய ஜ்ஞாநம் ப்ராஹ்மணனிடத்திலிருந்தாவது, க்ஷத்த்ரியனிடத்திலிருந்தாவது, வைச்யனிடத்திலிருந்தாவது

சூத்ராத் வாபி நீசாதபீக்ஷணம்)
இத்யாதி ப்ரமாணபலத்தாலே

1 ‘ மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள்
நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான் ’

என்கிறது உபபந்நம். வேதாந்தார்த்த வைஶத்ய ஹேதுவாகையாலே பாஷாந்தரமும் உபஜீவ்யம். தர்மவ்யாத துலாதாராதி வ்ருத்தாந்தங்களையும் இங்கே அநுஸந்திப்பது.

2 ‘ शूद्रयोनावहं जातो नातोऽन्यद्वक्तुमुत्सहे ’

‘ சூத்ர யோநாவஹம் ஜாதோ நாதோऽந்யத் வக்துமுத்ஸஹே)
என்கிறது விஷயபேதத்தாலே பரிஹ்ருதம். மதுரகவி முதலான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் ப்ராதுர்ப்பாவவிஶேஷத்தாலும் நாத முநிகளுக்கு நம்மாழ்வார் ஆசார்யரானார். இவரை ப்ரபந்ந ஸந்தாந கூடஸ்த்ததையாலே ஆளவந்தார்

3 ‘ आद्यस्य नः कुलपतेः ’ [ஆத்யஸ்ய நः குலபதேः]

என்று அருளிச்செய்தார்.

நாதமுநிகள் தம்முடைய திருப்பேரனாரான ஆளவந்தாருக்குத் தாம் உபதேஶியாதே, தம்முடையஶிஷ்யப்ரஶிஷ்யர்களைஇவருக்கு ஆகாங்க்ஷை பிறந்தபோது உபதேஶியுங்கோள்என்றுஆஜ்ஞாபித்தது குருபுத்ர பௌத்ராதிகளும் வித்யா ப்ரதாநத்திற்கு ப்ரஶஸ்தபாத்ரங்கள் என்றும், ஜ்ஞாநஸந்ததியிலே முற்பட்டவர்களும் குருக்களாக ஆதரணீயர் என்றும், ஆகாங்க்ஷையின்றிக்கே இருக்கச்செய்தே சொன்னால் ஶிஷ்யபுத்தியில் அர்த்தம் ப்ரதிஷ்ட்டிதமாகாது என்றும் தெளிவித்தபடி. மணக்கால்நம்பி ஆளவந்தாருக்கு நெடுநாள் பச்சையிட்டு ஒரு விரகாலே ஆகாங்க்ஷை உண்டாக்கி உபதேஶித்தது ஆசார்ய குலத்திற்குத் தாம் ஒரு

நாதமுநிகள் முதலாக ஆசார்ய பரம்பரை

சூத்ரனிடத்திலிருந்தாவது, தாழ்ந்தவர்களிடத்திலிருந்தாவது எப்பொழுதும் அடையத்தக்கது. 1 கண்ணிநுண் சிறுத்தாம்பு–9

2 பாரதம்—உத்யோக-41-5 சூத்ரயோநியில் நான் பிறந்தவன், ஆகையினால் மற்றதை (மந்த்ராதிகளை)ச் சொல்ல விரும்பவில்லை.

3 ஸ்தோத்ரம்-5 நம்முடைய முதலாமவரான குலபதியான,

கிஞ்சித்காரம் பண்ணுகையிலும் ஆசார்ய நியோகத்தைக் கடுகத் தலைக்கட்டுகையிலும் உண்டான த்வரையாலும் சிரகால பரீக்ஷாதிகள் வேண்டாதபடி

1 ' बोधनं च मुहुः क्रमात् ' (போதநம் ச முஹு: க்ரமாத்)

என்கிற யுகதர்மாநுஸாரத்தாலும் உபபந்நம். ஆளவந்தார் தாம் நாதமுநிகளை முன்னிட்டு ஸ்தோத்ரம் பண்ணிற்றும், ஶரணம்புக்கதுவும், தம்முடைய ஆசார்யனுக்கு இது ப்ரியதமம் என்றும், தமக்கு ஆசார்யவத்தை முதலான ஸகல ஸம்பத்துக்களுக்கும் அடி நாதமுனிவம்ஶத்தில் பிறவி என்றும் தோற்றுகைக்காகவும், ஆசார்ய விஷயத்திற்போலே ப்ரப்ராசார்ய விஷயத்திலும் க்ருதஜ்ஞதாதிகள் வேண்டும் என்கைக்காகவும் (என்று அறியப்படும்). ஆசார்யபங்க்தியில் சிலரை க்ரந்தங்களிலே வ்யபதேஶித்துஅவர்களையும் மற்றுமுள்ளவர்களையும் அநுஸந்திப்பார்கள். ஆளவந்தாருடைய நியோகத்தாலே ஸ்ரீ பாஷ்யகாரரை அங்கீகரித்த பூர்ணரான பெரியநம்பி இவரைத் தமக்கு ஸப்ரஹ்மசாரிகளான திருக்கோட்டியூர்நம்பி பக்கலிலே அர்த்த ஶிக்ஷை பண்ணவும், திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழிகேட்கவும், ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் பக்கலிலே நல்வார்த்தை கேட்கவும்நியோகித்ததும்

2 ' बहुभ्यः श्रोतव्यं बहुधा श्रोतव्यं ', 3 ' ज्ञानवृद्धाः मया राजन् बहवः पर्युपासिताः ' ('பஹுப்ய: ச்ரோதவ்யம் பஹுதா ச்ரோதவ்யம் ' ' ஜ்ஞாந வ்ருத்தா: மயா ராஜந் ! பஹவ: பர்யுபாஸிதா: '

இத்யாதிகளையும் சுகாதி வ்ருத்தாந்தங்களையும் பார்த்து, ஶிஷ்ய பூதரை பஹுமுகமாகத் திருத்தவேண்டுமென்கிற அபிஸந்தியாலே உபபந்நதமம். இப்படி ஆசார்யாபிமத விஷயத்தில் ஆசார்யாநுஜ்ஞையாலே அபேக்ஷித ஜ்ஞாநோபஜீவநம் பண்ணுமது ஶாஸ்த்ரார்த்தம்என்னுமிடம் அந்திமதஶாவதியாக அத்யந்தஅவஹிதராய்க் கொண்டு ஸதாசாராநுபாலநம் பண்ணின ஸ்ரீ பாஷ்யகாரருடைய அநுஷ்ட்டாநத்தாலே ஸித்தம்.

---

1 உபதேசிப்பது,அடிக்கடி உபதேசிப்பது என்கிற க்ரமத்தில்.

2 பலரிடமிருந்து கேட்கவேண்டும், பலபடிகளில் கேட்கவேண்டும். 3 ஓ! அரசனே ! ஜ்ஞாநத்தில் முதிர்ந்தவர்கள் பலர் என்னால் நன்றாக உபாஸிக்கப்பட்டார்கள்,

அத்யாத்ம விஷயத்தில்(ஶாஸ்த்ரங்களில்) ப்ரதாந அப்ரதாநாம்ஶங்களை ஒருவருக்குப்பலராக உபதேஶிக்க வேதாந்தங்களில் பல இடங்களிலே கண்டோம்.

ப்ரதாந ஆசார்யலக்ஷணம்

ஓராசார்யன் பக்கலிலே க்ருத்ஸ்நோபதேஶம் மைத்ரேயாதிகளுக்குப் போலே சிலருக்கு உண்டாம். ப்ரதாந ஶ்ருதத்தினுடைய ப்ரதிஷ்ட்டார்த்தமாகப் பலர் உபதேஶித்தால்

1 'अल्पं वा बहु वा यस्य श्रुतस्योपकरोति यः ।
तमपीह गुरुं विद्यात् श्रुतोपक्रियया तया ॥'

(அல்பம் வா பஹுவா யஸ்ய ச்ருதஸ்யோபகரோதி யः । தமபீஹ குரும் வித்யாத் ச்ருதோபக்ரியயா தயா ॥)

என்கையாலே அவர்கள் பக்கலிலும் ஆசார்யப்ரதிபத்தி பண்ண ப்ராப்தம். அவ்யவஹித மோக்ஷோபாய வ்யவஸாயம் பிறப்பிக்கை ப்ரதாந ஆசார்ய க்ருத்யம். இது கலங்காதபடி பண்ணுகையும் பரிகர பூர்த்தி உண்டாக்குகையும் ஆசார்யாபிமத ஶிக்ஷகாந்தர க்ருத்யம். இப்படிப்பட்ட ஆசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்கினவர்களும் ப்ரபந்த முகத்தாலே பரம்பரயா உபகரித்தவர்களும் ஆதரணீயர். இவர்களில் ப்ரதாநதமன் ஸர்வப்ரேரகனான ஶ்ரிய:பதி. இவன் ஒருவனுமே தனக்கு ஒரு ஆசார்யனில்லாத பரமாசார்யன்.

ஸ்ரீபாஷ்யகாரருடைய ஶிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்தவிரோதமில்லை, வாக்ய யோஜநாபேதமேயுள்ளது. தேச காலஅவஸ்த்தாவிசேஷங்களாலே வரும் அநுஷ்ட்டாந வைஷம்யம் ஶாஸ்த்ராநுமதம். சோராபராதத்தை மாண்டவ்யன்பக்கல் ஆரோபித்தாற்போலேஸ்வேச்சைக்குஅநுகுணமாக அநிபுணர் சொல்லுமது வக்தாக்களுக்கே தோஷமாம்.

ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸம்ப்ரதாயத்தில் ஆபாதப்ரதீதியில்தோன்றும் ஸந்தேஹங்களுக்குப் பரிஹாரம்

---

1 எவன் கொஞ்சமாகவாவது அதிகமாகவாவது சாஸ்த்ரார்த்தத்திற்கு உபகாரம் செய்கிறானோ, அவனை அந்தக்கேட்கப்பட்ட அர்த்தத்திற்கு உபகாரம் செய்தபடியால் இங்கு குருவாக அறியவேண்டும்.

திருமந்த்ரத்தில் பதார்த்த வாக்யார்த்தங்களெல்லாம் மூல பூத நிருக்தாதி வாக்யவிஶேஷங்களாலே வந்தவை. இதில் பத த்ரயத்திலுமாகவாதல், ப்ரதமபதத் திலேயாதல், ப்ரதமாக்ஷரத்திலே யாதல் ஸங்க்ஷேப விஸ்தர க்ரமத் தாலேஶப்த அர்த்த ஸ்வபாவங்க ளைக்கொண்டு அர்த்தபஞ்சகாநுஸந்தாநம் பண்ணுமதுவும் அந் யோந்ய விருத்தமன்று. இப்படி ப்ரதம த்விதீயாக்ஷரங்களாலே ஆர்த்தமாகவாதல் ஶாப்தமாகவாதல் ஶரண்ய ஸஹதர்மசாரிணீ ப்ரதிபாதநம் பண்ணுமதுவும் அவ்வோவாக்யவி ஶேஷமூலம். மத்ய மாக்ஷரம் பத்நீ பரமென்னும் நிர்வாஹத்தில் விசேஷ உபாதாந பலத்தாலே அவதாரணம் அர்த்தஸித்தம். இந்த அவதாரணத்தா லே ஶரீராத்மபாவம் ஸித்திக்கிறதுஎன்பார்க்குஶேஷத்வ அயோக வ்யவச்சேதத்திலே தாத்பர்யம் கொள்ளலாம்.

திருமந்த்ர விஷயமான விளக்கம்

1 ‘ **मकारार्थो जीवः** ’ (மகாரார்த்தோ ஜீவ:)

இத்யாதிகளிற்படியே த்ருதீயாக்ஷரம் ஜீவ ஜாதீய ஸர்வபரம் என் பார்க்கும் இதில் ஸ்வாநுஸந்தாநம் ஆர்த்தம் என்னவேண்டும்.

2 ‘ **अकारार्थायैव स्वमहं** ’ (அகாரார்த்தாயைவ ஸ்வமஹம்) என்று விஶேஷித்துவ்யாக்க்யாநம் பண்ணினவர்களுக்கும் இவ்வ நுஸந்தாநம் ஸர்வ ஜீவ ஸாதாரணாகார விஷயம். பகவச்சே ஷத்வம் தோற்றுமிடமெல்லாம் பாகவத ஶேஷத்வ பர்யந்தமாக அநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்க,ஔசித்யாதிஶயத்தாலே மத்யம பதத்திலே இத்தை அநுஸந்திக்குமது உபபந்நம். ப்ரதம த்விதீய சதுர்த்திகளுக்கு ஏகார்த்தத்வ பிந்நார்த்தத்வங்களும் ப்ரமாணா நுகுண வாக்யார்த்த விவக்ஷா பேதத்தாலே சொன்னவை.

த்வயத்தில் பூர்வ அபர ஸ்ரீமத் சப்தங்களிலும், பூர்வ அபர நாராயண ஶப்தங்களிலும் சில ஆகார விஶேஷங்களைப் பிரித்து அநுஸந்திக்குமதுஉபாயபலதஶ களுக்கு உபயுக்ததமாம்ஶ நிஷ் கர்ஷம் பண்ணினபடி. சரணங் களை உ பா ய ம் என்கிறதுக்குச்

த்வயவிஷயமான விளக்கம்

---

1 அஷ்டச்லோகீ– 1 ம என்பதற்கு அர்த்தம் ஜீவன். 2 அ ஷ் ட ச்லோகீ -3 அகாரத்திற்கு அர்த்தமான பகவானுக்கே நான் சேஷபூத மான வஸ்து.

சரண விஶிஷ்ட வஶீகார்யன் பக்கலிலே தாத்பர்யமாகையாலே ஸித்தோபாய பேதமும் ஸாத்யோபாய பாதமும் வாராது. நமஸ் ஸு நாநார்த்தமாக அஹிர்புத்ந்ய ஸம்ஹிதாதிகளிலே நிருக்த மாகையாலே ப்ரதம த்விதீய ரஹஸ்யங்களில் மத்யம சரம பதங் களுக்கு வாக்யார்த்தாநுகுணமாக அர்த்தபேதம் கொள்ளலாம். த்விதீய த்ருதீய ரஹஸ்யங்களில் கிடக்கிற சரண ஶப்தம் உபாய பரமானதடியாக வஶீகரணோபாயத்திற்குச் சிலர் பண்ணும் அதி வாதமெல்லாம் ஸித்தோபாய ப்ராதாந்யபரம். ஸ்வாநுஸந்தாந பரமாயும் விதிபரமாயும் நிற்கிறஆக்க்யாதங்களில் ஆவ்ருத்திக்கு ஜ்ஞாபகமில்லாமையாலும்அநாவ்ருத்திக்குக்கண்ட்டோக்திஉண் டாகையாலும் வர்த்தமாந வ்யபதேஶம் அநுஷ்ட்டாந காலாபிப் ராயம். ப்ரபத்திக்கு யாவஜ் ஜீவாநுவ்ருத்தி சொல்லுவார்க்கும்

1 'द्वयमर्थानुसन्धानेन सह सदैवं वक्ता' (த்வயமர்த்தாநுஸந்தா நேந ஸஹ ஸதைவம் வக்தா)

இத்யாதிகளிற்சொன்ன ஸுகாஸிகையிலே தாத்பர்யம் கொள்ள லாம்.

2 'न्यासः पंचांग संयुतः' (ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:)

என்று சொன்ன ப்ரபத்த்யங்கங்களிலே சிலர் கதிபயாநாதரம்பண் ணுமது அங்கியினுடைய வைபவார்த்தம். விஶேஷித்துக் கதிபய அங்கோபாதாநம் பண்ணுமதுவும் அங்காந்தரங்களிற்காட்டில் இவ்வங்கங்களுடைய ப்ரஶம்ஸார்த்தம்.

சரமஶ்லோகத்தில் விதிக்கிற ப்ரபத்தி ஸகல பல ஸாதநமா கையாலே அங்கமாகவும் ஸ்வதந்த்ரமாகவும் வ்யாக்க்யாநம் பண்

சரம ச்லோக விஷயமான விரோதசங்கா பரிஹாரம்

ணின பாஷ்ய கத்யாதிகளுக்கு விரோதமில்லை. ஸர்வதர்ம ஶப் தத்தில் ஸங்குசித அஸங்குசித வ்ருத்திகளைக் கொள்ளுமவர்க ளுக்குப் பரபக்ஷத்திற்போலே ஸ்வ தர்ம ஸ்வரூபத்யாகவிதி விவ க்ஷையில்லாமையாலே ஸ்வதந்த்ராஜ்ஞாநுபாலந விரோதமில்லை.

---

1 சரணாகதி கத்யம் - த்வயத்தைக் கீழ்ச் சொல்லியபடி அர்த்தத் தின் அநுஸந்தாநத்துடன் எப்பொழுதும் சொல்லிக்கொண்டு.

2 லக்ஷ்மீ தந்த்ரம்–52-14 –ஐந்து அங்கங்களையுடையதான ப்ரபத்தி

'பரித்யஜ்ய' ஶப்தத்திலும் 'ஏக' ஶப்தத்திலும் மூலப்ரமாணுநுகுண மாகச் சொல்லும் பல அர்த்தங்களிலும் பரஸ்பர விரோதமில்லை. அவற்றில்புநருக்திவாராதபடி அநுஸந்திக்குமதுவே வேண்டுவது. ஶரண்யனுக்கு ப்ரபத்தி கர்மத்வத்தையும் மோக்ஷ கர்த்ருத்வத்தையும் ப்ரதிபாதிக்கிற 'மாம், அஹம்' என்கிறபதங்களிலே (भ)பரஸ்வீகார உபயுக்தமான ஸௌலப்யமும், ஸர்வோபகார உபயுக்தமான பரத்வமும் அநுஸந்திக்குமிடத்தில் அபேக்ஷித விஶேஷங்களைப் பிரித்து அநுஸந்திக்குமது ஶேஷவ்ய வச்சேதார்த்தமன்று. 'வ்ரஜ' என்றும், 'த்வா' என்றும் அர்ஜுநனை ஒருவனைக் குறித்துச் சொன்னாலும் தாத்பர்ய விஶேஷத்தாலே இது ப்ரபத்த்யதிகாரிகள் எல்லாருக்கும் வரும். ஸர்வ பாப மோக்ஷ வசநத்தில் புத்திபூர்வோத்தராகத்தையும் கூட்டுவார்க்கு ஶரண்ய அபிப்ராய மூல புநஃப்ரபதநாதி முகத்தாலே அவைகளுக்கு விநாஶம் விவக்ஷிதமாகையால் ஶாஸ்த்ர விரோதமில்லை. 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற ஸங்கல்பத்தின் பலத்தை ப்ராரப்த கர்மாவஸாந காலத்திலே என்றவர்களுக்கும் ப்ரபத்தி பண்ணுகிறவன் கோரின காலத்திலே என்றவர்களுக்கும் ஆர்த்தியில் தாரதம்யத்திற்கு ஈடாகப் பலாநுபவத்தாலேயாதல் ப்ரபத்தி வைபவத்தாலேயாதல் ப்ராரப்தகர்மாவஸாந காலத்திலே மோக்ஷம் துல்யம். அர்ஜுநனுக்கு ஶோக நிமித்தம் வேறேயாகிலும்

1 'मा शुचः संपदं दैवीं' (மா ஶுசः ஸம்பதம் தைவீம்)

என்கிறஇடத்திற்போலே 'மோக்ஷயிஷ்யாமி மா ஶுசः' என்கிற இடத்திலும்ப்ரகரணுநுகுண நிமித்தவிஶேஷாநுஸந்தாநம்உசிதம்.

மற்றும் இப்படி வேதாந்த ஸித்தங்களான தத்த்வ ஹித புருஷார்த்தங்களில் பரஸ்பர விரோதமும் பூர்வாபர விரோதமும் இல்லாத ஶுத்த ஸம்ப்ரதாய க்ரமத்தை ஸங்க்ரஹித்தனம்.

நிகமநம்

2 'सुव्याहृतानि महतां' (ஸுவ்யாஹ்ரு

1 கீதை—16-5. 'அபிஜாதோஸி பாண்டவ' என்று மேல். ஓ! பாண்டுவின் பிள்ளையாகிய அர்ஜுந ! துக்கப்படாதே, தேவர்களின் ஸம்பத்தை உத்தேசித்துப் பிறந்தவனாகிறாய். 2 பாரதம் - உத்யோக – 34-34. 'ஸுக்ருதாநி ததஸ்ததः | ஸஞ்சிந்வந் தீர ஆஸீதஸிலஹாரீ

தாநி மஹதாம்) இத்யாதிகளையும் இங்கே ஸங்க்ரஹித்துக்கொள்வது

அகவல்

* கடலமுதத்தைக் கடைந்து சேர்த்த
திருமாலடி காட்டிய(டும்) நம்
தேசிகர் தங்நிலை பற்றிச் சேர்ந்தோமே. 2

** आसर्वज्ञादस्मदाचार्यपंक्तेरप्रत्यूहं सत्पथं स्थापयन्ती ।
सैषा नित्यं संप्रदायस्य शुद्धिः श्रद्धातव्या चातकन्यायनिष्ठैः ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री संप्रदाय परिशुद्धिः संपूर्णा ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிகஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தி முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

ஸிலம் யதா ' என்று மேல். பெரியோர்களுடைய ஹிதோபதேசரூபமான வார்த்தைகளையும்அவர்களுடையஅநுஷ்டாநங்களையும்அவர்களிடமிருந்துஉயிர்நெல்லைப்பொறுக்குமவன் உயிர்நெல்லைப்பொறுக்குவதைப்போல பொறுக்கிச் சேர்த்துக்கொண்டு தீரனாய் இருக்கவேண்டும்

* ஸர்வஜ்ஞனாகிய பகவான் தொடக்கமாக நம்முடைய ஆசார்யர்களின் வரிசையின் நல்ல மார்க்கத்தை ஒரு விதத் தோஷமும் இல்லாதிருக்கும்படி ஸ்தாபிக்கிற அப்படிப்பட்ட இந்த ஸம்ப்ரதாயத்தினுடைய பரிசுத்தி, அதாவது ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தி என்கிற இந்த க்ரந்தமானது சாதக நிஷ்டையையுடைய பரமைகாந்திகளினால் எப்பொழுதும் விச்வஸிக்கத்தக்கது.

* ஸமுத்திரத்தைக் கடைந்துஅம்ருதத்தை ஒன்று சேர்த்தவனாகிய ச்ரியःபதியினுடைய திருவடிகளை உபாயமாயும் உபேயமாயும் காட்டிக் கொடுத்த நம் பூர்வாசார்யர்களினுடைய ஸ்திதியை அவலம்பித்து நாம் அடைந்தோம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

மூன்றாவது ரஹஸ்யம்

ஸ்ரீ தத்த்வ பதவீ

[அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் இரண்டாவது.
இது காஞ்சீபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

[உபோத்காதம்—பரதத்த்வ நிரூபணம்—சேதநநிரூபணம்—அசேதந நிரூபணம்—த்ரிகுண நிரூபணம்—கால நிரூபணம்—சுத்த ஸத்த்வ நிரூபணம்—தர்மபூத ஜ்ஞாந நிரூபணம்—முக்தி அடையும் ப்ரகாரம்.]

* प्रसादात् देशिकेन्द्राणां परावर विभागवित् ।
प्रपन्नः परमात्मानं प्राप्नोति परमं पदम् ॥

ப்ரஸாதாத் தேஶிகேந்த்ராணாம் பராவரவிபாகவித் ।
ப்ரபந்ந: பரமாத்மாநம் ப்ராப்நோதி பரமம் பதம் ॥

உபோத்காதம்

ஸதாசார்யப்ரஸாதத்தாலே பராவர தத்த்வஜ்ஞாநம் பிறந்து (தவன்) ஸர்வேஶ்வரன் திருவடிகளைஉபாயஉபேயங்களாகப்பற்றி உஜ்ஜீவிக்கவேண்டும்.

---

* ஆசார்யர்களினுடைய அநுக்ரஹத்தினால் பர தத்த்வம் அவர தத்த்வம், அதாவது உயர்ந்த வஸ்து தாழ்ந்த வஸ்து, இவைகளின் பிரிவைத் தெரிந்துகொண்டவனாய் உயர்ந்த தத்த்வமாகிய ச்ரிய:பதியினிடம் ப்ரபத்தி செய்தவன் பரமபதத்தை அடைகிறான்.

பரதத்த்வமாவது—ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்கள் எல்லாவற்றுக்கும் தாரகனுமாய் நியந்தாவுமாய் போஷியுமான ஶ்ரிய:பதி. இவன் ஸ்வத:ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், பரமகாருணிகனாய், ஸர்வஶரண்யனாய், பரமோதாரனாய், மோக்ஷப்ரதனாய், முக்தப்ராப்யனாய், பரவ்யூஹாதி பஞ்சப்ரகார ஶுபாஶ்ரய (திவ்யமங்கள) விக்ரஹவிஶிஷ்டனாயிருக்கும்.

பர தத்த்வ நிரூபணம்

இவனை ஒழிந்தவை அவர தத்த்வம். இது சேதநமென்றும், அசேதநமென்றும் இரண்டு வகையாயிருககும்.

சேதநமான அவர தத்த்வம் பரிச்சிந்நமான அஹமர்த்தம் இதற்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் பராயத்தங்களாயிருக்கும். இது பத்த முக்த நித்ய ரூபத்தாலே த்ரிவிதம். பத்தராவார்—ஸம்ஸரிககுமவர்கள். முக்தராவார் — ஸம்ஸாரம் கழிந்தவர்கள். நித்யராவார்—ஒரு காலத்திலும் ஸம்ஸாரமில்லாத நித்யஸூரிகள்.

சேதந நிரூபணம்

அசேதநமாவது—அறிவில்லாத வஸ்து. அசேதந த்ரவ்யம் த்ரிகுணம் என்றும், காலம் என்றும், ஶுத்தஸத்த்வம் என்றும், தர்மபூதஜ்ஞாநம் என்றும் சதுர்விதமாயிருக்கும்.

அசேதந நிரூபணம்

த்ரிகுணமாவது ஸத்த்வாதி குணத்ரயாஶ்ரயமான த்ரவ்யம். இது ப்ரக்ருதி விக்ருதி விபாகத்தாலே இருபத்து நாலு வகையாய் பகவல்லீலார்த்தமாக க்ஷேத்ரஜ்ஞருக்குக் காயகரணாதிரூபேண பரிணமித்து பகவத் ஸ்வரூப திரோதாநாதிகளைப் பண்ணும்.

த்ரிகுண நிரூபணம்

காலமாவது—க்ஷணாதி விபாகத்தையுடைத்தாய் ஸர்வ கர்த்தாவான ஈஶ்வரனாலே ஸஹகாரியாக ஸ்வீக்ருதமாயிருக்கும் த்ரவ்யம்,

காலநிரூபணம்

ஶுத்தஸத்த்வமாவது— ரஜஸ் தமஸ்ஸுக்களின்றிக்கே ஸத்த்வ குணாஶ்ரயமான த்ரவ்யம்.

சுத்தஸத்த்வ நிரூபணம் இது ஈஶ்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் விக்ரஹாதி ரூபேண விசித்ர(போக்ய)மாயிருக்கும்.

தர்மபூத ஜ்ஞாநமாவது—பராவராத்மாகளுக்கு ஸ்வாத்மாவையும், ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்க வற்றான ஜ்ஞாநம். இந்த ஜ்ஞாநத்

தர்மபூதஜ்ஞாந நிரூபணம் தாலே ஆத்மாக்களுக்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் உண்டாகின்றன.

பத்தருக்கு நிஷித்த காம்ய கர்த்ருத்வம் ஸம்ஸார ஹேது. தத்த்வஜ்ஞாநமூல நிவ்ருத்திதர்ம கர்த்ருத்வம் மோக்ஷ ஹேது.

முக்தி அடையும் ப்ரகாரம் பத்தன் முன்பு பண்ணின பந்தங்களுக்கெல்லாம் தன் அதிகாராநுகுணமாக ப்ரபத்த்யாதி ப்ராயஶ்சித்தம் பண்ணி, மேல் அபராதம் பண்ணாதே ப்ராரப்த கர்மத்தையும் ஒரு வழியாலே கழித்து முக்தனும்.

குறள் வெண்பா

* முத்திக்கு அருள்சூட மூன்றைத் தெளிமுன்னம்*
இத்திக்கால்ஏற்கும் இதம்.

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्रीतत्त्वपदवी संपूर्णा ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ தத்த்வ பதவீ முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

---

* மோக்ஷத்திற்குக் காரணமாகிய பகவானுடைய க்ருபையை சிரஸா வஹிக்க முதலில் சித், அசித், ஈச்வரன் என்கிற மூன்று தத்த்வங்களையும் அவைகளின் அஸாதாரண தர்மங்களுடன் நன்றாகத் தெரிந்துகொள், இந்த வழியாக உபாயம் அநுரூபமாக உண்டாகும்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

நான்காவது ரஹஸ்யம்

ஸ்ரீ ரஹஸ்யபதவீ

[அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் மூன்றுவது.

[காஞ்சீபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

[உபோத்காதம்—ப்ரணவ சப்தார்த்தம்—நம: சப்தார்த்தம்—நாராயண சப்தார்த்தம்—த்வயத்தில் பூர்வ கண்டார்த்தம்—த்வயத்தில் உத்தர கண்டார்த்தம்—த்வயத்தின் திரண்டபொருள்—சரமச்லோகத்தில் பூர்வார்த்தவிவரணம்—சரம ச்லோகத்தில் உத்தரார்த்த விவரணம்—நிகமநம்]

உபோத்காதம்

அநாதிகாலம் ஸம்ஸரித்துப் போந்த ஜீவாத்மாக்களுடைய உஜ்ஜீவநார்த்தமாக அத்யாத்ம ஶாஸ்த்ரங்கள் தத்த்வ ஹித புருஷார்த்தங்களைப்ரதிபாதிக்கும். அவற்றை ஸங்க்ரஹேண ரஹஸ்யத்ரயம் ப்ரகாஶிப்பிக்கும்.

ப்ரணவசப்தார்த்தம்

இவற்றில் திருமந்த்ரம், ஸர்வஸங்க்ரஹம். இது தான் மூன்று பதமாய் எட்டுத் திருவக்ஷரமாயிருக்கும். இதில் ப்ரதம பதமான ப்ரணவம் ஸாரதம ஸங்க்ரஹம். இது மூன்று பதமாய் மூன்று அக்ஷரமாயிருக்கும். இதில் ப்ரதமாக்ஷரம் ஸர்வகாரணபூதனுய், ஸர்வரக்ஷகனுய், நித்ய நிருபாதிக ஶேஷத்வ ப்ரதிஸம்பந்தியான ஶ்ரிய:பதியைச்

சொல்லுகிறது. இதில் சதுர்த்தீ— ஶேஷத்வமாகிற ஸம்பந்தத்தைக் காட்டுகிறது. மத்யமாக்ஷரம் இஸ்ஸம்பந்தத்தை மற்றவரோடு துவக்கற நியமிக்கிறது. த்ருதீயாக்ஷரம் இஸ்ஸம்பந்தத்திற்கு ஆஶ்ரயனுய் ரக்ஷணீயனுய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூப குணனுய் அணுவாய் தேஹாதி விலக்ஷணனுன ஜீவாத்மாவைச் சொல்லுகிறது. ஆகஇப்ப்ரணவத்தால்

1 ‘ கண்ணபுரமொன்று
உடையானுக்கு அடியேன் * ஒருவர்க்குரியேனே * ’

என்கிறபடியே இஜ்ஜீவாத்மா பகவதநந்யார்ஹ ஶேஷபூதன் என்றதாயிற்று.

மத்யமபதமான நமஸ்ஸு இரண்டு அக்ஷரமாய் இரண்டு பதமாய் நான்எனக்கு உரியன்அல்லேன்,என் கார்யத்திற்கு நான்நிரபேக்ஷஸ்வதந்த்ரனும் அல்லேன் என்கிறது. இங்கே பாகவத ஶேஷத்வம் பலிதம். இந் நமஸ்ஸுக்கு ஶரணாகதியிலும் தாத்பர்யம். அநிஷ்ட நிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறதாகவுமாம். இப்படி நமஸ்ஸு தன்னிலே தத்த்வ ஹித புருஷார்த்த ப்ரகாஶநமுண்டு.

நம: சப்தார்த்தம்

நாராயண ஶப்தம் நாரங்களுக்கு அயநம் என்றும், நாரங்களை அயநமாகவுடையவன் என்றும், ஸர்வாதாரத்வாதி விஶிஷ்டனுன ஶ்ரிய:பதியைச் சொல்லுகிறது. இதில் சதுர்த்தீ தாதர்த்தயத்தை முன்னிடுக்கொண்டு, அதன் பலமான கைங்கர்யத்தைக் காட்டுகிறது. இத்தால்

நாராயண சப்தார்த்தம்

2 ‘ ஒழிவில்காலமெல்லாம் உடனுய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் ’

என்றதாயிற்று.

---

1 பெரிய திருமொழி-8-9-3 2 திருவாய்-3-3-1

1 'अकारार्थैव' (அகாரார்த்தாயைவ)
என்கிற ஶ்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

இப்படித் திருமந்த்ரத்தில் ஸங்க்ருஹீதங்களான தத்த்வ ஹித புருஷார்த்தங்களை விஶதமாக்குகிறது த்வயம். இதில் பூர்வ கண்டம் ஒரு வாக்யமாய் த்வயத்தில் பூர்வகண்டார்த்தம் உபாயபரம். உத்தர கண்டம் இரண்டு வாக்யமாய் உபேயபரம், இவை ஓரொன்றும் மூன்று பதமாயிருக்கும். ப்ரதம கண்டத்தில் ப்ரதம பதம் மூன்று பதம் கூட ஸமஸ்த பதமாயிருக்கும். இதில் ஸ்ரீமத் ஶப்தம் ஸர்வருக்கும் ஆஶ்ரயணீயையாய்

2' அகலகில்லேன்'

என்கிறபடியே தன்னை ஆஶ்ரயித்திருக்கிற பெரிய பிராட்டியாரோடு பிரிவற்றவன் என்கிறது. நாராயண ஶப்தம்

2 'நிகரில் புகழாய்'

இத்யாதிகளிற் சொன்ன வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யாதிகளையுடையவனான ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது. (ஈ)சரணஶப்தம் ஶரண்யவிஷயத்தில்க்ருபோத்தம்பநாதிகளுக்காக தாஸபூதன் பற்றும் துறையான திருவடிகளைக் காட்டுகிறது. 'ஶரணம்' என்கிற பதம் திருவடிகளுடைய உபாய பாவத்தைச் சொல்லுகிறது. 'ப்ரபத்யே' என்கிற பதம் அகிஞ்சநாதிகாரி ஶரண்யன் திருவடிகளை உபாயமாகக கொண்டு மஹாவிஶ்வாஸாதிவிஶிஷ்ட பரந்யாஸம் பண்ணுகிறபடியை ப்ரகாஶிப்பிக்கிறது.

'ஸ்ரீமதே' என்கிறபதம் ப்ராபகனான நாராயணன் ப்ராப்யனாய்க் கொண்டு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாம் போது பத்நீ விஶிஷ்டனாயிருக்கும்படியைக் காட்டுகிறது. த்வயத்தில் உத்தரகண்டார்த்தம் இங்குற்ற நாராயணஶப்தம்ஸர்வ ப்ரகார விஶிஷ்டனாய்க் கொண்டு நிரதிஶய போக்யனான ஸர்வஶேஷியை ப்ரதிபாதிக்கிறது. இதின்

115-ம் பக்கம்பார்க்க

2 திருவாய்-6-10-10

சதுர்த்தியிலும் திருமந்த்ரத்திற்போலே கைங்கர்ய ப்ரார்த்தனையைக் கண்டு கொள்ளுவது. இக்கைங்கர்யம் ஸர்வவிரோதி ரஹிதமானபடியை இந்நமஸ்ஸு கணிசிக்கிறது.

த்வயத்தின் திரண்ட பொருள்

ஸ்ரீமானுன நாராயணன் திருவடிகளில் களையற்ற நித்ய கைங்கர்யம் பெறுகைக்கு ஸ்ரீமானுன நாராயணன் திருவடிகள் இரண்டையும் ஶரணமாகப் பற்றுகிறேன் என்று இதில் திரண்ட பொருள்.

சரமச்லோகபூர்வார்த்தவிளக்கம்

இப்படித் திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாஶித்த உபாயத்துக்கு அகிஞ்சநாதிகாரித்வ நிரபேக்ஷத்வாதிகளைக் காட்டிக் கொண்டு விதிமுகத்தாலே உபப்ரும்ஹணம் பண்ணுகிறது சரம ஶ்லோகம். இது தான் மூன்று வாக்யமாய்ப் பன்னிரண்டு பதமாயிருக்கும். இப்படி ரஹஸ்ய த்ரயம் உத்தரோத்தரம் பதங்கள் இரட்டிப்பாய் விஶதீகரணமாயிருக்கும். இஶ்ஶ்லோகத்தில் ப்ரதம வாக்யம் உபாயவிதாயகம். மத்யம வாக்யம் பலப்ரதிபாதகம். உத்தர வாக்யம் க்ருதக்ருத்யத்வாதி தத்பரம். 'ஸர்வ தர்மங்களையும் விட்டு' என்கிற இரண்டு பதங்களாலே

1 'நின்னிலங்குபாதமன்றி மற்றோர்பற்றிலேன் எம்ஈசனே'

என்கிறபடியே அபிமத ஸித்திக்கு உபாயாந்தரம் அற்று இருக்கிற அதிகாரி விசேஷத்தையாதல், ப்ரபத்தியினுடைய தர்மாந்தர நைரபேக்ஷ்யாதிகளையாதல் சொல்லுகிறது. 'என்னை ஒருவனே' என்கிற இரண்டு பதங்களாலே ஸௌலப்யாதி குண விஶிஷ்டமாய் ப்ரதாநோபாயத்வ நிரபேக்ஷத்வ ஸர்வபலப்ரதத்வாதி விஶிஷ்டமுமான ஸநாதந தர்மத்தைக் காட்டுகிறது. 'ஶரணமாகப் பற்று' என்கிற இரண்டு பதங்களாலே மஹாவிஶ்வாஸாதி விஶிஷ்ட பரந்யாஸத்தை விதிக்கிறது.

---

1 திருச்சந்த–90

'நான் உன்னை' என்கிற இரண்டு பதங்களாலே (भ)பரஸ்வீகாரம் பண்ணின ஸர்வஶக்தியையும், ந்யஸ்தபரனான சாதகவ்ருத்தியையும் சொல்லுகிறது. 'எல்லாப் சரமச்லோகஉத்தரார்த்தவிளக்கம் பாபங்களினின்றும் விடுவிக்கக் கடவேன்' என்கிற இரண்டுபதங்களாலே கைங்கர்ய விரோதிகளை நிஶ்ஶேஷமாகக் கழிக்கும்படியைச் சொல்லுகிறது. 'ஶோகிக்க வேண்டாம்' என்கிற இரண்டு பதங்களாலே புகலற்றுத் தளும்பின பூர்வதஶையை விலக்கி,

1 'निस्संशयः सुखमास्स्व' (நிஸ்ஸம்ஶயஸ் ஸுகமாஸ்ஸ்வ) என்று அருளிச்செய்த உத்தர தஶையை உபலக்ஷிக்கிறது.

த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களுக்கு இதில் பூர்வோத்தரார்த்தங்கள் சேர்த்தியாகின்றன.

குறள் வெண்பா.

*மூன்றில் ஒரு மூன்றும் மூவிரண்டும் முந்நான்கும்
தோன்றத் தொலையும் துயர்.

** इति तत्त्वत्रयस्यैषा रहस्यत्रितयस्य च ।
पदवी वेङ्कटेशेन प्रत्यक्प्राची प्रदर्शिता ।।

இதி தத்த்வத்ரயஸ்யைஷா ரஹஸ்யத்ரிதயஸ்ய ச |
பதவீ வேங்கடேஶேந ப்ரத்யக் ப்ராசீ ப்ரதர்ஶிதா ||

---

1 சரணாகதி கத்யம். ஸம்சயம் ஒன்றுமில்லாமல் ஸுகமாயிரு.

* ரஹஸ்யத்ரயத்தில் அத்விதீயமான மூன்று பதங்கள் அடங்கிய திருமந்த்ரமும், அன்றிக்கே ஒரு அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற மூன்று பதங்களையுடைய திருமந்த்ரமும், ஆறு பதங்களையுடைய த்வயமும், பன்னிரண்டு பதங்களையுடைய சரம ச்லோகமும் அர்த்தத்துடன் மனதில் ப்ரகாசிக்கத் துக்கங்கள் நசித்துவிடும்.

** இந்த சித், அசித், ஈசுவரன் என்கிற மூன்று தத்த்வங்களினுடையவும், திருமந்த்ரம், த்வயம், சரம ச்லோகம், என்கிற மூன்று ரஹஸ்யங்களினுடையவும் கிழக்கு மேற்காக இருக்கிற, அதாவது ப்ரத்யக் என்று சொல்லப்படும் ஜீவாத்மாவை அடைவதற்குக் காரணமாயிருக்கிறப்ராசீநமார்க்கமானதுவேங்கடேசன் என்கிற திருநாமமுடைய ஆசார்யனால் இந்த ப்ரகாரம் காட்டப்பட்டது. இங்கு 'வேங்கடேசேந' என்னும் பதம் இந்த க்ரந்தத்திற்கு வக்தா தாமல்லர், ப்ரதமாசார்

1 श्रीरङ्गद्विरदवृषाद्रि पूर्वकेषु स्थानेषु स्थिरविभवा भवत्सपर्या ।
आकल्पं वरद विधूतवैरिपक्षा भूयस्या भवदनुकम्पयैव भूयात् ॥

ஸ்ரீரங்க த்விரத வ்ருஷாத்ரி பூர்வகேஷு
ஸ்த்தாநேஷு ஸ்த்திரவிபவா பவத் ஸபர்யா |
ஆகல்பம் வரத விதூத வைரிபக்ஷா
பூயஸ்யா பவதநுகம்பயைவ பூயாத் ||

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री र ह स्य प द वी सं पू र्णा ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிகஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ ரஹஸ்ய பதவீ முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

யனான பகவானே என்கிற அர்த்தமும் த்வனிக்கிறது. ஒரு ஊரிலிருந்து பல இடங்களுக்குச் செல்லும் வழியைச் சுட்டிக் காட்டுகிறுப் போல இங்கும் திங் மாத்திரம் காட்டப்பட்டது என்று கருத்து. 'ப்ருதக் ப்ராசீ' என்று பாடாந்தரம். அப்பொழுது ப்ராசீநமான இந்த வழி தனித்தனியே காட்டப்பட்டது என்று அர்த்தம்;

1 பக்தர்களுக்கு அபீஷ்டங்களைக் கொடுக்கும் பகவானே! ஸ்ரீரங்கம், ஹஸ்திகிரி, வேங்கடாசலம் இவை முதலான உகந்தருளின திவ்யதேசங்களில் உம்முடைய திருவாராதனம் அதிகமான உம்முடையதான க்ருபையினால் கல்ப காலம் வரையிலும் போக்கடிக்கப்பட்டசத்ருக்களினுடைய பக்ஷத்தையுடையதாகவும் அழிவில்லாத ஐச்வர்யத்துடன் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

ஐந்தாவது ரஹஸ்யம்

ஸ்ரீ தத்த்வ நவநீதம்

[அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் நாலாவது.
இது காஞ்சீபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

[போக்த்ராதி விபாகம்—போக்த்ரு நிரூபணம்—போக்ய நிரூபணம்—த்ரிகுண நிரூபணம்—கால நிரூபணம்—சுத்த ஸத்த்வ நிரூபணம்—ப்ரேரித்ருநிரூபணம்—ப்ரஹ்ம த்ரைவித்ய நிரூபணம்.]

நேரிசை வெண்பா.

* உயிரும் உடலும் உடலாக ஓங்கித்*
தயிர் வெண்ணெய் தாரணியோடுண்டான்*—பயிரில்
களைபோல் அசுரரைக் காய்ந்தான்தன் கையில்
வளைபோல் * எம் ஆசிரியர் வாக்கு. 5

---

* நம் பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்தி, ஜீவாத்மாக்களும் அவைகளின் சரீரங்களும் தனக்குச் சரீரமாயிருக்கும்படி தான் சேஷியாய் ஸர்வோத்க்ருஷ்டனாய் நின்று, திருவாய்ப்பாடியில் தயிர் வெண்ணெய் முதலியவைகளை இந்தப் பூமியுடன், (இது மற்ற எல்லா லோகங்களுக்கும் உபலக்ஷணம்), அமுதுசெய்தவனாய், பயிரில் களையைப் போலே அஸுரர்களைக் கொன்றவனாகிய பகவானுடைய திருக்கையில் கடகத்(சங்கத்)தைப் போலே (அவற்றைத் தரிப்பவர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும் த்ருப்தியை உண்டுபண்ணுகிறாப்போலே இருக்கிறது,

ஸம்ஸ்க்ருத த்ராவிடஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் சொல்லுகிற தத்த்வஜ்ஞாநபூர்வகமாக மோக்ஷோபாயாநுஷ்ட்டாநம் வேணடு(மா)கையாலே, முமுக்ஷுவுக்கு விஶேஷித்தறியவேண்டும் சித் அசித் ஈஶ்வர தத்த்வங்களை போக்தா என்றும், போக்யம் என்றும், ப்ரேரிதா என்றும் உபநிஷத்துச் சொல்லிற்று.

போக்த்ராதிவிபாகம்

போக்தாவாகையாவது—போகத்தையுடையனாகை. இது ஸர்வேஶ்வரனுக்கும் பொதுவாயிருக்க, அவனை ப்ரேரிதா என்று பிரியச் சொல்லுகையாலே ஸர்வப்ரேரகத்வ மின்றிக்கே பராதீந போகனான ஜீவனை இங்கு போக்தா என்கிறது.

1 '**अधिष्ठानं तथा कर्ता**' (அதிஷ்ட்டாநம் ததா கர்த்தா) என்கிற இடத்தில் கர்த்ருஶப்தமும் பராதீநகர்த்தாவைச் சொல்லுகிறது. சித் அசித் ஈஶ்வரர்கள் என்னும்போது சித் ஶப்தமும் பராதீந சேதந விஷயம்.

2 '**इच्छात एव तव विश्वपदार्थ सत्ता**' (இச்சாத ஏவ தவ விஶ்வ பதார்த்த ஸத்தா)

இத்யாதிகளிற்படியே ஜீவனுடைய ஜ்ஞாநாநந்த ஸ்வரூபாதிகளும் பராதீநங்களாயிறே இருப்பது. இஜ்ஜீவ வர்க்கத்தில் பீஜாங்குர க்ரமத்தாலே அநாதியான அபராத ப்ரவாஹமடியாக முடிவில் பெரும் பாழான சிறைக்கூடத்திலே முப்பிரியான ஸத்த்வாதி குணங்களாலே கட்டுண்டு கழலவிரகற்றுக் கிடக்கிறவர்கள் பத்தர்கள். இவர்களிலே மோக்ஷஶாஸ்த்ரங்களிற் சொல்லுகிறதொரு விரகாலே

---

1 கீதை - 18-14 'கரணம் ச ப்ருதக் விதம் | விவிதா ச ப்ருதக் சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்' என்று மேல். (மனிதன் சரீரம் வாக்கு மனது இவைகளினால் எந்தக் கர்மத்தைச் செய்கிறானோ, அந்தக் கர்மத்திற்கு) சரீரம், அப்படியே ஜீவாத்மா (வெவ்வேறாகஇருக்கிற இந்த்ரியங்கள், அநேக விதமாயிருக்கிற வேறான வ்யாபாரத்தையுடைய ப்ராண வாயு, இந்த விஷயத்தில் ஐந்தாவதாகிய பரமாத்மா, இவை ஐந்தும் காரணங்கள்.)

2 வைகுண்ட ஸ்தவம்—36. 'நித்யம் ப்ரியாஸ்தவ து கேசந தேஹி நித்யாः' என்று மேல். உம்முடைய ஸங்கல்பத்தினாலேயே எல்லா வஸ்துக்களினுடைய ஸ்வரூபம் உண்டாகிறது. (எவைசிலஉமக்கு எப்பொழுதும் இஷ்டங்களோ அவை நித்யங்கள் என்னப்படுகின்றன.)

1 'मोक्षयिष्यामि' (மோக்ஷயிஷ்யாமி) என்னும்படி முனிவு தீர்ந்து நித்யரோடொக்க முகப்பே கூவிப் பணிகொள்ளப் பெற்றவர்க ர் முகதர்கள். நித்ய பகவதனுபவத்தாலே நித்ய கைங்கர்யபரரான ஶேஷஶேஷாஶநாதிகள் நித்யர்கள்.

போக்யநிரூபணம்

போக்யம் என்பது அநுபாவ்யம் என்றபடி. இது ஜீவேஶ்வரர்களுக்கும் பொதுவாகையாலே பூர்வாபரபதங்களிற் சொன்ன போக்த்ருத்வமும் நியந்த்ருத்வமும் இல்லாத விஷயத்தை இங்கு போக்யம் என்கிறது. இத்தை அசித்து என்றது ஜ்ஞாநரஹிதம் என்றபடி. அசேதநத்வம் கேவல குணங்களுக்கும் தர்மபூதஜ்ஞாநத்திற்கும் பொதுவாகிலும் இங்கு த்ரிவித அசேதனம் என்று பூர்வர்கள் நிரூபித்தவை த்ரிகுணமும் காலமும் ஶுத்தஸத்த்வமும் என்கிற த்ரவ்ய விஶேஷங்கள்.

த்ரிகுண நிரூபணம்

த்ரிகுணமாவது—பரிமிதஸுகத்திற்கும் துக்கத்திற்கும்மோஹத்திற்கும் விஶேஷ காரணங்களான ஸத்த்வ ரஜஸ் தமஸ்ஸுக்களாகிற குணங்களுக்கு ஆஶ்ரயமானத்ரவ்யம். இது கேவல ப்ரக்ருதி என்றும், ப்ரக்ருதி விக்ருதி என்றும், கேவல விக்ருதி என்றும் மூன்று வகையாய் இருபத்து நாலு தத்த்வ ரூபமாயிருக்கும். இவற்றில் ஸ்வபாவத்தாலும் பஞ்சீகரணாதிகளாலும் தேஶ கால பேதத்தாலே உண்டாம் விக்ருதிகளுக்கு எல்லையில்லை.

காலநிரூபணம்

காலமாவது—ஜடத்வ விபுத்வங்களையுடைத்தாய் பாலவ்ருத்தாதி வ்யவஸ்த்தைகளுக்கு விஶேஷ காரணமானத்ரவ்யம். இது எப்போதும் அவ்வோவஸ்துக்களுடைய பூத பவிஷ்யத் வர்த்தமாந வ்யபதேஶங்களுக்கும் தன் அவச்சேதங்களாலே நியாமகமாயிருக்கும். இதற்கு ஸத்த்வாதிகுணத்ரயமின்றிக்கே இருக்க உபாதி விஶேஷங்களாலே ஶீத காலம் உஷ்ணகாலம் என்னுமா போலே ஸாத்த்விக ராஜஸ தாமஸாதி

1 கீதை - 18-66. (எல்லாப் பாபங்களிலிருந்தும் உன்னை) விடுவிக்கிறேன்.

கால விபாகம் உண்டாகிறது. ப்ரஹ்மதிவஸம் முதலாக மனுஷ்ய திவஸபர்யந்தமாக எங்கும் இது கண்டுகொள்வது. ஶுத்தஸத்த்வத்தில் இப்படிப்பட்ட கால விபாகமின்றிக்கே பூர்வாபராதி விபாகமாத்ரமேயாயிருக்கும்.

சுத்தஸத்த்வ நிரூபணம்

ஶுத்த ஸத்த்வமாவது—ரஜஸ் தமஸ்ஸுக்களின்றிக்கே ப்ராக்ருத ஸத்த்வ விலக்ஷண ஸத்த்வத்துக்கு ஆஶ்ரயமான த்ரவ்யம். இது ஸபரிகரனை ஶ்ரிய:பதிககுப் போக்ய போகோபகரண போகஸ்த்தாந ரூபமாய்க் கொண்டு அநந்தாஶ்(சர்)ரயமாய் ஹிரண்யகர்ப்பாதி ஸ்த்தாநங்களெல்லாம் நரகமாய்த் தோற்றும்படியான ஆநுகூல்ய ப்ரகர்ஷத்தாலே பரமபதஶப்த வாச்யமாயிருக்கும்.

ப்ரேரித்ருநிரூபணம்

இப்படி மூன்றுவகையான சேதநாசேதநங்களுடைய ஸ்வரூப ஸ்த்திதி ப்ரவ்ருத்திகள் மூன்றும் தானிட்ட வழக்காம்படி நிற்கிற ஶ்ரிய:பதியை ப்ரேரிதா என்கிறது. இவன் மூன்று ஸம்பந்த நியமத்தாலே ஸர்வ ஶரீரியாய், மூன்று வ்யாபார விஶேஷங்களாலே ஸர்வ கார்யங்களுக்கும் ஸர்வ காரணமாய், மூன்று காலத்திலும் ஏகரூப ஸ்வரூப ரூபங்களையுடையவனாய், மூன்று ஸ்த்தாநத்திலே நித்ய வாஸத்தையுடையவனாய், மூன்று வகையான அர்ச்சாவதாரத்தை யுடையவனாய், மூன்று யுகத்திலே விஶேஷித்து ப்ரகாஶிக்குமவனாய், மூன்று குண யுகத்தாலும் த்ரியுகனாய், மூன்று வ்யூஹங்களாலே மூவிரண்டு ப்ரகாரங்களைப் பண்ணுமவனாய், மூன்று புருஷார்த்தங்களுக்கும் மூலமாய், மூன்று ப்ரமாணங்களாலும் ப்ரதிஷேதமில்லாதவனாய், மூன்று மாத்திரையான ஒற்றை எழுத்திற்கு முக்யார்த்தமாய், மூன்று ரஹஸ்யங்களில் ஶிக்ஷையாலே விஶேஷித்தறியப்படும்.

ப்ரஹ்ம த்ரைவித்ய நிரூபணம்

ப்ரஹ்மத்தற்கு உபநிஷத்துக்களிற் சொன்ன த்ரைவித்யம் போக்த்ரு(த்வ) விஶிஷ்ட ரூபத்தாலும், போக்ய(த்வ)விஶிஷ்ட ரூபத்தாலும், ப்ரேரகத்வவிஶிஷ்ட ரூபத்தாலும் உபபந்நம். தன்னையும் ப்ரேரிதாவையும் பி ரி ய

அறிந்து பற்றினவனுக்கு அவன் ப்ரஸாதத்தாலே மோக்ஷம்என்று இங்கே ஓதுகிறது. இப்படியே பஞ்ச தஶாத்யாயாதிகளிற்படியே பராவரதத்த்வ விவேகம் பிறந்தால்

1 'ध्येयो नारायणः सदा (த்யேயோ நாராயணஸ்ஸதா)என்றும்,

2' स्मर्तव्यः सततं विष्णुः (ஸ்மர்த்தவ்ய:ஸததம்விஷ்ணு:)என்றும்,

3 ' துஞ்சும்போதும் விடாது தொடர் '

என்றும் சொல்லுகிற ஸதாநுஸந்தாநம் கருத்ய ஶேஷமுடையவனுக்கு உபாயோபகாரவிதி(தை)யாலேவந்த போகம். க்ருதக்ருத்யனுக்கும் கைங்கர்யோபகார விதி(தை)யாலே வந்த போகம். போக்யனுய் நித்ய ஸ்ரீயான ஶேஷி ஸமாதிக தரித்ரனுனற்போலே போகமும் நிஸ்ஸமாப்யதிகமாம்.

கட்டளைக் கலித்துறை

* அலையற்ற ஆரமுதக் கடல் அக்கடலுண்ட முகில் *
விலையற்ற நன்மணிவெற்பு வெயில் நிலவோங்குபகல்*
துலையொத்தன என்பர் தூய்மறைசூடும் துழாய்முடியாற்கு*
இலையொத்தன அவன் பாதம் பணிந்தவர்க்கு எண்ணுதற்கே. 6

** सत्संप्रदायदध्नः समुद्धृतं वेङ्कटेशेन ।
तत्त्वनवनीतमेतत् तनुते नवनीत नर्तकप्रीतिम् ॥

1 நரஸிம்ஹ புராணம்—18-34 நாராயணன் எப்பொழுதும் த்யானிக்கத்தக்கவன், 2 பாரதம்— விஷ்ணு எப்பொழுதும் ஸ்மரிக்கத்தக்கவன். 3 திருவாய்—1-10-4

* அலையில்லாத பூர்ணமான அம்ருதத்தையுடைய ஸமுத்திரம், அந்த அம்ருத ஸமுத்திரத்தை முழுதும் குடித்த மேகம், விலையில்லாததான உத்தம ரத்நமயமான மலை, வெயிலினுலும் நிலவினுலும் ப்ரகாசிக்கும் மத்தியான்னம் இவைகள்பரிசுத்தமான வேதங்களினுலே சிரஸ்ஸினுல் சூடப்படுகிற துழாய் மாலையைக்கிரீடத்தில் தரித்துக்கொண்டிருக்கிற பகவானுக்குஸமமாயிருந்தன, அன்றிக்கே தூக்கிப் பார்ப்பதில் அதாவது நிறையில் ஸத்ருச்யமாயிருந்தன என்று (பூர்வாசார்யர்கள்) சொல்லுவர்கள், அவனுடைய திருவடிகளை ஆச்ரயித்த பாகவதர்களுக்கு இவைகள் ஸமானம் என எண்ணுதற்கே ஸத்ருசமான வஸ்துக்கள் இல்லை

** ஸத்ஸம்ப்ரதாயத்தில் உபதேச க்ரமமாக வந்த அர்த்தங்களாகிற தயிரிலிருந்து வேங்கடேசன் என்கிற திருநாமத்தையுடையஆசார்

ஸத் ஸம்ப்ரதாய தத்நஸ் ஸமுத்த்ருதம் வேங்கடேஶந ।
தத்த்வநவநீதமேதத் தநுதே நவநீதநர்த்தகப்ரீதிம் ॥

* वरद विरचय त्वं वारिताशेषदोषां पुनरुपचित पुण्यां भूषितां पुण्यकोट्या ।
सितमुदितमनोभिः तावकैः नित्यसेव्यां हतरिपुजनयोगां हस्तिधाम्नः समृद्धिम् ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री त त्त्व न व नी तं सं पू र्णम् ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

வரத விரசய த்வம் வாரிதாஶேஷதோஷாம்
புநருபசித புண்யாம் பூஷிதாம் புண்யகோட்யா ।
ஸிதமுதித மநோபிः தாவகைः நித்ய ஸேவ்யாம்
ஹதரிபு ஜநயோகாம் ஹஸ்திதாம்நஸ் ஸம்ருத்திம் ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ தத்த்வ நவநீதம் முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

யனால் எடுக்கப்பட்ட இந்தத் தத்த்வ நவநீதம் என்கிற க்ரந்தமானது நவநீதத்திற்காக (க் கோபர்களுடைய க்ருஹங்களில்) நர்த்தநம்பண்ணின பகவானுக்கு ப்ரீதியைச் செய்கிறது.

* ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் அர்ச்சாரூபம் கொண்டிருக்கும் வரதனே ! போக்கடிக்கப்பட்ட எல்லாத் தோஷங்களையுடையதாயும், மேன்மேலும் வ்ருத்திசெய்யப்பட்ட புண்யத்தையுடையதாயும், புண்யகோடி விமானத்தினால் அலங்கரிக்கப்பட்டதாயும், பரிசுத்தமாயும், ஸந்தோஷத்தோடு கூடியதாயுமிருக்கிறமனத்தையுடைய உம்முடைய பக்தர்களினால் எப்பொழுதும் ஸேவிக்கத் தகுந்ததாயுமிருக்கிற ஹஸ்திகிரியினுடைய ஸம்பத்தைப் போக்கடிக்கப்பட்ட சத்ரு ஜனங்களுடைய ஸம்பந்தத்தையுடையதாக நீர் செய்துகொள்ளும்,

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

ஆறுவது ரஹஸ்யம்

ஸ்ரீ ரஹஸ்ய நவநீதம்

[அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் ஐந்தாவது.
இது திருவேங்கடத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

[திருமந்த்ரத்தில்—ஸ்வரூப ஸமர்ப்பணம், பர ஸமர்ப்பணம், பல ஸமர்ப்பணம் என மூவர்த்தங்களும், த்வயத்தில்—உபாய விசேஷம் புருஷார்த்த விசேஷம், விரோதி நிவ்ருத்தி விசேஷம் என மூவர்த்தங்களும், சரம ச்லோகத்தில்—அதிகாரி க்ருத்யம் சரண்ய க்ருத்யம், க்ருதக்ருத்யனுடைய உத்தர க்ருத்யம் என மூவர்த்தங்களுமாக ஒன்பது அர்த்தங்கள்.]

நேரிசை வெண்பா.

* உத்தி திகழும் உரை மூன்றில் மும்மூன்றும்*
சித்த முணரத் தெளிவித்தார்*—முத்திதரும்
மூல மறையின் முடிசேர் முகில்வண்ணர்*
சீலம் அறிவார் சிலர். 7

ஸகல வேத ஸாரமான திருமந்த்ரத்தில் மூன்று வாக்யங்களில் அடைவே ஸ்வரூப ஸமர்ப்பணமும் ப(ர)ரஸமர்ப்பணமும் பல ஸமர்ப்பணமும் அநுஸந்தேயம்.

இங்கு ஸ்வரூப ஸமர்ப்பணமாவது—

---

* ஸகல சாஸ்த்ரங்களுக்கும், அன்றிக்கே ஸகல புருஷார்த்தங்களுக்கும், முதற்காரணமான வேதத்தின் சிரோபாகமான வேதாந்தங்களில் ப்ரதிபாத்யனாய்ச் சேர்ந்திருக்கிற மோக்ஷத்தைக் கொடுக்கிற

1 ' सर्वोपाधिविनिर्मुक्तं क्षेत्रज्ञं ब्रह्मणि न्यसेत् '

(ஸர்வோபாதி விநிர்முக்தம் க்ஷேத்ரஜ்ஞம் ப்ரஹ்மணி ந்யஸேத்)

என்கிறபடியே வபுராதிகளில் வேறுபட்டு ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய் ஜ்ஞாநாநந்த குணகனாய் ஸ்வயம்ப்ரகாசனாய் ஸ்வஸ்மை பாஸமாநனாய் அணுவான நான், ஸர்வ ஜகதேககாரணபூதனாய், ஸர்வ ரக்ஷகனாய், ஸர்வசேஷியான ஸ்ரிய:பதியைப்பற்ற

2 ' நானும் உனக்குப் பழவடியேன் '

3 ' கண்ணபுரம் ஒன்று உடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனே '

என்கிறபடியே நித்ய நிருபாதிக சேஷபூதன் என்று அநுஸந்திக்கை. இஸ்ஸம்பந்தாநுஸந்தாநம் அர்த்தபஞ்சகாநுஸந்தாநத்திற்கு அஞ்சுருவாணியாய் நிற்கும்.

ப(ர)ர ஸமர்ப்பணமாவது—

4 ' आत्मात्मीय भरन्यासो ह्यात्मनिक्षेप उच्यते '

(ஆத்மாத்மீயபரந்யாஸோ ஹ்யாத்ம நிக்ஷேப உச்யதே)

என்கிறபடியே நித்ய சேஷபூதனுமாய் நித்ய பரதந்த்ரனுமாய் அபிமதஸித்திக்குப் புகல் ஒன்றில்லா அடியேனை இனி ஒரு கர்த்தவ்யத்திலே மூட்டாதே அடைக்கலமாகக்கொண்டு ரக்ஷித்தருள வேண்டும் என்கை. பல ஸமர்ப்பணமாவது—

5 ' तेन संरक्ष्यमाणस्य फले स्वाम्यवियुक्तता '

மேகம் போன்ற வர்ணத்தையுடைய பகவானுடைய ஸ்வபாவத்தை, அதாவது அவனுடைய ஸௌசீல்ய குணத்தை, அறிந்த ஆசார்யர்கள் சப்தங்களுக்குள் ச்லாக்யமான மூன்று ரஹஸ்யங்களில் ஒவ்வொன்றிலும் மூன்று அர்த்தங்களாக ஒன்பது அர்த்தங்களை மனது நன்றாகத் தெரிந்து கொள்ளும்படி ப்ரகாசம் செய்தார்கள்.

1. தக்ஷ ஸ்ம்ருதி. (சரீரம், இந்த்ரியங்கள், ஸூக்ஷ்ம ப்ரக்ருதி அவித்யை முதலிய) எல்லா உபாதிகளினாலும் விடப்பட்ட ஜீவாத்ம ஸ்வரூபத்தைபரமாத்மாவிடத்தில் ஸமர்ப்பிக்கவேண்டும்.

2. பெரியாழ்வார் திருமொழி—1-1-11. 3 பெரிய திரு—8-9-3

4. லக்ஷ்மீ தந்த்ரம்—17-79. தன்னுடையவும், தன்னைச் சேர்ந்த (புத்ரன், ப்ரேஷ்யன் முதலிய)வர்களுடையவும் பரத்தை ஸமர்ப்பிப்பது ஆத்ம நிக்ஷேபம் என்று சொல்லப்படுகிறது.

5.லக்ஷ்மீதந்த்ரம்—17-73 அந்தப்பகவானால் ரக்ஷிக்கப்படுகிறதனக்கு ரக்ஷிக்கப்படுவதினால் உண்டாகிய ப்ரயோஜநத்தில் யஜமாநனு

(தேந ஸம்ரக்ஷ்யமாணஸ்ய பலே ஸ்வாம்யவியுக்ததா)

இத்யாதிகளிற்படியே களையற்ற ஸூரிதுல்ய கைங்கர்யத்திற்கு ஸ்வரூப யோக்யனான ஆரா அன்பில் அடியேனுக்கு உபாதி அடியாக வந்த அயோக்யதைகளையெல்லாம் கழித்து வழுவிலா அடிமைகொண்டு வாழ்வித்தருளவேண்டும் என்கை. இப்படி ஶேஷஶேஷி பாவத்தாலே இருவரையும் உறவாக்கி, ஶேஷ ஶேஷி க்ருத்யத்தாலே இருவரையும் வணக்கி, ஶேஷ ஶேஷி பலத்தாலே இருவரையும் ஏகரஸமாக்குகிறது திருமந்த்ரம்.

இதிலே ஶாரீரக க்ரமத்தாலே தோற்றின பர தத்த்வத்தையும், பரம ஹிதத்தையும், பரம புருஷார்த்தத்தையும் ஸ்வரூபாநுரூப விஶேஷண விஶிஷ்டமாக வெளியிடுகிற ஶரணாகதி மந்த்ரத்தில் மூன்று வாக்யங்களில் அடைவே உபாய விஶேஷமும், புருஷார்த்த விஶேஷமும், விரோதிநிவ்ருத்தி விஶேஷமும் ஸித்த ஸாத்ய ரூபத்தாலே இரு வகையாகச் சேர்ந்து நிற்கும்படி அநுஸந்தேயம். எங்ஙனேஎன்னில்:— ஸ்ரீமானான நாராயணன் அபிமத ஸித்திக்கு வ்யாஜமாத்ர ஸாபேக்ஷமுமாய் தத்ப்ரவர்த்தகமுமாய் வ்யவதாநமற்று ப்ரதாநமுமான ஸித்தோபாயம்.

1 'अनन्य साध्ये' (அநந்ய ஸாத்யே)

2 'அகலகில்லேன்'

இத்யாதிகளிற் சொல்லுகிற ஶரணாகதி அவனுடைய வஶீகரணமான ஸாத்யோபாயம்.

புருஷார்த்த விஶேஷமாவது—

யிருக்கும் தன்மை இல்லாமல் இருப்பதும்.'கேசவார்ப்பண பர்யந்தா ஹ்யாத்ம நிக்ஷேப உச்யதே' என்று மேல். 'பகவானிடத்தில் அந்த யஜமாநனுயிருக்கும் தன்மையை ஸமர்ப்பிப்பது வரையில் தனக்கு யஜமாநனுயிருக்கும் தன்மை இல்லாமையே ஆத்மநிக்ஷேபம் என்று சொல்லப்படுகிறது என்று அர்த்தம்.

1. பரதமுனி வாக்யம். 'ஸ்வாபீஷ்டே மஹா விச்வாஸபூர்வகம் | ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்தி: சரணாகதி:' என்று மேல். (தன்னுடைய இஷ்ட பலமானது) வேறொரு உபாயத்தினாலும் ஸாதிக்க முடியாமல் இருக்கும்பொழுது (மஹா விச்வாஸத்தை முன்னிட்டுக் கொண்டு அவன் ஒருவனே உபாயமாகவேண்டும் என்று யாசிப்பது ப்ரபத்தி, அது தான் சரணாகதி).

2. திருவாய்—6-10-10

1 'தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே'
என்கிறபடியே தன்னோடும் தான் பண்ணுகிற கைங்கர்யத்தோடும் துவக்கற்று,

2 'கண்டு கேட்டு உற்று,
இத்யாதிகளிற்படியே நிரதிசயபோக்யமான நித்ய ஸித்த ப்ராப்யமும் அதனுடையபரிபூர்ணாநுபவ பரீவாஹமாய்க்கொண்டு ஸாத்யமான ஶேஷியுகந்த கைங்கர்யமும்.

விரோதி நிவ்ருத்தி விஶேஷமாவது—

1 'தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே'
என்கிறபடியே [தன்னோடும் தான் பண்ணுகிற கைங்கர்யத்தோடும்துவக்கற்று]ஸர்வ அவித்யாநிவ்ருத்திபிறக்கை. இப்படிப்பட்ட ஸித்த ஸாத்யங்களான புருஷார்த்த ஹேதுக்களையும், ஸித்த ஸாத்யங்களான புருஷார்த்தங்களையும் சேர்த்து ஸாத்ய புருஷார்த்தத்தில் இருவகையான களையற்ற படியையும் காட்டுகிறது த்வயம். இதில் பூர்வோத்தர கண்டங்களுக்கு

4 'स भ्रातुश्चरणौ गाढं' (ஸ ப்ராதுஶ்சரணௌ காடம்)

5 'भवांस्तु सह वैदेह्या' (பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா)
என்கிற இரண்டு ஶ்லோகங்களும் சேர்த்தியாகிறன. இவற்றில் தோற்றின பரம ஹிதத்தினுடைய அதிகார நைரபேக்ஷ்ய ஸ்வரூப ப்ரபாவங்களையும் வெளியிட்டுக்கொண்டு உபப்ரும்ஹணமான சரம ஶ்லோகத்தில் மூன்று வாக்யங்களில் அடைவே அதிகாரி

---

1. திருவாய்—2-9-4 2. திருவாய்—4-9-10

3. ராமாயணம்—அயோ....31-21. 'நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாம் உவாசாதியசா: ராகவம்சமஹாவ்ரதம்(ரகுவம்சத்திற்கு ஆநந்தத்தைக் கொடுக்கும் இளையபெருமாள் ஜ்யேஷ்ட ப்ராதாவாகிய ராமனுடைய திருவடிகளைக் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு ஸீதையையும் ராமனையும் குறித்து சொன்னார்). அதாவது பெருமாளும் பிராட்டியும் சேர்ந்திருந்த ஸமயத்தில் ப்ரார்த்தித்தார் என்பதினால் ஸ்ரீமத் என்னும் பதத்தின் அர்த்தமும், 'ராகவம்ச மஹாவ்ரதம்' என்று சரணாகதர்களைக் காப்பாற்றுகிற பெரிய வ்ரதத்தையுடையவன் என்பதினால் நாராயண சப்தத்தின் அர்த்தமும், சரணௌ என்று சரணசப்தமும் இருப்பதினாலே இந்த சுலோகம் த்வயத்தின் பூர்வகண்டத்துடன் சேர்த்தியாகிறது என்று கருத்து.

4 ராமாயணம்—அயோ—31-27. தேவரீர் ஸீதையோடுகூட, 'கிரிஸாநுஷு ரம்ஸ்யதே | அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதச்ச தே' என்று மேல். மலையின் தாழ்வரைகளில் விளையாடப் போகிறீர். விழித்துக்கொண்டும் தூங்கிக்கொண்டும் இருக்கிறபோது தேவரீருக்கு எல்லா விதக் கைங்கர்யத்தையும் நான் செய்யப்போகி

க்ருத்யமும், ஶரண்யக்ருத்யமும், க்ருத க்ருத்யனுடைய உத்தர க்ருத்யமும் அநுஸந்தேயம்.

அதிகாரி க்ருத்யமாவது—

1‘ மேம்பொருள் ’

இத்யாதிகளிற்படியே விவேகாதி யுக்தனுய்க்கொண்டு,

2 ‘ விடைக்குலங்கள்’

என்கிற பாட்டின்படியே ஸநாதந தர்மமான ஸர்வலோக ஶரண்யனுக்கு விண்ணப்பம் செய்கை.

ஶரண்ய க்ருத்யமாவது—

3 ‘ தமர்கள் கூட்ட வல்வினையை நாசம் செய்யும் சதுமூர்த்தி ’

என்கிறபடியே ஶரணாகதி விரோதிகளையெல்லாம் கழிக்கைக்கு

றேன், அதாவது செய்யவேண்டும் என்று கருத்து. ‘ ஸஹ வை தேஹ்யா ’ என்பதினுல் ‘ஸ்ரீமதே’ என்பதின் அர்த்தமும், ‘ ஜாக்ரத:’ இத்யாதியினுல் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்கள் கூறப்படுகிறபடியினுல் சதுர்த்தியின் அர்த்தமும், ‘ பவாம்ஸ்து’ என்று நாராயண சப்தத்தின் அர்த்தமும் விவரிக்கப்பட்டபடியினுல் இந்த சுலோகம் த்வயத்தின் உத்தர கண்டத்துக்குச் சேர்த்தியாகிறது என்று கருத்து.

1. திருமாலை—38. ‘ போகவிட்டு மெய்ம்மையை மிகஉணர்ந்து’ என்று மேல். வெளியிலே இருக்கும்படியான வஸ்துக்கள், அன்றிக்கே போக்யமாக அநுபவிக்கப்படும்வஸ்துக்கள், இவைகளை அஸ்த்திரத்வம் முதலிய தோஷங்களுடன் கூடியவை என்று பரித்யஜித்து மெய்யான ஜீவாத்மாவின் ஸ்வபாவத்தை உயர்ந்த வஸ்துவாக உணர்ந்து என்று அர்த்தம்.

2. திருச்சந்த—92. ‘ ஏழடர்த்து வென்றி வேற்கண் மாதரார் கூடிக் கலந்த தோள் புணர்ந்த காலி ஆய ! வேலை நீர்ப் படைத்து அடைத்து அதில் கிடந்து முன் கடைந்து நின் தனக்கு அடைக்கலம் புகுந்த என்னை அஞ்சல் என்னவேண்டுமே’ என்றுமேல். வ்ருஷபங்கள் ஏழைச் செருக்கடக்கி ஜயம் பொருந்திய வேல்போல் இருக்கிற கண்களையுடைய லக்ஷ்மீ, நப்பின்னைப்பிராட்டி முதலிய பத்நிகளுடைய வாஸனையோடுகூடிய தோள்களை ஸம்ச்லேஷித்த பசுக்களை மேய்க்கும் இடையனுய் அவதரித்த ஸ்ரீ க்ருஷ்ணனே ! தேவரீருக்கு அடைக்கலம் புகுந்த என்னை பயப்படாதே என்னவேண்டும் என்று ப்ரார்த்தித்தபடி பிராட்டியை புருஷகாரமாகக்கொண்டும் பகவானுடைய ஸௌலப்யாதி குணங்களை முன்னிட்டுக்கொண்டும் சரணம் அடையவேண்டும் என்று கருத்து. 3 திருவாய்—8-10-9

ஸர்வபோஷியான தன்னைத் தட்டுமாற்றித் தாழ நின்று, ஏற்றின சுமையெல்லாம் ஏறிட்டுக்கொண்டு இவனைத் தன்னளவாக உயர எடுக்கை.

உத்தரக்ருத்யமாவது—

1 'அத்தனுகி அன்னையாகி'

என்கிற பாட்டின்படியே மநஸ்ஸைத் தேற்றி,

2 'சிற்றம் சிறுகாலே'

என்கிற பாட்டின்படியே ஸர்வ ப்ரகாரத்தாலும் அநந்யனாய் ஸ்வயம்ப்ரயோஜந ஶாஸ்த்ரீய கைங்கர்யபரனாகை.

இப்படியால் ஓர் அதிகாரியை ஶரண்யன் ஹிததமத்திலே மூட்டும்படியையும், இவனுக்கு ப்ரியதமத்தைப் பண்ணும்படியையும், ஶரணாகதன் வீதசோகனாய் ஸர்வபோஷிக்கு ப்ரியதமங்களான ஸர்வபோஷ வ்ருத்திகளையும் பண்ணும் ப்ரகாரத்தையும் கணிசிக்கிறது சரம ஶ்லோகம்.

இதில் சொன்ன ஶரண்யனுக்கும் ஶரணாகதிக்கும் பலத்திற்கும் தேசகாலாதி பரிச்சேதமில்லை. ப்ரபத்த்யத்யாயாதிகளெல்லாம் இதின் விஸ்தரம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

3 எனக்குஉரியேன் எனதுபரம் என்பேறு என்னாது
இவை அனைத்தும் இறையில்லா இறைக்கடைத்தோம்*
தனக்கு இணை ஒன்றில்லாத திருமால் பாதம்
சாதனமும் பயனுமெனச் சலங்கள் தீர்ந்[த்]தோம் *
உனக்கு இதம் என்று ஒரு பாகன் உரைத்தது உற்றோம்
உத்தமனும் அவன் உதவி எல்லாம் கண்டோம் *

---

1. திருச்சந்த—115. ' ' ஆளும் எம்பிரானுமாய் ஒத்தொவ்வாத பல்பிறப்பு ஒழித்து நம்மை ஆட்கொள்வான் முத்தனார் முகுந்தனார் புகுந்துநம்முள் மேவினார் எத்தினால் இடர்க் கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே' என்று மேல் பாட்டு. அவனுடைய ஆர்த்தியையும், குணங்களையும், நம்மை ரக்ஷிப்பதற்காக முன்னதாகப் பாரித்து ஒருப்பட்டபடியையும் ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியானபடியையும் சிந்தித்து மனத்தை நிர்ப்பயமாக்கிக்கொள்ள வேண்டும் என்று இப்பாட்டின் கருத்து. 2 திருப்பாவை—29

3 [illegible]னானெனக்கு சேஷபூதன், என்னை ரக்ஷிக்கவேண்டியபரம் என்னுடையது, அத்தால் வரும் ப்ரயோஜனம் என்னுடையது என நினைக்காமல்

இனிக் கவருமவை கவர இகழ்ந்தோம் சோகம்
இமையவரோடு ஒன்று இனி நாமிருக்கும் நாளே. 8

गुरुभजननेत्रभाजा मथित रहस्येन वेङ्कटेशेन ।
नवनीतमिव गृहीतं नवकमिदं नित्यमास्वाद्यम् ॥

குருபஜந நேத்ரபாஜா மதித ரஹஸ்யேந வேங்கடேஶேந ।
நவநீதமிவ க்ருஹீதம் இதம் நவகம் நித்யம் ஆஸ்வாத்யம் ॥

प्रशमितकलिदोषां प्राज्यभोगानुबन्धां समुदितगुणजातां सम्यगाचारयुक्ताम् ।
श्रितजनबहुमान्यां श्रेयसीं वेङ्कटाद्रौ श्रियमुपचिनु नित्यं श्रीनिवास त्वमेव ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री र ह स्य न व नी तं सं पू र्णम् ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

ப்ரஶமிதகலிதோஷாம் ப்ராஜ்ய போகாநுபந்தாம்
ஸமுதிதகுணஜாதாம் ஸம்யகாசாரயுக்தாம் ।
ஶ்ரிதஜந பஹுமாந்யாம் ஶ்ரேயஸீம் வேங்கடாத்ரௌ
ஶ்ரியமுபசிநு நித்யம் ஸ்ரீநிவாஸ த்வமேவ ॥

இப்படி கவிதார்க்கிகஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ ரஹஸ்ய நவநீதம் முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

கீழ்க் கூறப்பட்ட இவைகளெல்லாவற்றையும் தனக்கு மேற்பட்ட யஜமானனில்லாத ஸ்வாமியான ச்ரிய:பதிக்கு ஸமர்ப்பித்தோம், தனக்கு ஸத்ருசமான வஸ்துஇல்லாத பகவானுடைய பாதங்களேஉபாயமும்பலனும்என அநுஸந்தித்து, ஸ்வாதீனம் என நினைக்கும் தோஷங்களைநிவ்ருத்திசெய்தோம், அத்விதீய ஸாரதியான ஸ்ரீக்ருஷ்ணன் அகிஞ்சனனை உனக்கு இது ஹிதம் என உரைத்த ப்ரபத்தியை அநுஷ்ட்டித்தோம், உயர்ந்தவனை அவனுடைய உபகாரங்களையெல்லாம் அறிந்தோம், இதற்கு மேல் அடையவேண்டிய ப்ரீத்யாதிகள் கவர, துக்கத்தை இகழ்ந்தோம், இனி நாம் இவ்வுலகத்தில் இருக்கும் நாள்களில் ஸூரிகளுடன் ஸமம்.

* ஆசார்ய உபாஸனமாகிற, அன்றிக்கே குருபக்தியாகிற, தயிர் கடையும் கயிற்றையுடையவராகிய, அன்றிக்கே ஜ்ஞாநக் கண்ணை யுடையவராகிய, கடையப்பட்ட ரஹஸ்யங்களையுடைத்தாயிருக்கிற வேங்கடேசன் என்கிற ஆசார்யனால் எடுக்கப்பட்ட வெண்ணெயைப் போலே இருக்கிற இந்த ஒன்பது அர்த்தங்களும் எப்பொழுதும் அநு ஸந்தானம் செய்யத்தக்கவை.

ஓ! ஸ்ரீநிவாஸனே! தேவரீர்தாமே திருவேங்கடமாமலையில், போக் கடிக்கப்பட்ட கலிகாலத்தினால் உண்டான தோஷத்தையுடையதாயும், அதிகமான போகத்தினுடைய ஸம்பந்தத்தையுடையதாகவும், அதா வது உம்முடைய கைங்கர்ய ரூபமாகையால் உமக்கும், உம்முடைய தாஸர்களான ப்ரபன்னர்களுக்கும் போகத்தை வ்ருத்தி செய்கிறதா யும் என்றபடி, சேர்ந்திருக்கிற குணங்களின் ஸமூஹத்தையுடைத் தானதாயும், நல்ல அநுஷ்டானத்துடன் சேர்ந்ததாயும், உம்முடைய ஆச்ரிதர்களினால் கொண்டாடக்கூடியதாயும், உத்தமமாயுமிருக்கிற (கைங்கர்யமாகிற) ஸம்பத்தை எப்பொழுதும் வ்ருத்தி செய்யும்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

ஏழாவது ரஹஸ்யம்

ஸ்ரீதத்த்வமாத்ருகை

[இது அம்ருதரஞ்ஜனீ ரஹஸ்யத்தில் ஆறுவது.
ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

[மாத்ருகாக்ஷரங்கள் 51 என்று ஸ்ரீ ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தத்த்வ மாத்ருகையில் 51 வாக்யங்கள் அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் எப்படி மாத்ருகாக்ஷரங்கள் மற்றெல்லா சப்தங்களுக்கும் மூலமோ, அதைப்போலவே இங்கு அருளிச் செய்யப்பட்டிருக்கும் 51 அர்த்தங்களும் தத்த்வ விஷயமான மற்றெல்லா அர்த்தங்களின் ஸங்க்ரஹம் என அறியவும். இப்படியே மேலுள்ள ரஹஸ்ய மாத்ருகையிலும் கண்டு கொள்ளவும்.

1. பர அவர தத்த்வ விபாகம்—2 - 14. பர தத்த்வ நிரூபணம்—15. அவரதத்த்வ விபாகம்—16 - 29. ஜீவதத்த்வ நிரூபணம்—30,31. அசேதந விபாகம்—32 - 39. த்ரிகுண நிரூபணம்—40, 41. காலநிரூபணம்—42 - 45. சுத்த ஸத்த்வ நிரூபணம்—46. முக்த தசையில் நித்யாநுபவ ப்ரகாரம்—47 - 50. பராவர தத்த்வ விஷயத்தில் ஸாதர்ம்யாதி நிரூபணம்—51. தத்த்வ விவேக ப்ரயோஜநம்.

இந்த ஸ்ரீ ஸூக்தியில் ஒரு விசேஷம்—மூன்று இடங்களில் தவிர சுலோகங்கள் ப்ரமாணமாக உதாஹரிக்கப்படாமல் திவ்ய ப்ரபந்தப் பாசுரங்களையே ஸ்வ வாக்யச் சாயையாக அனுஸந்தித்திருப்பது.]

நேரிசை வெண்பா

1 தத்துவங்களெல்லாம் தகவால் அறிவித்து *
முத்திவழிதந்தார் மொய்கழலே*—அத்திவத்தில்

---

1 ப்ரணவம் முதலான, அதாவது திருமந்திரம் முதலிய ரஹஸ்யங்களை உபதேசித்த ஆசார்யர்கள் தாங்களே க்ருபையினால் பராவர தத்

ஆரமுதம், ஆரும் இருநிலத்தில் என்று உரைத்தார் *
தாரமுதல் ஓதுவித்தார் தாம் 9

ஸதாசார்யோபதேஶத்தாலே ஶாரீரக மூலமந்த்ராதிகளைக் கொண்டு ஸாத்த்விகருக்கு அறியவேண்டும் தத்த்வம் பரம் என்றும், அவரம் என்றும், இரு வகையாயிருக்கும். 1

பரதத்த்வமாவது—நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய், ஸர்வ வஸ்துக்களிலும் உடல்மிசை உயிரெனக்கரந்து,
1 'நந்தா விளக்கே அளத்தற்கரியாய்' என்றும்,
2 'உணர் முழுநலம்' என்றும்,
3 'அளப்பரிய ஆரமுதை' என்றும்,
4 'அமலன்' என்றும்
சொல்லுகிறபடியே அத்யத்புதமாய், குணங்களுக்கும் அதிஶயாவஹமாய், திருவுக்கும் திருவாம்படி நிருபாதிக மங்களமான ஸ்வரூபத்தையுடையனாய்,
5 'உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்'
என்னும்படி அநவதிகாதிஶயாநந்தம் முதலான அநந்த கல்யாண குணங்களையுடையனாய், ஆஶ்ரிதர் பல பிறப்பும் பிறவாதபடி தான் எங்நின்ற யோநியுமாய்ப் பிறக்கக்கடவனாய், அவர்கள் நாட்டில் பிறந்து படுமவை படாமைக்காகத் தான் பிறந்து படாதன படக்கடவனாய், தான் சொல்லிற்றுச் செய்யும் தேவப்ரக்ருதிகளுக்குத் தானும் சொல்லிற்றுச் செய்யக்கடவனாய், விபரீதாசரணம் பண்ணும் ஆஸுரப்ரக்ருதிகளுக்குத் தானும் விபரீதாசரணம் பண்ணக்கடவனாய், தன்னை அந்தராத்மா என்று நினைத்திருப்பாரைத் தானும் தனக்கு அந்தராத்மா என்று நினைத்திருக்கு

துவங்கள் எல்லாவற்றையும் தெரிவித்து, மோக்ஷத்திற்கு உபாயங்களான பக்தி ப்ரபத்தி வித்யைகளை உபதேசித்தவர்களின் மொய்த்துக் கொண்டிருக்கிற (சேர்ந்துகொண்டிருக்கிற) திருவடிகளே அந்த திவம் என்று சொல்லப்படுகிற பரமபதத்தில் பூர்ணமான அம்ருதமும், அதாவது அம்ருதத்தைப்போல் போக்யமானதும், விஸ்தாரமான பூமியில் உபாயமுமாகும் என்று உபதேசித்தார்கள்.

1. பெரிய திருமொழி—3-8-1. 2. திருவாய்—1-1-2.
3. திருநெடுந்தாண்டகம்—14. 4. அமலனாதிபிரான்—1
5. திருவாய்மொழி—1-1-1

மவனாய், தனக்கு ஆத்மாத்மீய பரஸமர்ப்பணம் பண்ணினாருக்குத் தானும் ஆத்மாத்மீய ஸமர்ப்பணம் பண்ணக்கடவனான ஶ்ரிய: பதி புருஷோத்தமன். 2

இவன்

1 'பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதும் சோராமே, ஆள்கின்ற எம்பெருமான்
செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்'

என்கிறபடியே உபயவிபூதி நிர்வாஹகனாய்,

2 'தன்னைப்பார் இல்லப்பன்' என்றும்,

3 'இனன் இலன், எனனுயிர் மிகுநரை இலனே' என்றும்,

4 'ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா' என்றும்

சொல்லுகிறபடியே ஸமாதிக தரித்ரனாயிருக்கும். 3

அப்ராக்ருதமாய் பஞ்சோபநிஷத் ப்ரதிபாத்ய ஶுத்த ஸத்த்வ பஞ்சஶக்திமயமாய், அஸ்த்ர பூஷண ரூப விசித்ர தத்த்வாஶ்ரயமான திவ்ய மங்கள விக்ரஹ விஶேஷத்தாலே விஶிஷ்டனாய்க்கொண்டு, பரவ்யூஹாதி பஞ்சப்ரகாரனாயிருக்கும். 4

பரரூபமாவது—நித்யமாய், ஏகரூபமாய், நித்யருக்கும் முக்தருக்கும் ஸேவ்யமாய்,

5 'குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச் சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோர் உரு' என்றும்,

6 'ஆதியம்சோதி உரு' என்றும்

சொல்லுகிறபடியே வானுயர் இன்பம் மன்னி வீற்றிருந்தருபம். 5

வ்யூஹங்களாவன—இப்பரரூபமடியாகப் பூர்வ பூர்வத்திற்கு உத்தரோத்தரம் கார்யமாகக்கொண்டு பிறந்து,

7 'முன்னை வண்ணம் பாலின் வண்ணம்'

---

1. நாச்சியார்திருமொழி-11-3 2. திருவாய்மொழி-6-3-9
3. திருவாய்மொழி-1-1-2 4. ,, 2-3-2
5. ,, 5-5-10 6. ,, 3-5-5
7. பெரியதிருமொழி-4-9-8

1 'பாலின் நீர்மை செம்பொன் நீர்மை'
இத்யாதிகளிற்படியே க்ருத த்ரேதாதி யுகங்கள்தோறும் மாறி மாறி வரும் நிறங்களையுடை(யனவான)த்தான ரூபங்கள். 6

அபிமாந விசேஷத்தாலே ஜீவ மநோஹங்கார ஶப்த வாச்யங்களான ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபங்களில் ஜ்ஞாந பலாதிகளில் *இவ்விரண்டு குணங்களும் ஸம்ஹார ஶாஸ்த்ர ப்ரவர்த்தநாதிகளில் இவ்விரண்டு தொழில்களும் உடைத்தா(யனவா)யிருக்கும். 7

வாஸுதேவாதிகளான நாலு வ்யூஹங்களிலும் ஒவ்வொரு வ்யூஹத்திலே மும்மூன்றாகப் பிரிந்து,
2 'கேசவன் தம'ரில்
சொல்லுகிற திருநாமங்களையுடைய ரூபங்கள் பன்னிரண்டும் வ்யூஹாந்தரங்கள். 8

விபவங்களாவன—
3 'மீனாய் ஆமையுமாய்'
இத்யாதிகளிற்படியே விபூதிகளோடு ஸஜாதீயங்களாய்த் தோன்றும் ரூபங்கள். 9

அவை தன்னி(ம்மி)லே தோன்றுவன சில ரூபங்கள் விபவாந்தரங்கள். 10

அந்தர்யாமிரூபமாவது—
4 'கண்கள் சிவந்து'
இத்யாதிகளிற்படியே உள்ளே யோகிகளுக்குக் காணலாவதொரு ஸூக்ஷ்மரூப விஶேஷம். 11

அர்ச்சாவதாரமாவது—
5 'தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே
தமருகந்தது எப்பேர் மற்றப்பேர்',
6 'நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே'

---

1. திருச்சந்தவிருத்தம்-44 2. திருவாய்மொழி-2-7
4. திருவாய்மொழி-8-8-1 5. முதல் திருவந்தாதி-44
3. ,, 5-1-10 6. திருவாய்மொழி-3-6-9

* 'இவ்விரண்டு' என்றது ஒவ்வொன்று என்பதைப்போலஇரண்டு என்றபடி.

என்னும்படி ஸ்வயம்வ்யக்த(திவ்ய) ஆர்ஷ (மாநுஷ)வைஷ்ணவ ஸ்த்தாநங்களிலே ஸர்வ ஸஹிஷ்ணுவாய் அர்ச்சக பாரதந்த்ர்யத்திற்கு எல்லை நிலமாய், ஶேஷ ஶேஷி பாவஶபளமாய்,

1 'भूमौ गतं पूजयतां प्रमेयं'
(பூமௌ கதம் பூஜயதாம் ப்ரமேயம்)
என்று தானே அருளிச்செய்த ரூபம். 12

2 'தன்னுளே திரைத்தெழுந்து'
இத்யாதிகளிற்படியே நிற்கிற இவ்வஞ்சு ரூபமும் அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறையும்படியான ஶுபாஶ்ரயமாயிருக்கும். 13

3 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்'
என்கிறபடியே ஸலக்ஷ்மிகமாக இப்பரதத்த்வத்தைக் கண்டவன் மற்றிங்கோர் திருவில்லாப் புதுத் தெய்வம் தேரான். 14

இப்படிச் சுடர்மிகு சுருதியுள் உளனான ஶ்ரிய:பதிக்கு ஶரீரமென்று ப்ரமாணஸித்தமான அவர தத்த்வம் சேதநம் என்றும், அசேதநம் என்றும் இரண்டு வகையாயிருக்கும். 15

சேதநமான அவர தத்த்வமாவது—ஜீவஶப்த வாச்யமாய் ஸ்வரூபத்தாலும் ஶக்த்யாதி குணங்களாலும் பரிச்சேத்யமான (தவத்தான) அஹமர்த்தம். 16

இது ஸ்வயம் ப்ரகாஶதையாலும் ஜ்ஞாந குணாஶ்ரயமாகையாலும் ஜ்ஞாநமென்று பேர்பெற்று, இரண்டுபடியாலும் தனக்குத் தான் தோன்றுமதாய், அநுகூல ஸ்வபாவமாய், அதிஸூக்ஷ்மமாய், திலத்தில் தைலம்போலவும் தாருவில் அக்நிபோலவும் ஸர்வ அசேதநங்களிலும் அநுப்ரவேஶிக்கவற்றாய், நிர்விகாரமாய், குணத்ரய ரஹிதமாய், கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவிகளுக்கும் விஷயமன்றிக்கே நிஷ்க்ருஷ்ட வேஷத்தில் தேவத்வமநுஷ்யத்வாதி பேதங்களில்லாமைபோலே தேவ மநுஷ்யாதி ஶப்தகோசரமன்றிக்கே ஸர்வாத்மஸாதாரணங்களான அஹம் புத்தியா(ஶப்தங்களா)லே தந்தாமுக்கு அநுபாவ்யமாயிருக்கும்.

---

1. பாரதம்-மௌஸல-5-35 பூமௌ - பூமியில், கதம்-அவதரித்திருக்கிற, ப்ரமேயம் -நம்மால் அளவிட்டறியப்படுகிற அர்ச்சாரூபத்தை, பூஜயதாம்- பூஜைசெய்பவர்களுக்

2. திருச்சந்தவிருத்தம்-10 3. மூன்றாம்திருவந்தாதி

நான் என்கிற அர்த்தம்தானே பரபுத்தி விஷயமாம்போது அவன் இவன் உவன்(எவன்) என்றும்' நீ என்றும் தோற்றும். 18

இஜ்ஜீவ தத்த்வம் பத்தர் என்றும், பந்தரஹிதர் என்றும் இரண்டு படியாயிருக்கும். 19

பத்தராவார்—பல செய்வினை வன் கயிற்றால் திண்ணமழுந்தக் கட்டுண்டு, பெரும் துயர் இடும்பையிலே மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து, மண்ணாய் நீர் எரிகால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம் புண்ணாராக்கையின் வழியுழன்று நாநாவித நரகம் புகும் பாவம் செய்து, சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும்பாழிலே பொய்ந் நின்ற ஞாநமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை என்னும்படி தன்னுருக் கொடுத்து வேற்றுருக்கொண்டு, ஆவார் ஆர் துணை என்று அலைநீர்க்கடலுள் அழுந்தும் நாவாய்போல் பிறவிக் கடலுள் நின்று துளங்குகின்ற சேதநர். 20

இவர்களுக்கு அநாதியான கர்மப்ரவாஹ வைஷம்யத்தாலே அவ்வோ போகங்களுக்குப் போலே அவஸர ப்ரதீக்ஷ பகவத் க்ருபாமூலமான மோக்ஷத்திற்கு முற்பாடு பிற்பாடுகளுண்டாம். 21

பந்தரஹிதர் — முக்தர் என்றும், நித்யர் என்றும், இரண்டு வகை. 22

முக்தராவார்—எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் என்னும்படி நடுவே வந்து உய்யக்கொள்கின்ற நாதன் திருவருளாலே கருவிலே திருவுடையராய், பீதக வாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து பாதவிலச்சினை வைத்து ஞானக்கை தர,யானே எ(ன்த)னதேஎன்கிறஅஹங்காரமமகாரங்களாகிற படுகுழியினின்றும் ஏறி, ஒண்டொடியாள் திருமகளும் திருமகள் சேர் மார்பனுமே நிலாநிற்பக் கண்ட சதிர் கண்டு, ஐங்கருவி கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்து, களைகண் மற்றின்றி, நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து, புகல் ஒன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே [illegible]று அடைக்கலம் புகுந்த என்னை 'அஞ்சல் என்னவேண்டும்'

என்றும், தொன் மா வல்வினைத் தொடர்களை முதல் அரிந்து, 'மங்க ஒட்டு உன் மாமாயை, 'மாயம் செய்யேல் என்னை ' என்றும் வளைத்து, ஆக்கை விடும்பொழுது எண்ணி, பாவம் எல்லாம் சும் எனுதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்து, அமரரோடு உயர்வில் சென்று. மன்னும் கடும் கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் அன்னதோர் இல்லியின் ஊடுபோய், இமையோர் வாழ் தனி முட்டைக்கோட்டையினைக் கழித்து, வாட்டாற்றுன் பணிவகையே வான் ஏறப்பெற்று, ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமர் என்று வாள் ஒண் கண் மடந்தையர் வாழ்த்த, கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகி, வாசலில் வானவர் வைகுந்தன்தமர் எமர் எமதிடம் புகுதென்ன, விதிவகைபுகுந்தனர் என்று நல்வேதியர் பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவ, நிதியும் நற் சுண்ணமும் நிறைகுட விளக்கமும் மதிமுக மடந்தையர் ஏந்த, வந்து அவர் எதிர்கொள்ள, தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க் கொள்ளுமப்பன் கொழுஞ்சோதி உயரத்துக் கூட்டரிய திருவடிக்கள் கூட்ட, அவன் தாளிணைக்கீழ் வாழ்ச்சிபெற்று, அடியார்கள் குழாங்களுடன் கூடி, மாமணி மண்டபத்தில் அந்தமில் பேரின்பத்தடியரான நித்ய ஸூரிகளோடு நிரையொக்க இருந்து, அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனைத்தினைத்தனையும் விடாதே அநுபவித்து, ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து வாழும்படி வீடு திருத்துவான் பக்கல் வீடு பெற்றவர்கள். 23

நித்யராவார்—நித்யமான பரிபூர்ண பகவதநுபவத்தையுடையவராய் வடிவுடை வானோர் என்றும், முடியுடை வானவர் என்றும், வைகுந்தன்தமர் என்றும், ஸூரிகள் என்றும், ஸாத்ய தேவர்கள் என்றும் சொல்லப்பட்ட அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளான அயர்வறும் அமரர்கள். 24

பத்தருக்குக் கர்மப்ரவாஹம் அநாதியாய் அந்தவத்தாயிருக்கும். 25

முக்தருக்குக் கைங்கர்யப்ரவாஹம் ஆதிமத்தாய் அந்தரஹிதமாயிருக்கும். 26

நித்யருக்கு பகவதபிமத விபரீதருசியில்லாமையாலே ஒரு காலத்திலும் கர்மஸம்பந்தமன்றிக்கே அதிகாரி நியமத்தோடு கூடின கைங்கர்யப்ரவாஹம் அநாத்யந்தமாயிருக்கும். 27

இப்படி ஷட்விம்ஶகன் என்றும், பஞ்சவிம்ஶகன் என்றும் பிரிக்கப்பட்ட பரமாத்மாவிற்கு ஸர்வாவஸ்த்தையிலும் ஸ்வாஶ்ரித விஷயத்திலுள்ள பாரதந்த்ர்ய ஶேஷத்வங்கள் ஸ்வாதந்த்ர்ய நிபந்தநங்களாயிருக்கும். 28

ஜீவாத்மாக்களுக்கு ஸர்வாவஸ்த்தையிலும் ஸ்வவ்யாபாராதிகளிலுள்ளஸ்வாதந்த்ர்ய ஶேஷித்வங்கள் பாரதந்த்ர்யநிபந்தநங்களாயிருக்கும். 29

இப்படிப் பரமஶேஷியாயும் த்வாரஶேஷியாயுமுள்ள பராவராத்மாக்கள் இருவரிலும் வேறுபட்ட அசேதந தத்த்வம் த்ரிகுணம் என்றும், அத்ரிகுணம் என்றும் இரண்டு வகையாயும், அத்ரிகுணம் காலம் என்றும், ஶுத்தஸத்த்வம் என்றும் இரண்டு வகையாயும் இருக்கும். 30

அசேதந த்ரவ்யமான தர்மபூதஜ்ஞாநத்தோடே கூட நாலு வகை என்று எண்ணலாயிருக்க, இத்தை ஶரீரமாகக்கொள்ளாமையாலும் ப்ரயோஜந விஶேஷத்தாலும் இவை மூன்றையும் வகுத்து அனுஸந்தித்தார்கள். 31

த்ரிகுணமாவது—ஸத்த்வ ரஜஸ் தமஸ்ஸுக்களுக்கு ஆஶ்ரயமான த்ரவ்யம். 32

ஸத்த்வ ரஜஸ் தமஸ்ஸுக்களாவன—அடைவே ஜ்ஞாந ஸுகாதிகளுக்கும், ராக துக்காதிகளுக்கும், ப்ரமாத மோஹாதிகளுக்கும் ஹேதுக்களான குண விஶேஷங்கள். 33

இத்த்ரிகுணத்தினுடைய காரண தஶையையும் கார்ய தஶையையும்கூட 'பிரகிருதி மாநுங்காரமனங்கள்', 'பொங்கைம் புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம்' என்றும் பிரித்து ஶாஸ்த்ரம் சொல்லாநிற்கும். 34

இவற்றில் குணஸாம்யத்தையுடைய மூல ப்ரக்ருதியில் ஒரு ப்ரதேஶத்திலே பகவத் ஸங்கல்ப நியத காலமான குண வைஷம்யமடியாக ஸாத்த்விக ராஜஸ தாமஸங்கள் என்று பிரிடைத்தான மஹாந் பிறக்கும். 35

இதினின்றும் இவ்வடைவே ஸாத்த்விக ராஜஸ தாமஸா ஹங்காரங்கள் உண்டாம். 36

ராஜஸாஹங்காரம் துணையாக ஸாத்த்விகாஹங்காரத்தினின்றும் ஏகாதஶேந்த்ரியங்களும், தாமஸாஹங்காரத்தினின்றும் தந்மாத்ரைகளை இடையிட்டுக்கொண்டு பஞ்ச பூதங்களும் உத்பந்நங்களாம். 37

பூதங்களுக்கு உபாதாநங்களான ஶப்தாதி தந்மாத்ரைகளும், பூதங்களுக்குக் குணங்களான ஶப்தாதிகளும் வேறுபட்டவை. 38

இப்பூதங்கள் ஐந்திலும் குணங்கள் ஐந்தும் நிற்கும் அடைவை

1 'பூநிலாய ஐந்துமாய்'

என்கிற பாட்டின்படியே அநுஸந்திப்பது. 39

இப்படி மஹதாதிகளான தத்த்வங்களும்: இவற்றின் கலசு தலடியாகப் பிறக்கும் அநந்தங்களான ப்ரஹ்மாண்டங்கள் முதலான கார்யங்களுமெல்லாம் த்ரிகுண த்ரவ்யமாகிற பெருங்கடலில் அலைகளும் நுரைகளும் குமிழிகளும் போலே ஆவது அழிவதாய் வருகிற ப்ரவாஹம் அநாதியாக விச்சேதமறப் போருகைக்கு அடி பல பல மாய மயக்குக்களால் இன்புறும் இவ்விளையாட்டுடையானுடைய இச்சாநுவர்த்தியான காலம் அநாதியாய் அநந்தமாய் நடக்கும் என்னும் இடத்தை

2 'अनादिः भगवान् कालः' (அநாதிः பகவான் காலः)

இத்யாதிகளிலே கண்டுகொள்வது. 40

காலமாவது—எதிர், நிகழ், கழிவு என்றாற்போலும், முன், பின், ஒருகாலம், பலகாலம் என்றாற்போலும் சொல்லுகிற பாசுரங்களுக்கு இலக்காயிருப்பதொரு த்ரவ்ய விசேஷம். 41

இதில் இறைப்பொழுது முதலாக நாள், திங்கள், ஆண்டு, ஊழி, கல்பம், பரார்த்தம், த்விபரார்த்தம், மஹாகல்பம் என்றாற்போலே சொல்லுகிற எல்லைகள் எல்லாம் ஸ்வதந்த்ர ஸங்கல்பமா

1, திருச்சந்த—1 2. விஷ்ணுபுராணம்—1-2-26

பகவாந் -பகவானுகிய, காலः - காலமானது. அநாதிः - ஆதியில்லாதது. (இதற்கு முடிவும் இல்லை).

கிற சூராவளிக் காற்றுலே சுழன்று வாராநின்றுல் கழிந்த க்ஷணங்களும், கல்பங்களும் வரும் க்ஷணங்களும் கல்பங்களும் அநந்தங்களாய், இவற்றுலே லீலாவிபூதியிலுள்ள கார்யங்களுக்கு உத்பத்தி ஸ்த்திதி நாஶ வ்யவஸ்த்தை உண்டாயிருக்கும்.

ஶுத்த ஸத்த்வத்தில் இக்கால தத்த்வம் உண்டேயாகிலும் அங்குள்ள கார்யங்களினுடைய உத்பத்த்யாதிகளுக்கு இங்கடைத்த கால விஶேஷம் நியாமகமன்று. 43

ஶுத்த ஸத்த்வமாவது—குணத்ரய ரஹிதமாயும் குணத்ரயாஶ்ரயமாயுமுள்ள த்ரவ்யங்களிற்காட்டில் வேறுபட்டு விலக்ஷணமான ஸத்த்வகுணத்திற்கு ஆச்ரயமான த்ரவ்யம். 44

இதன்படியைப் பார்த்தால் பரமயோகி வாங்மநஸாபரிச்சேத்ய ஸ்வரூப ஸ்வபாவமாய், சேணுயர் வானம் என்றும், தெளிவிசும்பு என்றும், பொன்னுலகு என்றும், கலங்காப் பெருநகரம் என்றும், மாகவைகுந்தம் என்றும் சொல்லப்பட்ட வேறுபாட்டையுடைத்தாய், ப்ரஹ்மாதிபதங்களுமெல்லாம் நரக துல்யங்களாய்த் தோற்றும்படி அபரிமித ஐஶ்வ(ஆஶ்ச)ர்யங்களான போக்ய போகோபகரண போகஸ்த்தாநங்களையுடைத்தாய் ஸர்வேஶ்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் விக்ரஹாதி ரூபேண விசித்ர ப்ரவாஹமாயிருக்கும். 45

இப்படி அநந்தங்களான ஜநபத நகர விமாந மண்டப கோபுராதி விபாகங்களையுடைத்தான திவ்ய லோகத்தில் ப்ரதாநதமமான திருமாமணிமண்டபத்தில் அநந்ததேவதாத்மகமான திவ்ய யோகபர்யங்க விஶேஷத்திலே த்ரிவித சேதநரையும் த்ரிவித அசேதநங்களையும் ஸ்வாதீநங்களாக்கிக்கொண்டு

1 'वैकुण्ठे तु परे लोके' (வைகுண்டே து பரே லோகே) இத்யாதிகளிற்படியே ஸர்வஶேஷியான ஶ்ரிய:பதி எழுந்தருளியிருக்கும் படி முமுக்ஷுதஶையில் நித்யாநுஸந்தேயமாய், முக்ததஶையில் நித்ய ரநுபாவ்யமாயிருக்கும். 46

---

1. ஸ்காந்தபுராணவாக்யம். வைகுண்டே து - வைகுண்டம் என்னப்படும், பரே லோகே – உத்தமமான லோகத்தில், (பெரிய பிராட்டியாருடன் கூடிய பகவான் தன்னிடத்தில் மிகுந்த ப்ரீதியையுடையநித்ய ரூடனும் முக்தர்களுடனும் எழுந்தருளியிருக்கிறான்.)

இப்பராவர தத்த்வங்கள் இரண்டுக்கும் ஓரோராகாரங்களாலே ஸாதர்ம்யமுண்டேயாகிலும் விஶேஷாகாரங்களாலே வேறுபட்டு ஶேஷஶேஷிபாவ, நியந்த்ரு நியாம்யபாவ, வ்யாப்ய வ்யாபகபாவ, ஆதார ஆதேய பாவாதிகளாலே இவை ஒன்றி நிற்கும் நிலை ப்ரணவத்திலும், ஸத்ய ஶப்தத்திலும், புருஷ ஶப்தத்திலும், நாராயண ஶப்தத்திலும், புருஷோத்தம ஶப்தத்திலும்

1 'கறந்த பாலுள் நெய்யேபோல்'

2 'அடியேன் உள்ளான் உடல்உள்ளான்'

3 'ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை'

4 'உலகு நின்னொடு ஒன்றி நிற்க வேறு நிற்றி'

இத்யாதிகளிலும் சுருங்க அநுஸந்திக்கலாம். 47

ஒன்றை அறிகையும் அதின் அறிவடியாக வ்யாபரிக்கையும் ஒரு பலத்தை புஜிக்கையும் தனக்குத் தான் தோன்றுகையுமில்லாத த்ரவ்யம் அசேதந தத்த்வம். 48

இவற்றைப் பராதீநமாகவுடையது ஜீவ தத்த்வம். 49

த்ரிவித சேதந அசேதநங்களுடைய ஸ்வரூப ஸ்த்திதி ப்ரவ்ருத்(த்யா)திகள் மூன்றும் தானிட்ட வழக்காம்படி நிற்கிறது பரதத்த்வம், 50

இத்தத்த்வ விவேகத்திற்கு ப்ரயோஜநம் தன் விஶேஷணங்களை அறியாமையாலே வருகிற ப்ரக்ருத்யாத்ம ப்ரமமும், தன் விஶேஷ்யத்தை அறியாமையாலே வருகிற ஸ்வதந்த்ராத்ம ப்ரமமும் கழிந்து,தன் ஸ்வரூபத்திற்கு த்யாஜ்ய உபாதேய புருஷார்த்தங்களைத் தெளிந்து, விபரீதாபிஸந்திநிவ்ருத்தியும் ப்ராப்ய ருசியும் பிறந்து,ப்ராபகஸாபேக்ஷனாகை. 51

கட்டளைக் கலித்துறை.

5 திருநாரணன் எனும் தெய்வமும் சித்தும் அசித்தும் என்று
பெரு நான்மறைமுடி பேசிய தத்துவ மூன்றிவை கேட்டு*
ஒருநாள் உணர்ந்தவர் உய்யும் வகையன்றி ஒன்றுகவார் *
இருநாலெழுத்தின் இதயங்களோதிய ஒண் குணரே. 10

---

1 திருவாய்—8-5-10 2 திருவாய்—8-8-2
3 ,, 8-8-4 4 திருச்சந்த—12

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

1 காரணமாய் உயிராகி அனைத்தும் காக்கும்
கருணைமுகில் கமலையுடன் இலங்குமாறும்*
நாரணனுர் வடிவான உயிர்களெல்லாம்
நாம் வென்று நல்லடிமைக்கு ஏற்குமாறும் *
தாரணி நீர் முதலான மாயை காலம்
தனிவான் என்றிவை உருவாம்தன்மை தானும்*
கூரணிசீர் மதியுடைய குருக்கள் காட்டக்
குறிப்புடன் நாம் கண்டவகை கூறினேமே. 11

1 स्तनन्धयैरपि सहसैव सुग्रहा समुत्थिता निधिरिव वेङ्कटेश्वरात्।
परावर स्थितिमिह तत्त्व मातृका करोत्यसौ करतलमौक्तिकोपमाम् ॥

ஸ்தநந்தயைரபி ஸஹஸைவ ஸுக்ரஹா
ஸமுத்திதா நிதிரிவ வேங்கடேஶ்வராத் ।

---

5 லக்ஷ்மியுடன் கூடிய நாராயணன் என்று சொல்லப்படுகிற பரதேவதையும், சேதனமும், அசேதனமும், என்று இப்படி பெரிதான நான்கு வேதங்களின் முடியான உபநிஷத்கூறிய மூன்ருகியஇத்த்த்வங்களை ஒருகாலத்தில்ஆசார்யர்களிடமிருந்துகேட்டறிந்தவர்களான எட்டெழுத்தின் தாத்பர்யங்களில் சொல்லப்பட்ட, அன்றிக்கே திருவஷ்டாக்ஷரத்திற்கு ஹ்ருதயம் என்று சொல்லப்பட்ட நமஸ்ஸில் கூறப்பட்டதான விலக்ஷணமான (பாரதந்த்ர்யாதி) குணங்களையுடையவர்கள் உஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தைத் தவிர வேருென்றையும் தங்களுக்கு உபாதேயமாக அங்கீகரிக்கமாட்டார்கள்.

1 எல்லா வஸ்துக்களுக்கும் காரணமாய், அவைகளுக்கு அந்தர்யாமியாய் எல்லா வஸ்துக்களையும் ரக்ஷிக்கிற கருணையாகிற ஜலத்தை உள்ளேயடக்கிக் கொண்டிருக்கிற மேகம் போன்ற பகவான் லக்ஷ்மியுடன் ப்ரகாசிக்கும் ப்ரகாரத்தையும், நாராயணனுக்குச் சரீரமானஎல்லா ஜீவாத்மாக்களும் 'நாம்' என்கிற அஹங்காரத்தை ஜயித்து, நல்ல கைங்கர்யத்திற்கு யோக்யர்கள் ஆகிறபடியையும், பூமிஜலம்இவை முதலான ப்ரக்ருதியின் பரிணுமங்கள், காலம் சுத்த ஸத்த்வம் என்று சொல்லப்பட்ட இவைகள் சரீரமாக இருக்கும் ஸ்வபாவத்தையும், கூர்மையினுல் அலங்கரிக்கப்பட்ட குணங்களையுடையபுத்தியுடையஆசார்யர்கள் காட்ட அவதானத்துடன் நாம் தெரிந்துகொண்ட விதமாக இங்கு ப்ரதிபாதித்தோம்.

2 ஸ்தநந்தயைரபி – பரிபக்வமடையாத புத்தியுடையவர்களினுலும் ஸஸைவ - சீக்கிரத்திலேயே. ஸுக்ரஹா - ஸுலபமாக அறியக்கூடியும், வேங்கடேச்வராத் - வேங்கடேசன் என்கிற திருநாமத்தையு

பராவரஸ்த்திதி மிஹ தத்த்வ மாத்ருகா
கரோத்யஸௌ கரதலமௌக்திகோபமாம் ॥

अक्षय्यशान्ति मकरन्दरसप्रसक्तान् अभ्यर्थये मुरभिदङ्घ्रिसरोजभृङ्गान् ।
कामं प्रसीदत यथाहमनन्यभाव(ा): कर्णामृतानि भवतामवतारयेयम् ॥

அக்ஷய்ய ஶாந்தி மகரந்த ரஸப்ரஸக்தாந்
அப்யர்த்தயே முரபிதங்க்ரி ஸரோஜப்ருங்காந் ।
காமம் ப்ரஸீதத யதாஹம் அநந்யபாவ(ா) :
கர்ணாம்ருதாநி பவதாம் அவதாரயேயம் ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्रीतत्त्वमातृका संपूर्णा ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ தத்த்வ மாத்ருகை முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

டைய ஆசார்யனிடமிருந்து, நிதி:இவ – புதையல் போல, ஸமுத்திதா - உண்டாயிருக்கிறதுமான, அஸௌ - இந்த, தத்த்வ மாத்ருகா - ஸ்ரீ தத்த்வ மாத்ருகை என்கிற ரஹஸ்யம், பராவர ஸ்த்திதிம் - பரம் அவரம் என்னப்படும் இரண்டு வகையான தத்த்வங்களின் நிலையை, இஹ - இங்கே, கரதல மௌக்திகோபமாம்-உள்ளங்கையில் முத்துப்போலே ஸ்பஷ்டமாகத் தெரியும்படி, கரோதி - செய்கிறது.

1 அக்ஷய்ய - அழிவில்லாத, சாந்தி - சாந்தியாகிற, மகரந்த ரஸ- தேனின் ருசியில். ப்ரஸக்தாந் - மிகவும் ஆசையுடையவர்களாயும்,முரபித் - பகவானுடைய, ஸரோஜ - தாமரைப் பூப்போன்ற, அங்க்ரி -திருவடிகளில். ப்ருங்காந் - வண்டுகளைப் போலேயிருக்கிற பாகவதோத்தமர்களை, அப்யர்த்தயே- ப்ரார்த்திக்கிறேன்,

யதா - எப்படி, அஹம் - நான், அநந்யபாவ: - வேறொரு ப்ர யோஜனத்திலும் செல்லாத மனத்தையுடையவனாய், அநந்ய பாவா:

என்கிற பாடத்தில் பகவானைத் தவிர வேறு ஒரு இடத்திலும்மனதைச் செலுத்தாத நீங்கள், பவதாம் - உங்களுக்கு, கர்ணம்ருதாநி - கேட்பதற்கு மிகவும் இனிதான சப்தங்களை, அவதாரயேயம் - உண்டாக்கக் கடவேனோ (அப்படி), காமம் - மிகவும், ப்ரஸீதத - அனுக்ரஹத்தைச் செய்யவேண்டும்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

எட்டாவது ரஹஸ்யம்

ஸ்ரீ ரஹஸ்ய மாத்ருகை

[இது அம்ருதரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் ஏழாவது. ஸ்ரீ ரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது.]

[1 - 4 திருமந்த்ரத்தில்—அகாரார்த்தம், 5 உகாரார்த்தம், 6-12 மகாரார்த்தம், 13 - 18 நமச் சப்தார்த்தம், 19 - 30 நாராயண சப்தார்த்தம், 31 - 37 த்வயத்தில் பூர்வகண்டார்த்தம், 38-40 உத்தர கண்டார்த்தம், 41 -51 சரமச்லோகத்தின் அர்த்தம்]

அப்படி நின்ற அமலன்படி எல்லாம்
இப்படி எம் உள்ளத் தெழுதினார்—எப்படியும்
ஓ(ஏ)ரார் சுருதியொளியால் இருள் நீக்கும்
தாராபதி அணைந்தார்(அனையார்) தாம். 12

திருமந்த்ரத்தில் மூலமாகிய ஒற்றை எழுத்தான முதல் பதத்தில் முதல் எழுத்திலே ஶ்ரிய:பதியினுடைய ஸர்வஜகத்காரணத்வமும், ஸர்வரக்ஷகத்வமும், நித்ய நிருபாதிக ஸர்வசேஷித்வமும், ஜீவனுடைய நித்ய நிருபாதிக சேஷத்வமும் (4), இதின் நடு எழுத்திலே ஶ்ரிய:பதிக்கு நிருபாதிக சேஷபூதனான ஜீவன் மற்றொருவருக்கு உரியனல்லாதமையும் (5), மூன்றும் எழுத்திலே ஜீவனுடைய தேஹேந்த்ரியாதிகளால் வேறுபாடும், அறிவானமையும்,

---

1 எந்த விதத்தாலும் விசாரிக்கப்பட்டதான பூர்ணமான வேதமாகிற ப்ரகாசத்தினால் அஜ்ஞானமாகிற இருட்டை நீக்குகிற சந்திரனைப் போன்ற ஆழ்வார்களை ஆச்ரயித்து ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான நம் ஆசார்யர்கள் அவ்விதமாக நிற்கிற ஹேயப்ரத்யநீகனாகிய பகவானுடைய ப்ரகாரங்கள் எல்லாவற்றையும் மேலே நிரூபிக்கப்படுகிற வ[illegible]மாக எம்முடைய மனத்தில் ஸ்த்திரமாக இருக்கும்படி செய்தார்கள்

அறிவுடையனானமையும், இரண்டு ஆகாரத்தி(தா)லும் ஆநந்தஸ்வரூபனாயிருக்கும்படியும், ஸ்வயம்ப்ரகாசனாயிருக்கும்படியும், தனக்குத் தான் தோற்றும்படியும், அணுவானமையும் (12), நம: என்கிற இரண்டாம் பதத்திலே இஜ்ஜீவன் அநாதியாக விரோதி கையிலே அகப்பட்டு நின்றமையும், தான் ஒன்றையும் பற்ற நிருபாதிகசேஷியல்லாமையும், ஒரு கார்யத்திலும்நிரபேக்ஷகர்த்ருத்வமில்லாமையும், ஸ்வதந்த்ரஸ்வாமியாலே பாகவதசேஷமா(ன)க விநியுக்தனானபடியும், அநந்யோபாயத்வமும், உபாயவிசேஷ பரிகரஹமும் (18), நலம் தரும் சொல்லான நாராயண சப்தத்தில் அசித்தினுடைய ஸ்வரூபாந்யதாபாவமும், ஜீவர்களுக்கு ஸ்வரூபாந்யதாபாவம் இல்லாமையும், க்ஷேத்ரஜ்ஞனு(ரு)டைய ஸ்ருஷ்டி ஸம்ஹார விஷயத்வமும், சேதந வர்க்கத்தினுடைய ஆநந்த்யமும், ஸர்வ நியந்தாவினுடைய ஸ்வரூபஸ்வபாவ நித்யதவ ப்ரகாரமும், நேத்ருத்வமும், ஸர்வ வ்யாபகத்வமும், ஸர்வாதாரத்வமும், ஸர்வவித பந்துத்வமும், ஸர்வவித புருஷார்த்தோபாயத்வமும், முக்தப்ராப்யத்வமும் (29), இந்நாராயண சப்தத்தில் சதுர்த்தியிலே ஒழிவில்காலம் எல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும்படியும் (30) ப்ரதாநமாக அநுஸந்தேயம்.

இப்படித் திருமந்த்ரத்தில் ஸர்வவேதங்களுக்கும் விதையான முதல் பதத்திலே முளைத்து, இரண்டாம் பதத்திலே வளர்ந்து, மூன்றும் பதத்திலே பலபர்யந்தமான ஸம்யக்ஜ்ஞாநத்தையுடையவனுக்கு அநுஷ்ட்டேயமான ஸாங்கபரஸமர்ப்பணத்தை விசதமாக ப்ரகாசிப்பிக்கிற த்வயத்தில் ப்ரதமாக்ஷரமான ஸ்ரீசப்தத்திலே விஷ்ணுபத்நியாய்ப் புருஷகாரபூதையான வேரி மாறாத பூமேல் இருப்பாள் வினைதீர்க்கும் ப்ரகாரங்களும், அதின் மதுப்பிலே அலர் மேல்மங்கை அசரண்ய சரண்யனானவன் மார்பிலே அகலகில்லேன் இறையும் என்று உறையும்படியும், நாராயண சப்தத்தில்

1 'நிகரில் புகழாய்'

இத்யாதிகளில் அருளிச்செய்த சரண்ய ஸ்வபாவமும், (ச)சரண சப்தத்தில் உபாய உபேயதாசைகளை ஊடுருவி நிற்கிற வய மங்கள விக்ரஹயோகமும், 'சரணம்' என்கிற சப்தத்திலே

1. திருவாய்மொழி-6-10-10

நின்சரணல்லால் சரண்இல்லைஎன்றுகழல்களவையே சர(ணு)ண மாகக்கொள்ளுகிறபடியும், 'ப்ரபத்யே' என்கிற பதத்திலே கத்யர்த் தமான தாதுவில் ப்ரமாணாநுஸாரத்தாலே அத்யவஸாயாதி பூர்வ கமாக அடிக்கீழ் அமர்ந்து அடைக்கலம் புகுகிறபடியும், இப்பதத் தின் உத்தமனிலே களைகண் மற்றிலேன் என்னும்படி தானும் தம ரும் பிறரும் தனக்குத் தஞ்சமன்றிக்கே புகல்ஒன்றில்லா அடியேன் என்று நிற்கிற நிலையும், 'ஸ்ரீமதே' என்கிற பதத்திலே பூவளரும் திருமகளால் பொன்னுலகில் அருள்பெறுமவனுக்குக் 'கோலத் திருமாமகளோடு உன்னை' என்னும்படி நின்ற ப்ராப்ய தம்பதிக ளுடைய பிரிவற்ற சேர்த்தியும், 'நாராயணாய' என்கிற பதத் திலே வழுவிலா அடிமைகளு வகுத்த சேஷியினுடைய நிரதிசய போக்யத்வமும், 'நம:' சப்தத்திலே ஸர்வ விரோதி நிவ்ருத்தி தசையில் வரும் கைங்கர்யம் களையற்றிருக்கும்படியும் (40) ப்ர தாநமாக அநுஸந்தேயம்.

இம்மந்த்ரங்கள் இரண்டிலும் தோற்றுகிற அநுஷ்ட் டாநத்திற்கு விதாயகமான சரம ஶ்லோகத்தில் 'ஸர்வ தர்மாந்' என்கிற பதத்திலே குறிக்கொள் ஜ்ஞாநங்களாலே பண்ணும் அருந்தவங்களினுடைய நாநாவிதத்வமும், 'பரித்யஜ்ய' என்கிற பதத்திலே போக்கற்றவன் ப்ரஹ்மாஸ்த்ரதுல்யையான ப்ரபத்தி யைப் பண்ணும்போது அநபேக்ஷிதங்களிலும் தனக்கு ஶக்யமில் லாதவற்றிலும் துவக்கற்று வெறுமையே துணையாக முன்னிடும் படியும், மாம்' என்கிற பதத்திலே மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள் பத்துடை அடியவர்க்கு எளியவனாய் அருள் புரிந்த சிந்தை அடியார் மேல் வைத்து அடைக்கலம்கொள்ள ஒருப் பட்டுநிற்கிற நிலையும், 'ஏகம்' என்கிற பதத்திலே தாமரையாள் கேள்வன் ஒருவனே பற்றிலார் பற்ற நிற்கிறபடியும், 'ஶரணம்' என்கிற பதத்திலே அசரண்ய சரண்யன் விபரீதாபிஸந்தி யற்ற தேவ ப்ரகருதிகளுக்கு வன் சரணாய்த் தன் சரண் நிழல் கீழ் வைக்க வகுத்தமையும், 'வ்ரஜ' என்கிற பதத்திலே நெறி எல்லாம் எடுத்து உரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி தந்த ஜ்ஞாநக் கையாலே 'நின்னிலங்குபாதமன்றி மற்றோர்பற்றிலேன்'என்று நாம் அவனை பற்றலாம் படி தன் பாதமே ஶரணாகத் தந்தொழிந்தமையும்(4

'அஹம்' என்கிற பதத்திலே வல்லைகாண் என்னும்படியான ஸர்வ சக்தி கொழுஞ்சோதி உயரத்துக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டி அடிமைகொள்ள ஒருப்பட்டபடியும், 'த்வா' என்கிற பதத்திலே 'நின் அருளே புரிந்திருந்தேன்' என்றிருக்கிற க்ருதக்ருத்யனை 'ஆரால் குறைவுடையம்' என்னும்படி சாதக வ்ருத்தியாக்கினபடியும், 'ஸர்வபாபேப்ய:' என்கிற பதத்திலே

1 'நானே நானுவித நரகம்புகும் பாவம் செய்தேன்' என்றும்,

2 'நம்மன்பேபோலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவம் எல்லாம்'

என்றும் சொல்லுகிறபடியே எண்ணராத் துயர்விளைக்கும் வல்வினை மாளாதோ என்னும்படி எண்ணிறந்து கிடக்கிற படியும், 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற பதத்திலே இருள் தருமாஞாலத்துள் இனிப்பிறவிகழிந்து மருள் ஒழிந்த மடநெஞ்சமுடையார்க்கு வேண்டிற்றெல்லாம் தரும் வள்ளல் மணிவண்ணன் விண்ணுலகம் தர விரைந்து, சார்ந்த இரு வல்வினைகளும் சரித்து, மாயப்பற்றறுத்து, தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துகிறபடியும், 'மா ஶுச:' என்கிற வாக்யத்திலே உழலை என்பில் பேய்ச்சி முலைபூடு அவளை உயிருண்டான் கழல்களவையே சரணாகக்கொண்டு செய்த வேள்விய(ர்)ன் 'திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கேவரும் தீவினையே', 'கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே' என்று தெளிவுற்ற சிந்தையாலே தேறி, யாவச்சரீரபாதம் ஆழ்ஞாநுபாலநத்தாலே அக்னி இந்திராதி ஶப்தங்களை ப்ரயோகிக்குமளவிலும் அந்யதேவதாபிஸந்தியற்ற ஸ்வயம்ப்ரயோஜந கைங்கர்ய ரஸத்தாலே க்ருதார்த்தனாயிருக்கும்படியும் (51) ப்ரதாநமாக அநுஸந்தேயம்.

இப்படித் திருமந்த்ராதிகளில் முற்பட ஶிக்ஷிக்கும் அர்த்தமே மோக்ஷ ஶாஸ்த்ரங்களில் முதல் நடு இறுதியாக முகம் மாறிக் கோக்கிற வர்ண ஸ்வரூப(ஸர)ங்களுக்கெல்லாம் மாத்ருகை.

கட்டளைக் கலித்துறை

3 செம்பொற்கழலிணைச் செய்யாள் அமரும் திருவரங்கா
அன்பர்க்கு அடியவராய் * அடிசூடியநாம் உரைத்தோம் *

1 பெரியதிருமொழி—192 2 பெரியாழ்வார்—543

இன்பத் தொகையென எண்ணிய மூன்றின் எழுத்தடைவே *
ஐம்பத்தொரு பொருள் ஆருயிர் காக்கும் அமுதெனவே. 13

1 बहुश्रुतैरियमधुना मितप्रियैरनुक्रमादनुदिन भोगलालसैः ।
रमापतौ निहितभरैरुदीरिता रसावहा भवति रहस्यमातृका ॥

பஹுஶ்ருதைரியம் அதுநா மிதப்ரியை:
அநுக்ரமாத் அநுதிந போகலாலஸை: ।
ரமாபதௌ நிஹிதபரை: உதீரிதா
ரஸாவஹா பவதி ரஹஸ்யமாத்ருகா ॥

2 रहस्य मातृका सेयं वेङ्कटेश विपश्चिता ।
विशुद्धदेशिकवता रङ्गधम्नि व्यलिख्यत ॥

---

3 சிவந்த பெருன்னையுடைய, அதாவது ஸ்வர்ணமயமான ஆபரணங்களையுடைய, அன்றிக்கே ஸ்வர்ணம் போல் எல்லாப் புருஷார்த்தங்களுக்கும் ஸாதனமான இரண்டு திருவடிகளையுடைய பெரிய பிராட்டியார் நித்யவாஸம் செய்கிற ஸ்ரீரங்கநாதனுடைய பக்தர்களுக்குத் தாஸர்களாய் அவர்களுடைய திருவடிகளை சிரஸ்ஸினால் தரித்துக்கொண்டிருக்கிற நாம் ஆநந்தத்தின் சேர்க்கை என்று நம் பூர்வாசார்யர்கள் அனுஸந்தானம் செய்த ரஹஸ்யத்ரயத்தில் ஜீவாத்மாக்களை ரக்ஷிக்கிற அம்ருதம் என்று சொல்லப்படுகிறதாய் மாத்ருகாக்ஷரங்களின் க்ரமத்தை அநுஸரித்திருக்கிற, அதாவது அவற்றின் எண்ணிக்கையை அடைந்திருக்கிற ஐம்பத்தொரு அர்த்தங்கள் சொன்னோம்.

1 ரஹஸ்ய மாத்ருகா - ரஹஸ்ய மாத்ருகை என்னும் இந்த க்ரந்தமானது, பஹுஶ்ருதை: - அனேகம் விதமாக ச்ரவணம் பண்ணினவர்களாயும், அதுநா – இப்பொழுது, மித ப்ரியை: – ஸங்க்ரஹமாக அறிவதில் ஆசையுடையவர்களாயும், அனுக்ரமாத் - வரிசையாக, அநுதிந - தினந்தோறும்,போக – ஸுகத்தை அனுபவிப்பதில், லாலஸை: - ஆசையுடையவர்களாயும், ரமாபதௌ-ச்ரிய:பதியினிடத்தில், நிஹிதபரை: – வைக்கப்பட்ட ரக்ஷண பரத்தையுடையவர்களாயும் இருப்பவர்களினால், உதீரிதா – சொல்லப்பட்டதாய்க் கொண்டு, ரஸாவஹா - ஆநந்தத்தைக்கொடுப்பதாக, பவதி - ஆகிறது.

2 ஸேயம் – அந்த இந்த, ரஹஸ்ய மாத்ருகா - ஸ்ரீரஹஸ்ய மாத்ருகை என்னும் க்ரந்தமானது, விசுத்த தேசிகவதா - ஆசார்ய லக்ஷணம்

ரஹஸ்ய மாத்ருகா ஸேயம் வேங்கடேஶ விபஶ்சிதா ।
விஶுத்த தேசிகவதா ரங்கதாம்நி வ்யலிக்க்யத ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री र ह स्य मा तृ का सं पू र्णा ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிகஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ ரஹஸ்ய மாத்ருகை முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

பூர்ணர்களான ஆசார்யர்களை ஆச்ரயித்த, வேங்கடேச விபச்சிதா - ஸ்ரீ வேங்கடேசன் என்கிற வித்வானாகிய ஆசார்யனால் ரங்க தாம்நி - ஸ்ரீரங்கத்தில்வ்யலிக்க்யத-எழுப்பட்டது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

ஒன்பதாவது ரஹஸ்யம்

ஸ்ரீதத்வ ஸந்தேசம்

[இது அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யத்தில் எட்டாவது.
ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

स्वाधीन त्रिविधेरित्यादेरभिप्रायः प्रकाश्यते ।
कस्यचित् तत्त्वनिष्ठस्य कांक्षित प्रतिपत्तये ॥

ஸ்வாதீந த்ரிவிதேத்யாதேரபிப்ராய: ப்ரகாஶ்யதே ।
கஸ்யசித் தத்த்வ நிஷ்ட்டஸ்ய காங்க்ஷித ப்ரதிபத்தயே

ஸர்வமந்த்ர ப்ரதாநங்களான வ்யாபக மந்த்ரங்கள் மூன்றிலும் சேர ஸர்வாதார பூதனாய் ஸர்வ ஶரீரியாய் நிற்கிற நிலையிலே இவனை

' स्वाधीन त्रिविध चेतनाचेतन स्वरूप स्थिति प्रवृत्तिभेदम् '
ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூப ஸ்த்திதி ப்ரவ்ருத்தி பேதம் ' என்று ஸ்ரீ ஆளவந்தாரும் ஸ்ரீ பாஷ்யகாரரும் அருளிச் செய்தார்கள்.

இதில் 'ஸ்வாதீந' என்கிற ஶப்தத்தாலே ஸ்வரூபாதீநத்வமும், இச்சாதீநத்வமும் ஸங்க்ருஹீதம். இவை இரண்டும் ஶரீராத்மபாவ ஶ்ருத்யாதி ஸித்தம். இவற்றில் ஸ்வரூபாதீநத்வம் ஈஶ்வரஸ்வரூப வ்யதிரிக்த ஸர்வ வஸ்துக்களுக்கும் ய தாஸம்பவம் வ்யவஹித அவ்யவஹிதபேதவத்தாயிருக்கும். ஈஶ்வரேச்சா

தீநத்வம் ஜீவேச்சாதீநங்களிலும் ஏகரூபம். இவற்றில் வைத்துக் கொண்டு நித்யங்கள் நித்யேச்சாஸித்தங்களாயிருக்கும். அநித்யங்கள் காலாவச்சிந்நங்களாகையாலே அநித்யேச்சா ஸித்தங்களாயிருக்கும். நித்யங்களுக்குநித்யேச்சாஸித்தத்வமாவது—இவனுடைய இச்சை இல்லாதபோது அநித்யம்போலே இல்லையாக ப்ரஸங்கிக்கும் என்னும்படி நிற்கை. இவ்வர்த்தத்தை

1 ‘ इच्छात एव तव विश्वपदार्थसत्ता ’

(இச்சாத ஏவ தவ விஶ்வபதார்த்த ஸத்தா)

என்கிற ஶ்லோகத்தாலே ஆழ்வான் அருளிச்செய்தார். இவற்றில் ஸ்வரூபாயத்தமாகையாலே ஆதேயத்வமும், இச்சாயத்தமாகையாலே ஆதேயத்வத்தோடே கூட விதேயத்வ ஶேஷத்வங்களும் தோற்றுகின்றன.

2 ‘ उपादत्ते सत्ता स्थिति नियमनाद्यैः चिदचितौ स्वमुद्दिश्य श्रीमान् ’

(உபாதத்தே ஸத்தா ஸ்த்திதி நியமநாத்யை: சிதசிதௌ ஸ்வமுத்திஶ்ய ஸ்ரீமாந்)

என்கிறபடியே ஈஶ்வரேச்சோபாத்தங்களாயிறேஇவை இவனுக்கு ஶேஷங்களாகிறன.

த்ரிவித சேதநர் என்றது அநுவ்ருத்தஸம்ஸாரராயும், நிவ்ருத்த ஸம்ஸாரராயும்ஸம்ஸாராத்யந்தாபாவவான்களாயுமுள்ளபரதந்த்ர சேதநர்களைச் சொல்லுகிறது. பத்த சேதநர் தங்களுக்கே முக்த தசையாகையாலே தர்மிபேதம் இல்லையாயிருக்க, நித்யருக்குப் போலே முக்தருகளும் பத்தரிற் காட்டில் அத்யந்த வைஷம்யம் தோற்றுகைக்காக ஜீவ த்ரைவித்யம் சொல்லப்படுகிறது. த்ரிவித சப்தம் த்வந்த்வாத் பூர்வமாகையாலே அசேதந சப்தத்தோ

---

1 ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம்—36. விச்வபதார்த்த ஸத்தா - எல்லா வஸ்துக்களினுடைய இருப்பு; தவ - உம்முடைய, இச்சாத ஏவ - ஸங்கல்பத்தினாலேயே.

2 ஸ்ரீரங்கராஜ ஸ்தவம்—உத்—87. ஸ்ரீமாந் - ச்ரிய:பதியானபகவான், சிதசிதௌ - சேதநாசேதநங்களாகிற வஸ்துக்களை, ஸத்தா ஸ்த்திதி நியமநாத்யை: - ஸ்ருஷ்டிப்பது, அவை நீடித்திருப்பது, அவற்றை நியமனம் செய்வது, முதலியவைகளினால், ஸ்வமுத்திச்ய - தன்னுடைய ப்ரயோஜனத்திற்காகவே, உபாதத்தே - பரிக்ரஹிக்கிறான்,

டும் அந்வயிக்கிறது. த்ரிவித அசேதநங்கள் என்றது வ்யக்தா வ்யக்த காலங்கள் என்று(ம்) சிலர் சொல்லுவர்கள். அவர்களும் த்ரிகுண கால விலக்ஷணமான சுத்தஸத்த்வரூப அசேதநத்தை ஈஶ்வர நிரூபணத்திலே சுபாஶ்ரய விக்ரஹாதி ரூப விசேஷண மாகச் சேர்த்து அநுஸந்திப்பர்கள். த்ரிகுண கால சுத்த ஸத்த்வங்கள் என்கிற மூன்றையும் த்ரிவித அசேதநங்கள் என்று சிலர் நிர்வஹிப்பர்கள். இவற்றை அசித்துக்கள் என்றும் அசேதநங்கள் என்றும் சொன்னது இவற்றிற்கு ஜ்ஞாநாஶ்ரயத்வமில்லாமையடியாக வாகையாலே. 'அப்ராக்ருத அசித் என்று ஒன்றைச் சொல்லலாமோ? அப்ராக்ருத ஆத்மாவைப் போலே சித் என்ன வேண்டாவோ?' என்கிற சோத்யத்திற்கு ப்ராக்ருதங்களன்றிகேகே அசித்துக்களாயிருக்கிற காலாதிகளை த்ருஷ்டாந்தமாக்கிப் பரிஹாரம் சொல்லுவது. அசேதநத்வம் உண்டாயிருக்க ஜ்ஞாந ரூபத்வ வசந பலத்தாலே தர்மபூத ஜ்ஞாநத்திற்குப் போலே சுத்தஸத்த்வத்திற்கும் சிச்சப்த வாச்யத்வமும் உண்டென்று சிலர் சொல்லுவர்கள். இங்கு அசேதநத்வம் ஒரு ஜ்ஞாநத்திற்கு ஆஶ்ரயமல்லாத தர்மபூத ஜ்ஞாநத்திற்கும் ஸமாநம். இது த்ரிவித சேதந உபபாதநத்திலே விசேஷணமாய்க் கொண்டு ப்ரதிபாதிதமாகையாலே பிரியச்சொல்லப்பட்டதில்லை. ஸர்வ வஸ்துக்களுக்கும் ஸாதர்ம்யமும் வைதர்ம்யமும் ப்ரமாண நியதமாகையாலே யதாப்ரமாணம் அங்கீகார்யம்.

இச்சேதநாசேதநங்களுக்கு ஸ்வரூபமாவது—ஸ்வாலாதாரணமான தர்மத்தாலே நிரூபணீயமான தர்மி. ஸ்த்திதியாவது—இதனுடைய காலாந்தராநுவ்ருத்தி. ப்ரவ்ருத்தியாவது—வ்யாபாரம். நிவ்ருத்திரூப வ்யாபாரமும் ப்ரவ்ருத்தி விசேஷம்.

இச்சேதநாசேதநங்களுடைய ஸ்வரூப ஸ்த்திதி ப்ரவ்ருத்திகள் மூன்றுக்கும் பேதம் என்றது அவ்வோ ப்ரமாணங்கள் சொன்ன பிரிவு. இங்கே 'ஸ்வாதீந' இத்யாதியாலே நாநா ப்ரகாரமான ஈஶ்வரதவ்ய பேதத்தையும், ஈஶ்வரதவ்யங்களில் சேதநாசேதநபேதத்தையும், அவைத(ம்மி)ன்னில் அவாந்தரபேதத்தையும் தர்ம தர்மி பேதத்தையும், வேதாந்த ஸித்தாந்தத்தில் ப்ரதிநியதிதந்த்ரங்களையும், பேத அபேத கடக ஶ்ருத்யாதிகளின்படி யநுஸந்திப்பது, இந்த ஈஶ்வர தத்த்வத்தையும் ஈஶ்வரதவ்ய தந்த்ரங்களையும் இப்படிப் பிரிய அநுஸந்தித்து ஏக தத்த்வம் என்பார்

ஸ்வநிஷ்ட்டமான விஶிஷ்ட தத்த்வம் ஏகம் என்கையிலே தாத்பர்யம்.

இவ்வீஶ்வர தத்த்வம் இருக்கும்படியை

1 ' एकः शास्ता न द्वितीयोऽस्ति शास्ता '

(ஏகஶ்ஶாஸ்தா ந த்விதீயோஸ்தி ஶாஸ்தா)

2 ' शास्ता विष्णुरशेषस्य ' (ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய)

3 ' जगत् सर्वं शरीरं ते '(ஜகத் ஸர்வம் ஶரீரம் தே)

4 ' सर्वं समाप्नोषि ततोसि सर्वः ' (ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வः)

இத்யாதிகளில் கண்டு கொள்வது.

த்ரிவித சேதநருடைய ப்ரகாரங்களை

5 ' ब्रह्माद्याः सकला देवाः मनुष्याः पशवस्तथा ।
विष्णुमायामहावर्तमोहान्धतमसावृताः ॥ '

(ப்ரஹ்மாத்யாஸ் ஸகலா தேவாः மநுஷ்யாः பஶவஸ்ததா।
விஷ்ணுமாயா மஹாவர்த்த மோஹாந்த தமஸாவ்ருதாः)

---

1 பர்ரதம் - ஆச்வ - 27 - 1 சாஸ்தா - நியமிக்கிறவன், ஏகः -- ஒருவனே, த்விதீயः - இரண்டாவது (வேறொரு), சாஸ்தா - நியமிக்கிறவன், நஅஸ்தி-இல்லை.

2 விஷ்ணு புராணம் - 1-17-20 அசேஷஸ்ய - எல்லா வஸ்துக்களுக்கும், சாஸ்தா - நியமிப்பவன், விஷ்ணுः - பகவான்.

3 ராமா - யுத்த - 120 - 25 ஜகத் ஸர்வம் – எல்லா லோகமும், தே - உமக்கு,சரீரம் உடல்

4 கீதை-11- 40 ஸர்வம் - எல்லா வஸ்துக்களையும், ஸமாப்நோஷி - அந்தர்யாமியாக இருந்து வ்யாபித்திருக்கிறாய், ततः-ஆகையினால், ஸர்வः - எல்லா வஸ்துக்களாகவும், அஸி – ஆகிறாய், அன்றிக்கே எல்லாப் பதங்களினாலும் சொல்லப்படுகிறவனாகிறாய்.

5 விஷ்ணுபுராணம்-5-30-17 ப்ரஹ்மாத்யாः - ப்ரஹ்மா முதலிய, ஸகலாः - எல்லா, தேவாः - தேவதைகளும்,மநுஷ்யாः - மனிதர்களும், ததா - அப்படியே, பசவः – பசுக்களும்(மிருகங்களும்), விஷ்ணுமாயா பகவானுடைய ப்ரக்ருதியாகிற, மஹாவர்த்த-பெரிய சுழலில்இருக்கிற, மோஹ - அஜ்ஞாநமாகிற, அந்ததமஸ - இருட்டினால் ஆவ்ருதாः - மறைக்கப்பட்டவைகள்.

5—9

1 'इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ॥'

(இதம் ஜ்ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதாः ।
ஸர்கேபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதந்தி ச ॥)

2 'यद्वै पश्यन्ति सूरयः'

(யத்வை பஶ்யந்தி ஸூரயः)

இத்யாதிகளிலே அறிவது.

த்ரிவித அசேதநத்தின் படியை

3 'अचेतना परार्था च नित्या सतत विक्रिया ।
त्रिगुणा कर्मिणां क्षेत्रं प्रकृते रूपमुच्यते ॥'

(அசேதநா பரார்த்தா ச நித்யா ஸதத விக்ரியா ।
த்ரிகுணா கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே ॥)

4 'अनादिः भगवान् कालः नान्तोस्य द्विज विद्यते ।
अव्युच्छिन्नाः ततस्त्वेते सर्गस्थित्यन्त सयमाः ॥'

---

1 கீதை - 14 - 2 இதம் - இந்த, ஜ்ஞாநம் - ஜ்ஞாநத்தை, உபாச்ரித்ய - அடைந்து, மம - என்னுடைய, ஸாதர்ம்யம் - ஸமமான தர்மத்தை(உடைத்தாயிருக்கையை) ஆகதாः - அடைந்தவர்கள், ஸர்க்கேபி - ஸ்ருஷ்டி காலத்திலும் நோபஜாயந்தே - பிறப்பதில்லை, ப்ரளயே-ப்ரளய காலத்திலும், ந வ்யதந்தி - நாசமடைவதில்லை.

2 விஷ்ணுபுராணம்-1-9-39 ஸூரயः - நித்யஸூரிகள், யத் - எந்தப் பகவானுடைய (ஸ்தாநமாகிய பரமபதத்தை), பச்யந்தி-(எப்பொழுதும்) பார்த்துக்கொண்டிருக்கிறார்களோ.

3 பரமஸம்ஹிதை - 2 அசேதநா - அறிவில்லாதது, பரார்த்தா-அயலாருடைய ப்ரயோஜனத்தையே தனக்கு ப்ரயோஜனமாகவுடையது, நித்யா - அழிவில்லாதது, ஸததவிக்ரியா - எப்பொழுதும் மாறுதலை அடையும் தன்மையையுடையது, த்ரிகுணா - ஸத்த்வம் முதலியமூன்று குணங்களுக்கு ஆச்ரயமானது, கர்மிணாம் - புண்ய பாப ரூப கர்மங்களைச் செய்தவர்களுக்கு, க்ஷேத்ரம் - அந்தந்தக் கர்மங்களின்பலனாகிய ஸுக துக்கங்களுக்கு உத்பத்தி ஸ்தாநம், அதாவது அவைகளை அனுபவிக்கும் இடமாகிய சரீரம் (என்று), ப்ரக்ருதேः - ப்ரக்ருதியினுடைய, ரூபம் - ஸ்வரூபம், உச்யதே - சொல்லப்படுகிறது.

4 விஷ்ணுபுராணம்—1-2-26. பகவாந் காலः - பகவானாகியகாலம், அநாதிः -உத்பத்தியில்லாதது, த்விஜ - ப்ராஹ்மண ! (மைத்ரேய

(அநாதி: பகவாந் கால: நாந்தோஸ்ய த்விஜ வித்யதே ।
அவ்யுச்சிந்நாஸ் ததஸ்த்வேதே ஸர்க ஸ்த்தித்யந்த ஸம்யமா:॥)

1 ' दिव्यं स्थानमजरं चाप्रमेयं दुर्विज्ञेयं चागमैः गम्यमाद्यम् '

(திவ்யம் ஸ்த்தாநமஜரம் சாப்ரமேயம் துர்விஜ்ஞேயம்ச ஆகமை: கம்யமாத்யம்)

இத்யாதிகளிலே காண்பது. தமஸ்ஸுக்கு அநந்தரமாய் அக்ஷரம் என்று ஓதப்பட்ட த்ரிகுணபரிணாமவிசேஷமே பரமபதம் என்றும், காலமும் இப்படியே ஒரு த்ரிகுண பரிணாமம் என்றும் சொல்லுகிற பேதாபேத வாதிகளுக்கு ப்ரமாண அபாவமும் ப்ரமாண விரோதமும் ஸ்வ வசந விரோதமும் கண்டுகொள்வது.

இப்படி விவேகித்தவன்

2 ' நான் உன்னை அன்றி இலேன் '

என்கிறபடியேஅவனுடைய ஸத்தையாலேதனக்குஸத்தைஎன்றும்

3 ' அதுவும் அவனதின்னருளே '

என்கிறபடியே அவனுடைய வ்யாபாரத்தாலே தன்னுடைய உபாயாதி வ்யாபாரம் என்றும்,

4 ' தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே

னே), அஸ்ய - இந்தக் காலத்திற்கு, அந்த:-முடிவும், நவித்யதே-இல்லை, தத: து - ஆகையினால் தான், ஏதே-இந்த, ஸர்க்க - ஸ்ருஷ்டி, ஸ்திதி -ரக்ஷணம், அந்த-முடிவு(ப்ரளயம்] இவைகளின், ஸம்யமா:- நியமநங்கள், அவ்யுச்சிந்நா: - விட்டுப்போகாமல் இருக்கின்றன, அதாவது இடைவிடாமல் இருக்கின்றன என்றபடி, ' ஸம்யம ' என்று பகவானை அடைவதாகிய மோக்ஷத்தைச் சொல்லுகிறதாகவுமாம், அன்றிக்கே காலத்தை சரீரமாகவுடைய பகவான் என்றும் கூறலாம், பகவானுடைய விபூதியாகையால் ' பகவாந் கால: 'என்கிறது.

1 திவ்யம் ஸ்தாநம் - உத்க்ருஷ்டமாகிய இடமான சுத்த ஸத்த்வமானது, அஜரம் - கிழத்தனம் முதலியவை இல்லாதது, அப்ரமேயம் - அளவிட்டறியமுடியாதது, அன்றிக்கே மற்ற ப்ரமாணங்களினால் அறிய முடியாதது , துர்விஜ்ஞேயம் - ப்ரத்யக்ஷத்தினால் அறியமுடியாதது. ஆகமை: - சாஸ்த்ரங்களினால், கம்யம் அறியத்தக்கது, ஆத்யம் - எல்லாவற்றிற்கும் முதலானது.

2 நான் திருவாய்-7 3 திருவா -3-3-3, 4திருவாய் - 2 - 9 - 4

எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே '

என்கிறபடியே அவன் ப்ரயோஜந விஶேஷத்தாலே (விஷயமாகத் தனக்கு ப்ரயோஜந (விஶேஷ)ம் என்றும் தெளிந்து, ஸ்வாதிகாராநுகுணமாக ஸ்வரூப ப(ஶ)ர ப(ஷ)ல ஸமர்ப்பணத்தாலே இவை மூன்றிலும் நிர்மமனாய் வர்த்திக்கும்.

त्रिविधचिदचिदेकतन्त्रलक्ष्ये यतिपति यामुनभाषितेऽनुयोक्तुः ।
इदमिति निगमान्तदेशिकेन प्रतिसमादिश्यत माधवात्मजस्य ॥

* த்ரிவித சிதசிதேகதந்த்ரலக்ஷ்யே
யதிபதி யாமுந பாஷிதே அநுயோக்துஃ ।
இதமிதி நிகமாந்த தேஶிகேந
ப்ரதிஸமதிஶ்யத மாதவாத்மஜஸ்ய ॥

सत्वस्थान् निभृत(तः) प्रसादय सतां वृत्तिं व्यवस्थापय
त्रस्यन्नह्यविदागसस्तृणमिव त्रवर्गिकान् भावय ।
नित्ये शेषिणि निक्षिपन् निजभरं सर्वंसहे श्रीसखे
धर्मं धारय चातकस्य कुशलिन् धाराधरैकान्तिनः ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु

श्रीतत्त्वसन्देशः संपूर्णः

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

---

* த்ரிவித - மூன்றுவிதங்களான, சித் - சேதன வஸ்துக்கள், அசித் - அசேதந வஸ்துக்கள், இவைகள் எல்லாம், ஏகதந்த்ர - பகவான் ஒருவனுக்கு வசப்பட்டவைகள் என்பதை, லக்ஷ்யே - தாத்பர்யமாகவுடைய(குறிக்கிற), யதிபதி - பாஷ்யகாரர், யாமுந முநி - ஆளவந்தார் இவர்களுடைய, பாஷிதே - வாக்யத்தில், அநுயோக்துஃ - ப்ரச்நம் செய்தவனாகிய, மாதவாத்மஜஸ்ய - மாதவனுடைய குமாரனுக்கு, நிகமாந்த தேசிகேந - வேதாந்தாசார்யர் என்கிற ஆசார்யனால், இதமிதி - இது என்று, ப்ரதிஸமதிச்யத - பதில் சொல்லப்பட்டது.

** ஸத்த்வஸ்த்தாந் நிப்ருதம்(த்:) ப்ரஸாதய
ஸதாம் வ்ருத்திம் வ்யவஸ்த்தாபய
த்ரஸ்ய ப்ரஹ்மவிதாகஸ:
த்ருணமிவ த்ரைவர்க்கிகாந் பாவய |
நித்யே ஶேஷிணி நிக்ஷிபந்
நிஜபரம் ஸர்வம் ஸஹே ஸ்ரீஸகே
தர்மம் தாரய சாதகஸ்ய குஶலிந்
தாராதரைகாந்திந: ||

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ தத்த்வ ஸந்தேசம் முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

** நிப்ருதம் - அவதானத்துடன், (நிப்ருத: -அவதாநத்துடன்கூடினவனாய்), ஸத்த்வஸ்தாந் - பாகவதர்களை, ப்ரஸாதய - க்ருபையுடையவர்களாகச் செய்து கொள், ஸதாம் - ஸத்துக்களின், வ்ருத்திம் - அநுஷ்டானத்தை, வ்யவஸ்த்தாபய - நிலை நிற்கும்படி செய், ப்ரஹ்ம விதாகஸ: - ப்ரஹ்ம வித்துக்களுடைய அபசாரத்திலிருந்து, த்ரஸ்ய - பயப்படு(நடுங்கு), த்ரைவர்க்கிகாந் - தர்மம், அர்த்தம், காமம் எனப் படும் மூன்று பலன்களில் ஆசையுடையவர்களை, த்ருணமிவ - புல்லைப் போல, பாவய - எண்ணியிரு, நித்யே - நித்யனாயும், சேஷிணி - ஸ்வாமியாயும், ஸர்வம் ஸஹே - எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளுமவனாயுமிருக்கிற, ஸ்ரீ ஸகே - ச்ரிய:பதியினிடத்தில், நிஜபரம்- த(உ)ன்னுடைய ஆத்மரக்ஷணபரத்தை, நிக்ஷிபந் - ஸமர்ப்பித்துவிட்டு, குசலிந் - க்ஷேமத்தை அடையக்கூடியவனே ! தாராதரைகாந்திந: - மேகம்ஒன்றையே எதிர் பார்த்திருக்கும், சாதகஸ்ய - சாதக பக்ஷியின், தர்மம் - ஸ்வபாவத்தை, தாரய - தரித்துக்கொண்டிரு.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

பத்தாவது ரஹஸ்யம்

ஸ்ரீரஹஸ்யஸந்தேசம்

[இது அம்ருதரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் ஒன்பதாவது. ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

கட்டளைக் கலித்துறை

யான் அறியும் சுடராகி நின்றேன் மற்றும் யாதுமல்லேன் *
வானமரும் திருமாலஅடியேன் மற்றோர் பற்றுமிலேன் *
தான்அமுதாமவன்தன் சரணே சரண் என்றடைந்தேன் *
மானமிலா அடிமைப் பணி பூண்ட மனத்தினனே 14

अहमात्मा न देहोऽस्मि विष्णुशेषोऽपरिग्रहः ।
तमेव शरणं प्राप्तः तत् कैङ्कर्यचिकीर्षया ॥

அஹமாத்மா ந தேஹோஸ்மி விஷ்ணுஶேஷோபரிக்ரஹ: ।
தமேவ ஶரணம் ப்ராப்த: தத்கைங்கர்ய சிகீர்ஷயா ॥

அயர்வறும் அமரர்களான அநந்த கருட விஷ்வக்ஸேநாதி களோடு துல்யமாக அபரிச்சிந்ந புருஷார்த்தமான பகவத் கைங் கர்யத்திற்கு ஸ்வரூப யோக்யதை உண்டாயிருக்க, அநாதி மாயையாலே ஸுப்தனாய் அநந்த க்லேஶபாஜநமான ஸம்ஸார

ஸாகரத்திலே அழுந்திக்கிடக்கிற க்ஷேத்ரஜ்ஞன் பரிபூர்ண ப்ரதி புத்தனான ஆசார்யனாலே அத்யந்த ஶோகார்த்தனான அளவிலே, 'நீ அதிதுஷ்கர தர்மங்கள் ஒன்றிலும் அலையவேண்டாம், அப் பாபங்களை எல்லாவற்றையும் விடுவிக்கைக்கு ஸமர்த்தனுமாய் அவஸர ப்ரதீக்ஷனுமாய் நிற்கிற என்னை ஒருவனையுமே ஶரண மாகப்பற்று' என்று ஶரண்யனான ஶ்ரிய:பதிதானே சரமஶ்லோ கத்திலே அருளிச்செய்த ஸர்வாதிகார ஶரணாகதியினுடைய விஷய ஸ்வரூப பரிகர பல விஶேஷங்களை விஶதமாக ப்ரகாஶிப் பிக்கிற த்வயத்திற்கு அபேக்ஷிதார்த்த ஸங்க்ரஹரூபமான திரு மந்திரத்திலே ப்ரக்ருத்யாத்ம விவேகமும் ஜீவேஶ்வரவிவேகமும் பிறந்து,ஸ்வாபாவிக பகவத் ஸம்பந்தத்தை உணர்ந்து, ஔபாதிக தேஹ விபூத்யாதி ஸம்பந்தத்தை இகழ்ந்து, ஸ்வரூபாநுரூப பரம புருஷார்த்த ஸித்திக்கு ஸ்வாதிகாராநுகுணமான ஸுக ரோபாய விஶேஷத்தைப்பற்றி ஸ்வாமி கைங்கர்ய மநோரதனாய் நிற்கிற நிலையை

(அஹமாத்மா)

என்கிற ஶ்லோகம் ப்ரதிபாதிக்கிறது.

இதில் '*அஹமாத்மாந தேஹோஸ்மி*' என்கிற இரண்டு வாக்யமும்(ப்ரணவத்தில்)த்ருதீயாக்ஷரத்தின்பொருளைச்சொல்லு கிறது- 'அஹம்' எனகிற பதத்தாலே அநாத்மநி ஆத்ம புத்தி யைக் கழிககிறது. அநேக அவயவ உபசயரூபமான தேஹத்திற் காட்டில் வேறு என்று சொன்ன இது இந்த்ரியங்களில் அந்யதைக்கும் உபலக்ஷணமாகையாலே பஞ்சவிம்ஶகனுடைய தத்த்வாந்தர வைலக்ஷயண்யம் ஸித்தி(பலி)க்கிறது.

'விஷ்ணுஶேஷ:' என்கிறபதம் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருதி ப்ரத்யய அர்த்தங்களைக் காட்டுகிறது. (அபரிக்ரஹ:) இதில் விஶேஷ நிர்த்தேஶ ஸ்வாரஸ்யத்தாலும் ஸமாஸ ஸ்வாரஸ்ய (ஸாமர்தய)த்தாலும் விஷ்ணு விற்கே ஶேஷமென்று தோறறுகையாலே அநயஶேஷத்வத் தையும் கழிக்கிற நமஸ்ஸில் அர்த்தத்தையும் காட்டுகிறது.

இந்நமஸ்ஸுந் தன்னிலே விவக்ஷிதமான பகவச்சரணாரவிந்த ஶரணாகதியை தத்ப்ரேரிதனாய்ககொண்டு தான் பண்ணின ப்ரகாரம் 'தமேவ ஶரணம் ப்ராப்த:' என்று சொல்லப்படுகிறது

'தத்கைங்கர்ய சிகீர்ஷயா' என்கிறபதம் த்ருதீய பதத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயாம்ஶ தாத்பர்யத்தை ஸங்க்ரஹிக்கிறது.

இதில் அர்த்த க்ரமத்தைப் பார்த்தால் தேஹாதி விலக்ஷணனுப் ஜ்ஞாதாவாய் ஜ்ஞாந ஸ்வரூபனுமாய் இரண்டு படியாலும் ப்ரத்யக்காய் பகவதேக ஶேஷபூதனுய் நிருபாதிக ஶேஷித்வாதி ரஹிதனுன நான் நிரவதிக பகவத்கைங்கர்யரஸ லாபார்த்தமாக அவன்தன்னையே ஶரணமாகப் பற்றினேன் என்று ப்ரபந்நனுடைய ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநம் சொல்லுகிறது. ந்யஸ்தபரனுக்கும் இது ஸ்வ பர ஸந்தோஷார்த்தமாக நித்யம் அநுஸந்தேயம்.

கட்டளைக் கலித்துறை

சீலம் கவர்ந்திடும் தேசிகர் தேசின் பெருமையினுல் *
தூலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன * துஞ்சல் தரும்
கோலம் கழிந்திடக், கூறிய காலம் குறித்து நின்ருேம் *
மேல் இங்கு நாம் பிறவோம், வேலைவண்ணனை மேவுதுமே.

श्रीमद्वेङ्कटनाथेन शिष्याणां हितमिच्छता ।
इत्थं रहस्य सारार्थः संगृह्य समद(दि)श्यत ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु

श्री र ह स्य स न्दे श: सं पू र्ण: ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नम: ॥

---

* சிஷ்யாணும் - (தன்னை ஆச்ரயித்த) சிஷ்யர்களுக்கு, ஹிதம் - நன்மையை, இச்சதா - விரும்பிக்கொண்டிருக்கிற. ஸ்ரீமத்வேங்கடநாதேந - ஸ்ரீமத் வேங்கடநாதன் என்னும் ஆசார்யனுல், ரஹஸ்ய ஸாரார்த்தः - ரஹஸ்யங்களின் ஸாரமான அர்த்தம், ஸங்க்ருஹ்ய -சுருக்கமாக, இத்தம் - இப்படி, ஸமத்ருச்யத - நன்ருகக் காட்டப்பட்டது, ஸமதிச்யத (உபதேசிக்கப்பட்டது)

ஸ்ரீமத் வேங்கடநாதேந ஶிஷ்யாணாம் ஹிதமிச்சதா ।
இத்தம் ரஹஸ்யஸாரார்த்த:ஸங்க்ருஹ்ய ஸம(த்ரு)திஶ்யத।

இப்படி கவிதார்க்கிகஸிம்ஹமும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
ஸ்ரீ ரஹஸ்ய ஸந்தேசம் முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளேசரணம்

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச்சொன்ன பழமொழியுள்

பதினோராவது ரஹஸ்யம்.

ரஹஸ்யஸந்தேசவிவரணம்

[இது அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் பத்தாவது
ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

ரஹஸ்யஸந்தேஶத்தில்'ஶரணாகதியினுடைய விஷய ஸ்வரூப பரிகர பல விஶேஷங்களைப்ரகாஶிப்பிக்கிறது த்வயம்'என்கிற இடத்தில், விஷயவிஶேஷமாவது—ஶரண்யாந்தரங்களுமன்றிக்கே ஸ்வரூபமாத்ரமுமன்றிக்கே பத்நீ ஸம்பந்தகுணவிக்ரஹவிஶிஷ்டனான ஸாவேஶ்வரன். ஸ்வரூப விஶேஷமாவதுது—ஜீவகரதவ ஸாகால ஸாத்யத்வாதிகளையுடைத்தான உபாஸநாதிகளிற் காட்டிலும் அதின் பரிகரங்களிற் காட்டிலும் வேறுபட்ட பரந்யாஸம். பரிகரவிஶேஷமாவது—யமயநிமாதிகளான உபாஸநாந்தரங்கங்களிலுமபக்தி பரபத்திகளிலும் காட்டில் வேறுபட்ட ஆநுகூல்ய ஸங்கல்பாதி பஞ்சகம். பல விஶேஷமாவது—ஐஶ்வாய கைவல்ய ரூப ப்ரயோஜநாந்தரங்களிலும் பகவத் ஸாலோக்யாதி மாத்ரத்திலும் வ்யாவ்ருத்தமாய் தேசகாலாதி பரிச்சேதம் இல்லாத கைங்கர்யபர்யந்தமான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம்.

'சீலம் கவர்ந்திடும்' என்கிற பாட்டாலே ஸதாசார்ய ப்ரஸாதமடியாகத் தனக்கு வருகிற பரம புருஷார்த்த லாபத்தை அநுஸந்திக்கிறான்.

'சீலம் கவர்ந்திடும்' என்றது ஆத்ம குணங்களையும் ஆசாரத்தையும் அங்கீகரிக்குமவர்கள் என்றபடி. 'தேசிகர்' என்றது

ஆஶ்ரிதரை வழியில்லாவழி போகாதபடி விலக்கி நல்வழி காட்டு கைக்கு நிலவர் என்றபடி. 'தேசின் பெருமையினால்' என்றது ஸர்வேஶ்வரன் இவர்களை அநுபந்திகளோடும் கூட ரக்ஷிக்கக்கடவோம் என்னும்படி பண்ணின ஆத்மாத்மீய பரந்யாஸ ப்ரபாவத்தாலே என்றபடி. 'தூலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன' என்றது

1 'போய பிழையும் புகுதருவா நின்றனவும் தீயினில் தூசு ஆகும்'

என்று உபநிஷத்துச் சொன்னபடியே உத்தர பூர்வாகங்கள் கழிந்தபடியைக் கணிசிக்கிறது. 'துஞ்சல் தரும் கோலம்' என்றது

2 'अनादि मायया सुप्तः' (அநாதி மாயயா ஸுப்தः)

என்கிறபடியே ஆத்ம பரமாத்மாதி ஜ்ஞாநமில்லாதபடி பண்ணுகிற ப்ராக்ருத ஶரீரம் என்றபடி. 'கழிந்திடக்கூறிய காலம்' என்றது ப்ராரப்த ஶரீரமாகிற சிறையை ஸ்வதந்த்ரனை ஸ்வாமி மாற்றுகைக்கு ப்ரமாண நியதமான ஸமயம் என்றபடி. 'குறித்து நின்றோம்' என்றது இதற்கு ஸ்வயத்நாபேக்ஷையற ஓடம் பார்த்திருப்பார்க்கு ஓடம் வருமா போலே இது ஸ்வயமாகதமாய், அணித்தாகப் பெற்றோம் என்றபடி. 'மேல் இங்கு நாம் பிறவோம்' என்றது ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே ஶரீராந்தர ஹேதுவான ப்ராரப்த கர்மாம்ஶமும் கழியப்பெற்ற நாம் இருள் தருமா ஞாலத்துள் துக்க ஹேதுவான ஶரீரபரிக்ரஹம் பண்ணோம் என்றபடி. 'வேலை வண்ணனை மேவுதுமே' என்றதுஸம்ஸார ஶ்ரம பரிதாப ஶமநமான திருமேனியையுடையனை ஸ்ரீ வைகுண்ட நாதனை கெடு மரக்கலம் கரை சேர்ந்தாற் போலே சேரக் கடவோம் என்றபடி.

---

1 திருப்பாவை—5 2 அநாதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தினாலே தூங்கிக்கொண்டிருக்கிற.

இப்படி ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியும் நிரதிசயாநந்தரூப பரிபூர்ண பகவதநுபவமும் உண்டாம்படி 'கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேன்' என்று க்ருதக்ருத்யனை தான் க்ருதார்த்தனாகிறான்.

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्री र ह स्य स न्दे श वि व र णं सं पू र्ण म्

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்
ஸ்ரீரஹஸ்ய ஸந்தேச விவரணம் முற்றிற்று

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

பன்னிரண்டாவது

ஸ்ரீ தத்த்வரத்னாவளீ

[இது அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் பதினோராவது ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

கட்டளைக் கலித்துறை

வண்மையுகந்த அருளால் வரம் தரு மாதவனார் *
உண்மை உணர்ந்தவர் ஓதுவிக்கின்ற உரை வழியே *
திண்மை தரும் தெளிவொன்றால் திணியிருள் நீங்கிய நாம்*
தண்மை கழிந்தனம்(நம்)தத்துவம் காணும் தரத்தனமே. 16

ஜீவ தத்த்வம்

ஸதாசார்யோபதேஶ பூர்வகமாக அறியவேண்டிய தத்த்வ த்ரயத்தில் ஜீவதத்த்வமாவது—ஸ்வரூபத்தாலும் ஸாமர்த்யத்தா லும் பரிச்சிந்நமான அஹமர்த்தம். 1

த்ரிவித ஜீவவர்க்கத்தினுடைய ஸ்வரூபாதிகளெல்லாம் ஸர்வரக்ஷகனான ஶ்ரிய:பதிக்கு அநந்யார்ஹ நிருபாதிக ஶேஷ பூதங்கள் என்று நிகமாந்தங்களில் நிர்ணீதமாகையாலே இஜ் ஜீவன் தன் ஸ்வரூபத்திலும் தனக்குள்ள அதிஶயங்களிலும் தான் செய்யும் சேஷவ்ருத்திகளிலும் தனக்கு ப்ரதாந ஶேஷித்

வமும் உபகார ப்ரத்யுபகாரப்ரஸங்கமுமற(மில்லையென்று) ஸர்வாவஸ்த்தையிலும் நிர்மமனுயிருக்க ப்ராப்தன். 2

இவனுடைய ஸ்வரூப ஸ்த்தி(ஶக்)த்யாதிகளெல்லாம் பரதந்த்ரங்களாயிருக்கையாலே தன்னையும் பிறரையும் பற்ற இவன் நிரபேக்ஷ(க) ரக்ஷகனல்லன் 3

சேஷத்வத்தாலே ஸ்வாமிக்கு இஷ்ட விநியோக யோக்யனுயிருக்கும். 4

பாரதந்த்ர்யத்தாலே யதேஷ்ட விநியுக்தனும். 5

1 'அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்' என்கிறதற்கு ஸ்வார்த்த ப்ரவ்ருத்தனை ஸ்வாமியுடைய க்ருதக்ருத்யதையிலும் அவனுடைய விநியோக விசேஷத்தாலே க்ருதார்த்தனை தாஸபூதனுடைய க்ருதார்த்த(ஜ்ஞ)தையிலும் தாத்பர்யம். 6

இச்சேஷத்வ பாரதந்த்ர்யங்களும் நித்ய ஸித்த ஜ்ஞாநாநுஷ்ட்டான ஸாமர்த்யங்களும்கூட ஸ்வதந்த்ர ஸ்வாமி ஸம்மதங்களான உபாய பல விசேஷங்களுக்கு உபயுக்தங்களாம் 7

இஜ்ஜீவதத்த்வம் ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வ நியமத்தாலே 'உடன் மிசை உயிர்' எனக் கரந்து நிற்கிற உயர்வற உயர் நலம் உடையவனுக்குத் தன்னுடம்பு(போலே)ம் தானும் உடம்பாயிருக்கும். 8

இப்படி ஶரீரதயா பரதந்த்ரமாய் ஶரீரங்களையும் எடுத்து ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வாதிகளையுடைத்தாயிருந்தாலும் ஸ்வரூபத்தில் நாமாந்தரம் வரும்படியான அவஸ்த்தா விசேஷங்கள் இல்லாமையாலே ஜீவனுக்கு விசேஷித்து நித்யத்வ நிர்விகாரத்வாதிகளைச்சொல்லுகிறது. 6

ஸ்வரூபநித்யத்வம் சேதநாசேதநங்கள் எல்லாவற்றுக்கும் துல்யம். 10

அசேதந தத்த்வம்

அசேதநமாவது அறிவில்லாத வஸ்து. 11

1 அமலனுதி - 1

இதுஸ்வப்ரகாஶத்திற்கும் பரப்ரகாஶத்திற்கும்(ஈ)பலியல்லாமையாலே இதற்கு ப்ரத்யக்த்வ போக்த்ருத்வங்களில்லை. 12

தன்னையும் பிறரையும் காட்டுகிற ஜ்ஞாநத்திற்கு ஆஶ்ரயமல்லாமையாலே ஸ்வபுத்தி பூர்வ ப்ரவ்ருத்தி லக்ஷண கர்த்ருத்வம் இல்லை. 13

அசேதந த்ரவ்யங்களில் த்ரிகுணம் ஸர்வேஶ்வரனுக்கு லீலா விபூதியாய் ஸம்ஸாரிகளுக்குக் கரண களேபராதி ரூபமாய்க் கொண்டு பரிணமித்துக் கர்மாநுகுண வைஷம்யத்தாலே விஷமங்களான ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்களை உடைத்தாயிருக்கும். 14

இது தானே இவர்கள் முக்தராஞல் ஸ்வாமி விபூதியான வேஷத்தாலே ஸ்வாபாவிகமான ஆநுகூல் யா தி ஶ ய த் தை உடைத்தாம். 15

பூர்வாவஸ்த்தையில் தன்னைப் பற்ற உண்டான ப்ராதிகூல்யமும் பர ப்ரதிகூலமான ஆ கா ர மு ம் முக்த னுக்குத் தோன்ரு நின்ருலும ஈஶ்வரனுக்குப் போலே இவனுக்கும் (இது) ப்ரதிகூலமாயிராது. 16

ஸத்த்வமாத்ராஶ்ரயமான த்ரவ்யம் போக விபூதியாய் ஸூரிஸேவ்யனை ஶ்ரிய:பதிக்கும் ஸூரிகளுக்கும் ஸூரிதுல்ய ஜ்ஞாநவிகாஸம் பெற்ற முகதருக்கும் ஸ்வச்சந்த தேஹாதி ரூபமாய் ஸர்வதா அத்யந்த அநுகூல ரூபமாயிருக்கும். 17

ஸத்த்வாதி குணத்ரயமில்லாத கால த்ரவ்யம் விபூதித்வயத்தையும் வ்யாபித்துநின்ருலும் கல்பாதிவிபாகத்தாலே லீலாவிபூதியில் விகாரவிசேஷங்களுககு நியாமகமாயிருக்கும். 18

ஜீவாத்ம பரமாத்மாக்களுடைய ஜ்ஞாநமும் குணத்ரய ரஹிதமான அசேதந த்ரவ்யமாய் தன்னையும் தான் அல்லாதவற்றையும் தன் ஆஶ்ரயத்திற்கு ப்ரகாஶிப்பிக்கவற்ருகையாலே சித் ஶப்தவாச்யமாய்த் தான் ஒரு ஜ்ஞாநத்திற்கு ஆஶ்ரயமலலாமையாலே அசித் ஶப்தவாச்யமுமாய் இருககும். 19

உக்தமான சேதந த்ரவ்யம் ஈஶ்வரனைப் போலே ஆத்மா என்றும், அசேதநத்ரவ்யம் கேவல குணங்களைப்போலே அநாத்மா என்றும் பிரிககப்படும். 20

ஈச்வர தத்த்வம்

ஈஶ்வரன் ஸர்வநியந்தாவான நாராயணன். 21

நித்யாநித்ய ஸர்வவஸ்துக்களும் இவனுடய நித்ய அநித்ய இச்சாஸித்தங்களாய் இவனுலே வ்யாப்தங்களாய் இவனுக்கு அப்ருதக்ஸித்த ப்ரகாரங்களாய் இருக்கும். 22

இவன் ஸர்வகார்யங்களுக்கும்காரணமாம்போது உபாதாந பூத ஸர்வ தத்த்வங்களுக்கும் அந்தராத்மாவாய் நின்று வாமந த்ரிவிக்ரம ந்யாயத்தாலே விஶிஷ்ட வேஷத்தாலே உபாதாநமு மாய் உபாதேயமுமாம். 23

ஸங்கல்பவிஶேஷங்களாலும் நிமித்தபூத ஸர்வவஸ்துக்களா லும் விஶிஷ்டனுய்க் கொண்டு நிமித்தமுமாம். 24

இவனுக்கு அந்தர்வ்யாப்தியாவது ஸர்வ வஸ்துக்களிலும் தான் இல்லாத இடம் இல்லாதபடி நிற்கை. 25

பஹிர்வ்யாப்தியாவது பரிச்சிந்நவஸ்துக்களுக்குப் புறம்பும் உண்டாகை. 26

ஸர்வ ஶரண்யனுன இவனுக்கு ஸ்வரூப குண விபூதிகள் எல்லாவற்ருலுமுள்ள நித்யபரத்வம் உத்தராவதி ரஹிதமாய் இருக்கும். 27

அதில் சீலாதிகளால் வந்த பரபாரம்யம் தானே ஸௌ லப்ய பர்யந்தமாம். 28

அதடியாக ஶாஸ்த்ரவிஹித ஸாத்யோபாய வஶீகார்யனுன இவன் ஸித்தோபாயமாம். 29

ஸாத்ய ப்ராப்யமான கைங்கர்யத்திற்கு ப்ரதிஸம்பந்தியாய்க் கொண்டு ஸித்தப்ராப்யனும். 30

இந்தத் தத்த்வ ரத்னாவளியில் ஏதேனும் ஒன்றையும் எல்லா ப்ரகாரத்தாலும் தெளிகை ஸர்வஜ்ஞனுக்கல்லது கூடாமை யாலே உபயுக்ததமமான இவ்வளவு தெளிந்தாலும்உபாய (ஈ)பல ஸித்தியுண்டாம்.

நாராயணன் பரன் நாம் அவனுக்கு நிலையடியோம் *
சோராது அனைத்தும் அவன் உடம்பு என்னும் சுருதிகளால் *
சீரார் பெரும் தகைத் தேசிகர் எம்மைத் திருத்துதலால் *
தீரா மயல் அகற்றும் திறம்பாத் தெளிவுற்றனமே. 17

मानतः संमितत्वेपि महती परमार्थतः ।
तत्त्वरत्नावलिरियं सद्भिः धार्या तमोऽपहा ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु

श्रीतत्त्वरत्नावलिः संपूर्णा ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

மாநதஸ் ஸம்மிதத்வேபி மஹதீ பரமார்த்ததः ।
தத்த்வரத்நாவளிரியம் ஸத்பிः தார்யா தமோபஹா ॥

தத்த்வரத்னாவளீ முற்றிற்று

மாநத:– அளவினால், ஸம்மிதத்வேபி—அளவிடப்பட்டிருந்தபோதிலும், பரமார்த்தத: -உத்க்ருஷ்டங்களான அர்த்தங்களை ப்ரதிபாதிப்பதினால். அன்றிக்கே உண்மையான அர்த்தங்களைச் சொல்லுகிறபடியினால், அன்றிக்கே மோக்ஷமாகிற பரம ப்ரயோஜனத்தை உண்டாக்குகிறபடியினால் அதுவுமன்றிக்கே அதிகமான த்ரவ்யத்தினால்அடையக் கூடியதாகையினால், ம ஹ தீ - பெரியதாயிருக்கிற,தமோபஹா – அஜ்ஞாநத் தைப்போக்கடிக்கக்கூடிய, இயம் - இந்த, தத்த்வ ரத்னாவளி: - தத்த்வரத்னாவளீ என்னும் க்ரந்தமானது அன்றிக்கே ரத்னமயமான ஹாரமானது, ஸத்பி. -ஸத்துக்களினால் தார்யா - மார்பில் தரிக்கத் தக்கது,(எப்பொழுதும் த்யானம் செய்யத்தக்கது.)

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

பதின்மூன்றாவது
ஸ்ரீதத்வ ரத்னாவளீ
ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம்

[இது அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களிவ்பன்னிரண்டாவது ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

தத்த்வ ரத்னாவளியில் முதல் கவியாலும் முடிவில் கவியாலும் ஆசார்யன் பண்ணின க்ருஷி பலித்தபடியைச் சொல்லுகிறது. நடுவுள்ள வாக்யங்களாலே ஒவ்வோர் குழி * முதலாக எட்டுக்குழி விளைந்தபடியைச் சொல்லுகிறது.

இதில் ஜீவவிஷயமான பத்து வாக்யத்திலே ஜீவனுடைய லக்ஷணமும், இவனுடைய ஶேஷத்வ ப்ரகாரமும், பாரதந்த்ர்ய ப்ரகாரமும், ஶேஷதவோபயோகமும், பாரதந்த்ர்யோபயோகமும், உபயஸித்தமானஉசிதஉபயோகவிஶேஷமும், ஜ்ஞாநாதிஸஹிதோபயோகமும், ஆதேயத்வ விதேயதவ ஸஹித உபயபலமும், உக்த ப்ரகாரங்களாலே ஶங்கித அநித்யத்வாதி பரிஹாரமும், ஸர்வ

---

* 'ஒவ்வோர் குழி முதலாக' என்றது. ஜீவ தத்த்வத்தை நிருபிக்கும் முதல்வாக்யம் ஒருகுழி, எட்டுக்குழியாக விளைந்தபடியாவதுஎட்டு வாக்கியங்களினால் மேல் ஜீவாத்ம ஸ்வரூபத்தை நிருபிக்கும் ப்ரகாரம். இப்படியே மேல் பதினொராவது வாக்யம் ஒரு குழி. அப்படியே இருபத்தோராவது வாக்யம் ஒரு குழி பத்தாவது இருபதாவது முப்பதாவது வாக்யங்கள் பொதுவான அம்சத்தை நிருபிக்கிற படியினால் அவைகள் ஒரு குழியாக எடுக்கப்படவில்லை என்று அறியதக்கது.

த்ரவ்யஸாதாரண ஸ்வரூபநித்யத்வமும் என்றிவை பத்தும் ப்ரதிபாத்யம்.

அசேதந விஷயமான பத்து வாக்யத்தில் அசேதநத்தினுடைய லக்ஷணமும், அதனுடைய ப்ரத்யக்த்வ போக்த்ருத்வ அபாவமும், புத்திபூர்வ கர்த்ருத்வ அபாவமும், அசேதந த்ரவ்யங்களில் த்ரிகுணத்திற்கு கர்மவஶ்யரைப் பற்ற (உண்டான) ப்ராதிகூல்யாதி ப்ரகாரமும், அகர்மவஶ்யரைப்பற்ற இதனுடைய ஆநுகூல்யாதிஶயமும்ப்ராதிகூல்யஶங்காபரிஹாரமும், பரமபதத்தினுடைய போக்யதாதிஶயமும், காலத்தின் ப்ரகாரமும், தர்மபூத ஜ்ஞாநத்தின் ப்ரகாரமும், இவற்றினுடைய அநாத்மத்வமும் என்றிவை பத்தும் ப்ரதிபாத்யம்.

பர தத்த்வ விஷயமான பத்து வாக்யத்தில் ஈஶ்வரனுடைய லக்ஷணமும், இவனுடைய நிரங்குஶ ஸ்வாதந்த்ர்யாதிகளும், உபாதாநகாரணத்வ ப்ரகாரமும், நிமித்த காரணத்வ ப்ரகாரமும், அந்தர்வ்யாப்தி ஸ்வரூபமும், பஹிர் வ்யாப்தி நியமமும், ஸர்வ ப்ரகார பாரம்யமும், ஸௌலப்ய விஶேஷமும் ஸித்தோபாயத்வமும் ஸித்த ப்ப்ரயத்வமும் என்றிவை பத்தும் ப்ரதிபாத்யம்.

நிகமந வாக்யத்தில் இவ்வளவு தெளிவு கொண்டும் ஈடேறலாம் என்று சேதநரைத் தேற்றுகிறது.

மேல் அநுஷ்டுப்பில் இதின் சிறுமை கண்டு இகழாதே சீர்மையைக் கண்டு சிந்தாமல் கொள்ளச் சொல்லுகிறது.

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य

श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु

श्रीतत्त्वरत्नावलिप्रतिपाद्यसंग्रहः संपूर्णः

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத்வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளுள்
தத்த்வரத்னாவளி ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம் முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்

பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

பதினான்காவதுரஹஸ்யம்

ஸ்ரீ ரஹஸ்ய ரத்னாவளீ

[இது அம்ருதரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் பதின்மூன்றாவது ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்யப்பட்டது]

[1—10 திருமந்திரத்தில் ப்ரணவம், த்வயத்தில் பூர்வகண்டம், சரம ச்லோகத்தில் பூர்வார்த்தம் இவற்றின் அர்த்தம். 11 21 ப்ரணவ த்வயங்களிலுள்ள நமஸ்ஸின் அர்த்தமும், சரமச்லோகத்தில் உத்தரார்த்தத்தில் ஒரு பாகத்தின் அர்த்தமும் 21—30 திருமந்திரத்தில் சதுர்த்தியிலும், த்வயத்தில் சதுர்த்யந்த பதங்களிலும் ஸ்பஷ்டமாயும் சரமச்லோகத்தில் அர்த்தாத் ஸித்திக்கிறதுமான புருஷார்த்தநிரூணம்

கட்டளைக் கலித்துறை

ஒன்றே புகல் என்று உணர்ந்தவர் காட்டத் திருவருளால் *
அன்றே அடைக்கலம் கொண்ட நம் அத்திக[illegible]த திருமால் *
இன்றே இசையில் இணையடி சேர்ப்பர் இனிப் பிறவோம் *
நன்றே வருவதெல்லாம் நமக்குப் பரம் ஒன்றிலதே. 18

ஒரு ஜீவனுக்கு ஒரு ஜீவன் தஞ்சமல்லன். 1

ஸ்ரீமானான நாராயணன் ஒருவனு மேஸர்வஜீவர்களுக்கும் தஞ்சம். 2

இஜ்ஜீவன் அநாதிகாலம் அநுபவிக்கப் பெறாத ஶ்ரிய: பதியைப் பெறுகைக்கு ஹேதுவான உபாயத்தை ரஹஸ்ய த்ரய முகத்தாலே உபதேஶித்து அவ்வழியாலே ஆசார்யன் இவனுக்குத் தஞ்சமாகிறான். 3

ஸர்வஸ்வாமினியாய் ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமாய் ஸஹ தர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிஶயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிஶயத்தாலும் புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள். 4

இவளைப் புருஷகாரமாக்க வேண்டுகிறது ஈஶ்வரன் தண்டதரனாகையாலே. 5

இத்தண்ட காரணம் அநாதியான ஆஜ்ஞாதிலங்கநம். 6

இப்படி அபராதாநுரூபமாகத் தண்டதரனாய்ப்போருகிற ஶரண்யனுடைய வஶீகரணங்களில் ப்ரதாநம் ஸர்வாகிஞ்சநாதிகாரமான ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணம். 7

இது ஸபரிகரமாக ஸக்ருத் கர்த்தவ்யம். 8

இஸ்ஸமர்ப்பணத்தைத் தான் அநுஷ்ட்டிக்கவுமாம், தனக்காக ஆசார்யாதிகள் அநுஷ்ட்டிககவுமாம். 9

இதற்குக் கோலி(ரி)ன பலத்தைப் பற்றப் புந: ப்ரபத்தி முதலானகர்த்தவ்ய ஶேஷமில்லை. 10

இப்படி க்ருதக்ருத்யனான ப்ரபந்நனுக்கு வர்ணாஶ்ரமாதி தர்மங்கள் ஸ்வதந்த்ராஜ்ஞாஸித்தங்களான கைங்கர்ய விஶேஷங்கள். 11

இவனுக்கு ஆஜ்ஞாநுஜ்ஞா ஸித்தங்களான கைங்கர்யங்கள் எல்லாம் ஸ்வயம் ப்ரயோஜநங்கள். 12

கரணாகரண ரூபங்களான அபசாரங்கள்புகுந்தாலும் ப்ரபந்நனுக்கு நரகாதிகள் இல்லை. 13

ராஜகுமாரனுக்கும் அவதாநம் பண்ணி நடக்க வேண்டு மா போலே, லகு ப்ரத்யவாயமும் வாராமைக்காக அபசாரங்கள் தூர பரிஹரணீயங்கள். 14

ப்ரபத்திக்குக் கோலி(ரி)ன பலத்திற்கு ஒன்றாலும் ப்ரதிபந் த மில்லை. 15

புத்திபூர்வ அபசாரங்கள் புகுந்தாலும் ப்ராயஶ்சித்தவி ஶேஷம் அதிகாரி விஶேஷநியதம். 16

இப்படி ப்ராயஶ்சித்தத்திலே மூட்டுகிறதும் கடிந ப்ரக்ருதி களுக்குக் கசை காட்டுவாரைப் போலே அவன் பண்ணுகிற ஶிக்ஷைகளும் எல்லாம் ஶரண்ய ப்ரஸாதபலம். 17

இங்கு இருந்த காலம் தர்மாநுபந்தியான போகத்திலும் போக புத்தியாலே ப்ராவண்யம் பிறந்ததாகில் இது தன் அதிகாராநுரூபமான கைங்கர்யாம்ருத ரஸத்திற்குத் தண்ணீர்த் துரும்பு. 18

இப்படி நிஷித்த போகப்ராவண்யம் கைங்கர்யாம்ருத ரஸ விருத்தமாகையாலே விஷம் போலே தூர பரிஹரணீயம். 19

கைங்கர்யமாவது ஸ்வாமி உகந்த ஏவல் தொழில் செய்கை யாகையாலே இது யதாஶாஸ்த்ரம் பண்ணினால் உகப்பாம். 20

பகவத் கைங்கர்யமும் பாகவத கைங்கர்யமும் சேர அநுஷ்ட்டிக்க அரிதானபோது பரமபுருஷார்த்த காஷ்ட்டையான பாகவத கைங்கர்யமே உபாதேயதமம். 21

இவை இரண்டிலும் ப்ரதாநம் ஆசார்ய கைங்கர்யம். 22

இக்கைங்கர்யபரனுக்குப் பரமைகாந்திகள் உகந்த இடமே உசிதஸ்த்தாநம். 23

இப்படித் துல்ய ஶீலரைக் கிடையாத போது, விபரீத ஸம்ஸர்க்கம் ஏகாந்தவாஸபரிஹாரியம். 24

இவனுக்குக் கதிசிந்தநாதிகள் சித்தஸந்தோஷ ஹேதுவான காலயாபநம். 25

சாதகவ்ருத்தியான இவனுக்கு அந்திம ப்ரத்யயம் ஸ்வயத்நஸாத்யமன்று. 26

இப்படி க்ஷண க்ருதயமான ஆத்மஸமர்ப்பணயாகத்திற்குப் பகவத் ஸங்கல்பஸாத்யமான தேஹாவஸாநம் அவப்ருதம். 27

ஸதாசார்ய பரிக்ரஹத்திற்கு முன்புள்ள அநாதி காலம் எல்லாம் ஒரு காளராத்திரி. 28

பின்பு தேஹாவஸாநத்தளவும் நல் விடிவு. 29

மேல் முழுக்க ஸ்வச்சந்த கைங்கர்ய மஹோத்ஸவ திவஸம். 30

இது ஸாத்தவிக ஹ்ருதயங்கமையான ரஹஸ்யரத்னாவளீ.

சிறுபயனில் படியாத தகவோர் எம்மைச்
சேர்க்க அடைககலம் கொண்ட திருமால்* தானே
மறுபிறவி அறுத்து அழியா வானில் வைக்கும்
மனமே! நீ மகிழாதே இருப்பதென் கொல்?
உறுவது உனக்கு உரைககேன் இங்கிருந்த காலம்
ஒரு பிழையும் புகுர(த)ாத உணர்ததி வேண்டிப் *
பெறுவதெல்லாம் இவகே நாம பெற்று வாழப்
பேர் அடிமையால் ஏது என்று இகழேல் நீயே. 19

रक्षन्त्वनन्य रक्ष्यां लघीयसीमपि गरीयसीं सन्तः ।
लक्ष्मीसहाय हृद्यां रहस्यरत्नावलिं रम्याम् ।

इति कवितार्किक सिंहस्य सर्वतन्त्र स्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
श्रीरहस्यरत्नावलिः संपूर्णा
॥ श्रीमते निगमान्त महादेशिकाय नमः ॥

லகீயஸீமபி - (அளவில்) சிறியதாயிருந்தபோதிலும், கரீயஸீம் - (அர்த்தத்தினாலும் ப்ரயோஜனத்தினாலும் பெரியதாயும்) அநந்ய ரக்ஷ்

ரக்ஷந்து அநந்ய ரக்ஷ்யாம்
லக்ஷ்மீயஸீமபி கரீயஸீம் ஸந்த: |
லக்ஷ்மீ ஸஹாயஹ்ருத்யாம்
ரஹஸ்யரத்நாவளிம் ரம்யாம் ||

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்

ஸ்ரீ ரஹஸ்ய ரத்னாவளீ முற்றிற்று

யாம் - அநந்ய ப்ரயோஜநர்களினால் ரக்ஷிக்கக் கூடியதும் லக்ஷ்மீஸஹாயஹ்ருத்யாம் - ச்ரிய:பதிக்கு ஹ்ருதயங்கமமுமாயும்ரம்யாம்-அழகாயும் இருக்கிற,ரஹஸ்யரத்னாவளிம் - ரஹஸ்யரத்னாவளி என்னும் க்ரந்தத்தை, ஸந்த: -பெரியோர்கள் ரக்ஷந்து - ரக்ஷிக்கக்கடவர்கள்,

ஸ்ரீ:

ஆழ்வார்திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

பதினைந்தாவது ரஹஸ்யம்

ரஹஸ்யரத்னாவளீ ஹ்ருதயம்

[இது அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் பதினான்காவது. காஞ்சீபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது]

तत्त्वोपाय पुमर्थेषु अध्यात्मविदां विभावनीयेषु ।
स्वयमेव सूचयामो रहस्यरत्नावलीहृदयम् ॥

* தத்த்வோபாய புமர்த்தேஷு
அத்யாத்மவிதாம் விபாவநீயேஷு ।
ஸ்வயமேவ ஸூசயாமோ
ரஹஸ்யரத்நாவளீஹ்ருதயம் ॥

ஸதாசார்யோபதேஶ பூர்வகமாக ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே ஸமர்ப்பித பரனை முமுக்ஷுவினுடைய நிர்ப்பரத்வ அத்யவஸாயத்தைச் சொல்லுகிறது முதல் கவி.

இதில் ‘ ஒன்றே புகல் ’ என்றது

‘ नारस्विति सर्वपुंसां समूहः परिकीर्तितः ।
गतिरालम्बनं तस्य तेन नारायणः स्मृतः ॥ ’

---

* அத்யாத்மவிதாம் - வேதாந்த சாஸ்த்ரத்தை அறிந்தவர்களுக்கு, விபாவநீயேஷு-அனுஸந்திக்கத் தக்கவைகளான, தத்வோபாயபுமர்த்தேஷு-தத்வம் ஹிதம் புருஷார்த்தம் இவைகளில், ரஹஸ்யரத்நாவளீ ஹ்ருதயம் - ரஹஸ்ய ரத்நாவளீ என்னும் க்ரந்தத்தின் தாத்பர்யத்தை ஸ்வயமேவ - நாமே, ஸூசயாம: - ஸூசிப்பிக்கிறோம்.

1 (நாரஸ்த்விதி ஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகீர்த்தித: ।
கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத: ॥)

2 ' नारो नराणां संघातः तस्याहमयनं गतिः '

(நாரோ நராணாம் ஸங்காத: தஸ்யாஹமயநம் கதி:)

3 ' तदेतदतिदुःखानामास्पदे तु भवार्णवे ।
पततां कथ्यते सत्यं विष्णुरेकः परायणम्॥ '

(ததேததது துக்காநாம் ஆஸ்பதே து பவார்ணவே ।
பததாம் கத்யதே ஸத்யம் விஷ்ணுரேக: பராயணம் ॥)

4 ' कर्मणां परिपाकत्वादाविरिंचादमङ्गलम् ।
इति मत्वा विरक्तस्य वासुदेवः परागतिः ॥ '

(கர்மணாம் பரிபாகத்வாத் ஆவிரிஞ்சாதமங்களம் ।
இதி மத்வா விரக்தஸ்ய வாஸுதேவ: பரா கதி: ॥)

---

1 பாத்மோத்தரம் ஸர்வபும்ஸாம் - எல்லா ஜீவாத்மாக்களுடைய, ஸமூஹ: - கும்பல், நார: து இதி - நாரம் என்று, ப்ரகீர்த்தித: - சொல்லப்பட்டது, தஸ்ய - அந்தக் கும்பலுக்கு, கதி:- அடையவேண்டிய ப்ரயோஜனம், ஆலம்பனம் - ஆசரயிககவேண்டிய வஸது, தேந - ஆகையினால, நாராயண: இதி - நாராயணன் என்று, ஸ்ம்ருத: - சொல்லப்பட்டான்.

2 பாத்மோத்தரம். நராணாம் - ஜீவாத்மாக்களுடைய, ஸங்க: - கும்பல், நார: - நார: (என்று சொல்லபபடுகிறது), தஸ்ய -அந்தக்கும்பலுக்கு, அஹம் - நான், அயநம் கதி: - அடையவேண்டிய ப்ரயோஜனம். (தேந - அத்தால், நாராயண இதி - நாராயணன் என்று,முநிபி: ரிஷிகளினால். ஈரித: - சொல்லப்பட்டவனாக,அஸ்மி - ஆகிறேன்,)

3 அதிதுக்காநாம் - அதிகமான துக்கங்களுக்கு, ஆஸ்பதே-இடமான, பவார்ணவே - ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில், பததாம்- விழுகிறவர்களுக்கு, ஏக: விஷ்ணு: - விஷ்ணு ஒருவனே, பராயணம் - முக்யமாக அடையவேண்டிய ப்ரயோஜனம, ததேதத் - அப்படிப்பட்டஇது, ஸத்யம் - உண்மையாக, கத்யதே - சொல்லப்படுகிறது.

4 பாகவதம் - 11-19-18 கர்மணாம் - கர்மங்களுடைய, பரிபாகத்வாத் - பரிணாமமாக இருக்கிறபடியினால், ஆவிரிஞ்சாத் - ப்ரஹ்மா வரையிலும், அமங்களம் - பாபங்களைப் போக்கடிக்கக்கூடிய தன்மையாகிற சுபத்வம் இல்லாதவர்கள், இதி மத்வா - என்றுஎண்ணி, விரக்தஸ்ய - அவர்களிடத்தில் ஆசை இல்லாதவனுக்கு, வாஸுதேவ:- பகவானே,பராகதி: - அடையவேண்டிய ப்ரயோஜனம்.

1 ' ये च वेदविदो विप्रा ये चाध्यात्मविदो जनाः ।
ते वदन्ति महात्मानं कृष्णं धर्मं सनातनम् ॥ '

(யே ச வேதவிதோ விப்ராः யே சாத்யாத்மவிதோ ஜநாः ।
தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் ॥)

2 ' अमृतं साधनं साध्यं तं पश्यन्ति मनीषिणः '

(அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் தம் பஶ்யந்தி மநீஷிணः)

' यज्ञाख्य परमात्मान विष्णुं ध्यायन् न सीदति '

(யஜ்ஞாக்யம் பரமாத்மாநம் விஷ்ணும் த்யாயந் ந ஸீததி)

3 ' நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு '

இத்யாதிகளில் ஓர் அதிகாரிவிஶேஷத்திற்குப் பரமப்ராப்ய னான ஶ்ரியःபதி ஒருவனுமே வ்யாஜவிஶேஷ வஶீகரணீயமான ஸிததோபாயம் என்றபடி. 'உணர்ந்தவர்' என்றுப்ரதிபுத்தஅதிகாரிவிஶேஷத்தைச் சொல்லுகிறது.

4 ' प्राप्यस्य ब्रह्मणो रूपं प्राप्तिश्च प्रत्यगात्मनः ।
प्राप्त्युपायं फलं चैव तथा प्राप्ति विरोधि च ॥
वदन्ति सकलाः वेदाः सेतिहासपुराणकाः । '

(ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மநः ।

---

1 யே ச - எந்த, விப்ராः - ப்ராஹ்மணர்கள், வேதவிதः - வேதத்தைஅறிந்தவர்களோ,யேச-எவர்கள்,அத்யாத்மவிதோஜநாः-வேதாந்த சாஸ்த்ரத்தை அறிந்தவர்களோ, தே - அவர்கள், மஹாத்மாநம் - மஹாத்மாவாகிய, க்ருஷ்ணம்-க்ருஷ்ணனை, ஸநாதநம் - நித்யமான,தர்மம் - தர்மமென்று. வதந்தி - சொல்லுகிறார்கள்.

2 விஷ்ணுதர்மம் - 72 - 4 தம் - அந்தப் பகவானை, மநீஷிணः பெரியோர்கள், அம்ருதம் - அழிவில்லாத, ஸாதனம் - உபாயமாகவும், ஸாத்யம் - பலனாகவும், பச்யந்தி - பார்க்கிறார்கள், யஜ்ஞாக்யம் - யஜ்ஞம் என்று சொல்லப்படுகிற, பரமாத்மாநம் - பரமாத்மாவாகிய,விஷ்ணும் - விஷ்ணுவை, த்யாயந் - த்யானித்து, ந ஸீததி - துக்கப்படுவதில்லை.

3 திருவாய்-5-10-11

4 ஹாரீத ஸம்ஹிதை. ப்ராப்யஸ்ய - அடையவேண்டிய ப்ரயோஜனமாகிய, ப்ரஹ்மணः - ப்ரஹ்மத்தினுடைய, ரூபம்-ஸ்வரூபத்தையும், (ஸ்வபாவாதிகளையும்),ப்ராப்துः ச - அடைகிறவனாகிய - ப்ரத்யகாத்மநः - ஜீவாத்மாவினுடைய, (ஸ்வரூபாதிகளையும்), ப்ராப்த்யுபாயம் -

ப்ராப்த்யுபாயம் பலம் சைவ ததா ப்ராப்தி விரோதி ச ||
வதந்தி ஸகலா வேதா: ஸேதிஹாஸ புராணகா: |)
இத்யாதிகளிற் சொன்ன அர்த்த பஞ்சகத்தையும், சகார ஸமுச்சிதமான ஸம்பந்த விஶேஷத்தையும், ஸத்த்வநிஷ்ட்டருக்கு ஶ்ரோதவ்ய ஶேஷமற உரைக்கலாம்படி திருந்தக் கண்டவர்களை 'ப்ரதிபுத்தர்' என்கிறது.

ப்ராப்யமான ப்ரஹ்மமாவது—

1' विष्णोः सकाशादुद्भूतं जगत् तत्रैव च स्थितम्।
स्थितिसंयमकर्तासौ जगतोस्य जगच्च सः ॥'

(விஷ்ணோஸ் ஸகாஶாத் உத்பூதம் ஜகத் தத்ரைவ ச ஸ்திதம் | ஸ்திதி ஸம்யம கர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்ச ஸ: ||)

2 ' कृष्ण एव हि लोकानामुत्पत्तिरपि चाप्ययः '

(க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்திரபி சாப்யய :)

3 ' कृष्णस्य हि कृते भूतं इदं विश्वं चराचरं '

(க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விஶ்வம் சராசரம்) இத்யாதிகளிற்படியே ஸர்வகார்யைககாரணமாய், ஸத்யத்வ ஜ்ஞாநத்வாதி ஸ்வரூபநிரூபக தர்மங்களையுடையனுமாய், ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாணகுணகணமஹோததியாய், ஶுத்தாஶுத்தவிபூதித்வயத்திற்கும் ஏகஶேஷியாய்,

---

அடைவதற்கு உபாயத்தையும், பலம் - பலத்தையும், ததா-அப்படியே, ப்ராப்தி விரோதி ச - அடைவதற்குத் தடையாக நிற்கிற விரோதியையும், ஸேதிஹாஸ புராணகா: - இதிஹாஸ புராணாதிகளோடு கூடிய, ஸகலா: – எல்லா, வேதா: -வேதங்களும், வதந்தி - சொல்லுகின்றன.

1 விஷ்ணுபுராணம் – 1 - 8 - 17 விஷ்ணோ: ஸகாசாத் - விஷ்ணுவிடத்திலிருந்து, உத்பூதம் - உண்டானது, தத்ரைவ - அவ்விடத்திலே ஸ்திதம்-நிலைபெற்றிருக்கிறது, அஸௌ-இவன், ஸ்திதிஸம்யமகர்த்தா-ஸ்திதி நியமநம் இவற்றைச் செய்பவன், ஸ: - அவன், ஜகச்ச - அந்த லோகமாகவும் (இருக்கிறான்)

2 பார ஸபா - 38 - 26 க்ருஷ்ண ஏவ ஹி - க்ருஷ்ணன் ஒருவனே, லோகாநாம் - லோகங்களுக்கு, உத்பத்தி: - உண்டாகும் இடம், அபி ச அப்யய: -லயிக்கும் இடமும்.

3 பார - ஸபா - 41 - 23 இதம்- இந்த, பூதம் - ப்ராணியும், சராசரம்-ஸ்த்தாவரஜங்கமரூபமானவிச்வம்-எல்லாலோகமும் க்ருஷ்ணஸ்ய ஏவ ஹி- க்ருஷ்ணனுக்காகவே, க்ருதம் - ஏற்பட்டதன்றோ.

1 ‘ ஒருயிரேயோஉலகங்கட்கெல்லாம் ’
என்னும்படி ஸர்வாந்தராத்மாவாய், பர வ்யூஹாதி பஞ்சப்ரகார திவ்யமங்களவிக்ரஹயுக்தனாய், ஸர்வாவஸ்த்தையிலும்ஸலக்ஷ்மீகனாய், ஸர்வலோக ஶரண்யனாய், ஶரணாகதவத்ஸலனாய், ஸர்வ ப்ரகார நிரதிஶய போக்யனான நாராயணன்.

ப்ராப்தாவான ப்ரத்யகாத்மாவாவது—

2 ‘ पुमान् न देवो न नरो न पशुः न च पादपः ।
शरीराकृतिभेदास्तु भूपैते कर्मयोनयः ॥ ’

(புமாந் ந தேவோ ந நரோ ந பஶு : ந ச பாதப: ।
ஶரீராக்ருதி பேதாஸ்து பூபைதே கர்மயோநய: ॥)

1 ‘ नायं देवो न मर्त्यो वा न तिर्यक्स्थावरोपि वा ।
ज्ञानानन्दमयस्त्वात्मा शेषो हि परमात्मनः ॥ ’

(நாயம் தேவோ ந மர்த்யோவா ந திர்யக் ஸ்த்தாவரோபி வா ।
ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா ஶேஷோ ஹி பரமாத்மந : ॥)

இத்யாதிகளிற்படியே தேஹேந்த்ரியாதிவிலக்ஷணனாய், ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய், ஸ்வயம் ப்ரகாசனாய், ஸ்வஸ்மை பாஸமாநனாய், அணுவாய், ஜ்ஞாநாநந்தகுணகனாய, பரஶேஷதைக ரஸனாய், பராதீநஸ்வரூபஸ்த்திதி பரவருத்ததிகனாய், பரிபூர்ண பகவதநுபவ யோக்யனாய, ஸ்வரூபாநுகுண ஸவசசநத கைங்கர்யார்த்தியான ஜீவன்.

ப்ராப்த்யுபாயமாவது—

---

1 திருவாய் - 8-1-5

2 விஷ்ணு புராணம் - 2 - 13 - 98 புமாந் - ஜீவாத்மா, ந தேவ:- தேவனுமல்லன், ந நர: - மனிதனுமல்லன், ந பசு: - பசுவுமல்லன், ந ச பாதப: - மரமுமல்லன், பூப - ஓ ! அரசனே, ஏதே - இவைகள், கர்ம யோநய: - கர்மங்களைக்காரணமாகவுடைய, சரீராக்ருதிபேதா:- சரீரத்தின் ஆகாரபேதத்தால் உண்டானவை.

அயம் - இந்த ஜீவாத்மா, நதேவ:- தேவனுமல்லன், ந மர்த்யோ வா - மனுஷ்யனுமல்லன், ந திர்யக் - திர்யக்குமல்லன், ந ஸ்த்தாவரோபி வா - ஸ்த்தாவரமுமல்லன், ஆத்மா - ஆத்மாவானவன், ஜ்ஞாநாநந்தமய: - ஜ்ஞாநத்தையும், ஆநந்தத்தையும் ஸ்வரூபமாகவுடையவன், பரமாத்மந: - பரமாத்மாவிற்கு, சேஷ: - சேஷபூதனாயிருப்பவன்.

இஜ்ஜீவன் ஸம்ஸாரஸாகரத்தைக் கடந்து அக்கரைப்படுகைக்கு உபாயமாய், ஸாதநமாக ஸ்வபுத்தியாலே கோ(ரு)லும்படி ஶாஸ்த்ரோக்தமான அர்த்தம். இது ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும் இரண்டு படியாயிருக்கும். ஸித்தோபாயமாவது—நித்ய ஸித்தங்களான ஸ்வரூப குணங்களையுடையனாய், ஸர்வஜ்ஞனாகையாலே பரஹிதவேதியாய், ஸர்வஶக்தியாகையாலே ஸர்வாநிஷ்டநிவாரணக்ஷமனாய், ஸர்வ பூத நிஸர்க்க ஸுஹ்ருத்தாகையாலே பராநிஷ்டநிவாரணாதிகளில் ஸர்வதாபிமுகனாய்,

1 ‘ सर्वज्ञोपि हि विश्वेशः सदा कारुणिकोपि सन् ।
संसारतन्त्रवाहित्वात् रक्षापेक्षां प्रतीक्षते ॥’

(ஸர்வஜ்ஞோபி ஹி விஶ்வேஶ: ஸதாகாருணிகோபிஸந் ।
ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே ॥)

இத்யாதிகளிற்படியே அவஸரப்ரதீக்ஷனாய், வ்யாஜவிஶேஷவஶீகரணீயனாய், ஸங்கல்பித விஶேஷத்தில் ஸஹகாரிநிரபேக்ஷனாய், ஸ்வார்த்த ப்ரவ்ருத்தனாய், மோக்ஷ ப்ரதாநத்திற்கு அவ்யவஹித ஸங்கல்பாஶ்ரயனான ஶ்ரிய:பதி. ஸாத்யோபாயமாவது—புருஷனுக்குக் கர்த்தவ்யமாகச்சோதிதமான புருஷார்த்த ஸாதநம். மோக்ஷார்த்தமான ஸாத்யோபாயம் பக்தி என்றும், ப்ரபத்தி என்றும் இரண்டு படியாய் இருக்கும். பக்தி ரூபமான ஸாத்யோபாயம் கர்ம யோக ஜ்ஞாந யோக ஸம்ஸ்க்ருதாந்த: கரணஸாத்யமாய், அஷ்டாங்கயோக ஸம்ஜ்ஞிதமாய், வர்ணாதிநியதாதிகாரமாய், வர்ணாஶ்ரம தர்ம இதிகர்த்தவ்யதாகமாய், க்ருச்ச்ர ஸாத்யமாய், தைலதாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்ததி ரூபமாய், அஹரஹரப்யாஸாதேயாதிஶயமாய், ஆப்ரயாணம் அநுவர்த்தநீயமாய், ப்ராரப்தேதர புண்ய பாப நிவர்த்தகமாய், ஸ்வயத்ந ஸாத்ய அந்திமப்ரத்யய விஶேஷமாயிருக்கும்.

---

1 லக்ஷ்மீதந்த்ரம் - 17 - 78 விச்வேச: - பகவான், ஸர்வஜ்ஞ: அபி – எல்லாம் அறிந்தவனாயிருந்தபோதிலும், ஸதா - எப்பொழுதும், காருணிகோபி ஸந் – கருணையுடன் கூடியவனாய் இருந்தபோதிலும், ஸம்ஸாரதந்த்ர வாஹித்வாத் - ஸம்ஸாரத்தைநடத்துகிறவனாகையினாலே, ரக்ஷாபேக்ஷாம் - ரக்ஷிக்கவேண்டும் என்கிற அபேக்ஷையை, ப்ரதீக்ஷதே - எதிர் பார்க்கிறான்.

ப்ரபத்தி ரூபமான ஸாத்யோபாயம் மஹாவிஶ்வாஸாதி ஸம்ஸ்க்ருதாந்த:கரண ஸாத்யமாய், ஷடங்கயோக ஸம்ஜ்ஞித மாய், அநந்யோபாய ஸர்வாதிகாரமாய், ஆநுகூல்ய ஸங்கல் பாதி மாத்ர பரிகரமாய், ஸுகரமாய், ப்ரார்த்தநாந்வித ஸக்ருத் பரந்யாஸ ரூபமாய், அநாதேயாதிஶயமாய், ஆதேஹபாதம் ஸ்வரூப ஆவ்ருத்த்யாதி கர்த்தவ்யஶேஷ ரஹிதமாய், ப்ராரப்த கர்ம நிவர்த்தந க்ஷமமாய், ஸ்வப்ரயத்ந ஸாபேக்ஷ அந்திமப்ரத்யய அநபேக்ஷமாயிருக்கும். ஸாத்யோபாயத்தில் அநுபாயத்வாதி வ்யபதேசம் பரஸங்கல்ப ஸாபேக்ஷத்வாதி நிபந்தநம்.

இங்கு பலமாவது :—

ஸ்வாதிகாராநுகுண வஶீகரண விஶேஷத்தாலே உத்தர பூர்வாக அஶ்லேஷ விநாஶங்கள் பிறந்து, ஸதூல ஶரீர நிவ் ருத்தியுண்டாய் ஊர்த்வகதி விஶேஷததாலே உதகராந்தனாய், அர்ச்சிராதி மார்க்கத்தாலே ஆதிவாஹிகராலே அதிலங்கித த்ரி குணமண்டலனாய், அவதூத ஸூக்ஷ்ம ஶரீரனாய், அப்ராகருத தேஶவிஶேஷ பரவிஷ்டனாய், ஆவிர்ப்பூத ஸ்வரூபனாய், அபஹத பாபமதவாதி குணாஷ்டக விஶிஷ்டனானவனுடைய தேஶகால ஸ்வரூப பரிசசேதரஹித கைங்கர்ய பர்யந்தமான பரிபூர்ண பக வதநுபவாநந்தம்.

ப்ராப்தி விரோதியாவது—

பீஜாங்குர ந்யாயத்தாலே அநாதியாக ப்ரவ்ருத்தமான அக் ருத்யகரண கருத்யாகரண ப்ரவாஹத்தாலே உத்பந்நமாய், ப்ரா யஶ்சித்தம் பண்ணாதார்க்கு அநதிலங்கநீய பலமாய், ஆகமைக ஸமதிகம்யமாய், அநுத்பரேக்ஷணீய விபாகஸமயமாய், ஆபரஹ்ம ஸ்தம்ப பர்யந்தம் அபிவ்யாப்தமாய், அத்யந்த விஷம பரவாஹ மாய், அதிகோர நரகாதி அநர்த்தபரம்பரா ஹேதுவாய், சக்ரவத் பரிவர்த்தமாநமாய், ஆமோக்ஷமநுவ்ருத்தமான பகவந்நிக ரஹ ஸந்தாநமும், அதின் கார்ய காரண வர்ககமும்.

இங்கு ஸம்பந்தமாவது— ப்ராப்தாவான ஜீவாத்மாவிற்கு ப்ராப்ய னான பரமாத்மாவோடு உண்டான துவக்கு. இது ஆதேயத்வம் விதேயத்வம், அப்ருதக்ஸித்தத்வம், ஶேஷத்வம், ஶரீரதவம், வ்யாப்

யத்வம், ரக்ஷயத்வம், கிங்கரத்வம், போக்யத்வம், போக்த்ருத்வம் என்றிப்படி ஸாமாந்ய விசேஷாதி ரூபமாய்க் கொண்டுப்ரமாணங்களாலே விவிதமாக விபக்தமாயிருக்கும்.

இப்படி மோக்ஷசாஸ்த்ரஸித்தமான ப்ராப்யத்தையும், ப்ராப்தாவையும், ப்ராப்த்யுபாயத்தையும் ப்ராப்தியையும்,ப்ராப்தி ப்ரதிபந்தகத்தையும், ஸம்பந்தத்தையும் சாஸ்த்ர த்ருஷ்டியாலே ஸம்யக்காகக கண்டவர்களே 'உணர்ந்தவர்' என்கிறது.

'உணர்ந்தவர் ஒன்றே புகல் என்று காட்ட' என்று அந்வயம்.

1 'तत् विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनः तत्त्वदर्शिनः॥'

(தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா।
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநः தத்த்வதர்சிநः॥)

2 'ये संतुष्टाः श्रुतोपेताः सत्यार्जवदयापराः।
जितेन्द्रियाः जितक्रोधाः तानुपास्व च पृच्छ च॥'

(யேஸந்துஷ்டாः ச்ருதோபேதாः ஸத்யார்ஜவ தயாபராः।
ஜிதேந்த்ரியா ஜிதகரோதாः தாநுபாஸ்வச ப்ருச்ச ச॥)

இத்யாதிகளிற்படியே ஸம்யக் உபஸந்நரானார்க்கு ஸர்வாபேக்ஷிதார்த்தங்களையும்உபதேசிக்கவல்ல அநந்யப்ரயோஜநரான ஜ்ஞாநிகள் புகல் ஒன்றில்லாத நமக்கு

---

1 கீதை - 4 - 34 தத் - அந்த ஜீவாத்ம தத்த்வத்தை, ப்ரணிபாதேந - நன்றாக ஸேவிப்பதினாலும், பரிப்ரச்நேந - செவ்வையாகக் கேட்பதினாலும், ஸேவயா - சுச்ரூஷை செய்வதினாலும், வித்தி - அறிந்து கொள், தத்த்வ தர்சிநः - உண்மையை அறிந்த, ஜ்ஞாநிநः - ஜ்ஞாநிகள, தே - உனக்கு, ஜ்ஞாநம் - ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞாநத்தை,உபதேக்ஷ்யந்தி - உபதேசிக்கப்போகிறார்கள்.

2 யே - எவர்கள், ஸந்துஷ்டாः - (கிடைத்ததைக்கொண்டு) ஸந்தோஷத்தையுடையவர்களாயும, ச்ருதோபேதாः-(சாஸ்த்ரார்ததங்களை முறைபடி பெரியோர்களிடமிருந்து) கேட்டுத் தெரிந்து கொண்டவர்களாயும், ஸத்ய ஆர்ஜவ தயாபராः - ஸத்யம், கபடமில்லாமை, தயை இவைகளை யுடையவர்களாயும், ஜிதேந்ரியாः - இந்த்ரியங்களை ஜயித்தவர்களாயும், ஜிதகரோதாः - கோபத்தை ஜயித்தவர்களாயும் (இருக்கிறார்களோ), தாந் - அவர்களை, உபாஸ்வ - முறைப்படி ஆச்ரயி, ப்ருச்ச - (கேட்கவேண்டிய அர்த்தங்களைக்) கேட்டுக்கொள்.

1 (ஸர்வயோக்யமநாயாஸம் அப்ரமாதமநூபமம் ।
ப்ரபந்நார்த்திஹரம் விஷ்ணும் ஶரணம் கந்துமர்ஹஸி ॥)

இத்யாதிகளிற்படியே நிரபாய ஸாத்யோபாய விஶேஷத்தாலே வஶீகரணீயமான ஸித்தோபாயத்தை வெளியிட என்றபடி. இத்தாலே நானும் என்னை ரக்ஷித்துக்கொள்ள மாட்டேன், வேறு எனக்கு ரக்ஷகரில்லை, மேலே என்னுடைய வ்யாபார விஶேஷத்தாலே அபேக்ஷையற தேவரீரே என்னை ரக்ஷித்தருளவேணும் என்கிற பரந்யாஸரூப வஶீகரண விஶேஷாநுஷ்ட்டாநமும் பலிதம்.

அங்ஙனன்றிக்கே 'ஒன்றே புகல் என்றுஉணர்ந்தவர்' என்று ஆசார்யர்களை விஶேஷிக்கிறதாகவுமாம். அப்போது 'காட்ட' என்றது

2 'तव भरोहमकार्षि हि धार्मिकैः'

(தவ பரோஹமகார்ஷி ஹி தார்மிகைः)

இத்யாதிகளிற்படியே ஸர்வஶேஷி திருவடிகளிலே

3' आत्मात्मीयं च यत्किंचित् दुर्भरं दुस्त्यजं मम ।
तत् सर्वं तव विन्यस्तं शुभयोः पादपद्मयोः ॥ '

---

1 ஸாவயோக்யம் - எல்லோராலும் ஆச்ரயிக்கத்தக்கவனுயும், அநாயாஸம் - ஆச்ரயிப்பதில் ச்ரமம் ஒன்றும் இல்லாதவனுயும், அப்ரமாதம் - அஜாக்கிரதை முதலிய தோஷங்கள் இல்லாதவனுயும், அநூபமம் - தனக்கு ஸத்ருசனுனவன் ஒருவனும் இல்லாதவனுயும், ப்ரபந்நார்த்திஹரம் - ஆச்ரிதர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கக்கூடியவனுயும்இருக்கிற,விஷ்ணும் - விஷ்ணுவை,சரணம்-சரணமாக, கந்தும் - அடைவதற்கு, அர்ஹஸி - யோக்கியனுகிருய்,

2 ஸ்ரீரங்கராஜஸ்தவம் - 2 - 102 அஹம் - நான், தவ - உமக்கு, பரः - ரக்ஷிக்க வேண்டிய பரமாக, தார்மிகைः - தர்மிஷ்டர்களினுல் (ஆசார்யர்களினுல்),அகார்ஷி - செய்யப்பட்டேன்.

3 ஆத்மா - நானும், ஆத்மீயம் - என்னுடையதாயிருக்கிற, யத்கிஞ்சித்-எது, மம-எனக்கு, துர்ப்பரம் - ரக்ஷிக்க முடியாததும், துஸ்த்யஜம் - விடமுடியாததாயும் இருக்கிறதோ, தத் ஸர்வம் - அவை எல்லாமும், தவ - உம்முடைய, சுபயோः - மங்கள கரங்களான, பாத பத்மயோः- திருவடித் தாமரைகளில், விந்யஸ்தம், ஸமர்ப்பிக்கப்பட்டது.

(ஆத்மாத்மீயம் ச யத்கிஞ்சித் துர்ப்பரம் துஸ்த்யஜம் மம ।
தத் ஸர்வம் தவ விந்யஸ்தம் ஶரணயோ: பாதபத்மயோ: ॥)

என்று ஆத்மீயரான நம்மை அநந்ய ரக்ஷயத்வேந ஸமர்ப்பிக்க என்றபடி.

' திருவருளால் ' எனறது

1 ' स तं निपतितं भूमौ शरण्यः शरणागतं ।
वधार्हमपि काकुत्स्थः कृपया पर्यपालयत् ॥ '

(ஸ தம் நிபதிதம் பூமௌ ஶரண்ய; ஶரணாகதம் ।
வதார்ஹமபி காகுத்ஸ்த்த: க்ருபயா பர்யபாலயத் ॥)

2 ' कृपया केवलमात्मसात्कुरु '

(க்ருபயா கேவலமாத்மஸாத்குரு)

இத்யாதிகளிற்படியே ப்ரத்யுபகாராதி நிரபேக்ஷ பரம க்ருபை யாலே என்றபடி.

3' यामालम्ब्य सुखेनेमं दुस्तरं हि गुणोदधिं ।
निस्तरन्त्यचिरेणैव व्यक्तध्यानपरायणाः ॥'

(யாமாலம்ப்ய ஸுகேநேமம் துஸ்தரம் ஹி குணோததிம் ।
நிஸ்தரந்த்யசிரேணைவ வ்யக்த த்யாந பராயணா: ॥)

---

1 ராமா - ஸுந்தர - 38-34. சரண்ய: - சரண்யராகிய,ஸ:-அந்த, காகுத்ஸ்த்த: - ககுத்ஸ்தவம்சத்தில் அவதரித்த ராமன்,பூமௌ - பூமியில்,நிபதிதம்-விழுந்தவனுயும், சரணாகதம் - சரணம் அடைந்தவனுயும் இருக்கிற,தம் - அந்தக் காகத்தை, வதார்ஹமபி – கொல்லத் தகுந்தவனுய் இருந்தபோதிலும் க்ருபயா - க்ருபையினுல், பர்யபாலயத் - நன்ருக ரக்ஷித்தார்.

2 ஆள.ஸ்தோ - 48. க்ருபயா கேவலம் - (உம்முடைய) க்ருபையினுலேயே, ஆத்மஸாத்குரு-உமக்கு அதீனமாகச் செய்துகொள்ளும்.

3 ஸ்ரீ ஸாத்வதம் - 12 - 34. வ்யக்த த்யாந பராயணா: - வ்யக்தம் என்று சொல்லப்படுகிற திவ்ய மங்கள விக்ரஹத்தை த்யானம் செய்து கொண்டிருக்குமவர்கள், யாம் - எந்த லக்ஷ்மியை, ஆலம்ப்ய - ஆச்ரயித்து, துஸ்தரம் - மற்ற ஒருவரால் தாண்ட முடியாத, இமம் - இந்த, குணோததிம்-குணங்களாகிற ஸமுத்திரத்தை,அதாவது குணங்களுக்கு ஆதாரமான ப்ரக்ருதியாகிற ஸமுத்திரத்தை,ஸுகேந - ஸுகமாக, நிஸ்தரந்தி – தாண்டுகிருர்களோ.

என்கிற ந்யாயத்தாலே அவிளம்பித அநாயாஸமாய் பலஸித்தி யுண்டாம்படி ஆஶ்ரித ரக்ஷணத்திலே ஆத்மவல்லபனை அபி முகனாக்குகிற அகில ஜகந்மாதாவினுடைய அநபாய க்ருபை யாலே என்னவுமாம்.

அன்றே அடைக்கலம் கொண்ட' என்றது

1 ' अनेनैव तु मन्त्रेण स्वात्मानं मयि निक्षिपेत् ।
मयि निक्षिप्तकर्तव्यः कृतकृत्यो भविष्यति ॥ '

(அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் ।
மயி நிக்ஷிப்த கர்த்தவ்ய: க்ருதக்ருத்யோ பவிஷ்யதி ॥)என்றும்,

2 ' दुराचारोपि सर्वाशी कृतघ्नो नास्तिकः पुरा ।
समाश्रयेदादिदेवं श्रद्धया शरणं यदि ॥
निर्दोषं विद्धि तं जन्तुं प्रभावात् परमात्मनः । '

(துராசாரோபி ஸர்வாஶீ க்ருதக்நோ நாஸ்திக: புரா ।
ஸமாஶ்ரயேத் ஆதி தேவம் ஶ்ரத்தயா ஶரணம் யதி ॥
நிர்த்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: ।)
என்றும்,

' त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गतः '

---

1 ஸாத்யகி தந்த்ரம் அநேநஏவதுமந்த்ரேண - இந்த மந்திரத்தினாலேயே, ஸ்வாத்மாநம் - தன்னுடைய ஆத்மாவை, மயி - என்னிடத்தில், நிக்ஷிபேத் - ஸமர்ப்பிக்கவேண்டும்,மயி - என்னிடத்தில், நிக்ஷிப்த கர்த்தவ்ய: - ஸமர்ப்பிக்கப்பட்ட பரத்தையுடையவனானவன்,க்ருதக்ருத்ய: - இனிச் செய்யவேண்டியகார்யத்தைச் செய்தவனாக,பவிஷ்யதி - ஆகப் போகிறான்.

2 ஸாத்வதம் 16-23. புரா - (பகவானை ஆச்ரயிப்பதற்கு) முன்னால், துராசாரோபி - கெட்ட அநுஷ்டானத்தை யுடையவனாயும், ஸர்வாசீ - (சாப்பிடத் தகாத) எல்லாம் சாப்பிடுகிறவனாயும், க்ருதக்ந: - பண்ணினதை உபகாரத்தை மறந்தவனாயும், நாஸ்திக: - தெய்வம் ஒன்று இல்லை என்று சொல்லுகிறவனாயும் இருந்தபோதிலும், ஆதிதேவம் - தேவதைகளுக்கு எல்லாம் முதல் தேவதையாகிய பகவானை, ச்ரத்தயா - மஹா விச்வாஸத்துடன், ஸமாச்ரயேத்யதி - ஆச்ரயிப்பானேயாகில், தம் - அந்த, ஜந்தும் - ப்ராணியை, பரமாத்மந: - பரமாத்மாவினுடைய, ப்ரபாவாத் - மஹிமையினால், நிர்த்தோஷம்- ஒரு தோஷமும் இல்லாதவனாக, வித்தி - அறி.

1(த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:)
என்றும்,

2 ' आनयैनं हरिश्रेष्ठ दत्तमस्याभयं मया '

(ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா)

என்றும் சொல்லுகிறபடியே பரஸமர்ப்பண ஸமநந்தரம் நமக்கு ஸ்வரக்ஷணார்த்த கர்த்தவ்ய ஶேஷம் இல்லாதபடி பரஸ்வீகாரம் பண்ணினவர் என்றபடி.

' நம் அத்திகிரித் திருமால் ' என்றது

3 ' वेगवत्युत्तरे तीरे पुण्यकोट्यां हरिः स्वयम् ।
वरदस्सर्वभूतानां अद्यापि परिदृश्यते ॥ '

(வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ்ஸ்வயம் ।
வரதஸ் ஸர்வபூதாநாம் அத்யாபி பரித்ருஶ்யதே ॥)

4 ' நிகரில்புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னை யாள்வானே! '

இத்யாதிகளிற்படியே ஆஶ்ரிதஸம்ரக்ஷணோபயுக்தஸௌஶீல்ய வாத்ஸல்ய ஸ்வாமித்வவிஶிஷ்டனாய் நண்ணினவர்களுக்கு விண்ணுலகம் தர விரைந்து ரக்ஷாபேக்ஷா ப்ரதீக்ஷனாய் மண்ணுலகில் வந்து பலப்ரதாநோந்முகனாய் நிற்கிற பெருமாள் என்றபடி.

' இன்றே இசையில் இணையடி சேர்ப்பர் ' என்றது

---

1 ராமா யுத்த - 17 -16. புத்ராந் ச - பிள்ளைகளையும், தாராந்ச - பத்தினிகளையும், த்யக்த்வா - விட்டுவிட்டு, ராகவம் - ஸ்ரீ ராமனை, சரணம் - சரணமாக, கத - அடைந்தேன்.

2 ராமா - யுத்த - 18--34. ஹரிச்ரேஷ்ட - வானரச்ரேஷ்டனான ஓ! ஸுக்ரீவனே, அஸ்ய - இவனுக்கு, மயா - என்னால், அபயம் - அபயமானது, தத்தம் - கொடுக்கப்பட்டது. ஏநம் - இவனை, ஆநய - அழைத்துக் கொண்டுவா. 3 ஹஸ்திகிரிமாஹாத்ம்யம்15-16 வேகவத்யுத்தரே தீரே-வேகவதிஎன்னும் நதியின்வடகரையில், புண்ய கோட்யாம் - புண்யகோடி விமானத்தில், ஹரி: - பகவான், ஸ்வயம் - தானே, ஸர்வ பூதாநாம் - எல்லா ப்ராணிகளுக்கும், வரத: - வரத்தைக் கொடுக்கிறவராக, அத்யாபி - இப்பொழுதும், பரித்ருச்யதே - எல்லோராலும் காணப்படுகிறார்.

4. திருவாய் - 6--10--10

1 'क्वाहमत्यन्त दुर्बुद्धिः क्व चात्महितवीक्षणम् ।
यत् हितं मम देवेश तदाज्ञापय माधव ॥
त्वां प्रपन्नोस्मि दासस्ते नान्या क्वापि गतिः मम ।
अद्यैव किंकरीकृत्य निधेहि त्वत्पदाम्बुजे ॥ '

(க்வாஹம்அத்யந்த துர்புத்தி: க்வ சாத்மஹிதவீக்ஷணம் ।
யத் ஹிதம் மம தேவேச ததாஜ்ஞாபய மாதவ ॥
த்வாம் ப்ரபந்நோஸ்மி தாஸஸ் தே நாந்யா க்வாபி கதிர் மம ।
அத்யைவ கிங்கரீக்ருத்ய நிதேஹி த்வத் பதாம்புஜே ॥
இத்யாதிகளிற்படியே பரம புருஷார்த்தைக மநஸ்கரா மளவில் அப்போதே கொடு உலகு காட்டாதே கொழுஞ்சோதி உயரத்துக்கூட்டரிய திருவடி கூட்டி அருள்வர் என்றபடி.

'இனிப் பிறவோம்' என்றது

2 'கண்டு கேட்டு'

இத்யாதிகளிற்படியே பராவர புருஷார்த்த விவேகத்தாலே ஐஶ்வர்ய கைவல்யங்களை ஒழித்த நாம் ஏதேனுமொரு பகவத்க்ஷேத்ர வாஸ கைங்கர்யாதி ஸங்கத்தாலே

3 'இங்கே திரிந்தேற்கு இழுக்குற்று என்'

என்று த்வரையற்று இருக்குமளவிலும் சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்

---

1. ஜிதந்தா ஸ்தோத்திரம் 1- 18- அத்யந்த துர்புத்தி: - மிகவும் கெட்ட புத்தியையுடைய, அஹம் - நான், க்வ - எங்கே, ஆத்மஹித வீக்ஷணம் - என்னுடைய ஹிதத்தை நானேயோசித்துக் கொள்வது என்பது, க்வ - எங்கே, அதாவது எனக்கும் அதற்கும் வெகு தூரம் என்றபடி, தேவேச - தேவதைகளுக் கெல்லாம் ஈசுவரனாகிய, மாதவ - ச்ரிய:பதியாகிய பகவானே ! மம - எனக்கு, யத் - எது, ஹிதம் - நன்மையைக் கொடுக்கக் கூடியதோ, தத் - அதை, ஆஜ்ஞாபய - உத்தரவு செய்யும், த்வாம் - உமை, ப்ரபந்ந: - ஆச்ரயித்தவனாயும், தே - உமக்கு, தாஸ: - தாஸனாகவும், அஸ்மி - ஆகிறேன், மம - எனக்கு. க்வாபி - ஓர் இடத்திலும், அந்யா - வேறு, கதி: - கதி, ந - இல்லை, அத்யைவ - இப்போதே, கிங்கரீக்ருத்ய - கிங்கரனாகச் செய்து, த்வத் பதாம்புஜே - உம்முடைய திருவடித் தாமரையில், நிதேஹி - வைத்துக்கொள்ளும்.

2 திருவாய்-4-9-10 3 திருவாய்--8- 10 -4

1' त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन '

(த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந)

2 'கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்' இத்யாதிகளிற்படியே இனி எனக்கு ஒரு ஶரீரபரிக்ரஹம் உண்டாகாதபடி ப்ராரப்தகர்மவிஶேஷத்தையும் ஒரு விரகாலே கழித்து ரக்ஷித்தருளுவர் என்றபடி.

'நன்றே வருவதெல்லாம்' என்றது

இத்தேஹம் விடுமளவும்

3 'भोगैः पुण्यक्षयं तथा '

(போகைः புண்யக்ஷயம் ததா)

என்கிறபடியே அநுகூலங்கள் வருமவை ப்ராரப்த புண்யரூபங்கள நிவ்ருத்தியாகையாலும், ப்ரதிகூலங்கள் வருமவை

4 'हरिः दुःखानि भक्तेभ्यो हितबुद्ध्या करोति हि।
शस्त्र क्षाराग्नि कर्माणि स्वपुत्राय यथा पिता ॥ '

(ஹரிர்துக்காநி பக்தேப்யோ ஹிதபுத்யா கரோதிஹி।
ஶஸ்த்ர க்ஷாராக்நி கர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா॥)

5 'यस्यानुग्रहमिच्छामि तस्य वित्तं हराम्यहम् '

(யஸ்யாநுக்ரஹம் இச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம்)

---

1. கீதை - 4 -9 அர்ஜுன, ஸ: - அவன், தேஹம் - இந்தத் தேஹத்தை, த்யக்த்வா - விட்டுவிட்டு, புந: - மறுபடியும், ஜந்ம பிறப்பை, நைதி - அடைவதில்லை, மாம் - என்னை, ஏதி - அடைகிறான்.

2 திருவாய் 3 - 9 - 5

3 போகை: - ஸுகத்தின் அனுபவங்களினால் புண்யக்ஷயம் - புண்யகர்மத்தின் நாசத்தையும்.

4 ஹரி: - பகவான், பக்தேப்ய: - பக்தர்களுக்கு, துக்காநி - துக்கங்களை, பிதா - தகப்பனார், ஸ்வபுத்ராய - தன்னுடைய பிள்ளைக்கு, சஸ்த்ர க்ஷாராக்நி கர்மாணி யதா-ஆயுதம் க்ஷாரம், அக்னி, முதலியவைகளினால்செயயும் கார்யங்களைப்போல, ஹிதபுத்யா - நல்லது என்கிற எண்ணத்தினால், கரோதி - செய்கிறான்

5 பாகவதம். யஸ்ய - எவனுக்கு, அநுக்ரஹம் - அநுக்ரஹத்தை, இச்சாமி - விரும்புகிறேனோ, தஸ்ய - அவனுடைய, வித்தம் - பணத்தை. அஹம் - நான், ஹராமி - அபஹரிக்கிறேன்.

இத்யாதிகளிற்படியே ப்ராரப்த துஷ்க்ருதத்தில் சிகை தீ(ர்த்த)ருகிறபடியாலும்

1 ' रत्नपर्वतमारुह्य यथा रत्नं नरोमुने ।
सत्त्वानुरूपमादत्ते तथा कृष्णात् मनोरथान् ॥ '
2 ' संकल्पादेव भगवान् तत्त्वतो भावितात्मनां ।
वृतान्तमखिलं कालं सेचयत्यमृतेन तु ॥ '
(ரத்நபர்வதமாருஹ்ய யதா ரத்நம் நரோ முநே|
ஸத்த்வாநுரூபமாதத்தே ததா க்ருஷ்ணாத் மநோரதாந்||)
(ஸங்கல்பாதேவ பகவாந் தத்த்வதோ பாவிதாத்மநாம்|
வ்ருதாந்தமகிலம் காலம் ஸேசயத்யம்ருதேந து ||)

இத்யாதிகளிற்படியே கைங்கர்ய மநோரதத்துக்குப் பங்கம் வாராமையாலும் யாவச்சரீரபாதம் நமக்கு வருமவை எல்லாம் ப்ரியஹித விஶேஷங்கள் என்று ப்ரீதராகிறபடி.

3 ' प्रियमितरदथापि वा यद्यथा वितरसि वरद प्रभो त्वं हि मे ।
तदनुभवनमेव युक्तं हि मे त्वयि निहित भरोद्य सोऽहं यतः ॥ '
(ப்ரியமிதரததாபி வா யத் யதா
விதரஸி வரத ப்ரபோ த்வம ஹி மே |
ததநுபவநமேவ யுக்தம் ஹி மே
த்வயி நிஹிதபரோத்ய ஸோஹம் யத: ||

என்றார்களிறே.

---

1 முநே - ஓ ! ரிஷியே ! நர :- மனிதன், யதா - எப்படி, ரத்ன பர்வதம் - ரத்னமயமான மலையை, ஆருஹ்ய - ஏறி, ரத்னம் - ரத்னத்தை, ஸத்த்வாநுரூபம் - தன்னுடைய சக்திக்குத் தகுந்தபடி, ஆதத்தே - எடுத்துக் கொள்ளுகிறானோ, ததா - அப்படியே, கருஷ்ணாத் - க்ருஷ்ணனிடத்தில் இருந்து, மநோரதாந் - இஷ்டங்களை, ஆததே - பெற்றுக் கொள்ளுகிறான். 2 ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதை பகவாந் - பகவானானவர், தத்த்வத: - உள்ளபடியே, பாவிதாத்மநாம் - தனை தியானம் செய்பவர்களுக்கு, ஸங்கல்பாதேவ தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே, வ்ருதாந்தம் - இவனால்ப்ரார்த்திக்கப்பட்டிருக்கும் வரையிலான, அகிலம் - எல்லா, காலம் - காலத்தையும், அமருதேந - அமருதத்தினால, ஸேசயதி - நனைக்கிறார்.

* வரதரராஜஸ்தவம-9 விபோ - ப்ரபுவாகிய, வரத - வரதனே த்வம்- நீர், மே எனக்கு, பரியம்- இஷ்டத்தையாவது, இதரத்-மற்றொன்றாகிய துக்கத்தையாவது, யத் - எதை, யதா - எப்படி, விதரஸி- கொ

'நமக்குப் பரம் ஒன்றிலதே' என்றது ஸர்வஜ்ஞனுமாய் ஸர்வஶக்தனுமாய் பரம காருணிகனுமாய் பரம ஶேஷியுமான பெருமாள் பரஸ்வீகாரம் பண்ணி தேஹயாத்ரையை நம்முடைய கர்மாநுகுணமாக நடத்துகையாலும், ஆத்ம யாத்ரையைத் தம்முடைய ப்ரதாநரூப க்ருபாநுகுணமாக நிர்வஹிக்கையாலும்

1 'जनार्दनं प्रणिपतितो नसीदति'

2 'न वासुदेव भक्तानामशुभं विद्यते क्वचित् ।
न क्रोधो न च मात्सर्यं न लोभो नाशुभा मतिः ॥
भवन्ति कृत पुण्यानां भक्तानां पुरुषोत्तमे'

(ஜநார்த்தநம் ப்ரணிபதிதோ ந ஸீததி)
(நவாஸுதேவபக்தாநாம் அஶுபம் வித்யதே க்வசித்।
ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம் ந லோபோ நாஶுபாமதி:॥)
பவந்தி க்ருதபுண்யாநாம் பக்தாநாம் புருஷோத்தமே)

இத்யாதிகளிற்படியே புத்தி பூர்வமாக அபாயங்களில் இழிய ஒட்டாமையாலும், ப்ரவ்ருத்தங்களாகில் ஏதேனும் ஒரு கண்ணழிவு செய்து விடுகையாலும், பராவர தத்த்வ விவேகத்தாலே பரதந்த்ரகர்த்ருத்வ ப்ரதிபத்தியையுடையவருமாய ஸகிஞ்சந அகிஞ்சந அதிகாரி விவேகத்தாலே ந்யஸ்த பரருமான நமக்கு ஆத்ம ரக்ஷார்த்தமாக இனி ஒரு கர்த்தவ்யஶேஷம் இல்லை என்றபடி.

டுக்கிறுயோ, மே - எனக்கு, ததநுபவநமேவ - அதை அனுபவிப்பதே, யுக்தம் ஹி - உசிதமன்றோ, யத. - எந்தக்காரணத்தி தல், ஸோஹம் - அப்படிப்பட்ட நான், த்வயி - உம்மிடத்தில், நிஹிதபர: - வைக்கப்பட்டதான பரத்தையுடையவனாக, அஸமி - ஆகிறேனோ.

1 ஜநார்த்தநம் - பகவானை, ப்ரணிபதித: - ஆச்ரயித்தவன், ந ஸீததி - துக்கப்படுவதில்லை.

2 பாரதம்—ஆநுசா-254 - 133,135வாஸுதேவபக்தாநாம் - பகவானிடத்தில் பக்தி செய்பவர்களுக்கு, க்வசித் - ஓர் இடத்திலும், அசுபம் - அமங்களம், ந வித்யதே - காணப்படுவதில்லை, க்ருத புண்யாநாம்-புண்யம் செய்தவர்களாயும், புருஷோத்தமே - பகவானிடத்தில், பக்தாநாம் - பக்தர்களாயும் இருப்பவர்களுக்கு, க்ரோத: - கோபமானது,ந-இல்லை, மாத்ஸர்யம் - த்வேஷமானது, ந, லோப:- லோபமானது, ந - இல்லை

'இனிப் பிறவோம்' என்றும், 'நமக்கு' என்றும் பஹு வசநப்ரயோகத்தாலே

1 'पशुः मनुष्यः पक्षी वा ये च वैष्णवसंश्रयाः ।
तेनैव ते प्रयास्यन्ति तद्विष्णोः परमं पदम् ॥

(பஶுர்மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா:।
தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ: பரமம்பதம் ॥)

இத்யாதிகளிற்படியே அநுபந்தி ரக்ஷணம் இங்கே ஸூசித மாகிறது.

(1) 'ஒரு ஜீவனுக்கு ஒரு ஜீவன் தஞ்சமல்லன' என்றது

2 'स्वयं मृत्पिण्डभूतस्य परतन्त्रस्य देहिनः ।
स्वरक्षणेऽप्यशक्तस्य को हेतुः पररक्षणे ॥'

(ஸ்வயம் ம்ருத்பிண்டபூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந:।
ஸ்வரக்ஷணேப்யஶக்தஸ்ய கோ ஹேது: பரரக்ஷணே ॥)

3 'ब्रह्माणं शितिकण्ठं च याश्चान्या देवताः स्मृताः ।
प्रतिबुद्धाः न सेवन्ते यस्मात् परिमितं फलम् ॥'

அசுபா மதி:- அமங்களமான புத்தி, ந - இல்லை, பவந்தி- (நல்ல குணங்கள்) உண்டாகின்றன, அன்றிக்கே ந ஸமாஸமாய் கோபமில்லாமை, த்வேஷமில்லாமை முதலியவை உண்டாகின்றன என்றபடியாகவுமாம்.

1. சாண்டில்யஸ்ம்ருதி - 1-15. பசு: - பசுவானாலும், மனுஷ்ய:- மனிதனானாலும், பக்ஷீவா - பக்ஷியானாலும், யே - எவைகள், வைஷ்ணவ ஸம்ச்ரயா:- வைஷ்ணவர்களை ஆச்ரயித்தவைகளோ, தே - அவைகள், தேநைவ - அந்த வைஷ்ணவர்களை ஆச்ரயித்ததினாலேயே, விஷ்ணோ:- பகவானுடைய, தத் - அந்த, பரமம் பதம் - பரமபதத்தை, ப்ரயாஸ்யந்தி - அடைகின்றன.

2. இதிஹாஸ ஸமு --17 - 63 ஸ்வயம் - தான், ம்ருத்பிண்ட பூதஸ்ய - மண்ணுருண்டைபோல் இருப்பவனாயும், பரதந்த்ரஸ்ய - பராதீனனாயும், ஸ்வரக்ஷணேபி - தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதிலும், அசக்தஸ்ய - சக்தி இல்லாதவனாயும் இருக்கிற, தேஹிந: - ஜீவாத்மாவிற்கு, பரரக்ஷணே - அயலானைக் காப்பாற்றுவதில், ஹேது:- காரணம், க: - ஏது?(இல்லை என்றபடி)

3. பார-சாந்தி - 350- 36 ப்ரஹ்மாணம்- ப்ரஹ்மாவையும், சிதிகண்டம் ச - ருத்திரனையும், யா: - எவர்கள், அந்யா: - இதரர்களான தேவதைகள், ஸ்ம்ருதா: - சொல்லப்பட்டவர்களோ (அவர்களையும்), ப்ரதி புத்தா: - நல்ல ஜ்ஞானமுடையவர்கள், நஸேவந்தே - ஸேவிப்ப

(ப்ரஹ்மாணம் ஶிதிகண்டம் ச யாஶ்சாந்யா தேவதா:ஸ்ம்ருதா:।
ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்॥)

1 ' अनन्यज्ञानविरहात् अशुद्धा देवता गताः ।
ब्रह्मेशानादयः सर्वे स्वस्वातन्त्र्येण गर्हिताः ॥ '

(அநந்ய ஜ்ஞாநவிரஹாத் அஶுத்தா தேவதாகணா: ।
ப்ரஹ்மேஶாநாதய: ஸர்வே ஸ்வஸ்வாதந்த்ர்யேண கர்ஹிதா:॥

' अन्ये तु पुरुषव्याघ्र चेतसो ये व्यपाश्रयाः ।
अशुद्धास्ते समस्ताः स्युः देवाद्याः कर्मयोनयः ॥ '

(அந்யே து புருஷவ்யாக்ர சேதஸோ யே வ்யபாஶ்ரயா: ।
அஶுத்தாஸ்தே ஸமஸ்தா: ஸ்யு: தேவாத்யா: கர்மயோநயா: ।)

2 ' आब्रह्म स्तम्बपर्यन्ता जगदन्तर्व्यवस्थिताः ।
प्राणिनः कर्मजनित संसार वशवर्तिनः॥ '

(ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்த்திதா:।
ப்ராணிந: கர்மஜநித ஸம்ஸாரவஶவர்த்திந:॥)

यतस्ततो न ते ध्याने ध्यानिनामुपकारकाः ।
अविद्यान्तर्गताः सर्वे ते हि संसार गोचराः ॥ '

(யதஸ்ததோ ந தே த்யாநே த்யாநிநாமுபகாரகா: ।
அவித்யாந்தர்கதா: ஸர்வே தே ஹி ஸம்ஸார கோசரா: ॥)

தில்லை, யஸ்மாத் - எந்தக்காரணத்தினால், (அவர்களால் கொடுக்கப் படுகிற) பலம் - ப்ரயோஜனம், பரிமிதம் - அல்பமாயிருக்கிறதோ.

1. தேவதாகதா: - தேவதைகளாய் இருக்கையை அடைந்திருக்கிற, ப்ரஹ்மேசாநாதய: - ப்ரஹ்மா, ருத்திரன்முதலிய, ஸர்வே- எல்லோரும், அநந்யஜ்ஞாந விரஹாத் -பகவானைத் தவிர வேறு ஒரு அடையவேண்டிய ப்ரயோஜனம் இல்லை என்கிற ஜ்ஞாநம் இல்லாமையினால், அசுத்தா:- அபரிசுத்தர்கள், ஸ்வ ஸ்வாதந்த்ர்யேண-தாங்கள் ஸ்வதந்த்ரர்கள் என்று எண்ணி இருப்பதினால், கர்ஹிதா:- நிந்திக்கப் பட்டவர்கள், புருஷவ்யாக்ர – புருஷச்ரேஷ்டனே, அந்யே– மற்றவர்களான, யே - எவர்கள், சேதஸ :- மனத்திற்கு, வ்யபாச்ரயா: - த்யானத்திற்கு விஷயமாக இருக்கிறார்களோ, தே - அந்த, கர்மயோநய: - கர்மத்தைக் காரணமாகவுடைய, தேவாத்யா: - தேவதை முதலிய, ஸமஸ்தா: - எல்லோரும், அசுத்தா: - அபரிசுத்தர்களாக, ஸ்யு: - ஆவார்கள்.

2 விஷ்ணுதர்மம்-104 -33யத:-எந்தக்காரணத்தினால்,ஆப்ரஹ்ம-ப்ரஹ்மாமுதல், ஸ்தம்ப பர்யந்தா.-புழுவரையிலான, ஜகதந்தர் வ்யவஸ்திதா:- லோகங்களுக்கு உள்ளடங்கிய ப்ராணிகள், கர்மஜநித - கர்மத்தினால்

पश्चादुद्भूतबोधाश्च ध्याने नैवोपकारकाः ।
नैसर्गिको न वै बोधस्तेषामप्यन्यतो यतः ॥
(பஶ்சாதுத்பூதபோதாஶ்ச த்யாநே நைவோபகாரக: ।
நைஸர்கிகோ ந வை போதஸ்தேஷாமப்யந்யதோ யத ॥)

1 ' पशवः पाशिताः पूर्वं परमेण स्वलीलया ।
तेनैव मोचनीयास्ते नान्यैः मोचयितुं क्षमाः ॥
(பஶவ: பாஶிதா: பூர்வம் பரமேண ஸ்வலீலயா ।
தேநைவ மோசநீயாஸ்தே நாந்யை: மோசயிதும்க்ஷமா: ॥)

இத்யாதிகளிற்படியே பரதந்த்ர சேதநர்களில் ஆரேனும் ஒருவன் தனக்கும் பிறர்க்கும் நிரபேக்ஷ ரக்ஷகனாகமாட்டான் என்றபடி. 1

(2) ' ஸ்ரீமானான நாராயணன் ஒருவனுமே ஸர்வஜீவர்களுக்கும் தஞ்சம் ' என்றது

2 ' श्रीमन् नारायण स्वामिन् अनन्यशरणस्त्वय ।
चरणौ शरणं यातः तवैवास्म्यहमच्युत ॥ '

உண்டாக்கப்பட்ட, ஸம்ஸாரவசவர்த்திந: - ஸம்ஸாரத்திற்கு வசப்பட்டவர்களோ, தத: - ஆகையினால்,தே - அவர்கள்,த்யாநிநாம் - த்யானம் செய்பவர்களுக்கு, த்யாநே - த்யானத்தில், நஉபகாரகா: - உபகாரம் செய்கிறவர்களல்லர்,அவித்யாந்தர்கதா:-அவித்யைக்கு உட்பட்டவர்களான,ஸம்ஸாரகோசரா: ஸம்ஸாரத்திலுழலும்,தே ஸர்வே-அவர்கள்எல்லோரும்,பச்சாத் - பிற்பாடு, உத்பூதபோதா: ச - ப்ரகாசத்தை அடைந்திருக்கிறஞ்ஞாநத்தையுடையவர்கள், த்யாநே-த்யாநத்தில், நைவோபகாரகா:உபகாரம்செய்கிறவர்களல்லர்,தேஷாமபி-அவர்களுக்கும் போத: - ஜ்ஞாநமானது, ந நைஸர்க்கிக:-ஸ்பாவத்தில் ஏற்பட்டதன்று, யத: - எந்தக் காரணத்தினால், அந்யத :- வேறு ஒருவனால்(உண்டாக்கப்பட்டதோ)

1. பசவ :- ஜீவாத்மாக்கள, பூர்வம் - முன்னால், பரமேண - பரமாத்மாவினால்,ஸ்வலீலயா - தன்னுடைய விளையாட்டினாலே. பாசிதா: - கட்டப்பட்ட வைகள், தே நைவ - அந்தப் பரமாத்மாவினாலேயே, தே - அவைகள், மோசநீயா: - விடுவிக்கத்தக்கவைகள், அந்யை: - மற்றவர்களினால், மோசயிதும் - விடுவிப்பதற்கு நக்ஷமா: - யோக்யர்களல்ல. 2. த்வய மந்த்ராந்தரம் ஸ்ரீமந் - லக்ஷ்மியுடன் கூடியவனாயும். ஸ்வாமிந் - ஸ்வாமியாயும் இருக்கிற, நாராயண - நாராயணனே, அநந்ய சரண: - வேறு

(ஸ்ரீமந் நாராயண ஸ்வாமிந் அநந்யஶரணஸ்தவ।
சரணௌ ஶரணம் யாத: தவைவாஸ்ம்யஹம் அச்யுத॥)

1 ' मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते'

(மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே)

2 ' तमेव चाद्यं पुरुषं प्रपद्येत् यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ।

(தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யேத் யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ)

3 ' तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ॥ '

तत् प्रसादात् परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् '

(தமேவ ஶரணம் கச்ச ஸர்வபாவேந பரத ॥

தத்ப்ரஸாதாத் பராம்ஶாந்திம் ஸ்த்தாநம்ப்ராப்ஸ்யஸிஶாஶ்வதம்

4 ' संसारार्णवमग्नानां विषयाक्रान्तचेतसां ।

विष्णुपोतं विना नान्यत् किंचिदस्ति परायणम् ॥ '

(ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம்।
விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம்॥)

ஒரு ரக்ஷகனும் இல்லாதவனாகிய நான், தவ - உம்முடைய, சரணௌ - திருவடிகளை, சரணம் - உபாயமாக, யாத: - அடைந்தேன், அச்யுத - ஆச்ரிதர்களை நழுவ விடாதவனாகிய பகவானே, அஹம் - நான், தவைவ - உமக்கே சேஷ பூதனாக, அஸ்மி - ஆகிறேன்.

1. கீதை - 7 - 14. யே - எவர்கள், மாமேவ - என்னையே, ப்ரபத்யந்தே - ஆச்ரயிக்கிறார்களோ, தே - அவர்கள், ஏதாம் - இந்த, மாயாம் - ப்ரக்ருதியை, தரந்தி - தரண்டுகிறார்கள்.

2 கீதை - 15 - 4 யத: - எவனிடத்தில் இருந்து, புராணீ - அநாதியான, ப்ரவ்ருத்தி: - லோகத்தினுடைய ப்ரவ்ருத்தி, ப்ரஸ்ருதா - உண்டாயிற்றோ, தம் - அப்படிப்பட்ட, ஆத்யம் - முதலாவதாகிய, புருஷமேவ - புருஷனையே, ப்ரபத்யேத் - ப்ரபத்தி செய்யக்கடவன்.

3. கீதை 18-62 பாரத - அர்ஜுந, ஸர்வபாவேந - எல்லா அபிப்ராயத்தினாலும், தமேவ - அந்தப் பகவானையே, சரணம் - உபாயமாக, கச்ச - அடை, தத் ப்ரஸாதாத் - அவனுடைய அனுக்ரஹத்தினால், பராம் - உயர்ந்ததான, சாந்திம் - சாந்தியையும், சாச்வதம் - அழிவில்லாத, ஸ்தாநம் - இடத்தையும், ப்ராப்ஸ்யஸி - அடையப் போகிறாய்.

4. விஷ்ணு தர்மம் - 1 - 5 - 9 ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் - ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் முழுகினவர்களாயும், விஷயாக்ராந்த சேதஸாம் - சப்தம் முதலிய விஷயங்களினால் பீடிக்கப்பட்ட மனத்தை

1 ' संसारसागरं घोरं अनन्तक्लेशभाजनम् ।
त्वामेव शरणम् प्राप्य निस्तरन्ति मनीषिणः ॥
(ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்தக்லேசபாஜநம் ।
த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: ॥)

2 ' सर्वलोकशरण्याय राघवाय महात्मने । निवेदयत मां क्षिप्रं '
ஸர்வலோகஶரண்யாய ராகவாய மஹாத்மநே ।
நிவேதயத மாம் க்ஷிப்ரம்)

இத்யாதிகளின்படியே பத்நீஸம்பந்த குணவிஶேஷ விஶிஷ்டனான நாராயணன் ஒருவனுமே அகிஞ்சநராயும் ஸகிஞ்சநராயும் உள்ள ஸர்வ ஜீவர்களுக்கும் ஸ்வபுத்ய தீந ஸஹகார்யதிரிக்த அபேக்ஷா ரஹிதமாக அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் பண்ணுவன் என்றபடி.

இவனைப்பற்றினவர்களை ஒருவரும் பாதிக்கமாட்டாதபடியையும், ஸ்வபாவதஸ் ஸர்வ ஸமனாய்

3 ' न मे द्वेष्योस्ति
(ந மே த்வேஷ்யோஸ்தி)

என்கிற இவனுக்கு த்வேஷ்யராம்படி ஸாபராதரானாரை ஒருவரும் ரக்ஷிக்கமாட்டாதபடியையும்

4 ' गजं वा वीक्ष्य सिंहं वा '
(கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா)

யுடையவர்களாயும் இருப்பவர்களுக்கு, விஷ்ணுபோதம் விநா - விஷ்ணுவாகிற தெப்பத்தைத் தவிர, அந்யத் - வேறு, கிஞ்சித் - ஒரு பராயணம் - அடையக் கூடிய ப்ரயோஜனம், நாஸ்தி - இல்லை.

1. அநந்தக்லேசபாஜனம் - அளவில்லாத துக்கத்திற்கு இடமாயும், கோரம் - பயங்கரமாயுமிருக்கிற, ஸம்ஸார ஸாகரம் - ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தை, மநீஷிண: - புத்திமான்கள், த்வாமேவ - உம்மையே, சரணம் - உபாயமாக ப்ராப்ய - அடைந்து, நிஸ்தரந்தி - தாண்டுகிறார்கள்.

2. ராமா - யுத்த - 17 - 15 ஸர்வலோக சரண்யாய - எல்லோராலும் சரணமாக அடையத் தக்கவராயும், மஹாத்மநே - மஹாத்மாவாயும் இருக்கிற, ராகவாய - ஸ்ரீராமன் பொருட்டு, மாம் - என்னை, க்ஷிப்ரம் - சீக்கிரமாக, நிவேதயத - ஸமர்ப்பியுங்கள்.

3. கீதை - 9 - 29 மே - எனக்கு, த்வேஷ்ய: - த்வேஷிக்கத் தகுந்தவன், நாஸ்தி - இல்லை

4 ராமா - அயோ60 20. கஜம் வா - யானையையாவது, ஸிம்ஹம் வா - சிங்கத்தையாவது, வீக்ஷ்ய - பார்த்து, (ஸீதை பயப்படவில்லை.)

1 'ब्रह्मा स्वयंभूः'

(ப்ரஹ்மா ஸ்வயம்பூ:)

என்கிற ஶ்லோகங்களில் தாத்பர்யத்திலும், ப்ரஹ்லாத ஸமுகசாக ராவணுதி வ்ருத்தாந்தங்களிலும் கண்டு கொள்வது. 2

(3) 'இஜ்ஜீவன் அநாதிகாலம் அநுபவிக்கப் பெருத ஶ்ரிய: பதியைப் பெறுகைக்கு ஹேதுவான உபாயத்தை ரஹஸ்ய த்ரய முகத்தாலே உபதேஶித்து அவ்வழியாலே ஆசார்யன் இவனுக்குத் தஞ்சமாகிருன்' என்றது

2 'दासभूताः स्वतःसर्वे ह्यात्मनः परमात्मनः'

(தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:)

இத்யாதிகளில்படியே ஸூரிகளோடொக்க ஸ்வரூப யோக்யதை உண்டாயிருகக, ஸ்வாபராதத்தாலே ஸ்வத: ப்ராப்தமான பகவதநுபவத்தை இழந்த ஸம்ஸாரி சேதநன் இப்பேறு பெறுகைக்கு அவிநாபாவத்தாலே விஶ்வஸநீயமான உபாய விஶேஷத்தை அத்யாத்ம ஶாஸ்த்ர ஸாரமான மூலமந்த்ராதிகளாலே உபதேஶித்து,

3 'आचार्यः प्लविता तस्य ज्ञानं प्लव इह उच्यते'

(ஆசார்ய: ப்லாவிதா தஸ்ய ஜ்ஞாநம் ப்லவ இஹ உச்யதே)

4 'साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम्।
मग्नानुद्धरते लोकान् कारुण्यात् शास्त्रपाणिना॥'

(ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் ஶாஸ்த்ரபாணிநா)

---

1 ராம-ஸுந்தர- 51-45 ஸ்வயம்பூ: - தானே உண்டானவரான, ப்ரஹ்மா - ப்ரஹ்மாவும், (மற்ற ருத்திரனும் இந்திரனும் ராமனால் கொல்லத் தகுந்தவனாக ஏற்படுத்தப்பட்டவனை ரக்ஷிக்க சக்தி யுடையவர்களல்லா என்றுமேல்)

2. மந்திர ராஜபதஸ்தோத்திரம் - ஸர்வே - ஆத்மாந: - எல்ல ஆத்மாக்களும், ஸ்வத: - ஸ்வபாவத்திலேயே, பரமாத்மந: - பரமாத்மாவிற்கு, தாஸபூதா: - தாஸர்கள்.

3. தஸ்ய - அப்படிப்பட்ட ஜீவாத்மாவிற்கு, இஹ - இந்த, ஸம்ஸார தசையில், ஆசார்ய: - ஆசார்யன், ப்லாவிதா - தெப்பக்காரன், ஜ்ஞாநம் ப்லவ: - ஜ்ஞாநமாவது தெப்பம், (என்று) உச்யதே - சொல்லப்படுகிறது.

4. ஜயாக்ய ஸம்ஹிதை - தேவ: - தேவனாகிய நாராயண: - நாராயணன், ஸாக்ஷாத் - நேராகவே, மர்த்யமயீம் - மநுஷ்ய ரூபமான

இத்யாதிகளில்படியே ஆசார்யன் இவனுககுப் பரம்பரயா மோக்ஷ ஸாதநமாகிறான் என்றபடி.

1 'पापिष्ठः क्षत्रबन्धुश्च पुण्डरीकश्च पुण्यकृत् ।
आचार्यवत्तया मुक्तौ तस्मादाचार्यवान् भवेत् ॥'

(பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யகருத்
ஆசார்யவத்தயா முகதௌ தஸ்மாதாசார்யவாந் பவேத் ।)

என்றதற்கும்இதுவே தாத்பர்யம். 3

(4) 'ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமாய் ஸஹ தர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிஶயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிஶயத்தாலும் புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள்' என்றது

2 'सर्वेषामेव लोकानां ईश्वरी मम वल्लभा'

(ஸர்வேஷாமேவ லோகாநாம் ஈஶ்வரீ மட வல்லபா)

3 'अस्या मम च शेषं हि विभूतिरुभयात्मिका'

(அஸ்யா மம ச ஶேஷம் ஹி விபூதிருபயாத்மிகா)

'देव तिर्यङ्मनुष्येषु नामा भगवान् हरिः ।
स्त्रीनाम्नी लक्ष्मीः मैत्रेय नानयोः विद्यते परम्'

தநும்–சரீரத்தை, க்ருத்வா–செய்து கொண்டு, காருண்யாத்–க்ருபையினால், சாஸ்த்ர பாணிநா - சாஸ்த்ரமாகிறகையினால்,மக்ஞந்–முழுகி இருக்கிற, லோகாந் - ஜனங்களை, உத்தரதே - உயரத் தூக்கிவிடுகிறார்.

1. பாபிஷ்ட்ட:–மிகவும் பாபியான, க்ஷத்ரபந்து: ச - க்ஷத்திர பந்துவும், புண்ய க்ருத் – புண்யம்செய்தவனாகிய புண்டரீக: ச - புண்டரீகனும், ஆசாரியவத்தயா - ஆசார்யனை அடைந்திருக்கையாலே, முக்தௌ - மோக்ஷத்தை அடைந்தார்கள், தஸ்மாத் - ஆகையினால், ஆசார்யவாந் பவேத் -ஆசாரியனை அடைந்தவனாக ஆகவேண்டும்.

2: ஸர்வேஷாமேவ - எல்லா, லோகாநாம் - லோகங்களுக்கும்,மம - என்னுடைய, வல்லபா - பத்தினியாகிய லக்ஷ்மீ, ஈச்வரீ - யஜமானி.

3.விஷ்வக்ஸேந ஸம்ஹிதை. உபயாத்மிகா - இருவகைப்பட்ட, விபூதி: - விபூதியும், அஸ்யா: - இந்த லக்ஷ்மிக்கும், மம ச - எனக்கும், சேஷம்ஹி - சேஷமல்லவா.

1 ' (தேவதிர்யங மநுஷ்யேஷு புந்நாமா பகவாந் ஹரிः।
(ஸ்த்ரீ நாம்நீ லக்ஷ்மீர் மைத்ரேய நாநயோர் வித்யதே பரம்॥)

2 ' नित्यैवैषा जगन्माता विष्णोः श्रीरनपायिनी '
(நித்யைவைஷா ஜகந்மதா விஷ்ணோः ஸ்ரீரநபாயிநீ)

3 ' यज्ञविद्या महाविद्या गुह्यविद्या च शोभने ।
आत्मविद्या च देवि त्वं विमुक्तिफलदायिनी ॥
(யஜ்ஞவித்யா மஹாவித்யா குஹ்யவித்யா ச ஶோபநே।
ஆத்மவித்யா ச தேவி! த்வம் விமுக்தி பலதாயிநீ॥)

4 ' इयं सीता मम सुता सहधर्मचरी तव '
(இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ)

5 ' सर्वैश्वर्य गुणोपेता नित्यं तद्धर्मधर्मिणी '
(ஸர்வைஶ்வர்ய குணோபேதா நித்ம்ய தத்தர்ம தர்மிணீ)

---

1. விஷ்ணு புராணம் 1 - 8 35. தேவதிர்யங் மநுஷ்யேஷு - தேவதைகள், ம்ருகங்கள், மனுஷ்யர்கள், இவர்களுக்குள், புந்நாமா - புருஷன் என்று பெயர் உடையதெல்லாம், பகவாந் - பகவானுகிய, ஹரிः - விஷ்ணு (வின்விபூதி), ஸ்த்ரீ நாம்நீ - ஸ்த்ரீ என்று பெயருடையதெல்லாம், லக்ஷ்மீः - லக்ஷ்மிக்கு, (சேஷபூதம்), மைத்ரேய - ஓ! மைத்ரேயனே! அநயோः - இவ்விருவர்களைத் தவிர, பரம் - மேலான வஸ்து, நவித்யதே - இல்லை.

2. விஷ்ணு புராணம் - 1 - 8 - 17 ஜகந் மாதா - லோகங்களுக்கு எல்லாம் தாயாகிய, ஏஷா - இந்த லக்ஷ்மீ, விஷ்ணோः - விஷ்ணுவிற்கு, நித்யைவ - எப்பொழுதும் இருப்பவள், அநபாயிநீ - விட்டுப்பிரியாதவள்.

3. விஷ்ணு புராணம் 1 - 9 -120. சோபநே - மங்களகரமான லக்ஷ்மியே! த்வம் - நீ, யஜ்ஞவித்யா - யஜ்ஞவித்யை, மஹாவித்யா - ச்ரேஷ்டமான வித்யை, குஹ்ய வித்யா - ரஹஸ்யமான வித்யை, விமுக்தி பலதாயிநீ - மோக்ஷமாகிற பலத்தைக் கொடுக்கிற, ஆத்ம வித்யாச - ஆத்ம வித்யையும், தேவி - ஓ தேவியே, த்வம் - நீயே, (ஆத்ம வித்யையும் நீயே, மோக்ஷமாகிற பலத்தைக் கொடுப்பவளும் நீயே என்றும் பொருள்படும்.)

4. ராமா - பால - 87 - 32 இயம் ஸீதா - இந்தஸீதை, மம - என்னுடைய, ஸுதா - பெண், தவ - உமக்கு, ஸஹதர்மசரீ - சேர்ந்திருந்து தர்மாநுஷ்டாநம் செய்யக் கூடியவள்.

5 . ஸர்வைச்வர்ய குணோபேதா - எல்லாவற்றிற்கும் ஈச்வரியாய் இருக்கையாகிற, குணத்தை யுடையவள், நித்யம் - எப்பொழுதும், தத் தர்ம தர்மிணீ - பகவானுடைய ஸ்வபாவம் போன்ற ஸ்வபாவத்தையுடையவள்.

1 ' करुणास्रा नतमुखी कमलाक्षी शशिप्रभा ।
कल्याणवाहिनी कल्या कलिकल्मषनाशिनी ॥
सर्वार्तिनाशिनी हृष्टा समुद्रपरिशोषिणी ।
सर्वेच्छापरिपूरिका । आर्या यशोदा । वसुदा धर्मकामार्थ मोक्षदा ।
अप्रमेया क्रिया सूक्ष्मा परनिर्वाणदायिनी ।'

(கருணாஸ்ரா நதமுகீ கமலாக்ஷீ ஶஶிப்ரபா ।
கல்யாணவாஹிநீ கல்யா கலிகல்மஷநாஶிநீ ॥
ஸர்வார்த்திநாஶிநீ ஹ்ருஷ்டா ஸமுத்ரபரிஶோஷிணீ ।
ஸர்வேச்சா பரிபூரிகா ।
ஆர்யா யஶோதா । வஸுதா தர்மகாமார்த்த மோக்ஷதா ॥
அப்ரமேயா க்ரியா ஸூக்ஷ்மா பரநிர்வாணதாயிநீ)

2 ' वाचः परं प्रार्थयिता प्रपद्येत् नियतः श्रियम् '

(வாசः பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேத் நியதः ஶ்ரியம்)

---

1. லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம். கருணாஸ்ரா நதமுகீ - தயையினால் உண்டாகிய கண்ணீரையுடையவளாயும், வணங்கின முகத்தையுடையவளாயும் இருப்பவள், கமலாக்ஷீ-தாமரைப் புஷ்பம் போன்ற கண்களையுடையவள், சசி ப்ரபா - சந்த்ரன் போன்ற காந்தியுடையவள், கல்யாணவாஹிநீ - மங்களங்களை உண்டாக்குகிறவள், கல்யா - அப்படிச்செய்ய சக்தியுடையவள், கலிகல்மஷ நாசிநீ - கலியினாலுண்டான பாபத்தைப் போக்கடிப்பவள், ஸர்வார்த்தி நாசிநீ - எல்லோருடைய துக்கங்களையும் போக்கடிப்பவள், ஹ்ருஷ்டா - ஸந்தோஷத்தையுடையவள், ஸமுத்ரபரிசோஷிணீ - ஸமுத்ரத்தை வற்றும்படிசெய்யக்கூடியவள், ஸர்வேச்சா பரிபூரிகா - எல்லோருடைய ஆசையையும் பூர்த்திசெய்பவள், ஆர்யா - பூஜிக்கத்தகுந்தவள், யசோதா - யசஸ்ஸைக் கொடுக்கக்கூடியவள், வஸுதா - பணத்தைக் கொடுப்பவள, தர்மகாமார்த்த மோக்ஷதா - தர்மம், காமம், அர்த்தம், மோக்ஷம் ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் கொடுப்பவள், அப்ரமேயா - அளவிட்டு அறியமுடியாதவள், அக்ரியா - (அவாப்த ஸமஸ்தகாமதையாலே) ஒரு வித கார்யமும் செய்யாதவள், அன்றிக்கே 'க்ரியா' என்று பகவானுடைய ஸர்வவ்யாபாரங்களுக்கும் நிர்வாஹகையானபடியினாலே க்ரியா ரூபி என்றபடியாகவுமாம், ஸூக்ஷ்மா ஸூக்ஷ்மமான ஸ்வரூபத்தையுடையவள், பரநிர்வாணதாயிநி-உயர்ந்ததானமோக்ஷத்தைகொடுப்பவள்

2 சௌநகஸம்ஹிதை. வாசः பரம் - வாக்குக்கு எட்டாததான, பலம் - பலத்தை, ப்ரார்த்தயிதா - வேண்டுகிறவன் (அபேக்ஷிப்ப

1 प्रायश्चित्तप्रसङ्गे तु सर्वपापसमुद्भवे।
मामेकां देवदेवस्य महिषीं शरणं व्रजेत्।

(பராயஶ்சித்த பரஸங்கே து ஸர்வபாபஸமுத்பவே ।
மாமேகாம் தேவதேவஸ்ய மஹிஷீம் ஶரணம் வ்ரஜேத் ॥)

2 'सर्वकामप्रदां रम्यां संसारार्णवतारिणीम्।
क्षिप्रप्रसादिनीं लक्ष्मीं शरण्यामनुचिन्तयेत्॥'

(ஸர்வகாமப்ரதாம் ரம்யாம் ஸம்ஸாரார்ணவதாரிணீம் ।
க்ஷிப்ரப்ரஸாதிநீம் லக்ஷ்மீம் ஶரண்யாமநுசிந்தயேத் ॥)

3 'प्रणिपात प्रसन्ना हि मैथिली जनकात्मजा'

(ப்ரணிபாத ப்ரஸந்நா ஹி மைதிலீ ஜநகாத்மஜா)

4 'अलमेषा परित्रातुं राक्षस्यो महतो भयात्'

(அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத்)

5 'अलमेषा परित्रातुं राघवात् राक्षसीगणम्'

வன்), நியத: - ஸாவதானனாய்க்கொண்டு, ச்ரியம் – லக்ஷ்மியை, ப்ரபத்யேத் - சரணம் அடையவேண்டும்.

1 லகுதந்த்ரம்—17 10 ஸர்வ பாப ஸமுத்பவே - எல்லாப் பாபங்கள் உண்டானபோதிலும், ப்ராயச்சித்த ப்ரஸங்கே து - ப்ராயச்சித்தம் செய்து கொள்ள நேர்ந்தபோது, தேவதேவஸ்ய.- பகவானுடைய,மஹிஷீம் - பத்னியாகிய, மாமேகாம் - என்னை ஒருவளையுமே, சரணம் வ்ரஜேத் - சரணமாக அடையவேண்டும்.

2 ஸ்வாயம்பு வசனம். ஸர்வகாமப்ரதாம் - எல்லா இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியவளாயும், ரம்யாம் - அழகானவளாயும், ஸம்ஸாரார்ணவ தாரிணீம் - ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தைத் தாண்டிவைப்பவளாயும், க்ஷிப்ர ப்ரஸாதிநீம் - சீக்ரத்தில் அனுக்ரஹம் செய்பவளாயும் இருக்கிற, லக்ஷ்மீ - லக்ஷ்மியை, சரண்யாம் - சரணம் அடையத்தகுந்தவளாக, அநுசிந்தயேத் - நினைக்கவேண்டும்.

3 ராமா - ஸுந்தர - 27-44 ஜநகாத்மஜா - ஜநகராஜன் பெண்ணாகிய, மைதிலீ - ஸீதையானவள், ப்ரணிபாத ப்ரஸந்நா ஹி - சரணாகதிசெய்வதினால் அனுக்ரஹத்தைச் செய்யக்கூடியவளன்றோ.

4 ராமா - ஸுந்தர - 27-44 ஏஷா - இந்த ஸீதை, ராக்ஷஸ்ய: - ஓ ! ராக்ஷஸிகளே, மஹத: பயாத்-பெரிய பயத்திலிருந்து, பரித்ராதும்- ரக்ஷிப்பதற்கு, அலம் - சக்தியுடையவள்.

5 ராமா - சுந்தர 58-38 ராக்ஷஸீகணம்-ராக்ஷஸிகளையெல்லாம்,

(அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம்)
இத்யாதிகளிற் சொன்ன ஸர்வஶேஷி வ்யதிரிக்த ஸர்வ ஶேஷித்வம் நிக்ரஹாஸமாநாதிகரண ஸர்வாநுக்ரஹவத்த்வம் இத்யாதி ஸ்வபாவ விஶேஷங்களையுடையளான பிராட்டி ஸாபராதரானவர்கள் எல்லோருக்கும் ஶாஸிதாவான ஸர்வேஶ்வரன் அபிமுகம் கொள்ளமாட்டாதே தயங்காதபடி அவனுடைய பித்ருத்வ ப்ரயுக்தமான ஊஷமளீ பாவத்தை

1 'उचितैरुपायैः विस्मार्य'

(உசிதை: உபாயை: விஸ்மார்ய)

என்னும்படியாக்கி, இவர்களை அவன் திருவடிகளிலேசேர்த்து

2 'தன் அடியார் திறத்தகததுத் தாமரையாளாகிலும்
சிதகுரைக்குமேல் என் அடியார் அது செய்யார்'

என்னும்படி பண்ணிகொண்டு

3 'भवेयं शरणं हि वः' (பவேயம் ஶரணம் ஹி வ:)

என்றருளிச் செய்தபடியே இவர்களுக்கு ரக்ஷாஹேது ஆகிறான் என்றபடி. 4

'இவளைப் புருஷகாரமாகக வேண்டுகிறது ஈஶ்வரன் தண்டதரனாகையாலே' என்றது

4 'अप्रमेयोनियोज्यश्च यत्रकामगमो वशी।

(அப்ரமேயோநியோஜ்யஶ்ச யத்ர காமகமோ வஶீ)

ராகவாத் - ராமனிடமிருந்து, பரித்ராதும் - காப்பாற்றுவதற்கு, ஏஷா - இவள் அலம் - சக்தியுடையவள்.

1 ஸ்ரீ குணரத்நகோசம் - 52 உசிதை: - அததற்குத் தகுந்தவைகளான, உபாயை: - உபாயங்களினால், விஸ்மார்ய-மறக்கும்படிசெய்து,

2 பெரியாழ்வார் - 4 - 9 - 2

3 ராமா - சுந்தர - 58 90 வ: - உங்களுக்கு, சரணம்-உபாயமாக, பவேயம் - ஆகக் கடவேன்.

4 பார - ஸபா - 40 - 78 யத்ர காம கம: - தனக்கு இஷ்டமான இடத்தில் போகக் கூடியவன், வசீ - எல்லாவற்றையும் தனக்கு வசமாக உடையவன், அப்ரமேய: - அளவிடமுடியாதவன், அநியோஜ்ய ருவராலும் நியமிக்கப்படக் கூடியவனல்லன்.

1 ' स्वातन्त्र्यमैश्वरमपर्यनुयोज्यमाहुः '

(ஸ்வாதந்த்ர்யமைஶ்வரம் அபர்யநுயோஜ்யமாஹு:)

இத்யாதிகளில்படியே நிரங்குச ஸ்வதந்த்ரனை ஸர்வேஶ்வரன்

2 ' तस्मात् शास्त्रं प्रमाणं ते कार्याकार्य व्यवस्थितौ '

(தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யா கார்ய வ்யவஸ்திதௌ) என்று க்ஷேத்ரஜ்ஞருக்கு க்ருத்யாகருத்ய வ்யவஸ்த்தாபகமான ஶாஸ்த்ரத்தை அநாதியாக ப்ரவர்த்திப்பிக்க, ப்ரவாஹ அநாதி கர்ம ஸம்யுகதராய் ஆஜ்ஞாதிலங்கநம் பண்ணினவர்களை இவன்

3 ' क्षिपाम्यजस्रमशुभान् '(க்ஷிபாமி அஜஸ்ரம் அஶுபாந்) என்கிறபடியே நிக்ரஹித்துப் போருமவனாக ப்ரமாண ஸித்தமாகையாலே, ஸ்வாபராத பூயஸ்தையாலே பீதரானவர்களுக்கு அர்த்த ஸ்வபாவாதிகளாலே அநதிலங்கநீய வாக்யையான விஷ்ணு பத்நியைப் புருஷகாரமாக்க வேணடுகிறதுஎன்றபடி. 5

' இத்தண்ட காரணம் அநாதியான ஆஜ்ஞாதிலங்கநம் ' என்றது

4 ' समोहं सर्वभूतेषु ' (ஸமோஹம் ஸர்வ பூதேஷு)

என்று ஸர்வ ஸமனை ஸர்வேஶ்வரன் தனக்கு வைஷம்ய நைர்க்ருண்யாதிகள் வாராதபடி வ்யவஸ்தித நிகரஹம் பண்ணுகைக்கு விஶேஷ காரணம்

' निमित्तमात्रमेवासौ सृज्यानां सर्गकर्मणि।
प्रधानकारणीभूता यतोवै सृज्यशक्तयः ॥ '

---

1 வைகுண்ட ஸ்தவம் - 55 ஐச்வரம் - ஈச்வரனுடையதாகிய, ஸ்வாதந்த்ர்யம் - ஸ்வதந்த்ரனாயிருக்கும் தன்மையை. அபர்யநுயோஜ்யம்- வேறு ஒருவராலும் கேட்கமுடியாததாக, ஆஹு: - சொல்லுகிறார்கள்.

2 கீதை - 16 - 24 தஸ்மாத் - ஆகையினால், தே - உனக்கு, கார்யாகார்ய வ்யவஸ்திதௌ -இது செய்யத்தகுந்தது, இது செய்யத்தகாதது என்கிற ஏற்பாட்டில், சாஸ்த்ரம் - சாஸ்த்ரமானது, ப்ரமாணம்.

3 கீதை - 16 - 19 அஜஸ்ரம் - எப்பொழுதும், அசுபாந்-பாபம் செய்த அவர்களை, க்ஷிபாமி-(அஸுர ஸ்வபாவமுள்ள சரீரங்களில்)தள்ளுகிறேன்.

4 கீதை 9- 29 அஹம் - நான், ஸர்வபூதேஷு - எல்லா ப்ராணிகளிடங்களிலும், ஸம: - ஒரே விதமான மனதையுடையவன்,

1(நிமித்தமாத்ரமேவாஸௌ ஸ்ருஜ்யாநாம் ஸர்க்க கர்மணி
ப்ரதாநகாரணீபூதா யதோ வை ஸ்ருஜ்யஶக்தய:॥)
निमित्तमात्रं मुक्त्वैनं नान्यत् किंचि.पेक्षते !
नीयते तपतां श्रेष्ठ स्वशक्त्या वस्तु वस्तुताम् । '
(நிமித்தமாதரம் முகத்வைநம் நாந்யத் கிஞ்சிதபேக்ஷதே ।
நீயதே தபதாம் ஶ்ரேஷ்ட ஸ்வஶக்த்யாவஸ்து வஸ்துதாம்)
2 ' कर्मभिः भाविताः पूर्वैः कुशल कुशलैस्तु ताः '
(கர்மபி: பாவிதா: பூர்வை: குஶலாகுஶலைஸ்து தா: ।)
என்றும்
3 ' हन्यते तात कः केन यतः स्वकृतभुक्पुमान् '
(ஹந்யதே தாத க: கேந யத: ஸ்வக்ருதபுக புமாந்)
4 'शुभेत्वसौ तुष्यति दुष्कृते तु न तुष्यतेऽसौ परमश्शरीरी '

---

1 விஷ்ணு புராணம் - 1 - 4- 51, 52 அஸௌ - இந்தப் பகவான், ஸ்ருஜ்யாநாம் - ஸ்ருஷ்டிக்கப்படுகிற வஸ்துக்களினுடைய, ஸர்க்க கர்மணி - ஸ்ருஷ்டிப்பதாகிய கார்யத்தில், நிமித்தமாத்ரமேவ - பொதுவாகிய காரணம் மாத்திரம் தான், யத: - எந்தக் காரணத்தினால் ஸ்ருஜ்ய சக்தய: - ஸ்ருஷ்டிக்கப்படுகிற வஸ்துக்களின் சக்திகள், (அதாவது முன் ஜன்மங்களில் செய்யப்பட்ட கர்மங்கள்), ப்ரதாந காரணீபூதா: - முக்யமான காரணங்களாக இருக்கின்றனவோ, இதம் - இந்த வஸ்து, நிமித்தமாத்ரம் முக்த்வா - பொதுவான காரணத்தைத் தவிர, அந்யத் கிஞ்சித் - வேறு ஒன்றையும், நாபேக்ஷதே - எதிர்பார்க்கிறதில்லை. வஸ்து - ஒரு வஸ்துவானது, தபதாம்ச்ரேஷ்ட - தபஸ் பண்ணுகிறவர்களுக்குள் ச்ரேஷ்டனே ! ஸ்வசக்த்யா-தன்னுடைய சக்தியினாலேயே (கர்மங்களினாலேயே), வஸ்துதாம் - அந்த வஸ்துவாய் இருக்கையை, நீயதே - அடைவிக்கப்படுகிறது

2 விஷ்ணுபுரா - 1-5-28 தா: - அந்த ஜனங்கள், பூர்வை: - முன்பு செய்யப்பட்ட, குசலாகுசலை: - நல்லதாயும் கெட்டதாயும் இருக்கிற, கர்மபி: - கர்மங்களினால், பாவிதா: - உண்டாக்கப்பட்டவைகள்.

3 தாத - தகப்பனாரே, க: - எவன், கேந - எவனால், ஹந்யதே - கொல்லப்படுகிறான், யத: - எந்தக் காரணத்தினால், புமாந் - மனிதன், ஸ்வக்ருதபுக் - தன்னால் செய்யப்பட்ட கர்மத்தின் பலனை அனுபவிக்கிறானோ.

4 பார - சாந்தி-199-25. சரீரீ - எல்லா வஸ்துக்களையும் தனக்குச் சரீரமாகவுடைய, அஸௌ - இந்த, பரம: - பரமாத்மா, சுபேது -

(ஶுபேத்வஸௌ துஷ்யதி துஷ்க்ருதே து ந துஷ்யதேஸௌ பரமஶுஶரீரீ))என்றும்,

1 ' நானே நானுவித நரகம்புகும் பாவம்செய்தேன் '

என்றும் ப்ரமாணஸித்தமாய், ப்ரவாஹாநாதியான விருத்தாநுஷ்ட்டானம் என்றபடி. 6

' இப்படி அபராதாநுரூபமாகத் தண்டதரனுய்ப் போருகிற ஶரண்யனுடைய வஶீகரணங்களில் ப்ரதாநம் ஸர்வாகிஞ்சநாதிகாரமான ஆத்ம ரக்ஷாபாஸமர்ப்பணம் ' என்றது

2 ' अनित्यमसुखं लोकमिमं प्राप्य भजस्व माम् '

(அநித்யமஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்)

என்றும்,

3 ' सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज '

(ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ) என்றும்,

4 ' पितरं मातरं दारान् पुत्रान् बन्धून् सखीन् गुरून् ।
रत्नानि धनधान्यानि क्षेत्राणि च गृहाणि च ॥
सर्व धर्मांश्च सन्त्यज्य सर्वकामांश्च साक्षरान् ।
लोकविक्रान्तचरणौ शरणं तेऽव्रजं विभो ॥ '

நல்ல கர்மங்கள் செய்யும்பொழுது, துஷ்யதி - ஸந்தோஷப்படுகிறான், துஷ்க்ருதேது - பாப கர்மங்களைச் செய்யும்பொழுதோ எனில், நதுஷ்யதே - ஸந்தோஷப்படுவதில்லை.

1 பெரிய திருமொழி.

2 கீதை -9 33 அநித்யம் அழியக்கூடியதாயும், அஸுகம் - துக்கமயமாயும் இருக்கிற, இமம் - இந்த, லோகம் லோகத்தை, ப்ராப்ய - அடைந்திருக்கிற நீ, மாம் - என்னை, பஜஸ்வ - அடை.

3 கீதை-18-66. ஸர்வதர்மாந் - எல்லாத் தர்மங்களையும், பரித்யஜ்ய - நன்றாய் விட்டுவிட்டு (அதாவது ப்ரபத்திக்கு அங்கமாக அனுஷ்டிக்காமல் என்றபடி), மாம் ஏகம் - என்னை ஒருவனையே, சரணம் - சரணமாக, வ்ரஜ - அடை.

4 ஜிதந்தாஸ்தோத்ரம் பிதரம்-தகப்பனாரையும்,மாதரம்-தாயாரையும்,தாராந்-பத்னிகளையும்.புத்ராந்பிள்ளைகளையும்பந்தூந்-பந்துக்களையும் ஸகீந்-ஸகிகளையும்,குருந்-குருக்களையும்,ரத்நாநிரத்னங்களையும்தநதாந்யாநி-பணம்தாந்யங்களையும்,க்ஷேத்ராணி-நிலங்களையும், க்ருஹாணிச - வீடுகளையும், ஸர்வதர்மாம்ச்ச - எல்லாத் தர்மங்களையும், ஸாக்ஷராந் - கைவல்யத்துடன் சேர்ந்த, ஸர்வகாமாம்ச்ச - எல்லாக் காமங்களையும் (ஐச்வர்யங்களையும்), ஸந்த்யஜ்ய - விட்டுவிட்டு, விபோ - விபுவாகிய

(பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந குருந் ।
ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச கருஹாணி ச ।
ஸர்வதர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந் ।
லோகவிகராந்த சரணௌ ஶரணம் தே அவ்ரஜம்விபோ।।)
என்றும்,

1 'वृथैव भवतो यात। भूयसी जन्मसन्ततिः ।
तस्यामन्यतरत्जन्म संचिन्त्य शरणं व्रजेत् ।। '

(வ்ருதைவ பவதோ யாதா பூயஸீ ஜந்மஸந்ததி: ।
தஸ்யாம் அந்யதரஜ்ஜந்ம ஸஞ்சிந்த்ய ஶரணம் வ்ரஜேத் ।)
என்றும்,

2 'अहमस्यपराधानामालयोकिंचनोगतिः ।
त्वमेवोपायभूतो मे भवेति प्रार्थना मतिः ।
शरणागतिरित्युक्ता सा देवेस्मिन् प्रयुज्यताम् ।। '
तस्यानुबन्धा. पाप्मानः सर्वे नश्यन्ति तत् क्षणात् ।। '

பகவானே ! தே - உம்முடைய, லோக விக்ராந்த சரணௌ - லோகங்களை அளந்தருளிய திருவடிகளை, சரணம் - உபாயமாக, அவ்ரஜம் - அடைந்தேன்.

1 சாண்டி - ஸ்ம்ருதி பவத: - உனக்கு, பூயஸீ - அதிகமான, ஜந்மஸந்ததி: - ஜன்மங்களின் பரம்பரை, வ்ருதைவ - வீணுகவே, யாதா - போய்விட்டது, தஸ்யாம் - அவற்றிற்குள், அந்யதரத் - ஒன்ருகிய, ஜந்ம - ஜன்மமாக, ஸஞ்சிந்த்ய - (இந்த ஜன்மத்தையும்) நினைத்துக் கொண்டு, சரணம் வ்ரஜேத் - சரணமாக அடை.

2 அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - 37 - 30. அஹம் - நான், அபராதாநாம் - குற்றங்களுக்கெல்லாம், ஆலய: - இருப்பிடமாகவும், அகிஞ்சந: - வேறு ஒரு உபாயம் இல்லாதவனுயும், அகதி: - வேறு ரக்ஷகாகள் இல்லாதவனுகவும், அஸ்மி - ஆகிறேன், த்வமேவ - நீரே, மே - எனக்கு, உபாயபூத: - உபாயமாக, பவ - ஆகவேண்டும், இதி - என்கிற, ப்ரார்த்தநாமதி: - ப்ரார்த்திப்பதாகிய புத்தி, சரணுகதி:, இதி - என்று, உக்தா - சொல்லப்பட்டது, ஸா - அது, அஸ்மிந் - இந்த, தேவே - தேவனுகிய பகவானிடத்தில், ப்ரயுஜ்யதாம் - ப்ரயோகிக்கத் தக்கது, தஸ்ய - இப்படிச் செய்தவனுக்கு, அநுபந்தா: - தடையாய் இருக்கிற, ஸர்வே - எல்லா, பாப்மாந: - பாபங்களும், தத்க்ஷணத் - அந்த க்ஷணத்திலேயே, நச்யந்தி - நசித்து விடுகின்றன.

(அஹமஸ்ம்யபராதாநாம் ஆலயோகிஞ்சநோகதிः ।
தவமேவ உபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதிः ।
ஶரணாகதிரித்யுக்தா ஸாதேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ।
தஸ்யாநுபந்தாः பாப்மாநः ஸர்வே நஶ்யந்தி தத்க்ஷணாத் ।
என்றும்,

1 ' भक्त्या परमया वापि प्रपत्त्या वा महामते ।
प्राप्योहं नान्यथा प्राप्यः मम कैङ्कर्यलिप्सुभिः ॥ '

(பக்த்யா பரமயாவாபி ப்ரபத்த்யா வா மஹாமதே ।
ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்ய: மமகைங்கர்யலிப்ஸுபிः ॥
என்றும்,

2 ' शरणं त्वां प्रपन्ना ये ध्यानयोगविवर्जिताः ।
तेपि मृत्युमतिक्रम्य यान्ति तत् वैष्णवं पदम् ॥ '

(ஶரணம் தவாம் ப்ரபந்நா யே த்யாநயோக விவர்ஜிதாः ।
தேபி ம்ருத்யுமதிக்ரம்ய யாந்தி தத்வைஷ்ணவம் பதம் ॥)
என்றும்,

முமுக்ஷுவுக்கு ஶரண்ய ப்ரஸாதநங்களாகச் சொல்லப் பட்ட உபாயங்களில் வைத்துக்கொண்டு,

3 ' निक्षेपापरपर्यायो न्यासः पंचाङ्गसंयुतः ।
सन्यासः त्याग इत्युक्तः शरणागतिरित्यपि ॥ '

1 மஹாமதே - புத்திமானாகிய ஓ ! ரிஷியே, அஹம் - நான், மம - என்னுடைய, கைங்காபலிப்ஸுபிः - கைங்கர்யத்தைச் செய்யவேண்டும் என்கிற ஆசையுடையவர்களினால், பரமயா - உயர்ந்ததான, பக்த்யா - பக்தியினாலாவது, ப்ரபத்த்யாவா - ப்ரபத்தியினாலாவது, ப்ராப்ய: - அடையத் தகுந்தவன், அந்யதா - வேறு விதமாக, ந ப்ராப்ய: - அடையத் தகுந்தவனல்ல.

2 ப்ராஹ்மபுராணம் - த்யாநயோக விவர்ஜிதாः - த்யான யோகம் செய்யாதவர்களான, யே - எவர்கள், த்வாம் - உம்மை சரணம் ப்ரபந்நாः - சரணமாக அடைந்தார்களோ, தேபி - அவர்களும், ம்ருத்யும் - ஸம்ஸாரத்தை, அதிக்ரம்ய - தாண்டி, தத் - அந்த, வைஷ்ணவம் - விஷ்ணுவினுடையதான, பதம் - ஸ்தாநத்தை, யாந்தி - அடைகிறார்கள்.

3 லக்ஷ்மீதந்த்ரம் - 17-74 நிக்ஷேபாபர பர்யாய: - நிக்ஷேபம் என்று மற்றொரு பெயரையுடைய, பஞ்சாங்க ஸம்யுத: - ஐந்து அங்கங்

(நிக்ஷேபாபர பர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:।
ஸந்யாஸஸ் த்யாக இதியுக்த: ஶரணாகதிரித்யபி ॥)

என்றும்,

1 'आत्मात्मीय भरन्यासो ह्यात्म निक्षेप उच्यते

(ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹி ஆத்மநிக்ஷேப உச்யதே '
என்றும் சொல்லப்பட்ட ஸ்வரக்ஷா பரஸமர்ப்பணம் ,

2 ' इदं शरणमज्ञानां इदमेव विजानताम्।
इदं तितीर्षतां पारं इदमानन्त्य मिच्छताम् ॥ '

(இதம் ஶரணம் அஜ்ஞாநாம் இதமேவ விஜாநதாம் ।
இதம் திதீர்ஷதாம் பாரம் இதம் ஆநந்த்யமிச்சதாம் ॥)

3 ' तावदार्तिः तथा वांछा तावन्मोहः तथाऽसुखम्।
यावन्न याति शरणं त्वामशेषाघ नाशनम् ॥ '

(தாவதார்த்திஸ் ததாவாஞ்சா தாவந்மோஹ: ததா அஸுகம்
யாவந் ந யாதி ஶரணம் த்வாம் அஶேஷாகநாஶநம்॥)

களுடன் கூடிய, ந்யாஸ: - பரந்யாஸம், ஸந்யாஸ:- ஸந்யாஸம்என்றும், த்யாக இதி - த்யாகம் என்றும், சரணாகதிரித்யபி - சரணாகதி என்றும் உக்த: - சொல்லப்பட்டது.

1 லக்ஷ்மீதந்த்ரம்-17-79. ஆத்மாத்மீய பரந்யாஸ: - தன்னுடையவும் தன்னைச் சேர்ந்த வஸ்துக்களினுடையவும் பரத்தை ஸமர்ப்பிப்பது (அவற்றை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பை பகவானிடம் ஸமர்ப்பிப்பது), ஆத்ம நிக்ஷேப: - ஆத்ம நிக்ஷேபம் என்று, உச்யதே - சொல்லப்படுகிறது.

2 லக்ஷ்மீதந்த்ரம் - 17-100. இதம் - இந்த சரணாகதி, அஜ்ஞாநாம் - ஜ்ஞாநம் இல்லாதவர்களுக்கும், சரணம் - உபாயம், விஜாநதாம் - (பகவானுடைய ஸ்வரூபாதிகளை) விசேஷமாக அறிந்தவர்களுக்கும், இதமேவ - இதுவே (உபாயம்), பாரம் - கரையை, திதீர்ஷதாம் - தாண்டவேண்டும் என்கிற ஆசையுடையவர்களுக்கும், இதம்-இதுவே. உபாயம், ஆநந்த்யம் இச்சதாம் - (தர்ம பூதஜ்ஞானத்தின் வழியாக) அளவில்லாமல் இருப்பதை, இச்சதாம் - ஆசைப்படுகிறவர்களுக்கும், இதம் - இதுவே உபாயம்.

3 விஷ்ணு புராணம்-1-19-13. அசேஷாக நாசநம் - எல்லாப் பாபங்களையும் போக்கடிக்கக் கூடியவரான, த்வாம் - உம்மை, யாவத்- எதுவரையில், சரணம் - சரணமாக, ந யாதி - அடையவில்லையோ, தாவத் - அது வரையில், ஆர்த்தி: - (கையில் கிடைத்த பொருள் நாச

1 ' प्रपत्तेः क्वचिदप्येवं परापेक्षा न विद्यते ।
सा हि सर्वत्र सर्वेषां सर्वकामफलप्रदा ॥ '

(பரபத்தேः க்வசிதபயேவம் பராபேக்ஷா ந வித்யதே ।
ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாமபலப்ரதா ॥)

उपायभक्तिः प्रारब्धव्यतिरिक्तघनाशिनी ।
साध्यभक्तिस्तु साहन्त्री प्रारब्धस्यापि भूयसी ॥ '

(உபாயபக்திः ப்ராரப்த வ்யதிரிக்தாகநாசிநீ ।
ஸாத்யபக்திஸ் து ஸாஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ ॥)

2 ' सत्कर्मनिरताः शुद्धाः साङ्ख्ययोगविदस्तथा ।
नार्हन्ति शरणस्यस्य कलां कोटितमीमपि ॥ '

(ஸத்கர்ம நிரதாஶ்ஶுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா ।
நார்ஹந்தி ஶரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி ॥)

இத்யாதிகளில் சொல்லுகிறபடியே வர்ண விஶேஷாதி ரஹித மாய், அத்யந்தாகிஞ்சநருக்கும் அதிகரிக்கையாலும், உபாயாந்

மடைவதினால் உண்டான) துக்கமும், ததா - அப்படியே, வாஞ்சா - புதிய ஐச்வர்யாதிகளில் ஆசையும், தாவத் - அது வரையில், மோஹ: - ஆத்மஸ்வரூபத்தை அறியாமையும், தாவத் - அதுவரையில், ததா - அப்படியே, அஸுகம் - பகவதநுபவமில்லாமையும்.

1 ஸநத் குமார ஸம்ஹிதை - ப்ரபத்தேः - ப்ரபத்திக்கு, க்வசி தபி - ஓர் இடத்திலும், ஏவம் - இவ்விதமாக, பராபேக்ஷா - வேறு உபாயத்தைப் பற்றிய அபேக்ஷை, ந வித்யதே - இல்லை, ஹி - எந்தக் காரணத்தினால், ஸா - அந்த ப்ரபத்தி, ஸர்வத்ர - எல்லா இடத்திலும், ஸர்வேஷாம் - எல்லோருக்கும், ஸர்வ காம பலப்ரதா - எல்லா இஷ்ட பலங்களையும் கொடுக்கக் கூடியதோ, உபாயபக்தி: - பக்தி யோகம், ப்ராரப்த வ்யதிரிக்தாகநாசிநீ - பலன் கொடுக்க ஆரம்பித்த காமங்களைத் தவிர மற்ற கர்மங்களை நாசம் செய்யக் கூடியது, ஸா - அந்த, ஸாத்ய பக்திஸ்து - ப்ரபத்தியோ எனில், ப்ராரப்தஸ்யாபி - பலன் கொடுக்க ஆரம்பித்த கர்மத்திற்கும், பூயஸீ - மிகவும் பெரிதான, ஹந்த்ரீ - நாசம் செய்யக்கூடிய காரணம்.

2 லக்ஷ்மீ தந்த்ரம் - 17-62. ஸத்கர்ம நிரதா: - நல்ல கர்மங்களில் நிஷ்டையுடையவர்களும் (கர்ம யோகிகளும்), சுத்தா: - அதின் பலமான மனதின் சுத்தியை அடைந்தவர்களும், ததா - அப்படியே, ஸாங்க்ய யோகவித - ஜ்ஞான யோகம் பக்தி யோகம் இவைகளை அநுஷ்டிப்பவர்களும், சரணஸ்த்தஸ்ய - சரணாகதியில் நிஷ்டை

தர பர்யந்த ஸகல ஸாதகமாகையாலும், ஆர்த்தியில் தாரதம்யத்துக்கு அநுகுணமாக ப்ராரப்த கர்மத்தையும் கழிக்க வற்றாகையாலும், ஸுகரமாகையாலும், துஷ்கர பரிகர நிரபேக்ஷமாய் ஸக்ருத் கர்த்தவ்யமாகையாலும், ஸர்வருக்கும் ஸ்வாபிமத அவிளம்பித பலஸித்திக்கு இதுவேப்ரதாநம் என்றபடி.

இதில் சொன்ன ப்ரபத்தி ரூபமான ஸ்வரக்ஷாபரஸமர்ப்பணமாவது ஸ்வரக்ஷணார்த்த ஸ்வப்ரவ்ருத்த்யபிமாந நிவ்ருத்தியோடும் ப்ரார்த்தனையோடும் கூடின ஶரண்யைக ஸாத்ய ஸ்வரக்ஷணத்வ அத்யவஸாய விஶேஷம். 7

(8) ' இது ஸபரிகரமாக ஸக்ருத் கர்த்தவ்யம் ' என்றது

1 ' सकृत्कृतः शास्त्रार्थः ' (ஸக்ருத் க்ருத: ஶாஸ்த்ரார்த்த:) என்கிற ஸாமாந்ய ப்ராப்தியாலும்,

2 ' आवृत्तिरसकृदुपदेशात् ' (ஆவ்ருத்தி: அஸக்ருதுபதேஶாத்) என்கிற விஶேஷஹேது இல்லாமையாலும்,

3 ' सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतत् व्रतं मम ॥ '
(ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்ய: ததாம்யேதத் வ்ரதம் மம ॥
' सकृदेव हि शास्त्रार्थः कृतोऽयं तारयेन्नरम् '

யுடையவனுடைய, கோடிதமீம் - கோடியில் ஒன்றாகிய, கலாமபி - பாகத்தையும், நார்ஹந்தி - பெறமாட்டார்கள்.

1 சாஸ்த்ரார்த்த: - சாஸ்த்ரத்தின் அர்த்தமான கர்மம், ஸக்ருத் க்ருத: - ஒரு தடவையாலே செய்யப்பட்டதாகிறது.

2 சாரீரக ஸூத்திரம் - 4 - 1 - 1. அஸக்ருத் - அனேகம் தடவை, ஆவ்ருத்தி: - ஆவ்ருத்தி செய்யத் தக்கது, உபதேசாத் - அப்படி சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருப்பதினால்.

3 ராமா - யுத்த - 18 - 33. ஸக்ருதேவ - ஒரு தடவையே, ப்ரபந்நாய - ப்ரபத்தி செய்தவனுக்கும், தவ - உனக்கு, அஸ்மி - தாஸனாக ஆகிறேன் இதி - என்று, யாசதே ச - ப்ரார்த்திக்கிறவனுக்கும், ஸர்வபூதேப்ய: - எல்லாப்ராணிகளுக்கும், அன்றிக்கே எல்லா ப்ராணிகளிடமிருந்தும், அபயம் - பயம்இல்லாமையை, ததாமி - கொடுக்கிறேன், ஏதத் - இது, மம - என்னுடைய, வ்ரதம்

1 (ஸக்ருதேவஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருதோயம்தாரயேந் நரம்)

2 ' ननु प्रपन्नः सकृदेव नाथ तवाहमस्मीति च याचमानः '

(நநு ப்ரபந்ந: ஸக்ருதேவ நாத தவாஹமஸ்மீதி ச யாசமாந:)

3 ' सकृत् प्रार्थनामात्रेण अपेक्षितं दास्यति '

(ஸக்ருத்ப்ரார்த்தநா மாத்ரேண அபேக்ஷிதம் தாஸ்யதி)

இத்யாதி ப்ரமாண ஸம்ப்ரதாயங்களாலும், ப்ரபத்தி மந்த்ரங்களில் வர்த்தமாந வ்யபதேஶம் அநுஷ்ட்டாநகால அபிப்ராயமாகையாலும், த்ரௌபதீ விபீஷண கஜேந்த்ர ஸுமுக காக கபோதாதி வ்ருத்தாந்த விஶேஷங்களாலும் ஆநுகூல்ய ஸங்கல்பாத்யங்க பஞ்சக ஸம்யுக்தமான பரஸமர்ப்பணத்துக்கு ஸக்ருதநுஷ்ட்டாநமே ஶாஸ்த்ரீயம் என்றபடி. 8

(9) இஸ்ஸமர்ப்பணத்தைத் தான் அநுஷ்ட்டிக்கவுமாம், தனக்காக ஆசார்யாதிகள் அநுஷ்ட்டிக்கவுமாம் ' என்றது

4 ' शास्त्रफलं प्रयोक्तरि '

(ஶாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி)

என்று வ்யவஸ்தை உண்டாயிருக்கச் செய்தே புத்ராதிகளைப்பற்றவும் பித்ராதிகள் சில ஸுக்ருதங்களை அநுஷ்டிக்கை ஶாஸ்த்ரீயமாகையாலும்,

' स दिशतु भगवानशेषपुंसां हरिरपजन्मजरादिकां समृद्धिं '

---

1 லக்ஷ்மீதந்த்ரம் - 17- 19. அயம் - இந்த. சாஸ்த்ரார்த்த: - சாஸ்த்திரத்தின் அர்த்தமான ப்ரபத்தி. ஸக்ருதேவ - ஒரு தடவை, க்ருத: - செய்யப்பட்டதாய்க் கொண்டு, நரம் - மனிதனை, தாரயேத் - ஸம்ஸாரத்தைத் தாண்டி வைக்கும்.

2 ஆள ஸ்தோ-64. நாத - ஓ! நாதனாகிய பகவானே, ஸக்ருதேவ - ஒரு தடவை, ப்ரபந்ந: - ப்ரபந்நனாயும், தவ - உமக்கு, அஹம் - நான், அஸ்மி - தாஸனாக ஆகிறேன், இதி ச -என்றும், யாசமாந: - ப்ரார்த்திக்கின்றவன்

तस्मात् मद्भक्तभक्ताश्च पूजनीया विशेषतः ॥'

(மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் ।
தஸ்மாத் மத்பக்தபக்தாஶ்ச பூஜநீயா விஶேஷதः ॥)

2 ' आराधनानां सर्वेषां विष्णोराराधनं परम् ।
तस्मात् परतरं प्रोक्तं तदीय राधनं परम् ॥ '

(ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம் ।
தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம் ॥)

3 ' अनाहृतसुतं गेही पुरुषं नाभिनन्दति ।
तथाऽनर्चित सद्भक्तं भगवान् नाभिनन्दति ॥ '

(அநாத்ருதஸுதம் கேஹீ புருஷம் நாபிநந்ததி ।
ததாநர்ச்சித ஸத்பக்தம் பகவாந் நாபிநந்ததி ॥)

வைஷ்ணவாந் - வைஷ்ணவர்களை, பரிதோஷயேத் - ஸந்தோஷப் படுத்த வேண்டும், தேநைவ - அதினாலேயே, ப்ரஸாதஸுமுகः - அநுக்ரஹத்தினால் ஸுமுகராய், விஷ்ணுः - பகவான், ஸ்யாத்-ஆவார், ந ஸம்ஶயः - ஸந்தேஹமில்லை.

1 பார-ஆச்வ - 116 - 23. மம - எனக்கு, மத்பக்த பக்தேஷு- என்னுடைய பக்தர்களிடத்தில் ப்ரீதி செய்பவர்களிடம், ப்ரீதிः - ப்ரீதியானது, அப்யதிகா - மிகஅதிகமாக, பவேத் – உண்டாகும், தஸ்மாத் - ஆகையினால், மத்பக்தபக்தாः ச - என்னுடைய பக்தர்களின் பக்தர்களும், விஶேஷதः - விஶேஷமாக, பூஜநீயாः - பூஜிக்கத்தக்கவர்கள்.

2 பாத்மோ - 29 - 81 - ஸர்வேஷாம் - எல்லா, ஆராதநாநாம் - ஆராதநங்களுக்கும், விஷ்ணோः - விஷ்ணுவினுடைய, ஆராதநம், பரம் - ச்ரேஷ்டம், தஸ்மாத் - அந்த விஷ்ணுவினுடைய ஆராதநத்தைக் காட்டிலும், பரம் - உயர்ந்ததான, ததீயாராதநம் - பாகவதர்களுடைய ஆராதநம், பரதரம் - மிகவும் சிறந்ததாக, ப்ரோக்தம் - சொல்லப்பட்டது.

3 சாண்டி- ஸ்ம்ருதி - 4- 86. கேஹீ - க்ருஹஸ்தன், அநாத்ருத ஸுதம்-தன்னுடைய பிள்ளையை அநாதரவு செய்த, புருஷம் - புருஷனைப்பற்றி, நாபிநந்ததி -(எப்படி) ஸந்தோஷிக்கிறதில்லையோ, ததா - அப்படியே, அநர்ச்சிதஸத்பக்தம் - தன்னுடைய பக்தனை ஆராதநம் செய்யாத புருஷனைப்பற்றி, பகவாந் - பகவான், நாபிநந்ததி - ஸந்தோஷிக்கிறதில்லை.

1, स्वाराधनं विहायापि स्वभक्तानर्चयन्ति ये ।
तेभ्यः प्रसन्नो भगवान् सिद्धिमिष्टां प्रयच्छति ॥'

(ஸ்வாராதநம் விஹாயாபி ஸ்வபக்தாநர்ச்சயந்தி யே ।
தேப்யः ப்ரஸந்நோ பகவாந் ஸித்திமிஷ்டாம் ப்ரயச்சதி ॥)

இத்யாதி ப்ரமாண விஶேஷங்களாலும்,

3 'ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்
சாத்தியிருப்பார் தவம்'

என்கிற ந்யாயம் ஸ்வயம் ப்ரயோஜந கைங்கர்யத்திலும் ஸமாந மாகையாலும், பாகவத கைங்கர்யம் தன்னிலே பகவத் கைங்கர்யத்தைக் கண்டு க்ருதார்த்தனாய் இருக்க ப்ராப்தம் என்றபடி.21

(22) 'இவை இரண்டிலும் ப்ரதாநம் ஆசார்யகைங்கர்யம்' என்றது

பகவான் பக்கலிலேபோல ஆசார்யன் பக்கலிலும் அநுவர்த்திப்பான் என்று அதிதேஶித்தவளவன்றிக்கே

4 'गुरोः गुरुतरं नास्ति गुरोरन्यं न भावयेत् ।
गुरोर्वार्तां कथां चैव गुरोर्नाम सदा जपेत् ॥

(குரோர் குருதரம் நாஸ்தி குரோரந்யம் ந பாவயேத் ।
குரோர் வார்த்தாம் கதாம் சைவ குரோர் நாம ஸதா ஜபேத் ॥

गुरुरेव परं ब्रह्म गुरुरेव परा गतिः ।
गुरुरेव परा विद्या गुरुरेव परं धनम् ॥
गुरुरेव परः कामः गुरुरेव परायणम् ।

---

1 ஸ்வாராதநம் - தன்(பகவா)னுடைய ஆராதநத்தை, விஹாயாபி - விட்டுவிட்டாவது, யே - எவர்கள், ஸ்வபக்தாந் - தன்னுடைய பக்தர்களை, அர்ச்சயந்தி - பூஜிக்கிறார்களோ, தேப்ய :- அவர்கள் விஷயத்தில், ப்ரஸந்ந :- அநுக்ரஹத்தையுடையவனாகிய, பகவாந், இஷ்டாம் - அவர்களுக்கு இஷ்டமான, ஸித்திம் - ஸித்தியை, ப்ரயச்சதி- கொடுக்கிறார்.

2 நான்.திருவந்தாதி-19

3 குரோ: - ஆசார்யனைக் காட்டிலும், குருதரம்-பெரிய(உயர்ந்த) வஸ்து, நாஸ்தி - இல்லை. குரோ :- ஆசார்யனைக் காட்டிலும், அந்யம் - வேறு ஒருவனை, நபாவயேத் - நினைக்கக் கூடாது, குரோ :- ஆசார்ய

(குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பராகதிः ।
குருரேவ பராவித்யா குருரேவ பரம் தநம் ॥)
(குருரேவ பரःகாமः குருரேவ பராயணம் ।
இத்யாதிகளிலே ஆசார்ய கைங்கர்ய ப்ராதாந்யம் ப்ரமிதமாகையாலும், பகவத் பாகவத கைங்கர்யங்களும் ஆசார்யாநுஜ்ஞையால் நடக்கவேண்டுகையாலே ஆசார்யகைங்கர்யத்தை நிரூபித்துப் பார்த்தால் இது பகவதாஜ்ஞாஸித்தமாகையாலே பகவத் கைங்கர்யமும் ஆசார்யனுடைய பாகவதத்வ ஸாமாந்யத்தாலே இதுதானே பாகவத கைங்கர்யமுமாய் நிற்கையாலே

1 ' चक्षुर्गम्यं गुरुं त्यक्त्वा शास्त्रगम्यं तु यः स्मरेत् ।
हस्तस्थमुदकं त्यक्त्वा घनस्थमभिवांछति ॥ '

(சக்ஷுர்கம்யம் குரும் த்யக்த்வா ஶாஸ்த்ரகம்யம் து ய: ஸ்மரேத்।
ஹஸ்தஸ்த்தமுதகம் த்யக்த்வா கநஸ்தமபிவாஞ்ச்சதி ॥)

2 ' सुलभं तु गुरुं त्यक्त्वा दुर्लभं य उपासते ।
लब्धं त्यक्त्वा धनं मूढः गुप्तमन्वेषते क्षितौ ॥ '

னுடைய, வார்த்தாம் - உபதேச ரூபமான வார்த்தைகளையும், கதாம் சைவ - (அவருடைய) சரித்திரத்தையும், குரோः, நாம - திருநாமத்தையும், ஸதா-எப்பொழுதும், ஜபேத் - ஜபிக்க வேண்டும், குருரேவ- ஆசார்யனே, பரம்ப்ரஹ்ம - பரப்ரஹ்மம், குருரேவ, பரா கதிः - அடையவேண்டிய உயர்ந்த ப்ரயோஜனம், குருரேவ, பரா வித்யா - உயர்ந்த (மோக்ஷோபயோகமான) வித்யை, குருரேவ, பரம் - உயர்ந்த, தநம் - பொருள், குருரேவ, பரः - உயர்ந்த, காமः - ஆசைப்படவேண்டிய புருஷார்த்தம், குருரேவ, பராயணம் - ஆச்ரயிக்கப்பட வேண்டிய வஸ்து.

1 சக்ஷுர்கம்யம் - கண்ணுக்கு விஷயமாயுள்ள, குரும்- ஆசார்யனை, த்யக்த்வா - விட்டுவிட்டு, சாஸ்த்ரகம்யம் – சாஸ்த்ரத்தினால் அறியப் படுகிற பரமாத்மாவை, யः - எவன், ஸ்மரேத் - நினைப்பானோ, (அவன்) ஹஸ்தஸ்த்தம் - கையில் இருக்கிற, உதகம்- ஜலத்தை, த்யக்த்வா - விட்டுவிட்டு, கநஸ்த்தம் - மேகத்தில் இருக்கும் ஜலத்தை, அபிவாஞ்ச்சதி - ஆசைப்படுகிறான்.

2 ஸுலபம் - ஸுலபனாகிய, குரும் - ஆசார்யனை, த்யக்த்வா - விட்டுவிட்டு, யः - எவன், துர்லபம் - துர்லபனான பகவானை, உபாஸதே - உபாஸிக்கிறானோ, மூடः - அந்த மூடன், லப்தம் - கையில் கிடைத்த, தநம் - பணத்தை த்யக்த்வா - விட்டுவிட்டு, க்ஷிதௌ-

ஸுலபம் து குரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே |
லப்தம் த்யக்த்வா ,தநம் மூட: குப்தமந்வேஷதே க்ஷிதௌ ||)
இத்யாதிகளிற்படியே ஆசார்ய கைங்கர்யத்தை விட்டு பகவத் கைங்கர்யாதிகளிலே இழியக் கடவனல்லன்.

கண்ணி நுண் சிறுத்தாம்பின்படியே ஆசார்ய கைங்கர்ய ப்ரதானனாய் நின்று

1 ' திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்
கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்
பெரிய வண் குருகூர் நகர் நம்பிக்கு ஆள்
உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே '

இத்யாதிகளிற்படியே ஆசார்யாபிமதமென்று யதாகாலம் பகவத்பாகவதகைங்கர்யங்களை அநுபவிக்க ப்ராப்தம் என்றபடி. 22

(23) இக்கைங்கர்யபரனுக்குப் பரமைகாந்திகள் உகந்த இடமே உசித ஸ்த்தாநம் ' என்றது

தர்ம ஶீலரா யிருப்பார்க்கு வாஸஸ்த்தாநமாக ஶாஸ்த்ரங்கள் வகுத்த புண்ய தேஶங்கள் கலிகாலர்தி தோஷங்களாலே ம்லேச்சாதி பரிக்ருஹீதங்களாய்

2 ' नाधर्मजन भूयिष्ठं '(நாதர்மஜநபூயிஷ்ட்டம்)

இத்யாதிகளிற்படியே பரித்யாஜ்யங்களாகையாலும், புண்ய தேஶங்களுக்குச் சொல்லும் சில லக்ஷணங்களுக்கு அவ்யாப்தி அதிவ்யாப்திகள் உண்டாகையாலே இவை ப்ராயிகங்களாகையாலும்,

3 ' आत्मनस्तुष्टिरेव च ' (ஆத்மநஸ்துஷ்டிரேவ ச)

இத்யாதிகளைப் பார்த்துத் தன் அபிமத மாத்ரத்தாலே ஒரு தேஶத்தைஅறுதியிட்டுக் கொள்ளப் பார்த்தால் அது தப்பவும் கூடுமாகையாலும்,

---

பூமியில், குப்தம் - மறைத்து வைக்கப்பட்ட தனத்தை, அந்வேஷதே - தேடுகிறான்.

1 கண்ணி நுண் சிறுத்தாம்பு—3.

2 அதர்மங்களைச்செய்கிற ஜனங்களால் நிறைந்த இடத்தில் வாஸம் செய்யக்கூடாது.

3 ஆத்மந: - தனக்கு, துஷ்டி: ஏவச - ஸந்தோஷமுமான,

(நிக்ருஹீதேந்த்ரியக்ராமோ யத்ர யத்ர வஸேந் நர: ।
தத்ரதத்ர குருக்ஷேத்ரம் நைமிஶம் புஷ்கரம் ததா ॥)

'तुलसी काननं यत्र यत्र पद्मवनानि च ।
वसन्ति वैष्णवा यत्र तत्र सन्निहितो हरिः ॥'

1 (துளஸீ காநநம் யத்ர யத்ர பத்மவநாநி ச ।
வஸந்தி வைஷ்ணவா யத்ர தத்ர ஸந்நிஹிதோ ஹரி: ॥)

2 'यत्र भागवताः स्नानं कुर्वन्ति विमलाशयाः ।
तत् तीर्थमधिकं विद्धि सर्वपापप्रणाशनम् ।

(யத்ர பாகவதா: ஸ்நாநம் குர்வந்தி விமலாஶயா: ।
தத் தீர்த்தமதிகம் வித்தி ஸர்வபாப ப்ரணாஶநம் ॥)

निमिषं निमिषार्द्धं वा यत्र तिष्ठन्ति वैष्णवाः ।
तत् देशं मङ्गलं पुण्यं तत् तीर्थं तत् तपोवनम् ।

நிமிஷம் நிமிஷார்த்தம் வா யத்ர திஷ்டந்தி வைஷ்ணவா:।
தத் தேஶம் மங்களம் புண்யம் தத் தீர்த்தம் தத் தபோவநம் ॥)

3 'यत्राष्टाक्षर संसिद्धो महाभागो महीयते ।
न तत्र संचरिष्यन्ति व्याधि दुर्भिक्ष तस्कराः ॥'

---

1 யத்ர - எந்த இடத்தில், துளஸீகாநநம் - துளஸிக்காடுகளும் யத்ர, பத்ம வநாநி ச - தாமரைக் காடுகளும், (இருக்கின்றனவோ), யத்ர, வைஷ்ணவா: - வைஷ்ணவர்கள், வஸந்தி - வஸிக்கிறார்களோ, தத்ர - அவ்விடத்தில், ஹரி: - பகவான், ஸந்நிஹித: - ஸாந்நித்யத்தைச் செய்கிறார்.

2 பாகவதம்---யத்ர - எந்த இடத்தில், விமலாசயா: - பரிசுத்தமான மனத்தையுடைய, பாகவதா: - பாகவதர்கள், ஸ்நாநம் குர்வந்தி ஸ்நானம் செய்கிறார்களோ, தத் - அந்த இடத்தை, ஸர்வபாப ப்ரணாசநம் - எல்லாப் பாபத்தையும் போக்கடிக்கக்கூடியதான, அதிகம் தீர்த்தம்-அதிகப் பரிசுத்த தீர்த்தமாக, வித்தி - அறி, வைஷ்ணவா: - வைஷ்ணவர்கள், யத்ர, நிமிஷம் - ஒரு நிமிஷமாவது, நிமிஷார்த்தம் வா - அரை நிமிஷமாவது, திஷ்ட்டந்தி - நிற்கிறார்களோ, தத்தேசம் - அந்த இடம், மங்களம் - மங்களகரமானது, புண்யம் - பரிசுத்தமானது, தத் - அது, தீர்த்தம் - புண்ய தீர்த்தம், தபோவநம் தபஸ்ஸு செய்யும்காடு.

3 நாரதீயம் -- 1-20. யத்ர - எந்த இடத்தில், அஷ்டாக்ஷர ஸம்ஸித்த: - திருவஷ்டாக்ஷர ஸித்தி பெற்றவனான, மஹாபாக: - மஹிமையையுடைய புருஷன், மஹீயதே - பூஜிக்கப்படுகிறானோ, தத்ர

(யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே ।
ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கரா: ॥)
இத்யாதிகளிற் படியே ஸர்வாதிகமான புண்யக்ஷேத்ரமாகை யாலே ஸ்வயம்ப்ரயோஜந த்ரிவித கைங்கர்யபரனுக்கு அஶேஷ ஶேஷ வ்ருத்திகளுக்கும் இதுவே விக்ந நிவாரணாதி ஹேதுவான உசிதஸ்த்தாநம் என்றபடி.

இவர்களுக்குப் பரமைகாந்தித்வமாவது பரதத்த்வ பரமஹித பரம புருஷார்த்தங்களில் ப்ரமாணாநுகுணமான அந்யத்வாத் யவஸாயவிஶேஷம். இதுவே பாகவத வைஷ்ணவஶப்தங்களுக் கும் ப்ரதாநவிஷயம். 23

(24) 'இப்படித் துல்ய ஶீலரைக் கிடையாத போது, விபரீத ஸம்ஸர்க்கம் ஏகாந்தவாஸ பரிஹார்யம்' என்றது

1 'दुर्जनः परिहर्तव्यः विद्ययालंकृतोपि सन् ।
मणिना भूषितः सर्पः किमसौ न भयङ्करः ॥'

(துர்ஜந: பரிஹர்த்தவ்யோ வித்யயாலங்க்ருதோபி ஸந் ।
மணிநா பூஷித: ஸர்ப்ப: கிமஸௌ ந பயங்கர: ॥)

2 'त्यज दुर्जनसंसर्गं भज साधुसमागमम् ।
कुरु पुण्यमहोरात्रं स्मर नित्यमनित्यताम् ॥'

அவ்விடத்தில், வ்யாதி துர்ப்பிக்ஷ தஸ்கரா: - வ்யாதிகள், பஞ்சம் - திருடர்கள் (அதாவது காம க்ரோதாதிகளும், பகவத்குணாநுபவத்தின் குறைவும், ஆத்மாபஹார சௌர்யாதிகளும்), ந ஸஞ்சரிஷ்யந்தி - நடையாடுகிறதில்லை.

1 துர்ஜந: - கெட்ட மநுஷ்யன், வித்யயா - ஜ்ஞாநத்தினால், அலங்க்ருதோபி ஸந் - அலங்கரிக்கப்பட்டவனாய் இருந்தபோதிலும், பரிஹர்த்தவ்ய: - விடத்தக்கவன், ஸர்ப்ப: - பாம்பு, மணிநா - மாணிக்கத்தினால், பூஷித: - அலங்கரிக்கப் பட்டிருந்தபோதிலும், அஸௌ - இந்தப் பாம்பு, ந பயங்கர: கிம் - பயங்கரமாக இருக்கவில்லையா ?

2 பார ஆர. துர்ஜந ஸம்ஸர்க்கம் - கெட்ட ஜனங்களுடன் சேருவதை, த்யஜ - விடு, ஸாது ஸமாகமம் - ஸாதுக்களுடன் சேர்க்கையை, பஜ - அடை, அஹோராத்ரம் - ராத்திரியிலும் பகலிலும், புண்யம் - புண்யத்தை, குரு - செய், நித்யம் - எப்பொழுதும், அநித்யதாம் - (ஸம்ஸாரத்தின்) அநித்யமாயிருக்கும் தன்மையை, ஸ்மர - நினைத்துக்கொண்டிரு.

(த்யஜ துர்ஜந ஸம்ஸர்க்கம் பஜ ஸாது ஸமாகமம் ।
குரு புண்யமஹோராத்ரம் ஸ்மர நித்ய மநித்யதாம் ॥)

1 'नासद्भिः किंचिदाचरेत्' (நாஸத்பிः கிஞ்சிதாசரேத்)

2 'वरं हुतवहज्वाला पंजरान्तर्व्यवस्थितिः ।
न शौरिचिन्ताविमुखजनसंवासवैशसम् ॥'

(வரம்ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர் வ்யவஸ்த்திதிः ।
ந ஶௌரி சிந்தாவிமுக ஜநஸம்வாஸ வைஶஸம் ॥)

3 'अद्यप्रभृति हे लोकाः यूयं यूयं वयं वयम् ।
अर्थकामपरा यूयं नारायणपरा वयम् ।
नास्ति सङ्गतिरस्माकं युष्माकं च परस्परम् ॥
वयं तु किंकरा विष्णोः यूयमिन्द्रिय किङ्कराः ।'

(அத்யப்ரப்ருதி ஹே லோகாः யூயம் யூயம் வயம்வயம் ।
அர்த்தகாமபரா யூயம் நாராயணபரா வயம் ॥)
நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம் ॥)
(வயம் து கிங்கரா விஷ்ணோः யூயமிந்த்ரிய கிங்கராः ।)

இதயாதிகளைப்பார்த்துப் பாம்போடு ஒரு கூரையிலே பயின்றாற் போலிருக்கிற துர்ஜநஸம்ஸர்ககத்தினுடைய தூரபரிஹாரணார்த்தமாக

'सत्सन्निकर्षे परिवर्तितव्यं विद्याधिकश्चापि निषेवणीयः ।
सु(स)न्निकर्षं गच्छति सन्निकर्षात् नीलः खगो मेरुमिवाश्रयान् वै ॥'

---

1 அஸத்பிः - கெட்டவர்களுடன், கிஞ்சித் - ஒன்றையும், நாசரேத் - செய்யக் கூடாது.

2 ஹுதவஹஜ்வாலா - நெருப்பின் ஜ்வாலையினால் செய்யப்பட்ட, பஞ்ஜராந்தः - கூண்டின் நடுவில், வ்யவஸ்த்திதிः - இருப்பது, வரம் - சிறந்தது, சௌரிசிந்தாவிமுக - பகவானை நினைப்பதில் பராங்முகர்களான, ஜநஸம்வாஸ - ஜநங்களுடன் சேர்ந்து வஸிப்பதாகிய, வைசஸம் - பீடை, ந - சிறந்ததன்று.

3 ஹேலோகாः - ஓ! ஜனங்களே, அத்யப்ரப்ருதி - இன்று முதல், யூயம் யூயம் - நீங்கள் நீங்கள் தாம், வயம் வயம் - நாங்கள் நாங்கள் தாம், யூயம் - நீங்கள், அர்த்த காமபராः - பணம், காமம் இவைகளையே ப்ரயோஜனமாகக் கருதியவர்கள், வயம் - நாங்கள், நாராயணபராः - பகவானையே முக்கிய ப்ரயோஜநமாக வுடையவர்கள், அஸ்மாகம் - எங்களுக்கும், யுஷ்மாகம் - உங்களுக்கும், ஸங்கதிः- சேர்க்கை, நாஸ்தி – இல்லை, வயம்து - நாங்களோ, விஷ்ணோः - பகவா

(ஸத்ஸங்நிகர்ஷே பரிவர்த்திதவ்யம்
வித்யாதிகாஶ்சாபி நிஷேவணீயா: ।)
ஸவர்ணதாம் கச்சதி ஸங்நிகர்ஷாத்
நீல: ககோ மேருமிவாச்ரயந் வை ॥)

2 ‘ सद्भिरेव सहासीत सद्भिः कुर्वीत संगमम् ।
सद्भिः विवादं मैत्रं च नासद्भिः किंचिदाचरेत् ॥ ‘

(ஸத்பிரேவ ஸஹாஸீத ஸத்பி: குர்வீத ஸங்கமம் ।
ஸத்பி: விவாதம் மைத்ரம் ச நாஸத்பி: கிஞ்சிதாசரேத் ॥)

இத்யாதிகளினபடியே ஸாத்த்விக ஸஹவாஸம் கர்த்தவ்ய மானால் இது தேஶவிப்லவாதிகளாலே கிடையாதிருக்குமாகில்

3 ‘एकान्तशीलस्य दृढव्रतस्य पञ्चेन्द्रियप्रीतिनिवर्तकस्य ।
अध्यात्मयोगे धृतमानसस्य मोक्षो ध्रुवो नित्यमहिंसकस्य ॥ ’

னுக்கு, கிங்கரா: - தாஸபூதர்கள், யூயம் - நீங்கள், இந்த்ரியகிங்கரா: - இந்த்ரியங்களுக்கு வசப்பட்டவர்கள்.

1 ஸத்ஸங்நிகர்ஷே - நல்லவர்களின் ஸமீபத்தில், பரிவர்த்திதவ்யம் - வஸிக்கவேண்டும், வித்யாதிகா: சாபி - வித்யையினால் சிறந்தவர்களும், நிஷேவணீயா: - அடையத் தகுந்தவர்கள், மேரும் - மேருபர்வதத்தை, ஆச்ரயந்-அடைந்திருக்கிற, நீல: - கறுத்த நிறமுடைய, கக: - பக்ஷி, ஸங்நிகர்ஷாத் - ஸமீபத்தில் இருப்பதினாலே, ஸவர்ணதாம் - ஸமமான நிறத்தையுடைத்ததாயிருக்கையை, கச்சதி- அடைகிறது, (ஸுவர்ணம் என்று பாடாந்தரம் - ஸ்வர்ண வர்ணமாய் இருப்பதை என்று அர்த்தம்.)

2 —ஸத்பிரேவ ஸஹ - ஸத்துக்களுடன் கூடவே, ஆஸீத - இருக்கவேண்டும், ஸத்பி: - ஸத்துக்களுடன், ஸங்கமம் - சேர்ந்திருப்பதை, குர்வீத - செய்யவேண்டும், ஸத்பி: - ஸத்துக்களுடன், விவாதம் - சண்டையை(உக்தி ப்ரத்யுக்தி ரூபமான வாதத்தை)யும், மைத்ரம்ச - ஸ்நேஹத்தையும், (செய்ய வேண்டும்). அஸத்பி: – கெட்டவர்களுடன், கிஞ்சித் - ஒன்றையும், நாசரேத் - செய்யக் கூடாது.

3 ஏகாந்தசீலஸ்ய - ஏகாந்தமான தேசத்தில் வஸிப்பதையே ஸ்வபாவமாக உடையவனாயும், த்ருடவ்ரதஸ்ய - (சாஸ்த்ரீய கர்மங்களை அனுஷ்ட்டிப்பதில்) த்ருடமான வ்ரதத்தையுடையவனாயும், பஞ்சேந்த்ரிய - ஐந்து இந்த்ரியங்களுடைய, ப்ரீதி - ப்ரீதியை, நிவர்த்தகஸ்ய - நீக்குகிறவனாயும், அத்யாத்மயோகே - பரமாத்மாவைப் பற்றியத்யானத்தில், த்ருதமாநஸஸ்ய - நிலை நிறுத்தப்பட்ட மனத்தையுடையவனாயும்,நித்யம்-எப்பொழுதும், அஹிம்ஸகஸ்ய - ஒரு

(ஏகாந்தஶீலஸ்ய த்ருடவ்ரதஸ்ய
பஞ்சேந்த்ரிய ப்ரீதிநிவர்த்தகஸ்ய ।
அத்யாத்மயோகே த்ருதமாநஸஸ்ய
மோக்ஷோ த்ருவோ நித்யமஹிம்ஸகஸ்ய॥)

இத்யாதிகளில் தாத்பர்யத்தையறிந்து

1 ‘ யாவரும் துணையில்லை ’ என்று யதாஶக்தி(ஒதுங்கி)

2 ‘ பணமாடரவணைப் பற்பலகாலமும் பள்ளிகொள்
மணவாளர் நம்மை வைத்த பரிசிது ’

என்று பரஸங்கல்ப பாரவஶ்யத்தை அநுஸந்தித்து,

3 ‘தாமரைக்கண்ணுவோ தனியேன் தனியாளாவோ
தாமரைக்கையாவோ உன்னை என்றுகொல் சேர்வதுவே’

என்றுஉயிர்த் (இன்) துணையான எம்பெருமானேடே இருக்கிறதை எண்ணிக் கொண்டிருக்க ப்ராப்தம் என்றபடி. 24

(25) ‘ இவனுககுக் கதிசிந்தநாதிகள் சித்த ஸந்தோஷ ஹேதுவான காலயாபநம் ’ என்றது ப்ரபத்திக்குக் கதிசிந்தநாதிகள் பரிகர(ங்களாக)விஶேஷமாக வேண்டும் என்று ஒரு விஶேஷ(வசந)மின்றிக்கேஇருக்க,வித்யாந்தரஸாமாந்(ம்)யத்தாலே உத்தர பூர்வாக அஶ்லேஷ விநாஶங்கள், உத்க்ரமண விஶேஷம், ஹாநோபாயந ப்ரகாரம், அர்ச்சிராதி மார்க்கம், அபவர்க்கதஶா விஶேஷம் என்று இவற்றினுடைய சிந்தநம் ப்ரபத்திக்கு அங்கமாகக் கொள்ளவேணுமோ என்று ஊஹித்துப் பார்த்தால் கண்டோக்தமான அங்க பஞ்சகத்தையும், தத்த்வ வித்துக்கு முமுக்ஷுத்வ ப்ராப்தமான ஸ்வதந்த்ரகர்த்ருத்வாதி புத்தி விஶேஷத்யாகத்தையும் ஒழிந்தவற்றில்

4 ‘प्रपत्तेः क्वचिदप्येवं परापेक्षा न विद्यते’

ப்ராணியையும் ஹிம்ஸை செய்யாதவனுயும் இருப்பவனுக்கு, மோக்ஷः - மோக்ஷமானது, த்ருவः - நிச்சயம்.

1 திருவாய்—10-3-3. 2 நாச்சியார் திருமொழி—10-6.

3 திருவாய்—7-6-1.

4 ஸநத்குமார ஸம்ஹிதை. ப்ரபத்தேः - ப்ரபத்திக்கு, க்வசித்- ஓர் இடத்திலும், ஏவம் - இப்படி, பராபேக்ஷா - மற்றொன்றினுடைய உதவி,ந வித்யதே - இல்லை.

(ப்ரபத்தேः க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே)

என்றதற்கு ஸங்கோசகர் இல்லாமையாலும்,

1 'மாகவைகுந்தம் காண்பதற்கு என் மனம்
ஏகமெண்ணும் இராப்பகலின்றியே'

இத்யாதிகள் உபாயோபகாரகங்கள் அன்று என்றுஉபேக்ஷிக்கப் பார்த்தாலும் விலக்க ஒண்ணாதபடி மநஸ்ஸுக்கு ஸ்வதःப்ராப்த விஷயத்தில் பிறந்த ப்ராவண்யாதிசயத்தைச் சொல்லுகிறதாகை யாலும், இப்படி இருக்கிற கதிசிந்தாதிகள்,

2 ' द्वयमर्थानुसन्धानेन सह सदैवं वक्ता यावच्छरीरपातमत्रैव श्रीरङ्गे सुख मास्व'

(த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா யாவச்சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்ஸ்வ)

3 ' आराधयन् हरिं भक्त्या गमयिष्यामि वासरान् '

(ஆராதயந் ஹரிம் பக்த்யா கமயிஷ்யாமி வாஸராந்)

' சீர் கலந்த சொல் நினைந்து போக்காரேல்
சூழ் வினையின் ஆழ் துயரை
என் நினைந்து போக்குவர் இப்போது '

இத்யாதிகளிற்படியே விரஹிணீ வ்ருத்தாந்த ந்யாயத்தாலே சித்த ஸந்தோஷ ஹேதுக்களுமாய், உசிதமான போதுபோக்குமாயும் இருக்கும் என்றபடி.

' समीपं राजसिंहस्य रामस्य विदितात्मनः ।
सङ्कल्पहयसंयुक्तैः यान्तीमिव मनोरथैः ॥ '

---

1 திருவாய்-9-3-7

2 சரணாகதி கத்யம். த்வயம் - த்வயத்தை, ஏவம் - இப்படி, அர்த்தாநுஸந்தாநேந ஸஹ - அர்த்தத்தினுடைய அநுஸந்தானத் துடன், ஸதா - எப்பொழுதும், வக்தா - சொல்லிக்கொண்டு, யாவச் சரீர பாதம் - சரீரம் விடும்வரையில், அத்ரைவ ஸ்ரீரங்கே - இந்த ஸ்ரீரங் கத்திலேயே (ஸ்ரீரங்கத்திலும், ஸ்ரீரங்கம்போன்ற ஸத்த்வோத்தர க்ஷேத் திரங்களிலும்), ஸுகம் – ஸுகமாக, ஆஸ்ஸ்வ-வஸித்துக்கொண்டிரு.

3 ——ஹரிம் - பகவானை, ஆராதயந் - ஆராதநம் செய்து கொண்டு; வாஸராந் - நாள்களை, கமயிஷ்யாமி - கழிக்கப்போகிறேன்-

4 பெரிய திருவந்தாதி-86.

1 (ஸமீபம் ராஜஸிம்ஹஸ்ய ராமஸ்ய விதிதாத்மந: ।
ஸங்கல்பஹயஸம்யுக்தை: யாந்தீமிவ மநோரதை: ॥)

2 'नैषा पश्यति राक्षस्यो नेमान् पुष्प फलद्रुमान् ।
एकस्थ हृदया नूनं रामेमेवानुपश्यति ॥'

(நைஷா பஶ்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்ப பல த்ருமாந் ।
ஏகஸ்த்த ஹ்ருதயா நூநம் ராமமேவாநுபஶ்யதி ॥)

இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது. 25

(26)'சாதகவ்ருத்தியான இவனுக்கு அந்திம ப்ரத்யயம் ஸ்வயத்ந ஸாத்யமன்று' என்றது
அந்திம ப்ரத்யய விஶேஷாநுகுணமாக பலவிஶேஷஸித்தி யென்று அஷ்டமாத்யாயத்தில் அருளிச்செய்த ப்ரகாரத்தை நினைத்து நமக்கு ப்ராப்ய விஷயத்தில் அந்திம ப்ரத்யயத்தை நாமே ஸாதிக்கவேண்டும் என்று நினைத்திருக்கவேண்டாம்,

3' स्थिते मनसि सुस्थे शरीरे सति यो नर:
धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपं च मामजम् ॥
ततस्त्यजन्तं तु काष्ठपाषाणसन्निभम् ।
अहं स्मरामि मद्भक्तं नयामि परमां गतिम् ॥'

---

1 ராமா-ஸுந்த—19-7. ராஜஸிம்ஹஸ்ய - ராஜ ச்ரேஷ்டராயும், விதிதாத்மந: - ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவராயும், அன்றிக்கே எல்லோராலும் அறியப்பட்ட ஸ்வபாவத்தையுடையவராயும் இருக்கிற, ராமஸ்ய - ராமனுடைய, ஸமீபம் - ஸமீபத்தைக் குறித்து, ஸங்கல்ப ஹயஸம்யுக்தை: -ஸங்கல்பமாகிற குதிரைகள் கட்டப்பட்ட, மநோரதை: - மனதாகிற, அன்றிக்கே மநோரதங்களாகிற தேரி(ர்களி)னால், யாந்தீமிவ - போகிறவள்போல் இருக்கிற.

2ராமா—ஸுந்—16-25. ஏஷா - இந்த ஸீதை, ராக்ஷஸ்ய: - தன்னைச் சுற்றி இருக்கும் ராக்ஷஸிகளை, ந பச்யதி - பார்க்கவில்லை, இமாந் - இந்த, புஷ்ப பலத்ருமாந் - பூக்கள் பழங்கள் இவைகளையுடைய மரங்களையும், ந - (பார்க்கிறது) இல்லை, ஏகஸ்த்த ஹ்ருதயா- ஒரே இடத்தில் செலுத்தப்பட்ட மனத்தை யுடையவளாய்க்கொண்டு, ராமமேவ - ராமனையே, அநுபச்யதி – பார்க்கிருள், நூநம் - நிச்சயம்.

3 வராஹசரமச்லோகம். மநஸி-மனது,ஸ்த்திதே-இருக்கும்பொழுது, சரீரே-சரீரம் ஸுஸ்வஸ்தேஸதி- நன்ருகஇருக்கும்பொழுது, தாதுஸாம்

(ஸ்த்திதே மநஸி ஸுஸ்வஸ்த்தே ஶரீரே ஸதி யோ நர: |
தாது ஸாம்யே ஸ்த்திதே ஸ்மர்த்தா விஶ்வரூபம் ச மாமஜம் ||)
ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட்ட பாஷாணஸந்நிபம் |
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ||)

1 ' ज्ञान समकालं उक्त्वा कैवल्यं याति गतशोकः ।
तीर्थे श्वपच गृहे वा नष्टस्मृतिरपि परित्यजन् देहम् ॥ '

(ஜ்ஞாநஸமகாலம் உக்த்வா கைவல்யம் யாதி கதஶோக: |
தீர்த்தே ஶ்வபச க்ருஹேவா நஷ்டஸ்ம்ருதிரபி பரித்யஜந்தேஹம் |)

2 ' शरीरपात समये तु केवलं मदीययैव दयया अतिप्रबुद्धः मामेवावलोकयन् अप्रच्युत पूर्वसंस्कारमनोरथः '

(ஶரீரபாதஸமயே து கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபுத்த: மாமேவாவலோகயந் அப்ரச்யுத பூர்வஸம்ஸ்கார மநோரத:)

யே - கபம், வாதம், பித்தம் முதலிய தாதுக்கள் ஸமமாய், ஸ்த்திதே - இருக்கும்பொழுது, ய: - எந்த, நர: - மனிதன், விச்வரூபம் - ப்ரபஞ்சத்தைச் சரீரமாக வுடையவனாய், அஜம் - பிறப்பில்லாதவனாய் இருக்கிற, மாம் - என்னை, ஸ்மர்த்தா - நினைக்கிறானோ, தத: - பிறகு, ம்ரியமாணம் து - மரணம் அடைகிறவனாயும், காஷ்ட்ட பாஷாண ஸந்நிபம் - மரக்கட்டையும் கல்லையும்போல் இருக்கிற, தம் - அந்த, மத்பக்தம் - என்னுடைய பக்தனை, அஹம் - நான், ஸ்மராமி - நினைத்துக் கொண்டிருக்கிறேன், பரமாம் - உயர்ந்த, கதிம் - ஸ்த்தானத்தை(த்திற்கு), நயாமி - அழைத்துக்கொண்டு போகிறேன்.

1 வராஹபுராணம். ஜ்ஞாநஸமகாலம் -ஜ்ஞாநம் இருக்கும் காலத்திலேயே, உக்த்வா - ப்ரபத்திமந்த்ரத்தை உச்சரித்த பிறகு, தீர்த்தே - பரிசுத்தமான இடத்திலாவது. ச்வபச க்ருஹேவா - சண்டாளனுடைய வீட்டிலாவது, நஷ்ட ஸ்ம்ருதிரபி - நினைவுஇல்லாதவனாய் இருந்தாலும், தேஹம் - சரீரத்தை, பரித்யஜந் - விடுகிறவன், வீதஶோக: - துக்கம் இல்லாதவனாய், கைவல்யம் - மோக்ஷத்தை, யாதி - அடைகிறான்.

2 சரணாகதிகத்யம். சரீரபாதஸமயே து - சரீரம் விடுகிற ஸமயத்தில், மதீயயைவ - என்னுடையதாகவே இருக்கிற, தயயா ஏவகேவலம் - கருணையினால் மாத்திரம், அதிப்ரபுத்த: - விசதமான ஜ்ஞாநத்தையுடையவனாய், மாமேவ - என்னையே, அவலோகயந் - பார்த்துக் கொண்டு, அப்ரச்யுத - குறைந்துபோகாத, பூர்வ - முன்பு உண்டான, ஸம்ஸ்கார - வாஸனையையும், மநோரத: - மனோரதத்தையு முடையவனாய்,

1 'எய்ப்பென்னை வந்து நலியும் போது
அங்கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்'

இத்யாதிகளிற்படியே பகவத் க்ருபையாலே அதுவும் தானே வந்ததாகில் காண்கிறோம் என்று பரமபலத்தில் போலே அந்திம ப்ரத்யயத்திலும் நிர்ப்பரனாய்,

2 'यं योगिनः प्राणवियोगकाले यत्नेन चित्ते विनिवेशयन्ति'

(யம் யோகிநः ப்ராணவியோக காலே யத்நேந சித்தே விநிவேஶயந்தி)

என்கிற ஶ்லோ(ஶோ)கத்தைவிட்டு, சாதகவ்ருத்தியாய் க்ருஷ்ண மேகத்தினுடைய க்ருபாரஸத்தைப் பார்த்திருக்கை உசிதம் என்றபடி.

3 'सत्त्वस्थान् निभृतं प्रसादय'

(ஸத்த்வஸ்த்தாந் நிப்ருதம் ப்ரஸாதய)

என்கிற ஶ்லோகத்தின் தாத்பர்யத்தையும் இங்கே அநுஸந்திப்பது, 26

(27)'இப்படி க்ஷணக்ருத்யமான ஆத்மஸமர்ப்பண யாகத்திற்குப் பகவத் ஸங்கல்பஸாத்யமான தேஹாவஸாநம் அவப்ருதம்' என்றது

ந்யாஸவித்யையில் விதிக்கப்பட்ட ஆத்மஸமர்ப்பணயாகம் ஸாங்கமாக ஸக்ருத் கர்த்தவ்யம் என்று ப்ரமாண ஸித்தமாகையாலும்,

4 'एवं शरणमभ्येत्य भगवन्तं सुदर्शनम्।
अनुष्ठितक्रतुशतो भवत्येव न संशयः॥'

(ஏவம் ஶரணமப்யேத்ய பகவந்தம் ஸுதர்ஶநம்।
அநுஷ்ட்டித க்ரதுஶதோ பவத்யேவ ந ஸம்ஶயः॥)

இத்யாதிகளிற்படியே உத்தராநுவாகம் பூர்வோக்த ப்ரபத்தி

---

1 பெரியாழ்வார் திருமொழி—4-10-1

2 பாரதம். சாந்தி—46-139. யோகிநः - யோகம் செய்பவர்கள், ப்ராணவியோக காலே - மரண காலத்தில், யம் - எந்தப் பகவானை, யத்நேந - தங்களுடைய ப்ரயத்நத்தினால், சித்தே - மனத்தில்- விநிவேசயந்தி - வைக்கிறார்களோ.

3 88- ம் பார்க்க.

4 —— ஏவம் - இப்படி, ஸுதர்சநம் - ஸுதர்சநசரீரகனான பகவந்தம் - பகவானை, சரணம் - சரணமாக, அப்யேத்ய - அடைந்து,

பலத்தைப் பற்ற கர்த்தவ்ய லேஷமில்லை என்று தோற்றுகைக்காக ஸர்வ கர்த்தவ்யங்களும் இவனுக்குத் தானே ஸம்பந்நங்கள் என்று தானே ப்ரஶம்ஸிக்கிறதாகையாலும், இவனுக்கு மரணத்தை அவப்ருதம் என்று சொன்னதுக்கு இந்த யாகத்திற்கு வேறோர் அவப்ருதமில்லை,

1' சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்'

என்கிறபடியே தேஹபாதாநந்தரம் திவ்யலோக ப்ராப்தியுண்டாம் என்கிறத்திலே தாத்பர்யம், அல்லது இவனுக்கு ஸ்வயம் அநுஷ்ட்டேயமன்றிக்கே பகவத்ஸங்கல்பமாத்ரத்தாலே ஒரு காலத்திலே.

2 'कृतकृत्याः प्रतीक्षन्ते मृत्युं प्रियमिवातिथिम्'

(க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்)

என்று கண்டிருக்கக்கடவ மரணத்தை இவனுக்கு ஒரு கர்த்தவ்யமாக விதித்தல், தானே வருகிற மரணத்திலே அவப்ருத த்ருஷ்டி பண்ண விதித்தல் செய்கிறது அன்று என்றபடி. 27

(28) 'ஸதாசார்ய பரிக்ரஹத்திற்கு முன்புள்ள அநாதி காலம் எல்லாம் ஒரு காளராத்திரி' என்றது

3 'अचेतनापरार्था च नित्या सतत विक्रिया।
त्रिगुणा कर्मिणां क्षेत्रं प्रकृते रूपमुच्यते॥'

(அசேதநாபரார்த்தா ச நித்யா ஸததவிக்ரியா।
த்ரிகுணா கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே॥)

'दारुण्यग्निः यथा तैलं तिले तद्वत् पुमानपि।
प्रधानेऽवस्थितो व्यापी चेतनात्माऽऽत्मवेदनः॥'

அநுஷ்ட்டிதக்ரதுசத: - அனேகம்யாகங்களை அனுஷ்டித்தவனாக, பவதி - ஆகிறான். ந ஸம்சய: - ஸந்தேஹம் இல்லை.

1 திருவாய்—9-10-5.

2 இதிஹாஸ ஸமு 7-38. க்ருதக்ருத்யா: - தாங்கள் செய்ய வேண்டிய கார்யத்தைச் செய்தவர்கள் (ப்ரபந்நர்கள்), ம்ருத்யும் - மரணத்தை, ப்ரியம் -இஷ்டமான,அதிதிம்இவ - விருந்தாளியைப்போல, ப்ரதீக்ஷந்தே - எதிர் பார்க்கிறார்கள்.

3 ...ம் பக்கம் பார்க்க

1 (தாருண்யக்நி: யதா தைலம் திலே தத்வத் புமாநபி ।
ப்ரதாநேவஸ்த்திதோ வ்யாபீ சேதநாத்மாऽऽத்மவேதந: ॥)

2 ' देहयोगात् वा सोऽपि '

3 ' तदन्तर प्रतिपत्तौ रंहति संपरिष्वक्तः प्रश्न निरूपणाभ्याम् '

(தேஹயோகாத்வா ஸோபி) [யாம்)

(ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்: ப்ரஶ்ந நிரூபணாப்

இத்யாதிகளிற்படியே அநாதி காலம் ஆமோக்ஷாத் கர்மமூல த்ரி குண த்ரவ்யரூப திரஸ்கரிணீ ஸம்வ்ருதனாய் பீஜாங்குரந்யாயத் தாலே சங்கிலித்துவக்காய்ப் போருகிற அபசார ப்ரவாஹத்தாலே இருள் தருமா ஞாலத்துள்ளே யிருந்து எட்டும் இரண்டுமான இக் கட்டளை அறியாதே ஸ்வயம் ப்ரகாஶனை தன்னுடைய ஆகாரங்களையும் காணமாட்டாதே எஞ்ஞான்றும் எங்கும் ஒழி வற நிறைந்து நின்று நித்யாஸங்நமான நிரபாய மஹா நிதியை யும் காணப் பெருதே ப்ரகாச ப்ரவ்ருத்தி ஶூந்யதையாலே காளராத்ரிகல்பமான அநாதிகாலம்எல்லாம்அநாதிமாயையாலே ஸுப்தனாய்க்கிடக்கிறஆத்மாவுக்கு இவ்வவஸ்த்தைக(ள்கழிந்து) ளில் பகல் காண்கைக்காக ஆசார்ய பரிக்ரஹம் அருணோதயம் போலே தோன்றுகிறதாகையாலே

3 ' गु शब्दस्त्वन्धकारः स्यात् रु शब्दस्तन्निरोधकः ।
अन्धकार निरोधित्वात् गुरुरित्यभिधीयते ॥ '

---

1 தாருணி - மரத்தில், அக்நி: - நெருப்பு, யதா - எப்படி (இருக் கிறதோ) திலே - எள்ளில், தைலம் - எண்ணெய், (யதா - எப்படி இருக்கிறதோ) தத்வத் - அதைப்போல, வ்யாபீ - எங்கும் வ்யாபித்த வனாயும், சேதநாத்மா - அறியும் தன்மையுடையவனாயும், ஆத்மவேதந: - தானே தன்னை அறிபவனாயும்இருக்கிற, புமாநபி - ஜீவாத் மாவும்,ப்ரதாநே - ப்ரக்ருதியில், அவஸ்த்தித: - இருக்கிறான்.

2 சாரீரகஸூத்ரம்-3 - 2 - 5. ஸோபி - இயற்கையான தன் மையின் மறைவும், தேஹயோகாத் வா - ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்த்தூல சரீரத்தின் ஸம்பந்தத்தினாலும் ப்ரளயத்தில் ஸூக்ஷ்மமான அசேதநத் தின் ஸம்பந்தத்தாலும் வருகிறது. 3 - 1 - 1 ததந்தரப்ரதிபத்தௌ- வேறு ஒரு சரீரத்தை அடையும் பொழுது, ஸம்பரிஷ்வக்த:- பஞ்சபூத ஸூக்ஷ்மங்களுடன் சேர்ந்தவனாகவே, ரம்ஹதி - ஸஞ்சரிக்கிறான், (என் எனில்), ப்ரச்ந நிரூபணாப்யாம் - கேள்வியும் அதைப்பற்றியவிடை யும் அப்படியே இருப்பதினால்.

3 குசப்த: - கு என்னும் சப்தம், அந்தகார:ஸ்யாத் - இருட் டைச் சொல்லுகிறதாகும்,ருசப்த: - ருஎன்னும் சப்தம், தந்நிரோதக: அதை நிவ்ருத்தி செய்பவனைச் சொல்லும், (ஆகவே) அந்தகார நிரோ-

(கு ஶப்தஸ்த்வந்தகார:ஸ்யாத் ரு ஶப்தஸ் தந்நிரோதக:।
அந்தகார நிரோதித்வாத் குருரித்யபிதீயதே ॥)

1 ' आचिनोति हि शास्त्रार्थान् आचारे स्थापयत्यपि ।
स्वयमाचरते यस्मात् तस्मादाचार्य उच्यते ॥ '

(ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்த்தாபயத்யபி ।
ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் தஸ்மாத் ஆசார்ய உச்யதே ॥)

இத்யாதிகளிற்படியே இவ்விருளை நீக்கவல்ல ஞாநச்சுடர் விளக்கைத் தந்து நல்வழி காட்டின பரமோபகாரகன் விஷயத்திலே

2 ' ब्रह्मविद्याप्रदानस्य देवैरपि न शक्यते ।
प्रतिप्रदानमथवा दद्यात् शक्तित आदरात् ॥ '

(ப்ரஹ்மவித்யா ப்ரதாநஸ்ய தேவைரபி ந ஶக்யதே ।
ப்ரதிப்ரதாநம் அதவா தத்யாத் ஶக்தித: ஆதராத் ॥)

என்கிறபடி நித்ய ருணியாய்,

3 ' என்னைத் தீமனம் கெடுத்தாய் உனக்கு என் செய்கேன் ' என்ற நினைவு குலையாதே,

4 ' अत्र परत्र चापि नित्यं यदीय चरणौ शरणं मदीयम् ॥ '

தித்வாத் - அஜ்ஞாநமாகிற இருட்டைப் போக்கடிக்கிறபடியினால், குரு: இதி - குரு என்று, அபிதீயதே - சொல்லப்படுகிறான்.

1—யஸ்மாத் - எந்தக் காரணத்தினால், சாஸ்த்ரார்த்தாந் -சாஸ்த்ரங்களின் அர்த்தங்களை, ஆசிநோதி - ஒன்று சேர்(க்ரஹி)க்கிறானோ, ஆசாரே - நன்னடக்கையில், ஸ்த்தாபயத்யபி - (சிஷ்யர்களை) இருக்கும்படி செய்கிறானோ, ஸ்வயம் - தானும், ஆசரதே - அனுஷ்ட்டிக்கிறானோ, தஸ்மாத் - ஆகையினால், ஆசார்ய: - ஆசார்யன் (என்று), உச்யதே - சொல்லப்படுகிறான்.

2 சாண்டி. ஸ்ம்ருதி---1-117. ப்ரஹ்மவித்யாப்ரதாநஸ்ய - ப்ரஹ்மவித்யையை உபதேசம் செய்தவனுக்கு, ப்ரதிப்ரதாநம் - பதில் கொடுப்பது, தேவைரபி - தேவர்களினாலும், ந சக்யதே - செய்யமுடியாதது, அதவா - அப்படிக் கில்லாமல் போனபோதிலும், ஆதராத் தன்னுடைய ப்ரீதியினால், சக்தித: - தன்னுடைய சக்திக்கு அனுகுணமாக, தத்யாத் - கொடுக்கவேண்டும்.

3 திருவாய் மொழி—2-7-8.

4 ஆள. ஸ்தோ—2. அத்ர - இந்த லோகத்திலும், பரத்ரச - பரலோகத்திலும் (மோக்ஷத்திலும்), நித்யம் - எப்பொழுதும், யதீய

(அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்)
என்றிருக்க ப்ராப்தம் என்றபடி. 28

(29) 'பின்பு தேஹாவஸாநத்தளவும் நல் விடிவு 'என்றது

இப்படி (ஈ)பலமூலமான ஆசார்ய பரிக்ரஹம் பிறந்ததாகில் அத்தால் அஸ்த்தி ஸ்த்ரீணுதி லக்ஷண ஶரீர காராக்ருஹம் விழுமளவும் ப்ராரப்தகர்ம விஶேஷங்களாலே அஜ்ஞாநாந்தகாரலேஶமிஶ்ரனுய் நடந்தாலும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே ஜ்ஞாந வைராக்ய பக்திகள் பூப்போலே விகஸிக்கிறபடியையும் இத்தாலே தனக்கு வருகிற ஆமோதத்தையும் அநுபவித்துக் கொண்டு ப்ரபுத்தனுய்ப் பல சிற்றின்பம் காட்டிப் படுக்கிற படுக்கையினின்றும் எழுந்திருந்து

1 निःस्संशयः सुखमास्स्व '(நிஸ்ஸம்ஶய: ஸுகமாஸஸ்வ)

என்கிறபடியே ப்ரதிஷ்ட்டித புத்தியாய் இருந்து,

2 'अनयाऽहं वशीभूतः कालमेतं न बुद्धवान्
उच्च मध्यम नीचान्तां तामहं कथमावसे ॥
अपेत्याहमितो गत्वा (मिमां हित्वा) संश्रयिष्ये निरामयम् ।
अनेन साम्यं यास्यामि नानयाहमचेतसा ॥

சரணௌ - எந்த ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருவடிகள் எனக்கு உத்தேச்யமோ,

1 சரணுகதிகத்யம் - ஸந்தேஹமில்லாமல் ஸுகமாயிரு.

2 பார—சாந்தி - 312-30, 38-39 அஹம் - நான், அநயா -இந்த ப்ரக்ருதியினுல், வசீபூத: - வசப்பட்டவனுய், ஏதம் - இவ்வளவு, காலம் - காலமாக, ந புத்தவாந் - தெரிந்துகொள்ளவில்லை. உச்ச மத்யம நீசாந்தாம் - உயர்ந்தவன், நடுநிலைமையில் உள்ளவன், தாழ்ந்தவன் இவர்கள் அளவான, (இவர்களுடன் ஸம்பந்தப்பட்ட என்றபடி), தாம் - அந்த ப்ரக்ருதியை, அஹம் - நான், கதம் - எப்படி, ஆவஸே - வஸிப்பேன். அஹம் - நான், இத: - இந்த ப்ரக்ருதியில் இருந்து. அபேத்ய - நீங்கி (விட்டுப் பிரிந்து), கத்வா - போய், நிராமயம் - ஒரு தோஷமுமில்லாத பகவானை, ஸம்ச்ரயிஷ்யே - ஆச்ரயிக்கப் போகிறேன், அநேந - இந்தப் பகவானேடு, ஸாம்யம் - ஸமமாயிருப்பதை, யாஸ்யாமி - அடையப் போகிறேன், அஹம் - நான், அசேதஸா - ஜ்ஞாநம் இல்லாததான, அநயா - இந்த ப்ரக்ருதியோடு ந - (ஸாம்யத்தை அடையப் போகிறது) இல்லை, மம - எனக்கு, அநேந ஸஹ

क्षमं मम सहानेन नैकत्वमनया सह '

(அநயாஹம் வஶீபூத: காலமேதம் ந புத்தவாந் ।
உச்ச மத்யம நீசாந்தாம் தாமஹம் கதமாவஸே ॥
அபேத்யாஹமிதோ கத்வா ஸம்ஶ்ரயிஷ்யே நிராமயம் ।
அநேந ஸாம்யம் யாஸ்யாமி நாநயாஹமசேதஸா ॥
க்ஷமம் மம ஸஹாநேந நைகத்வமநயா ஸஹ ॥)

இத்யாதிகளிற் படியே மேல் வருகிற ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியையும் நிரதிஶய மஹாநந்த இஷ்ட ப்ராப்தியையும் பார்த்து இறையுள்ளில் ஒடுக்கி இருக்கப்ராப்தம் என்றபடி 29

(30)' மேல் முழுக்க ஸ்வச்சந்த கைங்கர்ய மஹோத்ஸவதிவஸம்' என்றது

முமுக்ஷுவாய் க்ருதக்ருத்யனான ஆத்மாவை, ஒரு ஆகரத்தினின்றும் பெற்ற மஹாரத்நத்தின் மண் பற்றைக் கழற்றுமாபோலே, ஸ்த்தூல ஸூக்ஷ்ம ப்ரக்ருதி ஸம்பந்தத்தைக் கழித்து ஸர்வதோமுகமான ப்ரகாஶத்தையுண்டாக்கி ஸ்ரீ கௌஸ்துபத்தைப் போல ஹ்ருத்யனுக்குவதற்காக அடியிலே மீளா அடைக்கலம் கொண்டருளின ஶ்ரிய:பதி திருவடிகளிலே அவன் தன்னைப் போலே தேஶ காலாதி பரிச்சேதமின்றிக்கே இருப்பதாய்,

1 ' सायुज्यं प्रतिपन्ना ये तीव्रभक्तास्तपस्विनः ।
किंकरा मम ते नित्यं भवन्ति निरुपद्रवाः ॥ '

(ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ரபக்தா: தபஸ்விந: ।
கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா: ॥)

- இந்தப்பகவானுடன்கூட, ஏகத்வம் - ஸமமாய் இருக்கை, க்ஷமம் - உசிதமானது, அநயா ஸஹ - இந்தப்ரக்ருதியுடன் ஸமமாயிருக்கை, ந - உசிதமல்ல. 1 பரமஸம்ஹிதை—16 தீவ்ரபக்தா: - மிகுந்த பக்தியுடையவர்களாயும், தபஸ்விந: - சிறந்த தபஸ்விகளாயும், இருக்கிற (உயர்ந்த தபஸ்ஸு என்று சொல்லப்படும் ப்ரபத்தியை அனுஷ்டித்தவர்களாயும்இருக்கிற), யே - எவர்கள், ஸாயுஜ்யம் - ஸாயுஜ்யத்தை, ப்ரதிபந்நா: - அடைந்தார்களோ, தே - அவர்கள் நிருபத்ரவா: - ஒரு விதத் தொந்தரவும் இல்லாதவர்களாய், மம - எனக்கு, நித்யம் - எப்பொழுதும், கிங்கரா: - கைங்கர்யம் செய்பவர்களாக, பவந்தி - ஆகிறார்கள்

1 'भवन्तमेवानुचरन्' (பவந்தமேவ அநுசரந்)
இத்யாதி ப்ரமாண ஸம்ப்ரதாய ஸித்தங்களான கைங்கர்ய மஹோத்ஸவத்துக்கும்,

2 'मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म नविद्यते'

3 'मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् ।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ॥'

(மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே)
(மாமுபேத்ய புநர்ஜந்ம துக்காலயமஶாஶ்வதம் ।
நாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்திம் பரமாம் கதா: ॥)

இத்யாதிகளிற்படியே அபரஸந்த்யை யில்லாதபடி ஒரு கால் விடிந்த திவஸமாகிய யதாவஸ்ததித ஆத்ம ஸ்வரூப ஆவிர்ப்பாவத்துக்கும் மூலம் உதய அஸ்தமயங்களும் உபராகமுமின்றிக்கே அநபாய ப்ரபாந்விதனான அபரிச்சிந்ந ஆதித்யன் என்று அநுஸந்தித்து அவனுடைய நித்யோதயமே தனக்கு நித்யாப்யுதயமாக நிரூபித்துக்கொண்டிருகக ப்ராப்தம் என்றபடி.

ஈஶ்வரனுக்கு ஆத்ம ப்ராப்தியுண்டு, ஆத்மாவிற்கு ஈஶ்வர ப்ராப்தி இல்லை என்றும், பேறும் இழவும் இரண்டும் அவனது என்றும், இப்ப்ரகாரத்தில் சொல்லும் வார்த்தைகளுக் கெல்லாம் பரஶேஷதைகரஸனான தனக்கு அபவர்க்க தசையில் வரும்

---

1 ஆள - ஸ்தோ—46. பவந்தமேவ - (கீழே கூறியபடி லக்ஷ்மி முதலியவர்களுடன் கூடியிருக்கும்) உம்மையே, அநுசரந் – கைங்கர்யங்களைச்செய்துகொண்டு,(மற்றஆசைகளை எல்லாம் ஒழித்து,எப்பொதும் ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்துகொண்டு உம்மையே ஸந்தோஷப் படுத்தப்போகிறேன் என்று மேல்)

2 கீதை 8—16. கௌந்தேய - ஓ! அர்ஜுநனே, மாம் - என்னை, உபேத்யது - அடைந்தோ எனில்,புந: - மறு படியும், ஜந்ம - பிறப்பு, ந - வித்யதே-இல்லை.

3 கீதை—8-15. மாம் - என்னை, உபேத்ய - அடைந்து,மஹாத்மாந: – பெரிய மனதையுடையவர்களான, பரமாம் - உயர்ந்ததான,ஸம்ஸித்திம் - ஸித்தியை, கதா: - அடைந்தவர்கள், துக்காலயம் - துக கங்களுக்கு எல்லாம் இருப்பிடமாயும், அசாச்வதம் - அழியக்கூடியதாயும் இருக்கிற, புந: - மறுபடியும், ஜந்ம - பிறப்பை, நாப்நுவந்தி அடைகிறதில்லை.

அதிசயமும் ஸர்வஶேஷிக்குப் புஷ்ப அங்கராக பரிமளாதிவத் போக்யம் என்று அநுஸந்திக்க ப்ராப்தம் என்று தாத்பர்யம் 30

(31)' இது ஸாத்த்விக ஹ்ருதயங்கமையான ரஹஸ்யரத்னாவளீ ' என்றது

முதற் கவி தொடங்கி முப்பது வாக்கியங்களினாலே ப்ரதிபாதித்த அர்த்தங்கள் எல்லாம் மோக்ஷஶாஸ்த்ர ஸாரபூத மூல மந்த்ராதிகளில் ஸங்க்ருஹீதங்களான பரதத்த்வ பரமஹித பரம புருஷார்த்தங்களைப் பற்றின ஸம்யகர்த்தங்களாகையாலே மரகதத்தைக் காசம் என்று உபேக்ஷிக்கும் மந்தமதிகளைப் போலன்றிக்கே இவற்றினுடையப்ராஶஸ்த்ய போக்யத்வ மஹத்த்வ மங்களத்வ ஸங்க்ரஹத்வாதிகளை அறியவல்ல ஸத்த்வ நிஷ்டருக்கு ரஹஸ்ய ரத்நாவளீ எப்போதும் ஹ்ருதயத்திலே பூணுமது என்றபடி. 31

1 'त्रैगुण्यविषया वेदा निस्त्रैगुण्यो भवार्जुन ।
निर्द्वन्द्वो नित्यसत्त्वस्थो निर्योगक्षेम आत्मवान् ॥ '

(த்ரைகுண்ய விஷயா வேதா: நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந ।
நிர்த்வந்த்வோ நித்யஸத்த்வஸ்த்தோ நிர்யோக க்ஷேம ஆத்மவாந்

1 'यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके ।
तावान् सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥ '

(யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே ।
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத: ॥)

---

1 கீதை.2-45-46.அர்ஜுண!வேதா:-வேதங்கள்,த்ரைகுண்யவிஷயா:-ஸத்வம், ரஜஸ் - தமஸ் என்கிற மூன்று குணங்களையுடைய மனிதர்களைப்பற்றியது, நிஸ்த்ரைகுண்ய: - கீழ்ச் சொன்ன மூன்று குணங்களும் அற்றவனாக, (அதாவது ஸத்த்வ குணத்தை மாத்திரம் உடையவனாகவும்), நிர்த்வந்த்வ: - ஸுகதுக்கங்கள் இரண்டும் அற்றவனாயும், நித்ய ஸத்த்வஸ்த்த: - எப்பொழுதும் ஸத்த்வ குணத்திலேயே இருப்பவனாயும்,நிர்யோகக்ஷேம:-யோகமும்க்ஷேமமுமற்றவனாயும் ஆத்மவாந் - ஆத்மாவை அறிவதில் ஆசையுள்ளவனாயும், பவ - (நீ) இருக்கக் கடவாய், ஸர்வத: - எல்லா இடங்களிலும், ஸம்ப்லுதோதகே - நிறைந்த ஜலமுள்ள, உதபாநே - குளம் முதலியவற்றில், யாவாந் - (தாகம் எடுத்தவனுக்கு) எவ்வளவு, அர்த்த: - ப்ரயோஜனமோ, (அவ்வளவே

1 ‘ बहुभ्यश्च महद्भ्यश्च शास्त्रेभ्यो मतिमान् नरः ।
सर्वतः सारमादद्यात् पुष्पेभ्य इव षट्पदः ॥ ’

(பஹுப்யஶ்ச மஹத்ப்யஶ்ச ஶாஸ்த்ரேப்யோ மதிமாந் நர: ।
ஸர்வதஸ்ஸாரமாதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத: ॥)

2 ‘अनन्त पारं बहुवेदितव्यमल्पश्च कालो बहवश्च विघ्नाः ।
यत् सारभूतं तदुपाददीत हंसो यथा क्षीरमिवांबुमिश्रम् ॥ ’

(அநந்தபாரம் பஹுவேதிதவ்யமல்பஶ்சகாலோபஹவஶ்சவிக்நா:।
யத்ஸாரபூதம் ததுபாததீத ஹம்ஸோ யதா க்ஷீர மிவாம்புமிஶ்ரம் ॥)

3 ‘ त्रयो वेदाः षडङ्गानि छन्दांसि विविधाः स्वराः ।
सर्वमष्टाक्षरान्तस्थं यच्चान्यदपि वाङ्मयम् ॥ ’

எடுத்துக் கொள்ளப்படுகிறதைப் போல), ப்ராஹ்மணஸ்ய விஜாநத: - அறிந்த(மோக்ஷத்தில் ஆ சையுள்ள) ப்ராஹ்மணனுக்கு, ஸர்வேஷு -எல்லா, வேதேஷு - வேதங்களிலும், தாவாந் - அவ்வளவே, (மோக்ஷத்திற்கு ஸாதநமான அவ்வளவே எடுத்துக்கொள்ளவேண்டும்.)

1 பார—சாந்தி-176-66. மதிமாந் - புத்திமானுகிய, நர: - மனிதன், பஹுப்ய: - அநேகங்களாயும், மஹத்ப்ய: - பெரியவைகளாயும் இருக்கிற, சாஸ்த்ரேப்ய: - சாஸ்த்ரங்களில் இருந்து, ஸர்வத: - எல்லாவற்றைக் காட்டிலும், ஸாரம் - ஸாராம்சத்தை, ஷட்பத: - வண்டு. புஷ்பேப்ய: இவ - புஷ்பங்களில் இருந்து போல (அதாவது வண்டுகள் புஷ்பங்களில் இருந்து மிகுந்த ஸாராம்சமான பாகத்தை எடுப்பதைப் போல), ஆதத்யாத் - எடுத்துக்கொள்ள வேண்டும்

2உத்தரகீதை3-1.அநந்தபாரம்-நிச்சயிக்கமுடியாத-முடிவில்லாதகரையை யுடைய, பஹு – அனேகம் சாஸ்த்ரங்கள், வேதிதவ்யம் - அறிய வேண்டி இருக்கிறது,கால: ச - காலமும், அல்ப: - கொஞ்சமானது, விக்நா:ச - தடங்கல்களும், பஹவ: - அனேகங்கள்(ஆகையினுல்),யத் - எந்த, ஸாரபூதம் - ஸாரமாகிய அர்த்தம், அம்புமிச்ரம் - ஜலம் கலந்த, க்ஷீரமிவ - பாலைப் போல (இருக்கிறதோ), தத் - அதை ஹம்ஸோ யதா - ஹம்ஸத்தைப் போல (ஹம்ஸம் போன்ற மனிதன் உபாததீத - க்ரஹிக்க வேண்டும்.

3 நாரதீயகல்பம்—1-9. த்ரய: - மூன்ருயிருக்கிற, வேதா: - வேதங்கள், ஷட் - ஆறு, அங்காநி - அங்கங்கள், சந்தாம்ஸி - சந்தஸ்ஸுக்கள், விவிதா: - அனேகங்களான, ஸ்வரா: - ஸ்வரங்கள், வாங்மயம் - வாக்ருபமான (வாயால் சொல்லக்கூடியவைகளான), அந்யதபி - மற்றது, யத் - எதுவோ (அதுவும்), ஸர்வம் - எல்லாம், அஷ்டாக்ஷராந்தஸ்த்தம்-திருவஷ்டாக்ஷரத்திற்குள் அடங்கி இருக்கிறது

(த்ரயோவேதா: ஷடங்காநி ச்சந்தாம்ஸி விவிதா: ஸ்வரா: ।
ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்த்தம் யச்சாந்யதபி வாங்மயம் ॥)

1 ' किं तत्र बहुभिर्मन्त्रैः किं तत्र बहुभिः व्रतैः ।
नमो नारायणायेति मन्त्रः सर्वार्थसाधकः ॥ '

கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபி: வ்ரதை: ।
நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்தஸாதக: ॥)

2 ' तत्त्वं जिज्ञासमानानां हेतुभिः सर्वतोमुखैः ।
तत्त्वमेको महा योगी हरिः नारायणः परः ॥ '

(தத்த்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ் ஸர்வதோ முகை: ।
தத்த்வமேகோ மஹா யோகீ ஹரி: நாராயண: பர: ॥)

3 ' तत् कर्म यन्न बन्धाय सा विद्या या विमुक्तये ।
आयासायापरं कर्म विद्याऽन्या शिल्पनैपुणम् ॥ '

(தத் கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே ।
ஆயாஸாயாபரம் கர்ம வித்யாऽந்யா ஶில்பநைபுணம் ॥)

---

1 நாரதீயகல்பம்—1-41. தத்ர - அந்தப் பகவான் விஷயத்தில், பஹுபி: - அனேகங்களான, மந்த்ரை: - மந்த்ரங்களினால், கிம் - என்ன ப்ரயோஜனம், பஹுபி: - அனேகங்களான, வ்ரதை: - வ்ரதங்களினால், கிம் - என்ன ப்ரயோஜனம், நமோ நாராயணாயேதி - நமோ நாராயணாய என்கிற, மந்த்ர: - மந்த்ரம், ஸர்வார்த்தஸாதக: - எல்லாப் புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கூடியது.

2 பார - சாந்தி - 357-38-9 தத்த்வம் - பரதத்த்வத்தை, ஜிஜ்ஞாஸமாநாநாம் – அறிய வேண்டும் என்கிற விருப்பமுள்ளவர்களுக்கு, ஸர்வதோமுகை: - எல்லா இடத்திலும் வ்யாபித்திருக்கிற, ஹேதுபி:-காரண(ப்ரகார)ங்களினால்,மஹாயோகீ- எல்லாக் கல்யாண குணங்களும் நிறைந்த, பர: - உயர்ந்த, ஹரி: - ஹரி என்கிற திருநாமத்தையுடைய. நாராயண: – நாராயணன், ஏக: - ஒருவனுமே, தத்வம் - உயர்ந்த தத்த்வம்

3 விஷ்ணு புராணம் -- யத் - எது, ந பந்தாய - ஸம்ஸாரத்தில் கட்டுப் படுத்தாமல் இருக்கிறதோ, தத் - அது, கர்ம - கார்யம், யா - எது, விமுக்தயே - ஸம்ஸாரத்திலிருந்து விடுபடக் காரணமாயிருக்கிறதோ, ஸா - அது, வித்யா - வித்யை, அபரம் கர்ம - மற்றக் கர்மங்கள், ஆயாஸாய - ச்ரமத்திற்குக் காரணம், அந்யா - வேறான, வித்யா - வித்யைகள், சில்பநைபுணம் - அந்தந்த கலைகளில் தேர்ச்சியேயாகும்.

1 संज्ञायते येन तदस्त दोषं शुद्धं परं निर्मलमेकरूपम् ॥
सन्दृश्यते वाप्यधिगम्यते वा तत् ज्ञानमज्ञानमतोन्यदुक्तम् ॥

(ஸம்ஜ்ஞாயதே யேந ததஸ்த தோஷம்
ஶுத்தம் பரம் நிர்மலமேகரூபம் ।
ஸந்த்ருஶ்யதே வாப்யதிகம்யதே வா
தத்ஜ்ஞாநம் அஜ்ஞாநம் அதோந்யதுக்தம் ॥)

2 ' सर्वेषामेव धर्माणां उत्तमो वैष्णवो विधिः ।
न विष्ण्वाराधनात् पुण्यं विद्यते कर्म वैदिकम् ॥ '

(ஸர்வேஷாமேவதர்மாணும் உத்தமோ வைஷ்ணவோவிதி: ।
நவிஷ்ண்வாராதநாத் புண்யம் வித்யதே கர்மவைதிகம் ॥

3 ' इतिसंसार दुःखार्क तापतापित चेतसाम् ।
विमुक्तिपादपच्छायामृते कुत्र सुखं नृणाम् ॥ '

(இதிஸம்ஸாரதுக்கார்க தாபதாபித சேதஸாம் ।
விமுக்திபாதபச்சாயாம்ருதே குத்ர ஸுகம் ந்ருணும் ॥)

---

1 விஷ்ணு புராணம். யேந - எந்த ஜ்ஞாநத்தினால், அஸ்த-போக்கடிக்கப்பட்ட, தோஷம் - தோஷங்களையுடையதாயும்சுத்தம் - பரிசுத்தமாயும், பரம் - உயர்ந்ததாயும், நிர்மலம் - ஜ்ஞாநத்தின் சுருக்கம் முதலியகுறைகள் இல்லாததாயும், ஏகரூபம் - ஒவிதமான ஸ்வரூபத்தையுடையதாயும் இருக்கிற, தத்-அந்தப் பர ப்ரஹ்மம், ஸம்ஜ்ஞாயதே-அறியப்படுகிறதோ, ஸந்த்ருச்யதே வா - அல்லது பார்க்கப்படுகிறதோ, அதிகம்யதே வா - அல்லது அடையப்படுகிறதோ, தத் - அது, ஜ்ஞாநம், (என்றுசொல்லப்படுகிறது)அத: - அதை விட அந்யத்'- வேறுபட்டது, அஜ்ஞாநம் உக்தம் - அஜ்ஞாநம் என்று சொல்லப்பட்டது.

2 ஸர்வேஷாமேவ - எல்லா, தர்மாணும் - தர்மங்களுக்கும், வைஷ்ணவ: - விஷ்ணுவைச் சேர்ந்ததான, விதி: - விதிக்கப்பட்ட கர்மம், உத்தம: - உயர்ந்தது, விஷ்ண்வாராதநாத் - விஷ்ணுவினுடைய ஆராதநத்தைக் காட்டிலும், புண்யம்-பரிசுத்தமான, வைதிகம்- வேதத்தில் சொல்லப்பட்ட, கர்ம - காமம், ந வித்யதே இல்லை.

2 இதி - இப்படி, ஸம்ஸார - ஸம்ஸாரத்தில் உண்டான துக்கார்க்க - துக்கமாகிறஸூர்யனுடைய,தாப - தாபத்தினால், தாபித பத்தாதையடைந்த, சேதஸாம் - மனதையுடைய, ந்ருணும் - மனிதர்களுக்கு, விமுக்தி பாதபச்சாயாம்ருதே - மோக்ஷத்தைத்தரும்மரமாகிற பகவானாகிற நிழலைத் தவிர, குத்ர - எந்த இடத்தில், ஸுகம் - ஸுகமுண்டகும்?

1 ' तदस्य त्रिविधस्यापि दुःखजातस्य पण्डितैः ।
गर्भ जन्म जराद्येषु स्थानेषु प्रभविष्यतः ॥
निरस्तातिशयाह्लाद सुखभावैकलक्षणा ।
भेषजं भगवत् प्राप्तिरेकान्तात्यन्तिकी मता ॥ '

(ததஸ்ய த்ரிவிதஸ்யாபி து:க ஜாதஸ்ய பண்டிதை: ।
கர்பஜந்ம ஜராத்யேஷு ஸ்த்தாநேஷு ப்ரபவிஷ்யத: ॥)
(நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைகலக்ஷணா ।
பேஷஜம் பகவத் ப்ராப்திரேகாந்தாத்யந்திகீ மதா ॥)

2 ' திருமாலை யல்லது தெய்வம் என்று ஏத்தேன்',

3 ' திரு நாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்
துய்ம்மினோ '

4 ' கோலத் திருமாமகளோடு உன்னை '

இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

மேல் கவி இப்படி ப்ரதிஷ்ட்டித புத்தியான ப்ரபந்நனுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமான உத்தர க்ருத்ய விசேஷத்திலும்(ல்) உகப்பு இருக்கும்படியை

5 ' मुक्त्यै निर्विषयं मनः ' (முக்த்யை நிர்விஷயம் மந:)

இத்யாதிகளின் படியே உபகாரகதமமாய் அந்தரங்கமுமான

---

1 விஷ்ணுபுராணம்-6-5 58, 59

தத் - ஆகையினால், அஸ்ய - இந்த, த்ரிவிதஸ்யாபி - மூன்று விதமாயிருக்கிற, கர்ப்ப ஜந்ம ஜராத்யேஷு - கர்ப்பம், பிறப்பு, கிழத்தனம் முதலிய, ஸ்த்தாநேஷு-தசைகளில், ப்ரபவிஷ்யத: - உண்டாகிற, துக்கஜாதஸ்ய - துக்கங்களின் கூட்டத்திற்கு, பண்டிதை: - வித்வான்களினால், நிரஸ்தாதிசய - மேற்பட்ட எல்லையில்லாத, ஆஹ்லாத- ஆநந்தத்தைக் கொடுக்கக் கூடிய ஸுகபாவைக - ஸுகமாயிருக்கையொன்றையே, லக்ஷணா - லக்ஷணமாகவுடைய, ஏகாந்தாஆத்யந்திகீ- (தன் ஸ்வரூபமுள்ள வரையில்)ஒரே விதமானப்ரயோஜனமாக இருக்கிற, பகவத்ப்ராப்தி: - பகவானை அடைவதே, பேஷஜம் - மருந்து (என்று), மதா-எண்ணப்பட்டது.

2 முதல் திருவந்தாதி-64 3திருவாய்-4-1-1 4 திருவாய்6-9-3

5 வி.பு 6-7-28,நிர்விஷயம் - விஷயங்களில் பற்றுதல் இல்லாத, மந:- மனது, முக்த்யை - மோக்ஷத்திற்குக் காரணமாகிறது.

மநஸ்ஸைப்பற்ற உபதேஶிக்கிருப் போல ப்ரவ்ருத்தமான வாக்ய விஶேஷத்தாலே காட்டுகிறது.

இதில் ' சிறு பயனில் படியாத தகவோர் ' என்றது

1 ' गतागतं कामकामा लभन्ते '

(கதாகதம் காம காமா லபந்தே) என்றும்,

2 ' अन्तवत् तु फलं तेषां तत् भवत्यल्पमेधसाम् '

(அந்தவத் து பலம் தேஷாம் தத் பவத்யல்பமேதஸாம்) என்றும்,

3 ' ये तु शिष्टास्त्रयो भक्ताः फलकामा हि ते मताः ।
सर्वे च्यवनधर्माणः '

(யே து ஶிஷ்டாஸ் த்ரயோ பக்தா: பலகாமா ஹி தே மதா:| ஸர்வே ச்யவநதர்மாண:) என்றும்

சொல்லுகிற க்ஷுத்ர ப்ரயோஜநங்களை ஆசைப்படாதே, ப்ரா ரப்த கர்ம வஶத்தாலே வந்தவற்றிலும்

4 ' अनन्तं वत मे वित्तं यस्य मे नास्ति किंचन '

(அநந்தம் பத மே விதத்தம் யஸ்ய மே நாஸ்தி கிஞ்சந |

5 ' मिथिलायां प्रदीप्तायां न मे किंचित् प्रदह्यते '

---

1 கீதை-9-21 காம காமா: - காம்ய புருஷார்த்தங்களை ஆசைப்படும வர்கள், கதாகதம் - (ஸ்வர்க்காதிகளுக்குப்) போவதையும் அங்கிருந்து திரும்பி வருவதையும், லபந்தே - அடைகிறார்கள்.

2 கீதை - 7 - 23. அல்பமேதஸாம் - அல்ப புத்தியையுடைய, தேஷாம் - அவர்களுக்கு, தத் - அந்த, பலம்து - ப்ரயோஜனமோ எனில் அந்தவத் - நாசத்தையுடையதாக, பவதி - ஆகிறது.

3 பார - சாந்தி - 350 - 33 ஶிஷ்டா - மிகுதியான, த ர ய மூன்று விதமான, பகதா - பக்தி செய்து கொண்டிருக்கிறவர்கள், யே எவர்களோ, தே - அவர்கள், பல காமா - பலத்தில் ஆசையுடையவர்க ளாக, பத - ஹி - என்னென்பட்டவர்களல்லவா ஸர்வே - அவர்களெல் லோரும், ச்யவந தாமாண - நழுவுவதையே ஸ்வபாவமாகவுடையவர்கள்

4 மே - எனதுடைய, விதத்தம் - பணம், அநந்தம் - அள விலாததுமாகிய, மே - எனக்கு, கிஞ்சந - ஒன்றும் நாஸ்தி - இல்லையோ, பத - ஆச்சர்யம்,

5 மிதிலாயாம் - (எனது தலைநகரான) மிதிலா பட்டணம், ப்ரதீபதாயாம் - (சதுருக்கம்) கொளுத்தப்பட்டிருந்த

(மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் ந மே கிஞ்சித் ப்ரதஹ்யதே) என்னும்படி துவக்கற்று,

1 'प्रतिबुद्धस्तु मोक्षभाक्' (ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக்) என்றும்

2 'जायमानं हि पुरुषं यं पश्येत् मधुसूदनः ।
सात्त्विकः स तु विज्ञेयः स वै मोक्षार्थचिन्तकः ॥'

(ஜாயமாநம்ஹி புருஷம் யம் பஶ்யேந் மதுஸூதந: ।
ஸாத்த்விகஸ் ஸது விஜ்ஞேய: ஸவை மோக்ஷார்த்த சிந்தக: ॥)
என்றும்,

3 'கண்டு கேட்டு உற்று' என்கிற பாட்டிலும்,

4 'ஊனேறு செல்வத்தி' (து என்கிற திருமொழியி) லும் சொல்லுகிறபடியே த்வயத்தில் உத்தரகண்டத்தில் ஊற்ற முடையவர்கள் என்றபடி.

'தகவோர்' என்றது

5 'परीक्ष्य विविधोपायैः कृपया निस्स्पृहो वदेत्'

(பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நிஸ்ஸ்ப்ருஹோ வதேத்) இத்யாதிகளிற் படியே ஸுபரீக்ஷிதரான ஸச்சிஷ்யர்களைப் பெற்றால் க்யாதி லாப பூஜாதி ப்ரயோஜநாந்தர நிரபேக்ஷமாகச் சொல்லியல்லது தரிக்கமாட்டாதபடியான பர துக்க நிராகரணேச்சையுடையவர்கள் என்றபடி.

'எம்மைச்சேர்க்க' என்றது

போதிலும், மே - என்னுடைய ஆத்ம ஸ்வரூபத்திற்கு, கிஞ்சித் - ஒன்றும், ந ப்ரதஹ்யதே - கொளுத்தப்படவில்லை,

1 பாரதம்-350-35ஜ்ஞாநியோவெனில் மோக்ஷத்தைஅடைகிறவன்.

2 பாரதம் - சாந்தி - 358 - 73 ஜாயமாநம் - பிறக்கும்தசையில், யம்புருஷம் - எந்தப் புருஷனை, மதுஸூதந: - பகவான், பச்யேத் -கடாக்ஷிப்பனோ, ஸ: து - அவனே, ஸாத்த்விக: - ஸத்த்வ குணமுடையவனாக, விஜ்ஞேய: - அறியத்தக்கவன், ஸ வை - அவனே, மோக்ஷார்த்த சிந்தக: - மோக்ஷமாகிற ப்ரயோஜனத்தைப் பற்றி நினைக்கிறவன்.

3 திருவாய்-4-9-10 4 பெருமாள் திருமொழி-4

5 சாண்-ஸ்ம்-1-117 விவிதோபாயை:-பலவிதமானஉபாயங்களினால், பரீக்ஷ்ய - பரீக்ஷித்து, நிஸ்ஸ்ப்ருஹ: - ஒரு ப்ரயோஜனத்திலும் ஆசையில்லாதவனாய், க்ருபயா - க்ருபையினால் வதேத் - சொல்ல வேண்டும்.

1 ' न धर्मे निष्ठोस्मि '
(நதர்ம நிஷ்ட்டோஸ்மி) என்கிற ஶ்லோகத்திலும்

2 ' நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் '
இத்யாதிகளிலும் சொல்லுகிற ஆகிஞ்சந்ய பூர்த்தியுடைய நம்மைக்கெடுமரக்கலத்தை ஓர் அநுகூலஸதாகதி கரைசேர்க்குமா போலே

3 ' शोक मोह ग्रहग्रस्तो विचरन् भवसागरे ।
इहाद्य विधिना प्राप्तस्तव पादाब्जपत्तनम् ॥ '
(ஶோக மோஹ க்ரஹக்ரஸ்தோ விசரந் பவஸாகரே ।
இஹாத்யவிதிநா ப்ராப்தஸ் தவ பாதாப்ஜ பத்தநம் ॥)
என்னும்படி விண்ணோர் பிரானார் மாசின் மலரடிக் கீழ் எம்மைச் சேர்க்க என்றபடி.

'அடைக்கலம் கொண்ட திருமால்' என்றது இப்படித் தானும் பிறரும் தனக்குத்தஞ்சமாகாதபடி நிற்கிற நம்மை அநந்ய ரக்ஷ்யதவேந ஸமர்ப்பிக்க அலங்கநீய புருஷகார குணவிஶேஷங்களாலே ப்ரேரிதனாய்க் கொண்டு பரஸ்வீகாரம் பண்ணின ஶ்ரியःபதி என்றபடி.

' தானே மறு பிறவி அறுத்து ' என்றது அடியிலே கரணகளேபர ப்ரதாநாதி பூர்வகமாக இவ்வளவும் க்ருஷி பண்ணின ஸர்வவித பந்துவான தானே தேஹாந்தர பரிக்ரஹ ஹேதுவான புண்ய பாபஸம்ஜ்ஞித பாப வர்க்கத்தை எல்லாம் கழித்து என்றபடி.

' அழியாவானில் வைக்கும் ' என்றது

---

1 ஆள. ஸ்தோ-22 ந தர்ம நிஷ்ட்டோஸ்மி - தர்மத்தில் நிஷ்ட்டையுடையவனல்லேன்.

2 திருவாய்-5-7-1

3 ஶோக மோஹ க்ரஹ க்ரஸ்த: - துக்கம் அஜ்ஞாநம் இவைகளாகிற பிசாசுகளினால் பிடிக்கப்பட்டவனாய், பவஸாகரே - ஸம்ஸார ஸமுத்திரத்தில், விசரந் - ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிற நான், இஹ - இவ்விடத்தில், அத்ய - இப்பொழுது, விதிநா - பாக்யத்தினால், தவ - உம்முடைய, பாதாப்ஜ பத்தநம் - தாமரைப் புஷ்பத்தைப் போன்ற திருவடிகளாகிய நகரத்தை, ப்ராப்த: - அடைந்தேன்.

1 ' दिव्यं स्थानमजरं चाप्रमेयं दुर्विज्ञेयञ्चागमैः गम्यमाद्यम् '

2 ' एते वै निरयास्तात स्थानस्य परमात्मनः ॥ '

(திவ்யம் ஸ்த்தாநமஜரம் சாப்ரமேயம்

துர்விஜ்ஞேயம் ச ஆகமைர்கம்யமாத்யம்)

(ஏதேவை நிரயாஸ்தாத ஸ்த்தாநஸ்ய பரமாத்மந:)

இத்யாதிகளில் சொன்ன கலங்காப் பெருநகரத்திலே நித்ய ஸூரிகளோடு நிர்விஶேஷமாக மேலுள்ளகாலம் எல்லாம் புணை கொடுக்கிலும் போக வொட்டாதே வைகுகும் என்றபடி.

' மனமே ! நீ மகிழாதே இருப்பது என் கொல் ' என்றது நிஶ்ஶேஷ அநிஷ்ட நிவ்ருத்தியையும் நிரதிஶய புருஷார்த்தத்தையும் பெறுகைக்கு நிஸ்ஸமாப்யதிகனான ஸத்யஸங்கல்பன்

3 ' मोक्षयिष्यामि मा शुचः ' (மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:)

என்று நினைப்பிட்டருளினபின்பு ஹர்ஷஸ்த்தாநத்திலே ஶோகிக்கைக்கு ஒருபடியாலும் ப்ராப்தி இல்லை என்றபடி.

' உறுவது உனக்கு உரைக்கேன் இங்கிருந்த காலம் ' என்றது

4 ' अस्थि स्थूणं स्नायुबद्धं मांसशोणितकर्दमम् ।
चर्मावनद्धं दुर्गन्धि पात्रं मूत्रपुरीषयोः॥
जरा शोकसमाविष्टं रोगायतनमातुरम् ।
रजस्वलमनित्यञ्च भूतावासमिमं त्यजेत् ॥ '

---

1 திவ்யம் - ஆகாசத்தில் இருக்கிற, ஸ்த்தாநம் - இடமானது, (பரம பதம்), அஜரம் - கிழத்தனமில்லாதது, அப்ரமேயம்அளவிடமுடியாதது, துர்விஜ்ஞேயம் - ப்ரத்யக்ஷத்தினால்பார்க்கமுடியாதது, ஆகமை: கம்யம் - வேதங்களைக் கொண்டு அறியத்தக்கது, ஆத்யம் - எல்லாவற்றிற்கும் முதலானது.

2 பார-சாந்தி-196 - 6 தாத - அப்பனே ! ஏதேவை- இந்த ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள், பரமாத்மந: - பரமாத்மாவினுடைய, ஸ்த்தாநஸ்ய - இருப்பிடமான பாம பதத்திற்கு, நிரயா: - நரகம் போன்றவைகள்.

3கீதை-18-66 மோக்ஷயிஷ்யாமி -எல்லாப் பாபங்களினின்றும் உன்னை விடுவிக்கிறேன், மா சுச: - நீ துக்கப்படாதே.

4 அஸ்த்தி ஸ்த்தூணம் - எலும்புகளாகிற தூண்களையுடையதாயும், ஸ்நாயுபத்தம்-நரம்புகளால் கட்டப்பட்டதாயும், மாம்ஸ

(அஸ்த்தி ஸ்த்தூணம் ஸ்நாயுபத்தம் மாம்ஸ ஶோணிதகர்த்தமம்
சர்மாவநத்தம் துர்க்கந்திபாத்ரம் மூத்ர புரீஷயோ: ।)
ஜராஶோக ஸமாவிஷ்டம் ரோகாயதநமாதுரம் ।
ரஜஸ்வலம் அநித்யம்ச பூதாவாஸமிமம் த்யஜேத் ॥)

1 ' इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः '

2 ' असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् '

(இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:)
அஸம்ஶயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம்)

3 ' ஊனிடைச் சுவர் வைத்து என்பு தூண் நாட்டி
உரோமம் வேய்ந்தொன்பது வாசல்
தானுடைக்குரம்பை'

4 ' பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலரு '

5 ' வன் பரங்களெடுத்து ஐவர் திசை திசை வலித்து
எற்றுகின்றனர் '

6 ' நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன் '

ஶோணித கர்த்தமம் - மாம்ஸம் ரத்தம் இவைகளாகிற சேறுகளையுடையதாயும், சர்மாவநத்தம் - தோலால் மூடப்பட்டதாயும், துர்க்கந்தி - கெட்ட நாற்றமுடையதாயும், மூத்ர புரீஷயோ:-மூத்ரம் மலம் இவைகள் நிறைந்த, பாத்ரம் - பாத்திரமாயும், ஜராஶோக ஸமாவிஷ்டம் - கிழத்தனம் துக்கமிவைகள்நிறைந்ததாயும்,அன்றிக்கேகிழத்தனமாகிறதுக்கத்தையுடையதாயும், ரோகாயதநம் - ரோகங்களுக்கு இருப்பிடமாயும், ஆதுரம் - (இன்னம் பல) தொந்தரவுகளினால் பீடிக்கப்பட்டதாயும், ரஜஸ்வலம்-அழுக்கையுடையதாயும் அநித்யம் - அழியக்கூடியதாயும், பூதா வாஸம் - ப்ராணிகளுக்கு இருப்பிடமாயும் இருக்கிற, இதம் - இந்தச்சரீரத்தை, பரித்யஜேத் - விட்டுவிட வேண்டும்.

1 கீதை-2-60 ப்ரமாதீநி - பலாத்காரம் செய்யக்கூடிய ஸ்வபாவமுடைய இந்த்ரியாணி - இந்த்ரியங்கள், மந: - மனதை, ப்ரஸபம் - பலாத்காரம் செய்து, ஹரந்தி - அபஹரிக்கின்றன.

2 கீதை-6-35 மஹாபாஹோ - பராக்ரமசாலியான அர்ஜுநனே சலம் - சலிக்கும் ஸ்வபாவத்தையுடைய, மந: - மனது, துர்நிக்ரஹம் — அடக்க முடியாதது, அஸம்சயம் - ஸந்தேஹமில்லை

3 பெரிய திருமொழி-3-6-9

4 திருவாய்-3-2-3 5 திருவாய்-7-1-10

6 பெரிய திருமொழி-1-1-4

இத்யாதிகளிற் சொன்னதுர்நிவார துஸ்த்யஜ தோஷ பஹுளதே ஹேந்த்ரியங்களோடுகூட

1 'अतिमानं सदा हासं वाक्प्रलापं विकत्थनम् ।
अनात्मन्यात्म मननं आत्मनिन्दा प्रशंसने ॥'

(அதிமாநம் ஸதாஹாஸம் வாக்ப்ரலாபம் விகத்தநம் ।
அநாத்மந்யாத்ம மநநம் ஆத்ம நிந்தா ப்ரசம்ஸநே ॥)

இத்யாதிகளில் சொன்ன ராஜஸ தாமஸ விகாரங்களுக்கு விளைநிலமான கொடு உலகத்திலே ஒரு மருளாலே இருக்கவேண்டிய காலத்தளவும் என்ன பிழை வருகிறதோ என்றும், இப்போது நிரபராத ப்ரதாந கைங்கர்யத்தை உளைந்து நிற்கிறோம் என்றும் பரிதபிக்கப்பார்த்தாயாகில் ஸாத்யோபாய விசேஷவசீக்ருதமான ஸித்தோபாய விசேஷத்தாலே ஸாத்ய ப்ராப்ய விசேஷ லக்ஷ்ய பூத ஸித்த ப்ராப்ய விசேஷ ப்ராப்தியில் ஸம்சய மற்ற உனக்கு மிகவும்(மற்றும்வரும்)பரிதாப(மு)ம் சமிக்கும்படி நின்ற நிலைக்கு உற்றது சொல்லுகிறோம் என்றபடி.

'ஒரு பிழையும் புகுதாத உணர்த்தி வேண்டி' என்றது பகவதபசாராதிகள் எல்லாவற்றிற்கும் நிதாநம் தத்த்வஜ்ஞாநாதி வைகல்யமாகையாலே

2 'तत् पाद भक्ति ज्ञानाभ्यां फलमन्यत् कदाचन ।
न याचेत् पुरुषो विष्णुं याचनात् नश्यति ध्रुवम् ॥'

(தத் பாதபக்தி ஜ்ஞாநாப்யாம் பல மந்யத் கதாசந ।
நயாசேத் புருஷோ விஷ்ணும் யாசநாத் நச்யதி த்ருவம் ॥)

---

1 அதிமாநம் - கர்வப்படக்கூடாத விஷயத்தில் கர்வப்படுதல், ஸதா-எப்பொழுதும், ஹாஸம் - சிரிப்பு, வாக் ப்ரலாபம் - வாயால் இஷ்டப்படி சொல்லுதல், விகத்தநம் - டம்பம் அடித்துக்கொள்ளுதல், அநாத்மநி - ஆத்மாவல்லாத தேஹத்தில், ஆத்ம மநநம் - இதுவே ஆத்மா என்று எண்ணுதல், ஆத்ம நிந்தா ப்ரசம்ஸநே - தன்னைப்பற்றி நிந்தித்துக்கொள்ளுதல், ஸ்தோத்ரம் செய்துகொள்ளுதல் இவைகளைச் செய்யக்கூடாது.)

2 புருஷ: - மனிதன், விஷ்ணும்-பகவானை, தத் பாதபக்தி ஜ்ஞாநாப்யாம் - அவன் திருவடிகளில் பக்தி ஜ்ஞாநம் இவைகளைத் தவிர, அந்யத் - வேறு, பலம் - ப்ரயோஜனத்தை, கதாசந-ஒரு பொழுதும் நயாசேத் - யாசிக்கக்கூடாது, யாசநாத் - யாசிப்பதினால், நச்யதி - நாசம் அடைகிறான், த்ருவம் - நிச்சயம்.

இத்யாதிகளிற்படியே அநந்ய ப்ரயோஜந(னுய்)ரைக் கொண்டு தத்த்வ ஜ்ஞாநாதி வ்ருத்தியை அபேக்ஷித்து என்றபடி

'பெறுவதெல்லாம் இங்கே நாம் பெற்றுவாழ' என்றதுபரம பதத்திலே சென்று ஶேஷ ஶேஷாஶநாதி ஸமாநமாகவேபெறக் கடவ ஶேஷவ்ருத்திகளை யெல்லாம் இந்தளத்திலே தாமரைப் பூ(த்தா)ப்போலவும் மரு பூமியிலே மஹாதடாகத்தைப் போலவும்

1 'ईश्वरोऽहम् भोगी '(ஈஶ்வரோஹம் அஹம்போகீ) இத்யாதிகளிற்படியேஸாதிரம்புதொடுத்துநிற்கும்தேஶத்திலேஆத்ம தாஸ்யத்தை உணர்ந்து அகிஞ்சநராய் அநந்ய ப்ரயோஜநராய் ந்யஸ்தபரராய் நிர்ப்பரரான நாம் நிரபாயமாகப் பெற்று ஸந்துஷ் டராக என்றபடி.

'பேரடிமையால் ஏது என்று இகழேல்' என்றது ஸர்வ ஶக்தியான பரமகாருணிகன் பக்கலிலே பரந்யாஸம் பண்ணினோ மேயாகில் பண்ணப்போகிற கைங்கர்யம் மோக்ஷோபாயமன் றாகில் இதென்ன ப்ரயாஸம் என்று ஸ்வரூபாநுகுண வ்ருத்தி யான கைங்கர்யத்தை உபேக்ஷியாதேகொள் என்றபடி.

'நீயே' என்றது மேலும் மோக்ஷோபாயமல்லாத கைங்கர் யத்தையன்றோ நீ பரமபுருஷார்த்தமாகக் கோலி(ரி)னது ஆனால் இங்கும் அது ஸமாநமன்றோ என்று உணர்ந்துகொள் என்றபடி.

மேல் ஆர்யையில்

2 'विद्याचोरो गुरुद्रोही वेदेश्वरविदूषकः ।
त एते बहुपाप्मानः सद्यो दण्ड्याः इति श्रुतिः ॥ '

(வித்யா சோரோ குரு த்ரோஹீ வேதேஶ்வர விதூஷகः ।
த ஏதே பஹுபாப்மாநः ஸத்யோ தண்ட்யா இதி ஶ்ருதி :॥)

இத்யாதிகளிற்சொன்ன விபரீதர் கையில் அகப்படாதபடி ரக்ஷிக்க விதிக்கிறது.

---

1 அஹம் - நான், ஈச்வரः - யஜமானன், அஹம் - நான், போகீ - ஶேகத்தை அனுபவிக்கிறவன்,

2 வித்யா சோரः - வித்யையைத் திருடுகிறவன், குரு த்ரோஹீ - ஆசார்யனுக்கு த்ரோஹம் செய்பவன், வேதேச்வர விதூஷகः-வேதம்

'ரக்ஷந்து' என்றது இதனுடைய சீர்மை அறிந்து

1 'यो गोपायत्ययोग्यानां योग्यानां संप्रयच्छति।
इममर्थं स मान्यो मे स्वस्ति वोऽस्तु व्रजाम्यहम्॥'

(யோ கோபயத்யயோக்யாநாம் யோக்யாநாம் ஸம்ப்ரயச்சதி।
இமமர்த்தம் ஸ மாந்யோமே ஸ்வஸ்திவோऽஸ்து வ்ரஜாம்யஹம்॥

2 'विद्ययैव समं कामं मर्तव्यं ब्रह्मवादिना।
आपद्यपि हि घोरायां न त्वेनां ईरिणे वपेत्॥'

(வித்யயைவ ஸமம் காமம் மர்த்தவ்யம் ப்ரஹ்மவாதிநா।
ஆபத்யபி ஹி கோராயாம் ந த்வேநாம் ஈரிணே வபேத்॥)

இத்யாதிகளின்படியே சிந்தாமல் கொள்ளவேண்டும் என்றபடி,
'அநந்யரக்ஷ்யாம்' என்றது

3 'नापृष्टः कस्यचित् ब्रूयात् न चान्यायेन पृच्छतः'

(நாப்ருஷ்ட: கஸ்யசித் ப்ரூயாத் ந சாந்யாயேந ப்ருச்சத:)என்றும்

4 'पृष्टोऽपि न वदेदर्थं गुह्यं सिद्धान्तमेव च'

ஈச்வரன், இவர்களைத் தூஷிப்பவன், தே ஏதே - அந்த இவர்கள், பஹு பாப்மாந: - அதிகமான பாபங்களைச் செய்தவர்கள், ஸத்ய: - அப்பொழுதே. தண்ட்யா: - தண்டிக்கப்படத்தக்கவர்கள், இதி - என்று, ச்ருதி: - ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது, இங்கு வித்யா சோர: - என்றது நேரில் சாஸ்த்ர விதிப்படி அர்த்தங்களை க்ரஹிக்காமல் மறைவாய் இருந்து கொண்டு க்ரஹிப்பவனும், நேரில் க்ரஹித்த போதிலும் அப்படி க்ரஹித்ததாகச் சொல்லிக்கொள்ளாமல் இருப்பவனும் சொல்லப்படுகிறார்கள்.

1 ஸாத்வதம் - 25-375— ய: - எவன், இமம் - இந்த, அர்த்தம்- அர்த்தத்தை, அயோக்யாநாம் உபதேசம் செய்யத் தகாதவர்களுக்கு, கோபாயதி - மறைக்கிறானோ, யோக்யாநாம் - உபதேசம் செய்யத்தகுந்தவர்களுக்கு, ப்ரயச்சதி - உபதேசிக்கிறானோ, ஸ: - அவன், மே - எனக்கு, மாந்ய: - பஹுமானம் செய்யத்தக்கவன், வ: - உங்களுக்கு, ஸ்வஸ்தி - மங்களம், அஸ்து - உண்டாகட்டும், அஹம் - நான், வ்ரஜாமி - போகிறேன்.

2 மனுஸ்ம்ருதி - 2-63. ப்ரஹ்மவாதிநா -ப்ரஹ்மத்தை உபதேசம் செய்பவனால், காமம் - தன் இஷ்டப்படி, வித்யயா ஏவ ஸமம் - ப்ரஹ்மவித்யையுடன்கூடவே, மர்த்தவ்யம் - மரணம் அடையத்தக்கது, கோராயாம் - அதிபயங்கரமான. ஆபத்யபி - ஆபத்காலத்திலும், ஏநாம் - இந்தவித்யையை, ஈரிணே - கிளர் பூமியில், நவபேத்- விதைக்கக்கூடாது.

3 கஸ்யசித் - ஒருவனுக்கும், அப்ருஷ்ட: - கேட்கப்படாதவனாய், நப்ரூயாத் - சொல்லக்கூடாது, அந்யாயேந - க்ரமம்இல்லாமல் அதாவது சாஸ்த்ரவிதிப்படி இல்லாமல், ப்ருச்சத: - கேட்கிறவனுக்கும் (சொல்லக்கூடாது)

(ப்ருஷ்டோபி நவதேத் அர்த்தம் குஹ்யம் ஸித்தாந்தமேவச)
என்றும் சொல்லுகிற நியமங்களைக் கடந்து(நிரூபித்து) அபாத்ர வ்யயம் பண்ண ருசியில்லாத அநந்யப்ரயோஜநராலே ரக்ஷிக்கப்படும்என்றபடி. அங்ஙனன்றிக்கே

1 ‘ ऊषरे निवपेत् बीजं षण्डे कन्यां प्रयोजयेत् ।
सृजेत् वा वानरे मालां नापात्रे शास्त्रमुत्सृजेत् ।। ’

(ஊஷரே நிவபேத் பீஜம் ஷண்டே கந்யாம் ப்ரயோஜயேத் ।
ஸ்ருஜேத்வா வாநரே மாலாம் நாபாத்ரே ஶாஸ்த்ரமுத்ஸ்ருஜேத் ।
என்கிறபடியே அபாத்ரத்திலே ஸமர்ப்பித்தால் மாணிக்கம் கொண்டு குரங்கு எறி ஒத்து (எறிவித்தது போல்) இதுக்கு ரக்ஷை உண்டாகாது என்றபடி.

‘ லகீயஸீமபி கரீயஸீம் ’ என்றது பரிமாணாதிகளாலே சிறியரத்ன வளீ ப்ரபாதிகளாலே பெரியதாய் இருக்குமா போலே அல்ப க்ரந்தமாயிருந்ததேயாகிலும் அஶேஷ ஸாரார்த்த ஸங்க்ரஹமா கையாலே இது கௌரவாதிஶயத்தை உடைத்தானதுஎன்றபடி.

‘ ஸந்த: ’ என்றது

4 ‘ सारासार विवेकज्ञाः गरीयांसो विमत्सराः
प्रमाणतन्त्राः सन्तीति कृतो वेदार्थसंग्रहः ।। ’

(ஸாராஸார விவேகஜ்ஞா: கரீயாம்ஸோ விமத்ஸரா:।
ப்ரமாணதந்த்ரா:ஸந்தீதி க்ருதோ வேதார்த்தஸங்க்ரஹ: ।।)
என்று பாஷ்யகாரர் அருளிச்செய்த குணவிஶேஷங்களுடையவர்

---

1 சாண்டி - ஸ்ம் - 4-255, ப்ருஷ்டோபி - கேட்கப்பட்டவனாயிருந்தபோதிலும், குஹ்யம்-ரஹஸ்யமான, அர்த்தம் -அர்த்தத்தையும், ஸித்தாந்தமேவச-ஸித்தாந்தத்தையும்,நவதேத் - சொல்லக் கூடாது.

2 சாண்டி ஸ்ம்ருதி - 4-258. ஊஷரே-உவர்மண் பூமியில், பீஜம்-விதையை, நிவபேத் - விதைக்கட்டும். ஷண்டே - நபும்ஸகனிடத்தில், கந்யாம் - பெண்ணை, ப்ரயோஜயேத் - கொடுக்கட்டும், வாநரே - குரங்கின் இடத்தில், மாலாம் - புஷ்பமாலையை, ஸ்ருஜேத் வா - கொடுத்தாலும் கொடுக்கட்டும், அதாவது இவைகளைச் செய்தாலும் செய்யலாம், அபாத்ரே - பாத்ரமல்லாதவனிடத்தில், ஶாஸ்த்ரம் - சாஸ்திரத்தை, ந உத்ஸ்ருஜேத்-உபதேசம் செய்யக் கூடாது

3 வேதார்த்தஸங்க்ரஹம். ஸாராஸாரவிவேகஜ்ஞா: - ஸாரம் அஸாரம் இவைகளின் பேதத்தை அறிந்தவர்களாயும், கரீயாம்ஸ: - பெரியவர்களாயும், விமத்ஸரா: - பொறாமை இல்லாதவர்களாயும் ப்ர

என்றபடி.

'லக்ஷ்மீஸஹாயஹ்ருத்யாம்' என்றது திருமகள்சேர் மார்பனுக்குக் கோலமாமணி ஆரமும் முத்துத்தாமமும் போலே இதுவும் ஹ்ருதயத்துக்கு ஏற்கும் திருவாபரணம் என்றபடி.

'ரஹஸ்ய ரத்நாவளிம்' என்றது ரத்நாவளீ போலே ப்ரகாஶாதி பஹுளமாய்ச் சேர்த்தியுண்டாம்படி கோப்புண்டது என்றபடி.

'ரம்யாம்' என்றது ஸ்வபாவ ஸௌபாக்யத்தாலும் ப்ரமாணச் சேர்த்தியாலும் ஆபாலபண்டிதம்அநவரதஸேவ்யமாயிருக்குமது என்றபடி.

இப்படியால் ஒரு முமுக்ஷுவினுடைய ப்ரதம மத்யம உத்தம தஶைகளை ப்ரகாஶிப்பிக்கிற ரஹஸ்யரத்நாவளிக்கு ஸூத்ர ஸ்த்தாநீயமான முதற்கவியில் ஆசார்ய முகத்தாலே ஸமர்ப்பித பரனாய் ஸர்வேஶ்வரனால் ஸ்வீக்ருதபரனானவனுடைய நிர்ப்பரத்வாநுஸந்தாநம் காட்டப்படுகிறது.

'ஒருஜீவனுக்கு ஒரு ஜீவன் தஞ்சமல்லன்' என்றது தொடங்கிஇருபத்துநாலுவாக்யங்களா(ளி)ல் * இவ்விரண்டுவாக்யங்களாலே ஶரண்யவிஶேஷ நிர்த்தாரணமும், கடகவிஶேஷ க்ருத்யமும், கடகாபேக்ஷா நிதாநமும், ஶரண்ய விஶேஷவஶீகரண விஶேஷமும், அதனுடைய ஸௌகர்யாதிவிசேஷமும், க்ருதக்ருத்யனுடைய உத்தரக்ருத்ய விஶேஷமும், அபராத பரிஹார ப்ரயோஜநவிஶேஷமும், ப்ரபத்தி ப்ரபாவ விஶேஷமும், ப்ரபந்நனுக்கு ப்ரதிகூல அநுகூல அநுபயங்கள்வந்தால் பண்ணக்கடவ ப்ரதிபத்தி விஶேஷமும், ஶாஸ்த்ராதிலங்கந ப்ரஸக்தி பரிஹாரமும்,உசிதங்களான கைங்கர்யங்களில் ஶரண்யாபிமதி தாரதம்யமும், கைங்கர்ய ஸ்த்தாந விஶேஷமும் சொல்லுகிறது.

மாணதந்த்ரா: - ப்ரமாணங்களுக்கு வசப்பட்டவர்களாயும் இருப்பவர்கள், ஸந்தி-இருக்கிறார்கள், இதி - என்று நினைத்து, வேதார்த்தஸங்க்ரஹ: - வேதார்த்த ஸங்க்ரஹம் என்னும் இந்த க்ரந்தம், க்ருத: செய்யப்பட்டது * இவ்விரண்டு - இரண்டு இரண்டு

மேல் மூன்றுவாக்யங்களாலே அங்கவிஶேஷ ஶங்கா பரிஹாரம் பண்ணுகிறது.

அநந்தரம் மூன்று வாக்யங்களினாலே ஸம்ஸார மோக்ஷாந்தராள ஸ்த்திதனுக்கு ஸந்தோஷாதிஶயார்த்தமாக முமுக்ஷுக்களல்லாதவர்களை முக்தி மார்க்கத்திலே மூட்டுகைக்காகவும் காலத்ரய வைஷம்ய ப்ரதர்ஶநம் பண்ணுகிறது.

நிகமந வாக்யத்தாலே சேர்த்து அநுபவிக்கலாம்படி சிறியதான ப்ரபந்தத்தினுடைய சீர்மையைச் சொல்லுகிறது.

மேல் கவியாலே ஆசார்யவைபவத்தையும் ஶரண்ய குணங்களையும் பார்த்து மோக்ஷலாபத்தில் நிஸ்ஸம்ஶயனானவனுடைய முக்தகைங்கர்ய துல்யமான உத்தரக்ருத்யத்தில்உகப்புச்சொல்லுகிறது.

மேல்ஆர்யையாலே ப்ரபந்த வைலக்ஷண்யத்தை அறிந்து பாத்ராபாத்ர விவேகம்பண்ணி ப்ரவர்த்தி(க்க)ப்பிக்கச் சொல்லுகிறது.

रमासखपरिष्क्रियामिति रहस्यरत्नावलिं
स्वयं विवृतवान् यथाप्रमिति वेङ्कटेशः कविः ।
कदध्व रुचि कर्बुर व्यसन कत्थन प्रक्रिया
निरर्गळ विनिर्गळत् प्रहिळघोष भीत.र्थितः ॥ '

ரமாஸகபரிஷ்க்ரியாமிதி ரஹஸ்ய ரத்நாவளிம்
ஸ்வயம் விவ்ருதவாந் யதாப்ரமிதி வேங்கடேஶ: கவி: ।
கதத்வ ருசி கர்ப்புர வ்யஸந கத்தநப்ரகரியா
நிராக்கள விநிர்க்களத்கரஹிள கோஷபீதார்த்தித: ॥

கதத்வ - கெட்டமார்க்கங்களில், (சாஸ்திரத்திற்கு விருத்தமானவழிகளில்) ருசி - ஆசையினால்,கர்ப்புர- கலக்கப்பட்டதாயும், வ்யஸந - தங்கள் தங்கள் பக்ஷங்களில் உண்டான விசேஷ அபிமானத்தினால், தங்கள் தங்கள் பக்ஷங்களை ஸ்தோத்திரம் செய்கிற) ப்ரக்ரியா - ப்ரகாரத்தில், நிராக்கள - தடங்கல் இல்லாமல், விநிர்களத் - வெளியில் கிளமபுகிற,க்ரஹிள - தங்கள்தங்கள் பக்ஷத்தில் ஆக்ரஹத்தையுடையமனிதர்களின், கோஷ - சப்தத்தில் இருந்து, பீத- பயந்தவர்களான ஸாத்த்விகாகளினால், அர்த்தித: - ப்ரார்த்திக்கப்பட்டவராய்க்கொண்டு,கவி: - ஸூக்ஷ்மார்த்தங்களை அறியக்கூடிய சக்தியுடைய

संक्षिप्तं विस्तृतं वा सरळसमुचितं सावधानप्रियं वा
प्राधान्येन प्रणीतं परफणिति परिष्कारवृत्त्या स्थितं वा ।
शिक्षासौकर्य तुष्टिप्रचित गुरुजनानुग्रहेद्धं सुधीभिः
श्रद्धेयं नाथजुष्टं श्रुतियुवति शिरो भूषणं भाषणं नः ॥

ஸங்க்ஷிப்தம் விஸ்தருதம வா
ஸரள ஸமுசிதம் ஸாவதாநப்ரியம் வா
ப்ராதாந்யேந ப்ரணீதம்
பரபணிதி பரிஷ்காரவ்ருத்த்யா ஸ்த்திம் வா ।
ஶிக்ஷாஸௌகர்ய துஷ்டி ப்ரசித
குருஜநாநுக்ரஹேத்தம் ஸுதீபிः
ஶ்ரத்தேயம் நாத ஜுஷ்ட
ஶ்ருதியுவதி ஶிரோபூஷணம் பாஷணம் நः ॥

வரான வேங்கடேசः - வேங்கட நாதன் என்கிற திருநாமமுடைய இந்த ஆசார்யன், ரமாஸக பரிஷ்க்ரியாம் - ச்ரியःபதியான எம்பெருமானுக்கு அலங்காரமாயிருக்கிற, ரஹஸ்ய ரத்நாவளிம் - ரஹஸ்ய ரத்நாவளீ என்னும் இந்த க்ரந்தத்தை,ஸ்வயம் - தானே (மூலத்தைஅருளிச் செய்த தாமே) யதாப்ரமிதி-தம்முடைய ஜ்ஞாநத்திற்குத் தகுந்தபடி, (அதாவது உள்ளபடியே அறிந்து அறிந்தபடியே),இதி - இப்படி,விவ்ருதவாந் - வ்யாக்யானம் செய்தருளினார்.

ஸம்க்ஷிப்தம்-சுருக்கமாயும்,விஸ்த்ருதம் - விஸ்தரமாயும், ஸரளஸமுசிதம்- மருதுவான புத்தியுடையவர்களுக்குத் தகுந்ததாயும்,ஸாவதாநப்ரியம்வா - மிகவும் ஊக்கத்தையுடையவர்களுக்கு ப்ரியமாயும், ப்ராதாந்யேந ப்ரணீதம்-ப்ரதானமாகச் செய்யப்பட்டதாயும்(மற்றவர்களின் க்ரந்தங்களுக்கு வ்யாக்யானமாகவல்லாமல் தாமே அருளிச்செய்ததாயும்) பரபணிதி - அயலாருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு, அன்றிக்கே பகவானுடைய வார்த்தைக்கு, பரிஷ்கார - அலங்காரமான, வ்ருத்த்யா - வ்யாக்யானமாக, ஸ்த்திதம்வா-இருப்பதாயும், சிக்ஷா-சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வதில், ஸௌகர்ய-ஸுகரமாயிருப்பதினால் உண்டான, துஷ்டி- ஸந்தோஷத்தினால், ப்ரசித -வ்ருத்தி அடைந்திருக்கிற, குருஜந- ஆசார்யர்களுடைய, அநுக்ரஹ - அநுக்ரஹத்தினால், இத்தம் - வ்ருத்தி அடைந்திருக்கிற, நாத - பகவானால்(அன்றிக்கே நாயகனால்) ஜுஷ்ட - ப்ரீதி செய்யப்பட்ட, ச்ருதி - வேதமாகிற, யுவதி - ஸ்த்ரீயின், சிரோ பூஷணம் - தலைக்கு அலங்காரமான, அன்றிக்கே உபநிஷத்திற்கு அலங்காரமான, நः - நம்முடைய, பாஷணம் – வார்த்தை, ஸுதீபிः - வித்வான்களினால், ச்ரத்தேயம் - விச்வாஸம் செய்யத் தக்கது.

சாக்கியர் சைனர்கள் சார்வாகர் சாங்கியர் சைவர் மற்றும்*
தாக்கிய நூல்கள் சிதையத் தனிமறையின் கருத்தை *
வாக்கிய முப்பதினால் வகை செய்து வியாகரித்தோம் *
தேக்கி மனத்துளிதனைத் திணியிருள் நீங்குமினே. 20

தள்ளத் துணியினும் தாய் போல் இரங்கும் தனித்தகவால் *
உள்ளத்துறைகின்ற உத்தமன் தன்மை உணர்ந்துஉரைத்தோம் *
முள்ளொத்த வாதியர் முன்னே வரில் எங்கள் முக்கியர் பால் *
வெள்ளத்திடையில் நரி போல் விழிக்கின்ற வீணர்களே. 21

செய்யேல் மறம் என்று தேசிகன்தாதை அவன் உரைத்த *
மெய்யே அரும் பொருள் சூடிய வெண்மதி காதலியாம் *
பொய்யே பகைப் புலன் ஐயிரண்டொன்றும் பொரும் கருவி *
கையேறு சக்கரக்காவலன் காதல் அடைந்தவர்க்கே. 22

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
॥ श्रीरहस्यरत्नावलिहृदयं संपूर्णम् ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்
ஸ்ரீரஹஸ்யரத்னாவளீ ஹ்ருதயம் முற்றிற்று

பௌத்தர்கள், ஜைநர்கள், சார்வாகர்கள், ஸாங்க்யர்கள் பாசுபதர்கள், இவர்களைத் தவிர வேறான மற்றும் சில மதஸ்தர்கள் எதிர்த்துச் சண்டையிடுகிற சாஸ்த்ரங்கள் அழிந்துபோகும்படி ஒப்பற்றதான வேதத்தின் தாத்பர்யத்தை நல்ல ப்ரகாரத்தில் வ்யாக்யானம் செய்தோம், இவ் வர்த்தங்களை மனத்தில் ஸ்த்திரமாயிருக்கும்படி செய்து கொண்டு த்ருடமான அஜ்ஞாநாந்தகாரத்தை விலக்கிவிடுங்கள்.

தள்ளிவிடத் துணிந்தபோதிலும் (அதை லக்ஷியம் செய்யாமல் குழந்தையை ரக்ஷிக்கும்) தாயைப் போல நம்மிடத்தில் க்ருபை செய்கிறவனும், அத்விதீயமான தன்னுடையக்ருபையினால் (அப்படித்தள்ளுகிறவர்களின்) மனத்திலும் வஸிக்கிறவனுமான பகவானுடைய ஸ்வபா

வத்தை அறிந்து இந்த க்ரந்தத்தைச் சொன்னோம். முள்ளைப் போல் நல்ல மார்க்கத்திற்கு விரோதிகளான எதிரிகள் (ஸாங்க்யாதிகள்), நம்முடைய ஸித்தாந்தத்தில் முக்யர்களான பூர்வாசார்யர்கள் இடத்தில் வாதம் செய்ய முன்னே வந்தால் வெள்ளத்தின் (ப்ரவாஹத்தின்) நடுவில் அகப்பட்டுக் கொண்ட நரியைப் போல தப்பிப்போவதற்கு மார்க்கம் இல்லாமல் விழிக்கும் வம்பர்கள் போலாவார்கள்.

பாபத்தைச் செய்யாதே என்று ப்ரஹ்ம வித்தையை உபதேசம் செய்த பிதாவாகிய ஆசார்யன் உரைத்த உத்க்ருஷ்டமான அர்த்தத்தை ச்ரத்தையுடன் அங்கீகரித்த பரிசுத்தமான புத்தியுடையவன் உண்மையாகவே பகவானிடத்தில் பக்தியுடையவனாவான், கையில் எப்பொழுதும் இருக்கிற சக்கராயுதத்தையுடைய ஸர்வ ரக்ஷகனான ச்ரிய:பதியினிடத்தில் பக்தியுடையவர்களுக்கே,இவனோடுஎதிர்த்துச் சண்டை செய்யும் ஜ்ஞாநேந்த்ரியம் ஐந்து,கர்மேந்த்ரியம் ஐந்து, மனம் ஒன்று, ஆகப் பதினொன்று இந்த்ரியங்கள் விரோதி என்பது பொய்யாகும். அதாவது பகவானிடத்தில் பக்தி செய்யுமவர்களுக்கு இந்த்ரியங்கள் விரோதியாகா என்றபடி. 'தேசிகன் தேவன் கருத்துரைத்த' என்று பாடாந்தரம்,அப்பொழுது ஆசார்யன் பகவானுடைய கருத்தை உரைத்த என்றர்த்தம்.

ஸ்ரீ:

ஆழ்வார்திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

மேல் அச்சிடப்படும் ஸ்ரீதத்த்வத்ரய சுளக விஷயமாக ஒரு விசேஷக்குறிப்பு

இந்த ரஹஸ்யத்தை நைனராசார்யர் ஸம்ஸ்க்ருதமாகச் செய்திருக்கிறார். அதில் முதலில் தாம் செய்யும் க்ரந்தம் தனி க்ரந்தம் என்று தோன்றும்படி நிரூபித்திருந்தபோதிலும், வாக்யபங்க்திகள் இந்த ரஹஸ்யபங்க்திகளின் மொழி பெயர்ப்பாயிருப்பதினாலும் இறுதியில் இந்த எல்லா அர்த்தங்களும் த்ரமிட தேச வாஸிகள் விசதமாய் அறிந்து கொள்வதற்காக ஆசார்யனால் தத்த்வத்ரய சுளகத்தில் ஸங்க்ரஹமாகக் கூறப்பட்டது.எல்லாத்தேசங்களிலும் வஸிக்குமவர்கள அறிந்து கொள்வதற்காக நம்மால்ஸம்ஸ்க்ருத பாஷையில் நன்றாக உபபாதிக்கப்பட்டிருக்கிறது' என்று கூறியிருப்பதினாலும் ஏற்படுகிறது. ஆனால் பல இடங்களில் இந்த ரஹஸ்யபங்க்திகளால் கூறப்பட்ட அர்த்த விவரணமாகத் தாமே விஸ்தாரமாய் நிரூபித்திருக்கிறார். இந்த மொழிப் பெயர்ப்பு சேட்டலூர் மஹாமஹோபாத்யாயஸ்வாமியின் வ்யாக்யானத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது அவசியம் ஏற்பட்டால் இது தனித்து அநுபந்தமாக வெளியிடப்படும்.

இதில் நிரூபிக்கப்பட்டிருக்கும் சில விசேஷாம்சங்கள் மட்டும் இங்குக் குறிப்பிடப்படுகின்றன.

'சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த'
இத்யாதிகளை இங்கு அநுஸந்திப்பது' என்கிற வாக்ய மொழிப் பெயர்ப்பில்

'த்ரமிடோபநிஷதாசார்ய வாக்யாநி' என்றும், 'கறந்த பாலுள் நெய்யே போல்'
என்கிற த்ரமிடோபநிஷத்வாக்யத்திலும்' என்பதின் மொழி பெயர்ப்பில் 'இதுவும் த்ரமிடோபநிஷத் வாக்யங்களில் வேதாந்த சாஸ்த்ர வித்துக்களினால் அத்யயநம் செய்யப்படுகிறது' என்றும்நிரூபித்திருக்கிறார் உபோத்காத ப்ரகரணத்தில் ஸ்ரீதத்த்வமுக்தாகலாபத்திலிருந்து 'த்ரவ்யாதீநாம்' இத்யாதி இரண்டு ச்லோகங்களை உதாஹரித்திருக்கிறார். இந்தச்லோகங்கள் ஸர்வதர்சநஸங்க்ரஹ க்ரந்தத்திலும் ஸ்ரீவிசிஷ்டாத்வைதமதப்ரரண நிரூபணத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன.) இந்த மொழி பெயர்ப்புரூபமாயும் விவரணமாயும் இருக்கும் க்ரந்தத்தில்ச்ருதி வாக்யங்கள் உதாஹரிக்கப் பட்டிருக்கிறபடியினால் இந்த க்ரந்தம் ஸர்வோபஜீவ்யமாகாது. (த்ரைவர்ணிகர்களுக்கே உபஜீவ்யமாகும்)

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

பதினாறாவது ரஹஸ்யம்

ஸ்ரீ தத்த்வத்ரய சுளகம்

[இது அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் பதினைந்தாவது காஞ்சீபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது]

[தத்த்வத்ரய விபாகம்—அசேதந நிரூபண ப்ரயோஜநம்—த்ரிகுண நிரூபணப்ரயோஜநம்—த்ரிகுண நிரூபணம்—மஹதாதிகளின் உத்பத்தி க்ரமம் —கால நிரூபணம்—சுத்தஸத்த்வ நிரூபணம்—ஜீவ அசேதந ஈச்வர வ்யாவ்ருத்தி க்ரமம்—ஸ்ரீ ஆளவந்தார் ஸங்க்ரஹப்படி ஜீவ ஸ்வரூப நிரூபணம்—பத்த ஸ்வரூபம்—முக்த ஸ்வரூபம்—நித்யர்களின் ஸ்வரூபம் — ஈச்வரநிரூபணம்—த்ரி வித காரணத்வ ப்ரகாரம்—ஈச்வர லக்ஷணம் —பர ரூபம்—வ்யூஹ ரூபம்—விபவ ரூபம்—அர்ச்சா ரூபம்—அந்தர்யாமி ரூபம்—ச்ரிய:பதித்வ திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டத்வாதிகள்—ப்ரதாந தத்த்வாதி ஸங்க்ரஹம்.]

அநாத்ம நிரூபணாதிகாரம் என்னும் முதல் அதிகாரம்.

ஆசிரியச் சந்த விருத்தம்

** அந்தமில்ஆதி தேவன் அழிசெய்து அடைந்த
அலைவேலை ஓதமடையச் *
செந்தமிழ் நூல் வகுத்த சிறு மாமனிச்சர்
சிறு கைச் சிறுங்கையதுபோல் *

** நாசமில்லாத, அன்றிக்கே அபரிச்சின்னமான எல்லா லோகத்திற்கும் ஆதியான பகவான் இந்த லோகத்தை ப்ரளய காலத்தில் நாசம் செய்து தனக்குச் சயனமாக அடைந்த அலைகளுடன் கூடிய ஸமுத்

சந்தமெலா முரைப்பது இது என்று தங்கள்
இதயத்தடக்கி * அடியோம்
பந்தமெலாமறுக்க அருள் தந்து உகந்து
பரவும் பொருள்கள் இவையே. 23

ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளையே உபாயமாகவும் உபேயமாகவும் பற்றுமவனுக்கு முற்பட ப்ரக்ருத்யாத்மப்ரமாதிகள் கழியும்படி தத்த்வத்ரயத்தை விவேகிக்கவேண்டும். தத்த்வ த்ரயம் என்றது அசேதநத்ரவ்யத்தையும் ஜீவனையும் ஈஶ்வரனையும்.

தத்த்வ த்ரய விபாகம்

அசேதநமாவது—ஜ்ஞாத்ருத்வம் இல்லாதவஸ்து. இதுக்கு வ்யாபாரம் உண்டேயாகிலும் ஜ்ஞாத்ருத்வம் இல்லாமையாலே ஸ்வபுத்தி பூர்வ ப்ரவ்ருத்தி லக்ஷணமானகர்த்ருத்வமும்போக்த்ருத்வமும்இல்லை. அசேதநத்ரவ்யம் தான் த்ரிகுணமென்றும் காலம் என்றும் ஶுத்த ஸத்த்வம் என்றும் மூன்று வகையாய் இருக்கும். தர்ம பூத ஜ்ஞாநத்திற்கும்இவற்றுக்குப் போலே அசேதந த்ரவ்யத்வம் உண்டேயாகிலும் இது சேதந நிரூபணத்திலே விஶேஷணமாய்க் கொண்டு நிரூபிதமாய் விடுகையாலும் இவை மூன்றினுடைய நிரூபணத்திற்கு ப்ரயோஜநாதிஶயம் உண்டாகையாலும் இவற்றைப் பிரித்துநிரூபித்தார்கள்.

அசேதந நிரூபண ப்ரயோஜநம்

திரத்தின் ப்ரவாஹம் முழுமையும் செம்மையுடைய தமிழ் பாஷைக்கு இலக்கணமாகிய பேரகத்தியம் என்னும் சாஸ்த்ரத்தைப் பிரித்துச் செய்தவராய் உருவத்தில் சிறியவராயிருந்த போதிலும் ப்ரபாவத்தினால் உத்க்ருஷ்டரான அகஸ்த்ய மஹர்ஷி தம்முடைய சிறுகையினால் அடக்கியதுபோல இங்கு சொல்லப்படுமவைகள் வேதங்களெல்லாம் சொல்லுகிற தத்துவம் என்றனு ஸந்தித்து, ஆசார்யர்கள்தங்களுடைய ஹ்ருதயத்திற்குள்ளே அடக்கிக்கொண்டு தங்களை ஆச்ரயித்த நம்முடைய ஸம்ஸார பந்தத்தை எல்லாம் விடுவிக்க க்ருபையினால்உபதேசித்ததினாலே ஸந்தோஷம் அடைந்து ஆதரித்துக்கொண்டு போருகிற அர்த்தங்கள் இவைகளே. 'அறுத்து அருள் தந்து என்று' பாடாந்தரம், அப்பொழுது க்ருபையினால் உபதேசித்து அத்தாலே ஸம்ஸார பந்தத்தையெல்லாம் அறுத்து ஸந்தோஷித்து என்றர்த்தம்.

த்ரிகுண நிரூபணம் பஞ்சவிம்ஶக விவேகாதிகளுக்கு உறுப்பாம். காலநிரூபணம் ஐஶ்வாயாதிகளுடைய அநித்யதா அத்யவஸாயத்துக்கும் காலத்தால் கலங்காத விஷயத்தை ஆசைப்படுகைக்கும், காலோசித கர்த்தவ்ய விஶேஷத்தைக் காலம்பெறச்சிந்திக்கைக்கும் உறுப்பாம். ஶுத்த ஸத்த்வ நிரூபணம் ப்ராப்ய ப்ராபகனான ஈஶ்வரனுடைய விஶிஷ்டாகார வேதநத்திலே விநியுகதமாம்.

த்ரிகுண நிரூபணம்

த்ரிகுணமாவது — ஸத்த்வ ரஜஸ் தமஸ்ஸுக்களாகிற குண த்ரயங்களுக்கு ஆஶ்ரயமாயிருப்பதொரு த்ரவ்யம். இதுகர்மவஶ்யருக்கு பகவத்ஸ்வரூப திரோதாநாதிகளைப் பண்ணும். ஸத்த்வமாவது ப்ரகாஶ ஸுகாதிஹேதுவான குண விஶேஷம். இது சிலருக்கு அத்யந்த அதிஶயிதமாய் மோக்ஷோபயுகதமாம். ரஜஸ்ஸாவது ராக துக்காதிஹேதுவான குண விஶேஷம். தமஸ்ஸாவது ப்ரமாத ஆலஸ்ய நித்ராதிஹேதுவானகுணவிஶேஷம். நியதகாலமான ஸ்வதந்த்ர ஸங்கல்ப விஶேஷத்தாலே இவை மூன்றும் ஸமங்களான போது மஹா ப்ரளயம். ஒரு ஶரீரத்தில் வாத பித்த கபங்கள் போலே உத்பவாபிபவத்தாலே இவை விஷமங்களான போது மஹதாதி விகாரங்கள் உண்டாம். இவற்றில் வைஷம்யம் அநந்த ப்ரகாரம். ஸமமான குணத்ரயத்துகு ஆஶ்ரயமான த்ரவ்யம் மூலப்ரக்ருதி. இங்கு

1 'त्रिगुणं तत् जगद्योनिः' (த்ரிகுணம் தத் ஜகத் யோநி;)

2 'अचेतना परार्था च' (அசேதநா பரார்த்தா ச)

3 'சூழ்ந்து அகன்றுஆழ்ந்து உயர்ந்த'

இத்யாதிகளை அநுஸந்திப்பது.

---

1 த்ரிகுணம்- மூன்று குணங்களுள்ள ப்ரக்ருதியாகிய, தத் - அந்த வஸ்துஜகத்யோநி:-ப்ரபஞ்சத்திற்குக் காரணமாயும்,(அநாதியாயும்உத்பத்தி விநாசங்கள் இல்லாததாயும் இருக்கிறது.)

2 66 - ம் பக்கம் பார்க்க.

3 திருவாய் - 10 - 10 - 10

மஹதாதிகளின் உத்பத்திக்ரமம்

இது தன்னிலே அதிஸூக்ஷ்மமான பரிணாமவிஶேஷங்களாலே தமஸ்ஸு முதலான பிரிவுகள் ஓதப்படுகிறன. இத்த்ரவ்யம் விஷமபரிணாமமான போது வ்யக்தம் என்றும், ஸமபரிணாமமான போது அவ்யக்தம் என்றும் பேர் பெற்றிருக்கும். வ்யக்தம், மஹாந் முதலாய் ப்ருதிவீபர்யந்தமாய் இருபத்துமூன்று தத்த்வமாயிருக்கும். த்ரிகுணத்தில் இப்படிப்பரிணமியாத ப்ரதேஶமும் பரிணமித்த ப்ரதேஶமும் கடலில் அலையாத ப்ரதேஶமும் அலைந்த ப்ரதேஶமும் போலேஇருக்கும். மஹதாதி விகாரமில்லாத ப்ரதேஶத்திலும் ப்ரளய தஶையிற்போலே ஸ்ருஷ்டி தஶையிலும் அதிஸூக்ஷ்மமான ஸத்ருஶ விகார ஸந்தாநம் நடக்கும். இப்படிப் பிறக்கும் விஷம விகாரங்களில் ப்ரதம விகாரம் மஹாந். இது தான் ஆத்மாவுக்கு மநஸ்ஸு அத்யவஸாயத்தை உண்டாக்கும்போது துணையாகையாலே புத்திலக்ஷணம்என்றும் சொல்லப்படும். இம்மஹாந் குணவைஷம்யத்தாலே ஸாத்த்விகமென்றும்ராஜஸமென்றும்தாமஸமென்றும்மூன்றுவகையாயிருக்கும். இதினின்றும்பிறந்த விகாரவிஶேஷம் அஹங்காரம். இது அநாத்மாவானதேஹத்திலே மநஸ்ஸு ஆத்மாவுக்கு அஹம் புத்தியைப் பண்ணும்போது துணையாகையாலே அஹங்காரம் என்னும் பேர்பெற்றது. இவ்வஹங்காரமும் தனக்குக் காரணமான மஹாந் போலே அவ்வடைவே மூன்று படியாயிருக்கும். அதில் ஸாத்த்விகாஹங்காரம் வைகாரிகம் என்றும், ராஜஸாஹங்காரம் தைஜஸம் என்றும், தாமஸாஹங்காரம் பூதாதி என்றும் பேர் பெற்றிருக்கும். இவற்றில் இந்த்ரியாதியாயும் பூதாதியாயுமுள்ள அஹங்காரங்களுக்கு ராஜஸாஹங்காரம் ப்ரவர்த்தகமாய்க் கொண்டு ஸஹகாரியாம். ஸாத்த்விகாஹங்காரத்தினின்றும் பிறந்த த்ரவ்யம் இந்த்ரியம். இது ஆந்தரம் என்றும், பாஹ்யம் என்றும் இரண்டு படி. ஆந்தரமாவது மநஸ்ஸு. இது ஸம்ஸாரிகளுடையஸங்கல்ப ஸ்ம்ருத்யாதிகளுக்குத்தானே காரணமாய் பாஹ்யேந்த்ரியங்களுக்குத் துணையுமாய் இருக்கும். இது தானே சில இடங்களிலே அத்யவஸாய அபிமாந சிந்தைகளாகிற புருஷ புத்தி விஶேஷங்களுக்குக் காரணமான தஶையில் புத்தி அஹங்கார சித்த ஶப்தங்களாலும் சொல்லப்படும். இது ஶப்தாதி விஷய

ஸங்கியானபோது பந்தகாரணம். பாஹ்யவிஷயங்களை விட்டு வகுத்த விஷயத்திலே ப்ரவணமானால் மோக்ஷகாரணம். பாஹ்ய இந்த்ரியங்கள் பத்து. இவற்றில் வாக் பாணி பாத பாயு உபஸ்த் தங்களாகிற கர்மேந்த்ரியங்கள் ஐந்தும் வசந ஆதாநாதி கார் யங்களுக்கு உறுப்பாம். ஶ்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வா க்ரா ணங்களாகிற ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்தும் ஶப்தாதி விஷயங் களைக் காட்டும். இவற்றில் த்வக் இந்த்ரியமும் சக்ஷுரிந்த்ரியமும் யதார்ஹம்சிலத்ரவ்யங்களையும்க்ரஹிக்கும். ஶ்ரோத்ராதிகள் ஐந்து க்கும்அடைவேஆகாஶாதிபூதங்கள்ஐந்தும்ஆப்யாயகங்கள். அப் படியே மநப்ராண வாக்குக்களுக்கும்அடைவே ப்ருதிவீ அப் தே ஜஸ்ஸுக்கள் ஆப்யாயகங்கள். தாமஸாஹங்காரத்தினின்றும் அடைவே ஶப்தாதி தந்மாத்ரைகளை இடையிட்டுக் கொண்டு பஞ்சபூதங்கள் பிறக்கும். தந்மாத்ரைகளாவன க்ஷீரத்துக்கும் ததிக்கும் நடுவில் பரிணாமம் போலே வருகிற ஸூக்ஷ்மபூதவிஶே ஷங்கள். த்ரிகுண வைஷம்யத்தாலே தந்மாத்ரைகளை அவி ஶேஷங்கள் என்றும், பூதங்களை விஶேஷங்கள் என்றும் சொல் லும். ஆகாஶாதி பூதங்கள் ஐந்துக்கும் ஶப்தாதி குணங்கள் ஐந் தும் உத்தரோத்தரம் அதிகங்கள். இங்கே

1' பூநிலாய ஐந்துமாய் '

என்கிற பாட்டை அநுஸந்திப்பது. தந்மாத்ரைகளும் குணங்களும் வேறேயா(ரு)யிருக்கச் சில இடங்களிலே குணங் களின் பேராலே தந்மாத்ரைகளை உபசரிக்கும். இத் தத்த்வங்கள் பிறக்கும் இடத்தில் த்ரவ்யாந்தரங்கள்வருவதில்லை. தாள பலாஶ தாடங்க ந்யாயத்தாலே அவஸ்தாந்தராபத்தியேயுள்ளது பூர் வாவஸ்த்தா விஜாதீயாவஸ்த்தைகள் வந்த இடங்களிலே தத்த் வாந்தரம் என்கிறது. ப்ருதிவீத்வாதிகளை விடாதே வருகிற அவஸ்த்தாந்தரங்களில் தத்த்வாந்தர கணநையில்லை. ப்ருதிவீ பர்யந்தங்களான தத்த்வங்களை ஸமஷ்டி என்றும், இவற்றில் ஏக தேசங்களைக் கூட்டி ஸ்ருஷ்டிக்குமவற்றை வ்யஷ்டி என்றும் சொல்லக்கடவது. அண்டங்களும் ஆவரணங்களும் அண்டத் துக்குள்ளான சதுர்த்தஶ புவநாதி வைசித்ர்யங்களும் பஞ்சீகர

1 திருச்சந்த விருத்தம் - 1

ணுதி ப்ரகாரங்களும் இருக்கும்படி புராணங்களிலே பரக்கக கண்டு கொள்வது.

1 'इत्येतत् भुवनं गतम्' (இத்யேதத் புவநம் கதம்) என்கிற ஸ்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

2 'பொங்கைம்புலனும்'

இத்யாதிகளில் சொன்ன தத்த்வங்கள் இருபத்து நாலில் ப்ரக்ருதி மஹத் அஹங்காரங்களும் பூதங்களும் ஶரீரத்துக்கு உபாதாந த்ரவ்யங்கள். இந்த்ரியங்கள் பதினொன்றும் தனித்தனியே அஸங்க்யாதங்களாய்ப்ரதிபுருஷம்பிந்நங்களாய் ஆபரணத்தில் ரத்நங்கள் போலே ஶரீரத்தை ஆஶ்ரயித்திருக்கின்றன. ஶரீரமாவது சேதநனைக் குறித்து ஆதேயத்வ விதேயத்வ ஶேஷத்வ நியமத்தாலே அப்ருதக ஸித்தமான த்ரவ்யவிஶேஷம். த்ரிகுண விகாரவர்க்கங்களுக்கெல்லாம் ஸ்ருஷ்டி ப்ரளயாதி கால நியமம் ஶாஸ்த்ரங்களிலே கண்டு கொள்வது.

காலமாவது குணத்ரய ரஹிதமாய் எதிர், நிகழ், கழிவு இத்யாதி வ்யவஹாரங்களுக்கு விஶேஷஹேதுவாய் நித்யவிபுவாய் இருப்பதொரு த்ரவ்யம்.

கால நிரூபணம்

க்ஷணம் முதலாக பராத்த பர்யந்தமாக

3 'कालचक्रं जगच्चक्रं' (காலசக்ரம்ஜகச்சக்ரம்) இத்யாதிகளிற்படியே சக்ரம் போலே பரிவர்த்திக்கிறவையெல்லாம் இதன் விபாகங்கள்.

4' रूपान्तरं तद्विज कालसंज्ञम्' (ரூபாந்தரம்தத்த்விஜ காலஸம்ஜ்ஞம்) இத்யாதிகளாலே இககாலத்துக்கு த்ரிகுணாதிகளிற் காட்டிலும்

---

1 புவநம் கதம் - லோகத்தை அடைந்திருப்பது, இத்யேதத் - இவ்வளவு.

2 திருவாய் - 10 - 7 - 10

3 பார - உத்யோக - 67 - 12 கால சக்ரம் - கால சக்கரத்தையும் (ஜகத்தாகிய சக்கரத்தையும் பகவான் நியமிக்கிறான்.)

4 ரூபாந்தரம் - (மூர்த்தம் என்று சொல்லப்படும் ஜகத்தாகிய ரூபத்தைக் காட்டிலும்) வேறுபட்டதான ரூபமானது, த்விஜ - ஓ ப்ராஹ்மணரே, கால ஸம்ஜ்ஞம் - காலம் என்று பெயருடைய, தத் - அது.

வேறுபாடு சொல்லப்படுகிறது. இதின் படியைஅறிந்தால்

'பழுதே பல பகலும் போயின'

என்னுதபடி ஸ்வரூப ப்ராப்த (ப்ர)வ்ருத்தியிலே த்வரிக்க அடுக்கும். அப்போது

1 'कालस्य च हि मृत्योश्च' (காலஸ்ய ச ஹி ம்ருத்யோஶ்ச)

என்கிறபடியே ஸர்வநிர்வாஹகனான பகவான்

2 'कलौ कृतयुगं तस्य' (கலௌ க்ருதயுகம் தஸ்ய)

என்கிறபடியே கலி யுகம் ஒன்றுமின்றிக்கே தன் அடியார்க்கு அருள் செய்யும், லீலா விபூதியிலுள்ள விகாரங்களெல்லாம் இக்கால விஶேஷ நியமத்தோடே கூடியிருக்கும். ஶுத்தஸத்த்வமான பரமபதத்திலுள்ளவை

3 'कालं स पचते तत्र न कालः तत्र वै प्रभुः'

(காலம் ஸ பசதே தத்ர ந காலஸ் தத்ர வை ப்ரபுः)

இத்யாதிகளின்படியே கேவலம் ஈஶ்வரேச்சையடியாக நடக்கும்.

ஶுத்த ஸத்த்வமாவது—ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு ஆஶ்ரயமன்றிக்கே ப்ராக்ருத ஸத்த்வ விலக்ஷணமான ஸத்த்வ குணத்திற்கு ஆஶ்ரயமாயிருப்பது ஒரு

சுத்த ஸத்த்வ நிரூபணம்

த்ரவ்யம். இத்தை

4 'स्वसत्ताभासकं सत्त्वं गुणसत्तात् विलक्षणम्'

(ஸ்வஸத்தாபாஸகம் ஸத்வம் குணஸத்த்வாத் விலக்ஷணம்)

என்று சொல்லிற்று. சிலர் இதை த்ரிகுண காலங்கள் போலே ஜடம் என்றும், சிலர் ஸ்வயம் ப்ரகாஶம் என்றும் சொல்லுவார்கள். ஆத்மாவுக்கும் தர்மபூத ஜ்ஞாநத்துக்கும் ஸ்வயம் ப்ரகாஶத்வமாத்ரம் ஸமாநமாயிருக்க ப்ரத்யக்த்வ விஷயித்வாதி வை

1 பார - உத்யோ - 67 - 13 காலஸ்ய ஹி ச - காலத்திற்கும், ம்ருத்யோः ச - ம்ருத்யுவிற்கும் (பகவான் ஒருவனே நியந்தாவாகிறான்)

2 விஷ்ணு தர்மம் - 109 - 57 தஸ்ய - பகவானிடத்தில் பக்தியுடைய அவனுக்கு, கலௌ - கலி யுகத்தில், க்ருத யுகம் - க்ருத யுகம்

3 பார - சாந்தி - 196 - 9 தத்ர - அந்தப் பரம பதத்தில் ஸः - அந்தப் பகவான், காலம் - காலத்தை, பசதே - மாறும்படி செய்கிறான், தத்ர - அவ்விடத்தில், காலः - காலம், ந வை ப்ரபுः - (மாறுதல்களைச் செய்யச் சக்தியுடையதன்று,

4 பாஞ்ச ராத்ரம் ஸ்வஸத்தாபாஸகம் - தான் இருப்பது மாத்திரத்தினாலேயே ப்ரகாசம்செய்கிற,ஸத்த்வம் - (சுத்த) ஸத்த்வகுணம், குணஸத்த்வாத் - மற்ற குணங்களோடு கலந்திருக்கிற(ப்ராக்ருத)ஸத்த்வ குணத்தைக் காட்டிலும், விலக்ஷணம் - வேறு பட்டது.

ஷம்யங்கள் ப்ரமாண பலத்தாலே இசையவேண்டினாற் போலே, ஶுத்தஸத்த்வமும் ஸ்வயம் ப்ரகாஶமானாலும், இவை இரண்டிலும் காட்டில் இதுக்குத் துல்யயோகக்ஷேம ப்ரமாண ஸித்தமான வைஷம்ய மெல்லாம் கொள்ளலாம். இதின் படியைக கண்டால் சதுர்முகாதி பதங்களு மெல்லாம் நிரயமாய்த் தோன்றும்படி அத்யந்தபோக்யமாயிருக்கையாலே இத்தைப் பரமபதம் என்றும், அநுகூலஸ்வபாவதையாலே ஆநந்தமயம்என்றும், ஷாட்குண்ய ப்ரகாஶோபயோகாதிகளாலே ஷாட்குண்ய மயம் என்றும், பஞ்சோபநிஷந் மந்த்ர ப்ரதிபாத்யமாகையாலே பஞ்சோபநிஷந் மயம் என்றும், அப்ராக்ருத பஞ்ச பூதாத்மகமாகையாலே பஞ்ச ஶக்தி மயம் என்றும் சொல்லுகிறது. நித்யங்களான பூதங்களும் விக்ரஹ பூஷணாயுத விமாந மண்டப கோபுராதிகளும் ப்ரசுரங்களான படியாலே இத்தை நித்யவிபூதி என்கிறது. ஈஶ்வரனுக்கும் நித்யருக்கும் நித்யதேஹமும் இதன் அவதாரங்களும் உண்டாயிருக்கும். முகதருக்கு இச்சையுள்ளபோது விகரஹாதி பரிக்ரஹமும், மாதாபித்ராதி ஸருஷ்டிகளும் உண்டாம். இவை எல்லாம் வஸந்தோத்ஸவத்தில் வேஷ பரிகரஹாதிகள்போலே ஶேஷியுகந்த கைங்கர்ய விஶேஷங்கள். இந்நித்யவிபூதியில்

1 'மணி உருவில் பூதம் ஐந்தாய்'

என்கிற(படி) ஆகாஶாதி விபாகத்தைநித்யமான ஶப்தாதி குண வைஷம்யத்தாலே கண்டு கொள்வது. த்ரிகுணம்ஸம்ஸாரி ஜீவர்களுக்குப் பந்த ஸ்த்தாநமாய்க் கீழ் எங்கும் அநந்தமாயிருக்குமா போலே ஶுத்தஸத்த்வமும் இவர்களுக்கு முகதிஸ்த்தாநமாய் மேல் எங்கும் அநந்தமாயிருக்கும்.

கட்டளைக் கலித்துறை

முக்குண மாயையின் மூவெட்டின் கீழ் வருமுவகையும்*
இக்குணமின்றி இலங்கிய காலச்சுழியினமும்*
நற்குணமொன்றுடை நாகமும் நாராயணன் உடம்பாய்ச்*
சிற்குணமற்றவை என்று உரைத்தார் எங்கள் தேசிகரே: · 24

அநாத்ம நிரூபணாதிகாரம் என்னும்
முதல் அதிகாரம் முற்றிற்று

1 திருநெடுந்தாண்டகம்—1

ஜீவநிரூபணாதிகாரம் என்னும் இரண்டாவது அதிகாரம்

நேரிசைவெண்பா

** எனது என்பதுமியானெ(மன்றியான்எ)ன்பதுமின்றித் *
தனது என்று தன்னையும் காணாது* —உனது என்று
மாதவத்தால் மாதவர்க்கே வனபரமாய் மாய்ப்பதனில் *
கைதவத்தான் கைவளரான் காண். 25

ஜீவனுவான் அணுத்வ பாரதந்த்ர்யாதிவிஶிஷ்டனான சேதநன். இவனுக்குக்கர்த்ருத்வாதிகளாலேத்ரிவித அசேதநங்களிற்காட்டிலும்ஆதேயத்வவிதேயத்வஶேஷத்வாதிகளாலே ஈஶ்வரனைக் காட்டிலும் வேறுபாடு உண்டாகிறது. அசித்துக்குமஹதாதிரூபேணஸ்வரூபபரிணாமமும், க்ஷேத்ரஜ்ஞருக்குத் தர்மபூத ஜ்ஞாநத்திலே ஸங்கோச விகாஸாதிகளும், ஈஶ்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் தர்மபூதஜ்ஞாநத்திலே ஸங்கல்பாதி அவஸ்த்தா விஶேஷங்களும் அவ்வோ ப்ரமாணங்களாலே வ்யவஸ்த்திதங்களாயிருக்கும். அசித்தின் வ்யாபாரமெல்லாம் நித்யமாகப் பரபுத்த்யதீநம். ஈஶ்வரனுடைய வ்யாபாரமெல்லாம் நித்யமாக ஸ்வபுத்த்யதீநம். ஜீவனுடைய வ்யாபாரங்களிலே சில பரபுத்திமாத்ராதீநங்கள். சில ஸ்வபுத்த்யதீநங்கள். த்ரிவித அசேதநத்ரவ்யமும் ஶரீரமாயேயிருக்கும். ஈஶ்வரன் ஶரீரியாயே இருக்கும். ஜீவன் ஶரீரமுமாய் ஶரீரியுமாய் இருக்கும்.

ஜீவ அசேதந ஈச்வர வ்யாவ்ருத்தி க்ரமம்

இவன்படியை

' देहेन्द्रिय मनः प्राण धीभ्योऽन्यः अनन्यसाधनः ।
नित्यो व्यापी प्रतिक्षेत्रमात्मा भिन्नः स्वतः सुखी ॥ '

** (இந்த க்ருஹம் க்ஷேத்ரம் முதலிய வஸ்துக்கள் எல்லாம்) எனக்கே சேஷபூதங்கள் என்கிற எண்ணம் இல்லாமலும், இந்தத் தேஹம் முதலியவைகள் நான் என்கிற பதத்திற்கு அர்த்தமாகிய ஆத்மா என்கிற எண்ணம் இல்லாமலும், கண்ணையும் தனக்குச் சேஷபூதம்என அறியாமல், அதாவது தேஹாத்ம ஸ்வதந்த்ராத்ம ப்ரமாதிகள் இல்

(தேஹேந்த்ரிய மந: ப்ராண தீப்யோ அந்ய: அநந்யஸாதந: |
நித்யோ வ்யாபீ ப்ரதிக்ஷேத்ரம் ஆத்மா பிந்ந: ஸ்வதஸ் ஸுகீ ||)
என்று ஆத்ம ஸித்தியிலே ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தார்.

('தேஹேந்த்ரிய' இத்யாதி என்றது) தேஹம்

1 'மண்ணுய் நீர் எரி கால் மஞ்சுலாவும் ஆகாசமு மாம் புண்ணுராக்கை'

என்கிறபடியே ஐந்து பூதங்களுடைய திரளாய், உபசயாபசயங்களையுடைத்தாய் பாணி பாதாதிகளாலும்பலவகையாய் இருக்கையால் பூதங்களுக்கும் அவயவங்களுக்கும் தனித்தனியும் ஸமுதாயத்திலும் சைதந்யம் கொள்ளில் அநேக சேதநோபலம்ப அகாரணகார்யோத்பத்த்யாதி விரோதம் வருகையாலே ஶரீரத்திற் காட்டில் ஆத்மாவுக்குப் பிரிவு காணலாம்.

ஆளவந்தார் ஸங்க்ரஹப்படி ஜீவஸ்வரூப நிரூபணம்

2 'पिण्ड: पृथग्यत: पुंस:' (பிண்ட: ப்ருதக்யத: பும்ஸ:)

3 'पुमान् न देवो न नर:' (புமாந் ந தேவோ ந நர:)

4 'नायं देवो न मर्त्यो वा' (நாயம் தேவோ ந மர்த்யோ வா)

5 'अच्छेद्योयमदाह्योयं' (அச்சேத்யோயம் அதாஹ்யோயம்)

லாமலும், இவை எல்லாம் பகவானுகிய உனக்கே சேஷபூதங்களென்று தபஸ்ஸுக்களில் எல்லாம் உயர்ந்ததாகிய சரணுகதியினுல் ச்ரிய:பதியான பகவானுக்கே ரக்ஷிக்க வேண்டிய த்ருடமான பரமாய், நசித்து விடுவதில், அதாவது தனக்கே சேஷித்வ பர பலங்கள் இல்லாதபடி பர ஸமர்ப்பணத்தைப் பண்ணும்பொழுது. கைதவத்தான்-வஞ்சனையுடையவன் வ்ருத்தி அடையமாட்டான், இந்தத் தத்த்வ விவேகத்தின் பலன் ப்ரத்யக்ஷத்தில் காணலாம்.

1 பெரிய திருமொழி—1 - 9 - 6

2 விஷ்ணு புராணம்—2 - 13 - 98 யத: - எந்தக் காரணத்தினுல் பிண்ட: - சரீரம், பும்ஸ: - ஆத்மாவைக் காட்டிலும், ப்ருதக் - வேறுபட்டதோ, 3, 4 98 - ம் பக்கம் பார்க்க

5 கீதை—2 - 24 (ஆயுதங்கள் நெருப்பு முதலியவைகள் இந்த ஆத்மாவை ஒன்றும் செய்யமுடியாதாகையினுல்) அயம் - இந்தஆத்மா, அச்சேத்ய:-வெட்டத்தகாதவன், அதாஹ்ய: - எரிக்கத்தகாதவன்.

1 'अवयवितयेदं कुर्वाणैः' (அவயவிதயேதம் குர்வாணை:) இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

கர்மேந்த்ரியங்களுள் ஒன்றின் வ்யாபாரத்தை ஒன்று செய்ய மாட்டாதிருக்க, இவை(கள்) எல்லாவற்றையும் வ்யாபரிக்கிற கர்த்தா ஒருவனுகத் தோன்றுகையாலே ஆத்மாவுக்கு வாகாதி களைக் காட்டில் வேறுபாடு அறியலாம். ஜ்ஞாநேந்த்ரியங்கள் தனித்தனியே விஷயங்களைக் காட்டாநிற்க இவை எல்லாவற்ருலும் எல்லாவிஷயத்தையும் ஒருவனே ப்ரதிஸந்தாநம்பண்ணுகையால் இவனுக்கு ஶரோத்ராதிகளைக்காட்டில் பிரிவு தோற்றும். ஜ்ஞாதாவான ஆத்மாவுக்கு ஸ்ம்ருத்யாதி கரணமாயல்லது மநஸ்ஸித்தி இல்லாமையால் மநஸ்ஸிலும் காட்டில் இவனுக்கு வேறுபாடு காணலாம். தேஹாதிகளிற் சொன்ன யுக்தி தன்ஞலே இவனுக்கு ப்ராணவாயுவிற் காட்டிலும் பிரிவு ஸித்தம். விஷயங்களைப்ரகாஶிப்பிக்கிற ஜ்ஞாநம் ஸ்வயம் ப்ரகாஶமான நித்ய த்ரவ்யமே யாகிலும் ஜ்ஞாதாவுக்கு தர்ம பூதமாய்க் கொண்டே ப்ரத்யக்ஷாதிகளாலே தோற்றுகையால் அதிலும் காட்டில் நான் என்றுதோற்றுகிறஸ்வஸ்மைபாஸமாநனுனஜீவன்வேறுபட்டவன். க்ஷேத்ரஜ்ஞருடைய தர்மபூதஜ்ஞாநத்துக்கு ப்ரத்யக்ஷாதிப்ரமாண பேதத்தாலும் ப்ரத்யக்ஷம் தன்னில் இந்த்ரியபேதத்தாலும் இச்சாத்வேஷ ஸங்கல்ப ப்ரயத்ந ஸுக துக்க ஸம்ஶயாதி பேதத்தாலும் பஹுவித விகாரங்கள் உண்டாயிருக்கும். ஆத்மஸ்வரூபத்தில் இவைஒன்றும் தட்டாதே அஹம் என்று நித்யமாகத் தானே தன்னையே தனக்கே காட்டுகிற ஏகரூபப்ரகாஶமேயாயிருக்கும். ஜடங்களான தேஹாதிகளெல்லாம் பரத:பரஸ்மை பாஸமாநங்களாய் இருக்கும். தர்மபூதஜ்ஞாநம் பரத: ஸ்வதஶ்ச பரஸ்மை பாஸமாநமாய் இருக்கும். ஆத்மா ஸ்வத: பரதஶ்ச ஸ்வஸ்மைபாஸமாநனுமாய் பரத: பரஸ்மை பாஸமாநனுமாயிருக்கும். இப்படி ஒரு பாதகமுமில்லாத எனது என்கிற வ்யதிரேகப்ரத்யயத்தாலும் நித்யநிர்த்தோஷ ஶாஸ்த்ரத்தாலும் ஆத்மா தேஹாதி விலக்ஷணன் என்று அறிந்து கொள்வது.

---

1 ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்—2 - 4 அவயவிதயா - தேஹம் பலஅவயவங்களோடு கூடியதாகையாலே, இதம் குர்வாணை:-பாஹ்யேந்த்ரியங்களாலே இது என்று விஷயீகரிக்கப்படுகின்றது.

'அநந்யஸாதந:' என்றது தர்மபூத ஜ்ஞாநம்போலே ஸ்வயம் ப்ரகாஶன் என்றபடி. இத்தால் ஜ்ஞாநஸ்வரூபன் என்கிற வாக்யங்களுக்கும் விரோதம் பரிஹ்ருதமாயிற்று. தர்மபூதஜ்ஞாநம் விஷய க்ரஹண காலத்திலே தன் ஆஶ்ரயத்துக்கு ஸ்வயம் ப்ரகாஶமாம். ஆத்மா நித்யமாகத் தனக்குத் தான் ஸ்வயம்ப்ரகாஶமாய் இருக்கும்.

'நித்ய:' என்றது மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்தாலும் தர்மபூதஜ்ஞாநத்துக்கு ஸங்கோச விகாஸாதிகள் வந்தாலும் ஸ்வரூபத்தில் நாமாந்தரம் வரும்படியான அவஸ்த்தாந்தரங்கள் ஒருகாலும் வாரா என்றபடி. இவ்வாத்மா பூர்வாநுபூத ப்ரதிஸந்தாநம் பண்ணுகையாலே ஸ்த்திரன் என்னுமிடம் ப்ரத்யக்ஷஸித்தம். பிறந்தவனுக்கு ப்ரதமம் ஸ்தந்யாபிலாஷாதிகள் பிறக்கையாலே ஶரீராந்தர பரிக்ரஹமும் உண்டு என்று அநுமாநஸித்தம். நைமித்திக ப்ராக்ருத ஆத்யந்திக ப்ரளயாதிகளிலும் அழியான் என்னுமிடம் ஆகம ஸித்தம்.

அணுவான இவனை 'வ்யாபீ' என்றது

1 'दारुण्यग्नि:' (தாருண்யக்நி:)

என்கிற ஶ்லோகத்தின்படியே அதிஸூக்ஷ்மதையாலே ஸர்வ அசேதநங்களிலும் ப்ரவேஶிக்கவல்லன்என்றபடி. முக்த தஶையிலும் பத்த தசைதன்னிலும் ஸங்கல்பத்தாலும்தர்மத்தாலும யோக ப்ரபாவத்தாலும் அநேக ஶரீரபரிக்ரஹம் பண்ணும்போது ஜீவனை ஈஶ்வரனைக் காட்டில் பிரிக்கிற ஶ்ருதியின்படியே இவன் ஸ்வரூபம் அணுவாயிருக்க

2 'प्रदीपवदावेश:' (ப்ரதீபவத்ஆவேஶ:)

இத்யாதி ஸூத்ரோக்தமான தர்மபூதஜ்ஞாநவ்யாப்தியேயுள்ளது.

---

1 167-ம் பக்கம் பார்க்க

2 சாரீரக ஸூத்ரம்—4 - 4 - 15 ப்ரதீபவத் - விளக்கைப் போலே, ஆவேச: - நுழைந்து வ்யாபித்திருக்கை. (எப்படி ஒரு விளக்குத் தான் சிறியதாயிருந்த போதிலும் தன்னுடைய ப்ரகாசத்தினால் மற்ற இடங்களிலும் வ்யாபிக்கிறதோ அதைப் போலவே ஜீவன் அணுவாயிருந்தாலும் தன்னுடைய தர்மபூத ஜ்ஞாநத்தினால் வ்யாபிக்கிறான்.)

'ப்ரதிக்ஷேத்ரம் ஆத்மா பிந்ந:' என்றது ஜ்ஞாநஸுகாதி வ்யவஸ்த்தை காணலான ஶரீரம் தோறும் பரஸ்பர ப்ரதிஸந்தாந மின்றிக்கே விசித்திர (ஈ)பல போக்தாக்களான ஆத்மாக்கள் வேறுபட்டவர்கள் என்றபடி.

'ஸ்வதஸ்ஸுகீ' என்றது ஸ்வரூபத்தாலும் தர்மத்தாலும் தனக்கு நித்யாநுகூலனாய்ப் பரிபூர்ண பகவதநுபவாநந்தத்துக்கு ஸூரிகளைப்போலே ஸ்வரூபயோக்யதையாலே இட்டுப்பிறந்தவன் என்றபடி. இவனுக்குத் துக்கவாதிகள் கர்மோபாதிகங்களாய் வருகின்றன.

பத்த ஸ்வரூபாதி நிரூபணம்

இஜ்ஜீவர்கள் பத்தர் என்றும், பந்தரஹிதர் என்றும் இரண்டுபடி. பந்த ரஹிதர் முக்தர் என்றும், நித்யர் என்றும் இரண்டு வகை. பத்தராவார்—பீஜாங்குர ந்யாயத்தாலே விஷம ப்ரவாஹமாய்க் கொண்டு அநாதியாய்ப் போருகிற அவித்யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களாலே தன்னுருக் கொடுத்து வேற்றுருக் கொண்டு கர்ப்ப ஜந்ம பால்ய யௌவந ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி மூர்ச்சா ஜரா மரண ஸ்வர்க்க நரக ஸ்ருஷ்டி ப்ரளயாதி விசித்ராவஸ்த்தைகளையுடையராய், அநாத்யநந்த ப்ரகாரமாய் அதி துஸ்ஸஹமான தாபத்ரயத்தாலே தப்தராய், ஸ்வத: ப்ராப்த பகவதநுபவாதி வைபவத்தையும் இழந்துபோருகிற சேதநர். பரதந்த்ர சேதநராய்க் கரணுயத்த ஜ்ஞாநரான பத்தருக்கே ஶாஸ்த்ரவஶ்யத்வாதிகள் உள்ளன.

முக்தஸ்வரூபாதி நிரூபணம்

இவர்களில் ஓர் அளவிலே ஸர்வபூத ஸமநான ஸர்வேஶ்வரனுடைய அவஸர ப்ரதீக்ஷையான ஸஹஜ க்ருபையாலேபுரிந்து, அத்வேஷாபிமுகத்யாதிகளையுடையராய், ஸதாசார்ய ஸமாஶ்ரயணம் பண்ணி, பகவச் சேஷத்வமாகிற மஹாநிதியைப் பக்திஸித்தாஞ்ஜந ரஞ்ஜிதமான ஶாஸ்த்ர சக்ஷுஸ்ஸாலேகண்டு, ஸ்வாதிகாராநுகுணமான உபாயவிஶேஷத்தாலே ஸர்வேஶ்வரனை ப்ரஸந்நனாக்கி, அவன ஸங்கல்பவிஶேஷத்

தாலே அத்யந்தநிவ்ருத்த ஸம்ஸாரராய், கடலினின்றும் எடுத்த ஸ்ரீ கௌஸ்துபம் போலே அஸங்குசித ப்ரகாஶராய், பரம புருஷ ஹ்ருதயங்கமராய், நித்ய ஸூரிகளோடு ஒக்க நிரதிஶய போகய நிருபாதிக கைங்கர்யம பெற்றவர்கள் முகதர்.

1 'यथा न क्रियते ज्योत्स्ना' (யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா) இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

நித்யராவார்—ஒரு காலத்திலும் பகவதபிமத விருத்தாசரணம் இல்லாமையாலே ஜ்ஞாந ஸங்கோச பரஸங்கமறறு, ஸதா தர்ஶநம பண்ணிக கொணடு புராண புருஷனை ஸ்ரீவைகுணடநாதனை வானிளவரசாகபபெற்று, வழுவிலா அடிமை செய்து வாழ்கிற வடிவுடைவானவர்கள். இவர்களில் அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளுடைய அதிகார விஶேஷங்கள ஈஶ்வர நிதயேசசையாலே அநாதியாக வயவஸததிதங்கள். முகதருக்கும நிதயருககும ஈஶ்வரனுககும வ்யாபாராதிகள் வேறுபடடாலும ஸர்வ விஶிஷடனை ஒருவன போகயனைபடியாலே போகமாத்ரம் ஸமாநம்.

நித்யர் ஸ்வரூபாதி நிரூபணம்

கட்டளைக் கலித்துறை

** பல் வினை வன் கயிற்றால் பந்தமுறறு உழல்கின்றனரும் *
நல் வினை மூட்டிய நாரணனார் பதம பெறறவரும *
தொல் வினை ஒன்றுமில்லாச சோதி வானவரும * சுருதிச்
சொல வினை ஓர்நதவர் சீவர் என்றோதச் சிறநதனரே(மே). 26

ஜீவ நிரூபணாதிகாரம் என்னும்
இரண்டாவது அதிகாரம் முற்றிற்று.

---

1 விஷ்ணுதர்மம்—104 - 55 ஜ்யோத்ஸ்நா - காந்தி, யதா - எப்படி, ந க்ரியதே - உண்டாக்கப்படுவதில்லையோ. (அழுக்கடைந்த ரத்நமானது கழுவப்பட்டால் ப்ரகாசத்தை அடைகிறபொழுது எப்படி புதிதாகக் காந்தி உண்டாக்கப்படவில்லையோ, மறைக்கப்பட்டிருந்ததேப்ரகாசிக்கிறதோ அதைப் போலவே முக்தி அடையும் ஜீவனுக்கும் கர்மத்தினால் தடுக்கப்பட்டிருந்த தர்மபூத ஜ்ஞாநத்தின் பூர்ண ப்ரகாசம் அந்தத் தடை நிவ்ருத்தியானதும் யதாவத்தாகத்தோன்றுகிறது என்றபடி)

பரமாத்ம நிரூபணாதிகாரம் என்னும் மூன்றாவது அதிகாரம்.

நேரிசை வெண்பா

** ஆரணங்கள் எல்லாம் அடி சூட மேல் நின்ற *
காரணமாய் ஒன்றால் கலங்காதான்*—நாரணனே
நம் மேல் வினை கடியும் நல் வழியில் தான் நின்று *
தன் மேனி தந்தருளும் தான். 27

ஈஶ்வரனாவான்

1 'स्वाधीन त्रिविध चेतनाचेतन' (ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந) இத்யாதிகளிற்படியே கீழ்ச் சொன்ன சேதநாசேதநங்கள் எல்லாவற்றுக்கும் நித்யமாகத் தாரகனுமாய், நியந்தாவுமாய், நிரூபாதிக ஶேஷியுமாய், இப்படியால் ஸர்வ ஶரீரியாய், ஸர்வ கார்ய காரண பூதனாய், ஸமஸ்த ஹேய ரஹிதனாய், ஸ்வதஸ் ஸர்வஜ்ஞத்வ ஸர்வ ஶக்தித்வாதி ஸமஸ்தமங்கள குணாஶ்ரயனாய், ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணனாய், நிஷ்கர்ஷகேதர ஸர்வ ஶப்த வாச்யனாய், ஸர்வ ஶாஸ்த்ரீய கர்மங்களாலும் ஆராத்யனாய், ஸகல பல ப்ரதனாய், ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வபாவ ஸுஹ்ருத்தாய், முமுக்ஷுக்களுக்கு ஆஶ்ரயணீயனாய், முக்த ப்ராப்யனாய், இப்படி ஸர்வ ப்ரகார நிரதிஶய போக்

ஈச்வரஸ்வரூபாதி நிரூபணம்

** பல வகைப்பட்ட கர்மங்களாகிற த்ருடமான கயிற்றினால் கட்டப்பட்டு ஸஞ்சரிக்கிறவர்களும் (பத்தர்களும்), நல்ல கர்மத்தினால் உபாயத்தில் மூட்டப்பட்டு பகவானுடைய திருவடிகளை அடைந்தவர்களும் (முக்தர்களும்). அநாதியாகவே கர்ம ஸம்பந்தம் இல்லாமல் பரமபதத்திலே வஸிக்கிற ஸூரிகளும் ஜீவர்கள் என்று சொல்லும்படி வேத வாக்யங்களை விசாரித்தவர்கள் (ஆசார்யர்கள்) ப்ரகாசித்தவர்கள்.

** எல்லா வேதங்களும் தன் திருவடிகளைச் சிரஸா வஹிக்க அவற்றின் சிரோபூஷணமாய் உபநிஷத்துக்களினாலே ப்ரதிபாத்யதயா நின்ற ஸர்வ லோகத்துக்கும் காரணமாய், ஒன்றாலும் கலங்காதவனாய் (ஸ்ருஷ்டி காலத்தில் உண்டாகும் மாறுதல்களினாலே தான் ஒரு விதத்த விகாரம் அடையாதவனாய்) இருக்கும் நாராயணனே நம் மேலிருக்கும் கர்மங்களைப் போக்கடிக்கும், தானே, அதாவது வேறொரு ஸஹகாரியாதிகளை அபேக்ஷிக்காமல் தன்னுடைய திருமேனியின் அநுபவத்தை, அதாவது மோக்ஷத்தைக் கொடுப்பான்.

1 -62 ம் புக்கம் பார்க்க.

யனாய். சுடர் மிகு சுருதியுள் உளனான ஶ்ரிய:பதி புருஷோத்தமன்.

இவன் ஸூக்ஷ்ம சிதசித் விஶிஷ்டவேஷத்தாலே ஜகத்துக்கு உபாதாந காரணம். ஸ்வஸங்கல்ப விஶிஷ்ட வேஷத்தாலே நிமித்தகாரணம். இப்படியேமஹாதாதிகளான உபாதாநங்களுக்கும் ஹிரண்யகர்ப்பாதிகளான நிமித்தங்களுக்கும் அந்தராத்மாவாய் நின்று அவற்றின் கார்யங்களுக்கு உபாதாநமும் நிமித்தமுமாம். இவன் தானே ஸஹகாரி பூத காலாதிகளுக்கும் அந்தர்யாமியாய் நின்று ஸஹகாரியுமாம். ஆகையாலே த்ரிவித காரணமும் ப்ரஹ்மம் என்று வேதாந்தங்களில் நிர்ணயிக்கப்பட்டது.

த்ரிவிதகாரணத்வ ப்ரகாரம்

விபுத்வேஸதி சேதநத்வம், அநந்யாதீநத்வம், நிராதாரத்வம் ஜகத் காரணத்வம், மோக்ஷ ப்ரதத்வம், ஸர்வாதாரத்வம், ஸர்வநியந்த்ருத்வம், ஸர்வஶேஷித்வம், ஸர்வ ஶரீரித்வம், ஸர்வஶப்தவாச்யத்வம்,ஸர்வ வேதாந்தவேத்யத்வம், ஸர்வ லோக ஶரண்யத்வம், ஸர்வ முமுக்ஷு உபாஸ்யத்வம், ஸர்வ பல ப்ரதத்வம், ஸர்வ வ்யாப்த ஜ்ஞாநாநந்த ஸ்வரூபத்வம், லக்ஷ்மீ ஸஹாயத்வம் இத்யாதிகளும் இவனுக்கு லக்ஷணங்கள். ஸத்யத்வ ஜ்ஞாநத்வ அநந்தத்வ ஆநந்தத்வ அமலத்வங்கள் ஸர்வ வித்யாநுவ்ருத்தங்களான ஸ்வரூப நிரூபகதர்மங்கள். ஜ்ஞாந பலாதிகளும் இவற்றின் விததிகளான ஸௌஶீல்யாதிகளும் நிரூபித ஸ்வரூப விஶேஷணங்கள். இக்குணங்களினுடைய லக்ஷணங்களும் உபயோகாதிகளும் ஶாஸ்த்ரங்களிலே அறிந்துகொள்வது. ஸர்வ ஜகத் ஸ்ருஷ்டி ஸ்த்திதி ஸம்ஹார அந்த:ப்ரவேஶ நியமந நிக்ரஹ அநுக்ரஹங்கள் இவனுக்கு க்ருத்யங்கள். இவன் ஜ்ஞாந ஶக்த்யாதி குணவிஶிஷ்ட ஸ்வரூபத்தாலே ஸர்வாந்தர்யாமியாயிருக்கும்.

ஈச்வர லக்ஷணம்

1 அஸ்த்ரபூஷணத்யாயத்தின்படியே ஸர்வதத்த்வாஶ்ரய திவ்ய மங்கள விக்ரஹ விஶிஷ்டவேஷத்தாலே பர வ்யூஹாதி பஞ்சப்ரகாரனாயிருக்கும்.

பஞ்ச ரூபப்ரகார விக்ரஹவத்வம்

1 விஷ்ணு புராணம்—1 - 22

பர ரூபமாவது

1 ' नित्यं नित्याकृतिधरं '(நித்யம் நித்யாக்ருதி தரம்)

2 ' नित्यसिद्धे तदाकारे ' (நித்ய ஸித்தே ததாகாரே)

இத்யாதி ப்ரமாணங்களிலே ப்ரஸித்தமாய் ஸூரிகளுக்கும் முக்தருக்கும் ஸேவ்யமாய் வானுயரின் பம்மன்னிவீற்றிருக்கிற நித்யமான திவ்யமங்கள விக்ரஹம். இதில் ஶாந்தோதிதாதி விபாகம் கண்டுகொள்வது.

பர ரூபம்

வ்யூஹமாவது—பர ரூபத்திலே வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபேண வரும் வகுப்பு. இவர்கள் நால்வருக்கும் க்ருத த்ரேதாதி யுக பரிவ்ருத்தி க்ரமத்தாலே ஸித ரக்த பீத க்ருஷ்ணங்களான வர்ணங்கள் மாறி மாறி வரும். பர ரூபத்திலும் வ்யூஹ வாஸுதேவ ரூபத்திலும் ஜ்ஞாந சக்த்யாதி ஷாட்குண்ய ப்ரகாஶநம் ஒத்தபடியாலே த்ரி வ்யூஹ பக்ஷமும் நடக்கும். இதில் ஸங்கர்ஷணாதி வ்யூஹங்கள் மூன்றில் ஜ்ஞாந பலங்கள், ஐஶ்வர்ய வீர்யங்கள், ஶக்தி தேஜஸ்ஸுக்களான இவ்வி(ஈரி)ரண்டு குணங்களே ப்ரகாஶிதங்களாயிருக்கும். இங்கு

வ்யூஹ ரூபம்

3 ' गुणैः षड्भिस्त्वेतैः ' (குணைஷ்ஷட்பிஸ்த்வேதைः)

4 ' षाड्गुण्याद्वासुदेवः ' (ஷாட்குண்யாத் வாஸுதேவः)

---

1 பாரதம் நித்யம் – அழிவில்லாதவனும், நித்யாக்ருதிதரம் - நித்யமான சரீரத்தைத் தரித்துக்கொண்டிருப்பவனும்.

2 பௌஷ்கர ஸம்ஹிதை நித்ய ஸித்தே - நித்யமாக ஏற்பட்ட ததாகாரே - அவனுடைய ரூபத்தின் விஷயத்திலும் (அவனுடைய)பரத்வத்திலும், இவை உண்மை என்கிற எண்ணம் எவனுடைய உள்ளத்தில் இருக்கிறதோ அவன் பகவானை(அன்றிக்கே பகவான் அவனை) அடைகிறான்.

3 ஸ்ரீ வரதராஜஸ்தவம்—16 ஏதைः - இந்த, ஷட்பிः குணைः ஆறு குணங்களினால் (உம்முடைய முதலாவதான பரவாஸுதேவமூர்த்தியானது ப்ரகாசித்தது,)

4 ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்—2 - 39 (அப்படிப்பட்ட நீர்) ஆறு குணங்களினால் பரவாஸுதேவன் (என்று சொல்லப்பட்டவராய் முக்

1' जाग्रत् स्वप्न ' (ஜாக்ரத் ஸ்வப்ந)

இத்யாதி ஶ்லோகங்களை அநுஸந்திப்பது. நாலு வ்யூஹங்களில் நின்றும் அடைவே ஓர் ஒன்றிலே மும்மூன்றாக அவதரித்த கேஶவாதிகளான பன்னிரண்டு ரூபங்களும் வ்யூஹாந்தரங்கள். இவர்கள் மார்கழிமாதம் முதலாகப் பன்னிரண்டு மாதங்களுக்கும் த்வாதஶ ஆதித்யர்களுக்கும் நிர்வாஹகராய் இருப்பார்கள். ஊர்த்வ புண்ட்ராதிகளில் இவர்கள் நிலை விஶேஷித்திருக்கும்.

விபவங்களாவன—வ்யூஹமடியாக வருகிற பத்மநாபன் முதலான முப்பத்தாறு ப்ராதுர்பாவங்கள். இவற்றில் ஸ்ரீவாமனரூபத்தில் த்ரிவிக்ரம ரூபம் போலே தோற்றும் ஆகாராந்தரங்கள் விபவாந்தரங்கள். கபிலாதிஸம்ஜ்ஞிகங்கள் ஸாக்ஷாத் பகவதவதாரங்களல்ல. ஜீவர்களான ப்ரஸித்த கபிலாதிகளை அநுப்ரவேஶித்து அவர்களுக்கு அதிஶயங்களை உண்டாக்குமவை.

விபவ ரூபம்

2 ' कृष्णरूपाण्यसङ्ख्यानि ' (க்ருஷ்ணரூபாண்யஸங்க்ஸ்யாநி)

இத்யாதிகளிற்படியே ஓரொன்றில் அவாந்தர பேதங்கள் பஹுப்ரகாரங்கள்.

தர்களினால் அனுபவிக்கப்பட்டு வருகிறீர், பகவானாகிய ரங்கநாதனே! வ்யூஹாவதாரம் செய்து பலத்துடன் சேர்ந்த ஜ்ஞாநத்தினால் ஸங்கர்ஷணனாயிருக்கிற நீர் லோகத்தை ஸம்ஹாரம் செய்கிறீர், சாஸ்த்ரத்தைக் கொடுக்கிறீர், ஐச்வர்யத்துடன் சேர்ந்த வீர்யத்தினால் ப்ரத்யும்நனாயிருந்து ஸ்ருஷ்டியைச் செய்கிறீர், தர்ம ப்ரவசநத்தையும்செய்கிறீர், சக்தி தேஜஸ் இவைகளைத் தரித்துக்கொண்டு அநிருத்தனாயிருந்து லோகத்தை ரக்ஷிக்கிறீர், தத்த்வத்தையும் அறிவிக்கிறீர்.

1 ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்—2 - 40 (ஓ! ரங்கநாதனே) விழித்துக் கொண்டிருப்பவன், ஸ்வப்ந தசை அடைந்தவன், (ஸுஷுப்தி தசை அடைந்தவன், மூர்ச்சா தசை அடைந்தவன் இவர்களுக்கு ஸமமான த்யானம் செய்பவர்களின் வரிசையைப்போல த்யானம் செய்யப்படுகிற நீரும் அதற்கு உசிதங்களான குணம் ஆயுதம் சின்னம் இவைகளையுடையவராய்க் கொண்டு நாலு வ்யூஹத்தையும் நாலு விதமாகத்தரிக்கிறீர்,

2 பாஞ்சராத்ரம், க்ருஷ்ண ரூபாணி - ஸ்ரீ க்ருஷ்ணனுடைய ரூபங்கள், அஸங்க்ஸ்யாநி - கணக்கிடமுடியாதவைகள்.

அந்தர்யாமி ரூபமாவது—யோகிகளுக்குக் காணலாம்படி ஹ்ருதய ப்ரதேஶத்துக்குள்ளே ஸந்நிஹிதமாய் இருப்பதொரு ஸூக்ஷ்மரூப விஶேஷம்,

அந்தர்யாமி ரூபம்

அர்ச்சாவதாரமாவது—பர வ்யூஹாதி லக்ஷணங்களோடே கூட ஸ்வயம்வ்யக்தாதி ப்ரக்ரியையாலே தேஶகாலாதி விப்ரகர்ஷமற்று மாம்ஸ சக்ஷுஸ்ஸுக்களுக்கும் அநுபவிக்கும்படிதோற்றி நிற்கும் நிலை. இங்கே

அர்ச்சா ரூபம்

1 'यथा युवानं राजानं' (யதா யுவாநம் ராஜாநம்)

2 'सर्वातिशायि षाड्गुण्यं' (ஸர்வாதிஶாயி ஷாட்குண்யம்)

3 'अर्च्यः सर्वसहिष्णुः' (அர்ச்ய: ஸர்வ ஸஹிஷ்ணு:)

இத்யாதி ஶ்லோகங்களையும் அபிமாந ஸம்ஸ்கார பரிமாண அநுப்ரவேஶ ஆபிமுக்க்யாதி விஶேஷங்களையும் கண்டுகொள்வது.

இப் பர வ்யூஹாதி ஸர்வாவஸ்த்தையிலும் ஸர்வஶரண்யனான ஸர்வேஶ்வரன்

ச்ரிய:பதித்வ திவ்யமங்களவிக்ரஹவிசிஷ்டத்வாதிகள்

4 'नित्यश्रीः' (நித்ய ஸ்ரீ:)

5 'शान्तानन्त' (ஶாந்தாநந்த)

1ய தா யுவாநம் ராஜாநம்-யுவாவான ராஜாவைஎப்படியோ(மதம் பிடித்த யானையை எப்படியோ,வந்திருக்கும் இஷ்டமான விருந்தாளியை எப்படியோ, அப்படிப்பட்ட மர்யாதை பயம் ப்ரீதி முதலியவைகளுடன் பகவானை ஆராதிக்க வேண்டும்,)

2 விஷ்வக்ஸேந ஸம்ஹிதை (மந்த்ரம் பிம்பம் இவைகள் சேர்ந்திருக்கும் இடத்தில், அதாவது மந்த்ரத்தினால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட அர்ச்சா விக்ரஹத்தில்) பர ரூபம் முதலியவைகளைக் காட்டிலும் மேற்பட்ட ஜ்ஞாந சக்த்யாதிகள் இருக்கின்றன.)

3 ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்—2-74 அர்ச்ய:-பூஜிக்கத்தகுந்தவன். ஸர்வ ஸஹிஷ்ணு:-எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளுபவன்.

4 ராமா-யுத்த—114-15 நித்ய ஸ்ரீ:-எப்பொழுதும் லக்ஷ்மியுடன் கூடியவன்.

5 சது:ச்லோகீ—4 விகாரங்கள் ஒன்றுமில்லாத பெரிய விபூதிகளையுடைய எல்லா வஸ்துக்களையும் விட மேலான ப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிற எந்த விஷ்ணுவினுடைய ஸ்வரூபமோ . . வேறு அவதார விக்ரஹங்களோ அவைகள் எல்லாவற்றிலும் லக்ஷ்மியாகிய

1 ' नित्यानपायिनीं '(நித்யாநபாயிநீம்)
இத்யாதிகளிற்படியே ஸ்வாபிமதாநுரூப ஸஹதர்மசாரிணீ ஸம்ஶ்லிஷ்டனாயிருக்கும். பராதி ஸ்த்தாந விஶேஷங்களும் புஜ வர்ண பூஷண ஆயுத தேவீ பரிஜந பரிச்சதாதி விஶேஷங்களும் கண்டு கொள்வது. இவ்விக்ரஹ விஶேஷ விஶிஷ்ட வேஷத்தாலே ஶுபாஶ்ரயத்வம் ஸர்வாவஸ்த்தையிலும்அநுவ்ருத்தம். ஹிரண்ய கர்ப்ப ருத்ராதிகளுக்குச் சில அவஸ்த்தைகளிலே விஶேஷித்துப் பகவதாவேஶம் உண்டேயாகிலும் இவர்கள் சிலஅதிகாரம்பெற்ற கர்மவஶ்யரானபடியாலே ப்ரதிபுத்தருக்கு ஸேவ்யர் அல்லரென்று மஹாபாரத பௌஷ்கராதி ப்ரஸித்தம். ப்ரதர்த்தநாதி வித்யைகளிலும் வர்ணாஶ்ரமாதி நியதங்களான சில தர்மங்களிலும்இந்த்ராதி சேதநாந்தரவிஶிஷ்டாநுஸந்தாநம் விதிபலப்ராப்தமானாலும் அந்தச் சேதநாந்தரங்கள் ப்ராணத்யசேதநங்களின்படியே கஞ்சுக துல்யங்களாய் நிற்கையாலே ஶுத்தயாஜிகளுக்குப் போலே விஶேஷ்யனான பரமாத்மாவே ஆராத்யனாய் நிற்கையாலே ஐகாந்த்ய விரோதம் வாராது. ஸாக்ஷாத் பகவதவதாரங்களில் ஆஸுர மோஹநார்த்தமாகக்கர்மவஶ்யத்வ அபிநயமாத்ரமேஉள்ளது. ஶுத்த ஸ்ருஷ்டி விஶேஷமான அவதார ரஹஸ்யத்தின் உண்மையை அறிந்தவனுக்குக் கடுக உபாய பூர்த்தியாலே புநர்பவம் இல்லையாம். ஶுத்தாஶுத்த ஸ்ருஷ்டியிலே ஏதேனும்ஒன்றுக்குக் கேவல நித்யமும் கேவல அநித்யமும் காரணமாகாது. ஸ்வரூப நித்யங்களான த்ரவ்யங்களும் அநித்யங்களான ஈஶ்வர ஸங்கல்ப விஶேஷாதிகளும் கூட ஸாமக்ரியாம். இவற்றில் அநந்யாதீந ஸ்வாதந்த்ர்யத்தாலே ஈஶ்வரன் ப்ரதாந காரணம். இவன் ஸ்வவ்யதிரிக்தமான சேதந ப்ரவ்ருத்திகளிலும் அசேதந ப்ரவ்ருத்திகளிலும் யதாயோகம் கர்த்தாவுமாய் ப்ரேரகனுமாய் அநுமந்தாவுமாய் ஸஹகாரியுமாய் ஸாக்ஷியுமாய் பல ப்ரதனுமாய் பலியுமாய் உதாஸீநனுமாய் நிற்கும் நிலை

2 ' एकस्त्वमसि लोकस्य स्रष्टा ' (ஏகஸ்த்வமஸி லோகஸ்ய ஸ்ரஷ்டா)

உம்முடைய அஸாதாரணங்களானஸ்வரூபாதிகளுடன்நெருக்கமாகச் சேர்ந்திருக்கிறன.

1 சரணாகதி கத்யம் (லக்ஷ்மீ) பகவானை விட்டுப் பிரியாதவள்,

2 ஏக: - ஒருவரான, த்வம் - நீர், லோகஸ்ய - லோகத்திற்கு,ஸ்ரஷ்டா - ஸ்ருஷ்டிப்பவராக, அஸி - ஆகிறீர்,

இத்யாதிகளிற்படியே உசித வ்யவஸ்த்தையாலே கண்டு கொள்வது. ஸங்கல்ப மாத்ரத்தாலே ஸர்வேஶ்வரன் பண்ணும் ப்ரேரணம் ஶரீர பூதங்களான சேதநாசேதநங்கள் இரண்டிலும் ஒத்திருக்கும். க்ருபா மூலமான உபதேஶமுகத்தாலே பண்ணும் ப்ரேரணம் ஶாஸ்த்ரவஶ்யரான க்ஷேத்ரஜ்ஞர் பக்கல் அதிகம்.

ப்ரதாந தத்த்வாதி ஸங்க்ரஹம்

இப்படி ஸர்வ ப்ரகார விஶிஷ்டனாய்க் கொண்டு நிரதிஶய போக்யனான ஶ்ரிய:பதியே ப்ரதாந தத்த்வம். இவனோடு நமக்கு உண்டான ஶரீராத்ம பாவம் ப்ரதாந ஸம்பந்தம். இவனுடைய உபாயத்வ உபேயத்வரூபமான அர்த்த த்வயம் ப்ரதாந ஜ்ஞாதவ்யம். இவைஇரண்டிற்கும் உட்கருவான நாராயண ஶப்தம் ப்ரதாந நாமதேயம். இவன் பக்கல் ப்ரார்த்தநா பூர்வக பரந்யாஸம் ப்ரதாந ஹிதம். இவனுக்கு அபிமதத்தை நடத்துகை ப்ரதாந புருஷார்த்தம். இத்தத்த்வ ஹித புருஷார்த்தங்களில் தெளிவும் துணிவும் த்வரையும் உண்டாம்படி மூலமந்த்ராதிகளாலே ஸம்யக்காகஉபதேஶித்தவன் ப்ரதாந ஆசார்யன். இவன் உபதேஶத்தாலே ஸம்யக் ஜ்ஞாநம் பிறந்தால் நிஷித்த நிவ்ருத்தியும் விஷய விரக்தியும் பதிவ்ரதாநுராக துல்யமான பகவத் ப்ரேமமுமுடையவனாய்ச் சோதித கைங்கர்யத்தில் நிற்குமவன் ப்ரதாந ஶிஷ்யன், இவனுக்கு முக்திக்கு மூலகாரணமான தத்த்வத்ரய விவேகம் பிறந்தபடியை கோ க்ஷீர க்ருத த்ருஷ்டாந்தத்தாலே உபநிஷத்துக் காட்டிற்று.

இத்தைக்

1 'கறந்த பாலுள் நெய்யே போல்'

என்கிற த்ரமிடோபநிஷத் வாக்யத்திலும் காணலாம். இங்கே சித் அசித் என்கிற ஶரீர வகுப்பையும் அநுஸந்திப்பது. இத்தெளிவோடே பரஸமர்ப்பணாதிகள் பண்ணினால் அநுஷ்ட்டிக்க வேண்டும். இத்தெளிவன்றிக்கே பண்ணினாலும் இத்தனை அடியராநார்க்கு இரங்கும் நம் அரங்கனாய பரம காருணிகன் காலக்கழிவற ஞாநக் கை தர இத்தெளிவோடே தலைக்கட்டும்.

---

1 திருவாய்—8-5-10

கட்டளைக் கலித்துறை

1 குடல்மிசை ஒன்றியும் கூடியும் நின்ற கொடும் துயரும் *
உடல்மிசைத் தோன்றும் உயிரும் உயிர்க்கு உயிராம் இறையும் *
கடல்மிசை கண்டவை தானத்திரளவை போர்த்த பொன்* நூல்
மடல்மிசை வார்த்தை அதன் பொருள் என்ன வகுத்தனமே. 28

2 தத்துவம்தன்னில் விரித்திடத் தோன்றும் இரண்டுதன்னில் *
பத்தி விலக்கிய பாசண்டர் வீசுறும் பாசமுருர் *
எத்திசையும் தொழுதேத்திய கீர்த்தியர் எண்டிசையார் *
சுத்தருரைத்த சுளகம் அறிந்த அத்தூயவரே. 29

1 தேஹத்துடன் சேர்ந்தும், அதாவது சரீரத்திற்குக் காரணமான த்ரவ்யங்களுடன் சேர்ந்து சரீரமாகப் பரிணமித்தும், அப்படிப்பட்ட அவஸ்த்தை இல்லாதபோது சேர்ந்தும் இருக்கிற க்ரூரமானதுக்கமும் (துக்கம் நிறைந்த ப்ரக்ருதியும்), அன்றிக்கே ஆத்மாவைப் போலே இந்தச் சரீரத்தைப் பற்றி நிற்கும் இந்த்ரியங்களும், சரீரத்தில் ப்ரகாசிக்கிற ஜீவாத்மாவும், அந்த ஜீவனுக்கும் அந்தராத்மாவான ஈச்வரனும், அதாவது அசேதநம், ஜீவன், ஈச்வரன் என்கிற தத்த்வ த்ரயங்களும், (நிற்கும் நிலைக்கு இரண்டு த்ருஷ்டாந்தங்கள் மேல் கூறப்படுகின்றன) ஸமுத்ரத்தில் காணப்படுகிற (உண்டாகிற) இடங்களான சிப்பிசங்கு முதலியவைகளின் கூட்டத்தினால் மறைக்கப்பட்ட பொன் போல் ஸ்ப்ருஹணீயமான முத்து. (இது முதல் த்ருஷ்டாந்தம்—ஸமுத்ரம் ப்ரக்ருதியைப் போலவும், ஜீவன் முத்துச் சிப்பியைப் போலவும், பரமாத்மா சிப்பிக்குள் இருக்கும் முத்துப் போலவும் என்றபடி). 'நூல்' இத்யாதி மற்றொரு த்ருஷ்டாந்தம், சாஸ்த்ரம், அது எழுதப்பட்டிருக்கும் தாளபத்ரம்(ஓலை), அந்த வார்த்தைகளின் அர்த்தம், அதாவது சாஸ்த்ரங்கள் அசேதநம் போல, அவற்றின் சப்த ராசி ஜீவன் போல, அவற்றின் அர்த்தம் பகவான் போல) என்று கூறும்படியாயிருக்கும் என்று பிரித்துக் காட்டினோம், இப்படித் தான் ப்ராசீன வ்யாக்யானங்களில் காணப்படுகிறது, ஒப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீ உப. ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி கீதையில் 7 - 7 - ம் ச்லோகத்தில் 'மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணி கணா இவ' என்பதைப் பின் பற்றி 'கோர்த்த' என்கிற பாடத்தின் ஸ்த்தாநத்தில் 'கோர்த்த' என்னும் பாடத்தை அங்கீகரித்து அர்த்தம் கூறியிருக்கிறார். இவற்றின் விவரணத்தைப்மேலே ப்ரசுரிக்கப்படும் பாட பேதங்கள் என்னும் அனுபந்தத்தில் கண்டுகொள்வது.

2 எட்டுத் திசைகளிலும் நிறைந்த கீர்த்தியையுடையவர்களாயும் எல்லாத் திக்குக்களிலும் வஸிக்கும் ஜனங்களினால் ப்ரணாம பூர்வகமாகப் புகழப்படும் பெருமையையுடையவர்களாயும்-இருக்கிற பரிசுத்தமான ஸ்வபாவத்தையுடைய ஆசார்யர்கள் சொன்ன தத்த்வக்ரயசுள

1 வினைத்திரள் மாற்றிய வேதியர் தந்த நல் வாசகத்தால் *
அனைத்தும் அறிந்தபின் ஆறும் பயனுமென அடைந்தோம் *
மனத்திலிருந்து மருத்தமுதாகிய மாதவனார் *
நினைத்தல் ம(றுத்த)னத்திலரிதாய நன்னிழல் நீள் கழலே. 30

2 इतीरितो देशिकदत्तचक्षुषा यथाश्रुतं वेङ्कटनाथसूरिणा ।
अपक्षपातैः निपुणैः समीक्ष्यतामनात्म जीवेश्वर सिन्तन क्रमः ॥

இதி ஈரிதோ தேஶிகதத்த சக்ஷுஷா
யதா ஶ்ருதம் வேங்கடநாத ஸூரிணா ।
அபக்ஷபாதைः நிபுணைः ஸமீக்ஷ்யதா -
அநாத்ம ஜீவேஶ்வர சிந்தந க்ரமः ॥

तरळदुरवगाहात् तत्त्वदुग्धाम्बुराशेः यदमृतमुदहार्षीत् वेङ्कटेशो यथावत् ।
तदिह चुळकमात्रं साधुभिः सावधानैः अनुनरुपनिषेव्य स्तन्यमास्वादनीयम् ॥

கத்தை அறிந்துகொண்ட தூய மனத்தையுடையவர்கள் தத்த்வங்களை விஸ்தரமாக நிரூபிக்கும்பொழுது ப்ரகாசிக்கிற பரமாத்ம ஜீவாத்ம தத்த்வங்களிடத்தில் விச்வாஸத்தைத் தடுக்கிற பாஷண்டிகளின் வலையிலே அகப்படமாட்டார்கள். 'சுளகம் அருந்திய' என்று பாடாந்தரம்- அப்பொழுது இந்தச் சுளகத்தைப் பானம் செய்தவர்கள் — அநுபவித்தவர்கள் என்று பொருள்.

1 கர்மங்களுடைய கூட்டத்தை (நம்மை விட்டு) மாற்றிய வேதவித்துக்களான ஆசார்யர்கள் நமக்கு உபதேசித்த நல்ல வார்த்தையினால் எல்லாவற்றையும் தெரிந்துகொண்ட பின்பு ஹ்ருதய கமலத்தில் இருக்கும் மருந்தும் அம்ருதமுமாகிற, (இங்கு மருந்து என்பது மருத்து என மாறியிருக்கிறது) நம்மால் மனத்தினால் நினைப்பதற்கு முடியாததான பகவானுடைய நல்ல நிழலையுடைத்தான நீண்ட திருவடிகளையே உபாயமும் ப்ரயோஜனமும் என அடைந்தோம். 'நினைத்தல் மறுத்தல்' என்கிற பாடாந்தரத்தில் நினைப்பதற்கும் மறுப்பதற்கும் அசக்யமான என்று பொருள்.

2 தேசிக தத்த சக்ஷுஷா - ஆசார்யர்களினால் கொடுக்கப்பட்ட ஜ்ஞாநமாகிற கண்களையுடையவரான, வேங்கடநாத ஸூரிணா- வேங்கடநாதன் என்னும் திருநாமமுடையவரால், யதா ச்ருதம் - (ஆசார்யர்களிடமிருந்து) எப்படிக் கேட்கப்பட்டதோ அப்படியே, இதி - இப்படி, ஈரித: - சொல்லப்பட்ட, அநாத்ம ஜீவேச்வர சிந்தந க்ரம: - ஆத்மாவல்லாத அசேதந வஸ்துக்கள், ஜீவன், ஈச்வரன் இவர்களைப்பற்றிய

தரள துரவகாஹாத் தத்த்வ துக்தாம்புராஶேः
யதம்ருதம் உதஹார்ஷீத் வேங்கடேஶோ யதாவத் ।
ததிஹ சுளக மாத்ரம் ஸாதுபிஸ் ஸாவதாநைः
அபுநருபநிஷேவ்யஸ்தந்யம் ஆஸ்வாதநீயம் ॥

பரமாத்ம நிரூபணாதிகாரம் என்னும்
மூன்றாவது அதிகாரம் முற்றிற்று

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
॥ श्री त त्त्व त्र य चु ळ कं सं पू र्णम् ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்

ஸ்ரீ தத்த்வ த்ரய சுளகம் முற்றிற்று

விசாரத்தின் க்ரமம், அபக்ஷபாதைः - பக்ஷபாதம் இல்லாதவர்களான, நிபுணைः - புத்திமான்களினால், ஸமீக்ஷ்யதாம் - பார்க்கப்படட்டும், அதாவது அப்யஸிக்கப்படட்டும்.

5 தரள துரவகாஹாத் - சஞ்சலமான புத்தியையுடையவர்களினாலே இறங்க முடியாததான, தத்த்வ துக்தாம்புராஶேः - தத்த்வங்களாகிற க்ஷீர ஸமுத்ரத்திலிருந்து, வேங்கடேशः - வேங்கடேசன் என்னும் திருநாமத்தையுடைய ஆசார்யன் யத் - எந்த, அம்ருதம் - அம்ருதத்தை, யதாவத் - க்ரமப்படி, உதஹார்ஷீத் - எடுத்தாரோ, அபுநருபநிஷேவ்யஸ்தந்யம் - மறுபடியும் ஸ்தந்யத்தை சாப்பிடாமல் இருக்கும்படி செய்யும், சுளக மாத்ரம் - உள்ளங்கை அளவுள்ள த்த - அந்த அம்ருதமானது, இஹ - இந்த க்ரந்தத்தில், ஸாவதாநைः - கவனத்துடன் கூடியவர்களான, ஸாதுபிः - ஆஸ்திகர்களினால், ஆஸ்வாதநீயம் - அநுபவிக்கத்தக்கது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சீராரும் தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்

பதினேழாவது ரஹஸ்யம்

ஸார ஸங்க்ஷேபம் என்னும்

ஸ்ரீ ரஹஸ்யத்ரய சுளகம்

[இது அம்ருத ரஞ்ஜனீ ரஹஸ்யங்களில் பதினாறுவது காஞ்சீபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது]

[திருவஷ்டாக்ஷர ஸங்க்ரஹம்—ப்ரணவ ஸ்வரூபம்—அகாரார்த்தம்—உகாரார்த்தம்—மகாரார்த்தம்—ப்ரணவ ஸமுச்சயார்த்தம்—நம: சப்தார்த்தம்—நாராயண சப்தார்த்தம்—சதுர்த்தீ விபக்த்யர்த்தம்—வாக்யார்த்த நிரூபணம்—த்வயத்தின் ஸமுச்சயார்த்தமும் த்வயம் என்னும் திருநாமத்திற்குக்காரணமும்—ஸ்ரீசப்தார்த்தம்-மதுப்பின் அர்த்தம்—நாராயண சப்தார்த்தம்—சரணௌ பதத்தின் அர்த்தம்—சரண சப்தார்த்தம்—ப்ரபத்யே பதத்தின் அர்த்தம்—உத்தரகண்ட ஸ்ரீமச் சப்தார்த்தம்—நாராயண சப்தார்த்தம்—நம: சப்தார்த்தம்—த்வயத்தின் வாக்யார்த்தம்—சரம ச்லோக க்ருத்யம்—ஸர்வதர்ம சப்தார்த்தம்—பரித்யஜ்ய சப்தார்த்தம்—மாம் ஏகம் பதங்களின் அர்த்தம்— சரணம் சப்தார்த்தம்—வ்ரஜ சப்தார்த்தம்-சரண்யக்ருத்யமும் அஹம்சப்தார்த்தமும்—த்வா சப்தார்த்தம்—ஸர்வபாபேப்ய: சப்தார்த்தம்—மோக்ஷயிஷ்யாமி சப்தார்த்தம்—மா சுச: சப்தார்த்தம்]

திருமந்த்ராதிகாரம் என்னும் முதல் அதிகாரம்

நேரிசை வெண்பா

1 ஓதுமுரை நான்கதனில் ஓங்கும் ஒரு மூன்றினுள்ளே *
நீதி நெறி வழுவா நிற்கின்றோம் *— போதமரும்

---

1 ஆயிரம் திருநாமமும் புஷ்பத்தில் வஸிப்பவளான லக்ஷ்மியும் ஒரு பொழுதும் விட்டுப் பிரியாத நாராயணனுடைய க்ருபையினால்

பேராயிரமும் திருவும் பிரியாத *
நாராயணன் அருளால் நாம். 31

ஸதாசார்ய கடாக்ஷமுடையனான ஶரணாகதனுக்கு ரஹஸ்ய த்ரயார்த்தம் நித்ய போக்யம். இவற்றில் திருமந்த்ரம் ஸர்வஸங்கரஹம். இது எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாய் ஒரு வாக்யமாய் இருக்கும்.

திருவஷ்டாக்ஷர ஸங்க்ரஹம்

இதில் மூலமாகிய ஒற்றை எழுத்தான ப்ரதம பதத்தை ஶ்ருதி ஸ்ம்ருதிகள் சொல்லுகிறபடியே பிரித்துப் பார்க்குமளவில் மூன்று அக்ஷரமாய் அவைதாமும் மூன்று பதமாய் ஒரு வாக்யமாய் இருக்கும்.

ப்ரணவ ஸ்வரூபம்

இதில் ப்ரதமாக்ஷரம் ஸர்வ காரணபூதனுய் ஸர்வரக்ஷகனுய் ஸர்வ ஶேஷியுமான ஶ்ரிய:பதியைச் சொல்லுகிறது. எங்ஙனே என்னில்:—வாச்யங்களுக்கெல்லாம்மூலமானவனை வாசகங்களுக்கெல்லாம் மூலமான இது காட்டும் என்று புராணம் சொல்லிற்று. 'அவ ரக்ஷணே' எனகிற தாதுவிலே நிஷ்பந்நமாய் ஸர்வ ரக்ஷகனைக காட்டுகிறது. இதில் ஏறிலோபித்த சதுர்த்தீ,ரக்ஷணீயனான ஜீவனுடையதாதர்த்த்யத்தைச் சொல்லுகையாலே ஸர்வ ரக்ஷகனுடைய ஸர்வ ஶேஷித்வமும் ஸித்திக்கிறது. இஶ்ஶேஷ ஶேஷிபாவம் ஒழிகக ஒழியாத உறவானபடியாலே ஶரீராத்மபாவம் வரும்படி கண்டுகொள்வது. ஸர்வ காரணபூதனுய் ஸர்வ ரக்ஷகனுய் ஸர்வ ஶேஷியுமான ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிற இவ்வக்ஷரத்தில் த்வயத்தில் போலே யதாப்ரமாணம் உபயுகத ஸஹதர்மசாரிணீ ஸம்பந்தமும் விவக்ஷிதம்.

அகாரார்த்தம்

மத்யமாக்ஷரம் அவதாரணார்த்தமாய் அகார வாச்யனுக்கே என்று இஸ்ஸம்பந்தததை நியமிததுக்கொண்டு மற்றுள்ளா

ஆசார்ய கடாக்ஷம் பெற்ற நாம் அத்யயனம் செய்யப்படுகிற சட்தமாகிற நான்கு வேதங்களில் உத்க்ருஷ்டமாக ப்ரதிபாதிக்கப்படுகிற ஒப்பற்ற ரஹஸ்ய த்ரயங்களுடைய தாத்பர்யார்த்தங்களில், அன்றிக்கே மூன்று பதங்களையுடைய திருமந்த்ரத்திலே,நிஷ்டைகளில்ந்யாயமான மார்க்கத்திலிருந்து தவறிப் போகாமல் நிற்கின்றோம்.

ரோடு நிருபாதிகமானதுவக்கில்லை

உகாரார்த்தம் என்கிறது,

1 ‘ மற்றுமோர் தெய்வமுளது என்றிருப்பாரோடுஉற்றி லேன் ’

என்கிறபடியே ததீயபர்யந்தமாகத் தேவதாந்தர வர்ஜநம் ஸித்திக்கும்.

த்ருதீயாக்ஷரம் ‘ மந ஜ்ஞாநே’ இத்யாதிகளிலே நிஷ்பந்நமாயாதல் அஸ்மத்ஶப்தத்தில் சாந்தஸப்ரக்ரியையாலேலுப்த ஶேஷமாயாதல் ஏக வ்யஞ்ஜந

மகாரார்த்தம் மாத்ரமான பதமாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான முன்சொன்ன ஶேஷத்வாஶ்ரயமான ஆத்மாவைக் காட்டுகிறது.

இவ்வக்ஷர த்ரயத்தால் ஸ்வயம்ப்ரகாஶனுய் அநுகூலஸ்வபாவனுய் ஜ்ஞாதாவாய் ஸ்வஸ்மைபாஸமாநனுய் சதுர்விம்சதி தத்த்வ விலக்ஷணனுன ஜீவாத்மா

ப்ரணவ ஸமுச்சயார்த்தம் ஸர்வ காரணபூதனுய் ஸர்வ ரக்ஷகனுய் ஸர்வ ஶேஷியுமான ஶ்ரீ ய:பதிக்கே அநந்யார்ஹ நிருபாதிக ஶேஷபூதன் என்று அநுஸந்தித்தாநுயிற்று. இப்படித் தன்னைச் சொல்லவே தன் உடைமையும் அவனுக்கே ஶேஷமென்றதாம்.

2 ‘ दासभूताः स्वतःसर्वे ’ (தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே)

3 ‘ मम नाथ ’ (மம நாத)

4 ‘ अकारार्थो विष्णुः ’ (அகாரார்த்தோ விஷ்ணு:)

---

1 பெரிய திருமொழி—8- 10- 3

2 மந்த்ர ராஜ பத ஸ்தோத்ரம் ஸர்வே - எல்லா ஆத்மாக்களும், ஸ்வத: ஸ்வபாவத்தினுலேயே, தாஸபூதா: - பகவானுக்குத் தாஸபூதர்கள். (ஆகையினுல் நானும் உனக்குத் தாஸனென்று உன்னை ஸேவிக்கிறேன், இது ருத்ரனுடைய வார்த்தை.)

3 ஆள- ஸ்தோ—53 நாத - பகவானே ! (எது) மம - எனக்கு (சேஷபூதமாயிருக்கிறதோ, நான் எப்படிப்பட்டவனுகிறேனே. அவை எல்லாம் உமக்கே சேஷபூதம்)

4 அஷ்ட ச்லோகீ—(லோகங்களினுடைய ஸ்ருஷ்டி, ஸ்த்திதி, ஸம்ஹாரம் இவற்றைச் செய்கிற) விஷ்ணு: - விஷ்ணுவாகிய பகவான் அகாரார்த்த: - அகர்ரத்தின் அர்த்தம்)

1 ‘ கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேன் ஒரு வர்க்குரியேனோ ’

இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது. பதிக்கு ஶேஷம் என்ன வே பத்நிக்கும் ஶேஷம் என்றதாம். மத்யமாக்ஷரம் லக்ஷ்மீ வாசகமாய் மகார வாச்யனான ஜீவன் இருவருக்கும் தாஸபூதன் என்கிற யோஜனையில் அவதாரணம் ஆர்த்தம்.

மத்யம பதம் ஸூக்ஷ்ம யோஜனையில் இரண்டு அக்ஷரமாய் இரண்டு பதமாய் ஒரு வாக்யமாகிறது. ‘ ம: ’ என்றது எனக்கு என்றபடி. இது விரோதிவர்க்கத்தைஎல்லாவற்றையும்கணிசிக்கிறது. இத்தால் ஆகிஞ்சந்யாதிகளும் பலிக்கும். ‘ ந ’ என்று இவ்விரோதியை நிஷேதிக்கிறது. நான் எனக்கு உரியேனல்லேன், வேறு ஒன்றுக்கும் உரியேனுமல்லேன் என்றதாயிற்று, என்னுடைய க்ரியையும் என்னதன்று, நானும் என்னதல்லன், பகவானுக்கே நான் ஆகா நின்றேன் என்று நிருக்தத்தில் சொல்லுகிறபடியே தானும் தன்னுடைமையும் தனக்கும் பிறர்க்கும் உரியவல்லாதபடி பகவதநந்யார்ஹ ஶேஷத்வம் ப்ரணவ நமஸ்ஸுக்களிலே அநுஸந்திக்கப்பட்டது. இதுதன்னாலே தன்னையும் தன் உடைமையையும் சேரத் தன்னோடு துவக்கறுக்கிறதாகவுமாம். இத்தாலே அஹங்கார மமகாரங்களாகிற ஸம்ஸார மூலங்கள் சேதிக்கப்பட்டன. அசித் விலக்ஷணனான நான் ஶ்ரிய:பதிக்கே ஶேஷபூதன், அவன் என்னுடைய ஸ்வாமி என்கிற யதாவஸ்த்தித அஹங்கார மமகாரங்கள் அநுகுணம்.

நம: சப்தார்த்தம்

2 ‘ யானே என்தனதே’

இத்யாதிகளிற்சொல்லுகிற விபரீத அஹங்கார மமகாரங்கள் தோஷம். அவைகளாயின இங்கே கழிக்கப்படுகின்றன. கீழே அந்யஶேஷித்வம் கழிகையாலே தனக்குத் தானும் வேறொன்றும் நிருபாதிக ஶேஷமன்று என்று பலிக்கையாலே நமஸ்ஸு ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியைச் சொல்லுகிறதாகவுமாம். அதாவது லௌகிக தாஸாதிகள் படியன்றிக்கே ஸ்வவ்யாபாரத்தில் நித்ய பரஸாபேக்ஷனாகை. இப்படி ஸ்வதந்த்ர ஸ்வாமியிட்ட வழக்கான தனக்கு

1 பெரிய திருமொழி—8 - 9 - 3 2 திருவாய்—2-9-9

1 ' அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன் '
என்கிறபடியே
2 ' திருவெட்டெழுத்தும் கற்று நான்—
உற்றதும் உன்னடியார்க்கு அடிமை '

என்கிற பாகவதஶேஷத்வமும் இங்கே ஸித்திக்கிறது. இங்குபாகவதர் என்கிறது கீழ்ச் சொன்ன பரஶேஷத்வ ஜ்ஞாநரஸிகரை. ஸ்வாமியான தனக்கு அபிமதமானதொரு வழியாலேஸ்வதந்த்ரனானவன் தானே ப்ரவர்த்திப்பிக்க அம்முகத்தாலே அவனை வஶீகரிக்க வேண்டுகையால் அகிஞ்சநனுக்கு அவன் பக்கல் ஸ்வரக்ஷணபரத்தை ஸமர்ப்பிக்கையாகிற உபாயவிஶேஷமும்இங்கே பலிக்கும், நம: என்கிற ஶப்தம்தானே ப்ரயோக விஶேஷங்களாலும் பல ஶாஸ்த்ரங்களாலும் அதிகாராதிகளுடனே கூடின ப்ரபத்தி தன்னையே சொல்லுகிறதாகவுமாம்.

இப்ப்ரபத்திக்கு இலக்காய் ஶரண்ய குண பூர்ணனாய் நின்ற ரக்ஷகனான ஶேஷியின் படியையும் ப்ரபத்தி கர்த்தாவாய் ஆத்ம குணயுக்தனாய் ரக்ஷணீயனான ஶேஷபூதன் படியையும் ஆகாராந்தரங்களாலே வெளியிடுகிறது நாராயண ஶப்தம். இது நாரங்களை அயநமாகவுடையவன் என்றுதல் நாரங்களுக்கு அயநம் என்றுதல் சொல்லும். 'ர' என்று அழியும் வஸ்துக்களைச் சொல்லி, நர ஶப்தத்தாலே அழியாத சேதநரைச் சொல்லி, நார என்று சேதநருடைய ஸமூஹத்தைச் சொல்லி, இஸ்ஸமூஹம் தான் பல என்னும் இடத்தைப் பஹு வசநத்தாலே சொல்லுகிறது. நர என்று ஒரு படியாலும் அழிவில்லாத நேதாவான ஸர்வேஶ்வரனைச் சொல்லி, அவனோடே யதா ப்ரமாணம் ஸம்பந்தமுடைய ஸர்வத்தையும் நார ஶப்தத்தாலே சொல்லுகிறதாகவுமாம். இத்தை அயநமாக உடையவனாகையாவது இருப்பிடமாகவாதல் வ்யாப்யமாகவாதல் உடையவன் என்றபடி. இத்தால் அவ்வோ வஸ்துக்களில் உள்ளும் புறம்பும் ஒழிவற நிறைந்து நிற்கிற நிலை தோற்றுகிறது. சேதநாசேதந த்ரவ்யங்களை நித்யமாக நியமித்துக் கொண்டு வ்யாபித்து நிற்கையாலே ஶரீராத்மபாவம் பலிக்கும். இவற்றுக்குத் தான் அய

நாராயணசப்தார்த்தம்

அமலனாதி—1 2 பெரிய திருமொழி-8-10-8

நம் என்றால் உபாயமாயும் உபேயமாயும் ஆதாரமாயும் நிற்கிற நிலை தோற்றுகிறது. நீயே உன்னைத் தரவேண்டும்என்றவர்களுக்கு

1 'எனக்கே தன்னைத் தந்தகற்பகம்'

என்கிறபடியே உபாயமும் உபேயமுமாகிறான். சேதநாசேதநங்கள் இரண்டுக்கும் உடன்மிசை உயிரென நின்று ஆதாரமுமாகிறான். இப்படிப் பரம சேதநனைக் குறித்து அருளிச்செய்த ஆதேயங்களான சேதநாசேதநங்கள் இரண்டுக்கும் ஶரீரத்வமும் ஸித்திக்கும். காரணத்வ உபாயத்வாதிகளைச் சொல்லுகிற இத்திருநாமத்தில் உபய விபூதி யோகமும் உபய லிங்கத்வமும் ஸர்வவிதபந்துத்வமும் அநுஸந்தேயம்.

2 'நாரணன் தம் அன்னை நரகம் புகாள்'

3 'குலம் தரும் செல்வம் தந்திடும்'

இத்யாதிகளிலே இதின் ப்ரபாவம் கண்டு கொள்வது.

சதுர்த்தீ விபக்த்யர்த்தம்

இதில் சதுர்த்தீ தாதர்த்த்யத்தைமுன்னிட்டு அதின்பலமாய் ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்தைக் கணிசிக்கிறது.

திருமந்த்ரவாக்யார்த்தநிரூபணம்

இத்திருமந்த்ரத்தில் வாக்யார்த்தத்தைப் பலபடி அநுஸந்திப்பார்கள். அகார வாச்யனாய் நாராயணனான ஶ்ரிய:பதிக்கு நான் அநந்யார்ஹஶேஷபூதன், எனக்கு உரியேனல்லேன், என்று திருமந்த்ரம் முழுக்க ஸ்வரூப பரமானால் தன்னுடைய ஸ்வரூப ஸ்த்திதி ப்ரவ்ருத்திகள் பர ஶேஷதைக ரஸங்களுமாய்ப்பராதீநங்களுமாய் இருக்கும்படி யதாஸ்த்தாநமநுஸந்தேயம்(1). ப்ரணவ நமஸ்ஸுக்கள் ஸ்வரூப பரமாய், மேல் நாராயணன் பொருட்டு ஆவேன் என்று பல ப்ரார்த்தனையாகவுமாம்(2). இப் ப்ரார்த்தனையால் ஶேஷத்வ பலமான ஸ்வரூபாநுரூப கைங்கர்ய விஶிஷ்டனாவேன் என்றதாயிற்று. ப்ரணவம் ஸ்வரூப பரமாய் மேல்இரண்டு பதங்களும் அத்யாஹரித்த க்ரியாபதங்களோடே கூடி அநிஷ்டநிவ்ருத்தியையும் இஷ்ட ப்ராப்தியையும் அபேக்ஷிக்கிறனவாகவுமாம்(3). அகார வாச்யனான நாராயணனுக்கு நான் அநந்யார்ஹ ஶேஷபூதன், அவனையே ஶரணமாகப் பற்றினேன், அவன் திருவடிகளிலே

1 திருவாய்—2-7 11 பெரியாழ்—4 -6 -1 3 பெரிய திரு 1-1 9

1 ' ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் '

என்று இப்பதங்கள் அடைவே ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பிக்கின்றனவாகவுமாம்(4). இவ்வடைவேஅநந்யார்ஹ ஶேஷத்வமும், அநந்யோபாயத்வமும், அநந்ய ப்ரயோஜநத்வமும் பெற்ற அதிகாரி பத்த தஶையிலே முக்தரோடு ஒக்கும். இப்படி ப்ரணவாதிகளிலே ஶோதிதஸ்வரூபனாய் ஸ்வரூபாநுரூபமானபுருஷார்த்தத்திலும் இதற்கு ஸ்வாதிகாரானுகுணமான உபாயத்திலும் வ்யவஸ்த்திதனானவனுக்கு

2 ' उत्तर पूर्वाघयोरश्लेष विनाशौ '

(உத்தர பூர்வாகயோ: அஶ்லேஷ விநாஶௌ)

என்கிறபடியே போய பிழையும் புகுதருவா நின்றனவும் தீயினில் தூசு ஆகும்.

ஆசிரிய விருத்தம்

3 ஊன்தந்து நிலைநின்ற உயிரும் தந்து
ஒருயிராகி உள் ஒளியோடு உறைந்த நாதன் *
தான் தந்த இன்னுயிரை எனது என்னாமல்
நல் அறிவும் தந்து அகலா நலமும் தந்து *
தான் தந்த நல் வழியால் தாழ்ந்த என்னைத்
தன்தனக்கே பரமாகத்தானே எண்ணி *
வான் தந்து மலரடியும் தந்து, வானோர்
வாழ்ச்சி தர மன்னருளால் வரித்திட்டானே. 32

திருமந்த்ராதிகாரம் முற்றிற்று

1 திருவாய்—3-3-1 2 சாரீரக ஸூத்—4-1-13 உத்தர பூர்வாகயோ:-உபாயம் அனுஷ்ட்டிக்கத் பிறகு உண்டாகக்கூடியபாபங்களுக்கும், அனுஷ்ட்டிப்பதற்கு முன்னால் செய்யப்பட்ட பாபங்களுக்கும், அச்லேஷ விநாசௌ - இவனிடத்தில் ஒட்டாமையும் நசித்தலும் வரும்.

3 சரீரத்தைக் கொடுத்து, நித்யமாய் நிற்கிற ஆத்மாவையும் கொடுத்து' அந்தச் சேதந அசேதந வஸ்துக்களுக்குள் தனக்கு ப்ரபை போன்ற லக்ஷ்மியுடன் வஸிக்கிற எல்லோருக்கும் ஸ்வாமியானவன் தானே கொடுத்த போக்யமான ஜீவாத்மாவை தனக்குச் ஶேஷபூதம் என்று சொல்லாமல் இருப்பதற்காக நல்ல புத்தியையும் கொடுத்து, பிரியாத ப்ரீதியையும் கொடுத்து, தான் கொடுத்த நல்ல உபாயமான ப்ரபத்தியினால் தன்னுடைய திருவடிகளை வணங்கினஎன்னை வேறொரு உதவியை அபேக்ஷிக்காமல் நம்மை ரக்ஷிக்கும் பரத்தைத் தன்னுடையதென்று கருதி பரம பதத்தையும் புஷ்பம் போல் போக்யமான தன் திருவடிகளையும் கொடுத்து, நித்ய ஸூரிகளின் வாழ்வைக் கொடுத்தருள ஒரு காலும் மாறாத தன் க்ருபையினால் அங்கீகரித்தான்-

த்வயாதிகாரம் என்னும் இரண்டாம் அதிகாரம்

நேரிசை வெண்பா

1 திருமாலடியிணையே திண் சரணுக் கொண்டு *
திருமாலடியிணையே சேர்வார் *—ஒரு மால்
அருளால் உருளாத வானோர்கள் வாழ்ச்சி *
அருளால் நமக்கு அளித்தார் ஆய்ந்து. 33

'திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்ட்டராவீர்' என்கிற பூர்வர்கள் பாசுரத்தின்படியே ப்ரதம ரஹஸ்யத்தில் ஸ்வஸ்வரூப பரஸ்வரூபாதிகளை அறிந்தவனுக்குப் பரதத்த்வமான ஶரண்யனையும் பரமஹிதமான ஶரணாகதியையும் பரமபுருஷார்த்தமான தத் கைங்கர்யத்தையும் விஶதமாக்கிக்கொண்டு ப்ரபத்த்யநுஷ்ட்டாந ப்ரகாரத்தை ப்ரதாநமாக ப்ரகாசிப்பிக்கிறது த்வயம். பூர்வோத்தர கண்டங்களாலே உபாய உபேயங்களைத் தெளிவிப்பிக்கையால் இதுக்கு த்வயம் என்று பேராயிற்று.

த்வயத்தின் ஸமுச்சயார்த்தமும் திருநாமத்திற்குக் காரணமும்

பூர்வ கண்டத்தில் ஸ்ரீ ஶப்தம் ப்ரஜைகள் பக்கல் வாத்ஸல்யாதிஶயத்தாலும், பதியின் பக்கல் வால்லப்யாதிஶயத்தாலும் புருஷகாரமாய்க்கொண்டு ஶரண்ய ஸஹதர்மசாரிணியான பிராட்டியைச் சொல்லுகிறது. எல்லோராலும் ஆஶ்ரயிக்கப்படும் என்றும், ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயித்திருக்கும் என்றும், ஆஶ்ரிதர் விண்ணப்பம்செய்யும் பாசுரங்களைக கேட்டு, ஸர்வேஶ்வரனைக் கேட்பிக்கும் என்றும், இவர்களுடைய தோஷங்களை எல்லாம் போக்கும் என்றும், தன்னருளாலே இவர்களுக்கு ஜ்ஞாநாதி குணபாகத்தை உண்டாக்கும் என்றும் ஸ்ரீ ஶப்தார்த்தத்தை ஶாஸ்த்ரம் சொல்லிற்று.

ஸ்ரீ சப்தார்த்தம்

மதுப்பு நித்ய யோகத்தைக் காட்டுகிறது. இது ஸாபராதர்க்கும் நினைத்த போதே நிஶ்ஶங்கமாக ஸர்வேஶ்வரனைப்

---

1 ச்ரிய:பதியினுடைய திருவடிகள் இரண்டையும் த்ருடமான உபாயமாக ஆச்ரயித்துப் பகவானுடைய திருவடிகள் இரண்டையும் ஆச்ரயிப்பவர்கள ஒப்பற்ற (தன் ஸங்கல்பத்தை மாற்றவல்லார் ஒருவருமில்லாத) பகவானுடைய க்ருபையினால் உருண்டு வர்ாத (மீண்டு வருவது இல்லாத) நித்ய ஸூரிகளுடைய வாழ்வை தங்களுடைய க்ருபையினாலே விவேகித்து நமக்குக் கொடுத்தார்கள்.

பற்றுகைக்கு உறுப்பாம்.

மதுப்பின் அர்த்தம் 1 ' உன் திரு '
2 ' அகல கில்லேன் '

இத்யாதிகளையும் இங்கே அநுஸந்திப்பது.

நாராயண ஶப்தம்

2 ' நிகரில் புகழாய் '

என்று தொடங்கி அருளிச்செய்த குண விஶேஷங்களையும் ஸம்பந்த விஶேஷங்களையும் காட்டிக்கொண்டு ஸர்வ வித பந்துவான

நாராயண சப்தார்த்தம் ஶரண்யனை ப்ரகாஶிப்பிக்கிறது.

' சரணௌ ' என்கிற பதம் ருசி பிறந்தபோது தைவ ப்ரக்ருதிகளோடு ஆஸுர ப்ரக்ருதிகளோடு வாசியறப் பற்றலாம்படி

சரணௌ பதத்தின் அர்த்தம் யான பொதுநின்ற பொன்னங் கழல்களைமுன்னிட்டுக் கொண்டு, ஶுபாஶ்ரய திவ்ய மங்களவிக்ரஹத்தைக் காட்டுகிறது.

' ஶரணம் ' என்றது

3 ' கழல்களவையே சரணுக '

4 ' நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்

5 ' நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேன் '

என்கிறபடியே அகிஞ்சநனான ஶேஷபூதனுக்கு அவலம்பநமான திரு

சரண சப்தார்த்தம் வடிகள் உபாய ஸ்த்தாநத்திலே

நிற்கிற நிலையைக் காட்டுகிறது. துயரறு சுடரடிகளாகையாலே அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்திக்கும் அவன் திருவடிகளே உபாயம் என்றபடி.

' ப்ரபத்யே ' என்கிற இடத்தில் தாது அத்யவஸாயத்தைக் காட்டுகிறது, ' ப்ர ' என்கிற உபஸர்க்கத்தாலே இதின் மஹத்தை சொல்லப்படுகிறது.

6' அடைக்கலம்புகுந்த '

---

1 திருவாய்10 - 10 - 2 2 திருவாய்6-10-10 3 திருவாய் 5-8-11
4 திருவாய்—5 - 10 - 11 5, 6 திருச்சந்த—90,92

1' அடிக் கீழ் அமர்ந்துபுகுந்தேன்'

ப்ரபத்யே பதத்தின் அர்த்தம் என்கிறபடியே மஹா விஶ்வாஸாதிகளுடனே கூடின பரஸமர்ப்பணம் பண்ணுகிறேன் என்றதாயிற்று.

2 'सकृदेव' (ஸக்ருதேவ)

3 'स्थिते मनसि' (ஸ்த்திதே மநஸி)

இத்யாதிகளிற்படியே ஸாங்க பரஸமர்ப்பணம் ஸக்ருத் கர்த்தவ்யம். உத்தம புருஷன்

1 'புகலொன்றில்லா அடியேன்'

என்கிறபடியே அதிகாரமும் ஸ்வரூபமும் தெளிந்த அநுஷ்ட்டாதாவைக் காட்டுகிறது.

இப்பூர்வ கண்டத்தில் சொல்லுகிற உபாயத்தைப் புருஷார்த்தாந்தரங்களிலே மடை மாறுதபடி

உத்தரகண்டஸ்ரீமச்சப்தார்த்தம் 4 'கண்டு கேட்டு' இத்யாதிகளில் சொல்லுகிற பரம புருஷார்த்தத்தைச் சொல்லுகிறது உத்தரகண்டம். 'ஸ்ரீமதே' என்கிறது

5 'கோலத் திருமாமகளோடு உன்னை'

இத்யாதிகளிற்படியே ஸர்வ போஷி ஸர்வாவஸ்த்தையிலும் ஸபத்நீகனாய்க் கொண்டு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாயிருக்கிற நிலையைக் காட்டுகிறது.

இங்குற்ற 'நாராயண' ஶப்தத்தாலே ப்ராப்யனான ஶ்ரியःபதியினுடைய ஸ்வாமித்வமும் ஸர்வ ப்ரகார நிரதிஶய போக்யத்வமும் ப்ரதாநமாக அநுஸந்தேயம்.

நாராயண சப்தார்த்தம் இதில் சதுர்த்தீ நித்ய ஸித்தமான தாதர்த்தயம் ப்ரார்த்தநீயமன்றுகையால்

1, 4 திருவாய்—6 - 10 - 10 2 ராமா—யுத்த - 18 - 33

3 வராஹ சரம ச்லோகம் - ம் பக்கம் பார்க்க)

4 திருவாய்—4 - 9 - 10

5 திருவாய்—6 - 9 - 3

1 ‘ வழுவிலா அடிமை செய்யவேண்டும் ’ என்று தாதர்த்த்யபலமாய் ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்தைக் காட்டுகிறது.

இங்குற்ற நமஸ்ஸு திருமந்த்ரத்தில் போலே இரண்டக்ஷரமும் இரண்டு பதமுமாய் ஒரு வாக்யமுமாய் எனக்காவேனல்லேன் என்றதாயிற்று. இத்தால் அவித்யா கர்மாதிகளான அநிஷ்டவர்க்கத்தையெல்லாம் கழியா நிற்கச் செய்தே இக்கைங்கர்யமும் மற்றுள்ள புருஷார்த்தங்களில் வரும் ஸ்வாதீந ஸ்வார்த்த கர்த்ருத்வ போத்ருத்வ ப்ரம ரூபமான களையற்று நின்ற நிலை ப்ரதாநமாக அநுஸந்தேயம்.

நம: சப்தார்த்தம்

இவ்வவாந்தர வாக்யங்கள் மூன்றும் கூட ஏக வாக்யமாம் போது அநந்யார்ஹ ஶேஷபூதனாய் அகிஞ்சநனான நான் ஸர்வாநிஷ்டங்களும் கழிந்து நிரதிஶயாநுகூலதையாலே ப்ரதாந ப்ராப்யனாய் நிருபாதிக ஶேஷியாகையாலேநித்ய கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாய்நிற்கிற ஸ்ரீமாநனநாராயணன் திருவடிகளில் ஸர்வ தேஶ ஸர்வ கால ஸர்வாவஸ்த்தோசிதமான ஸர்வ வித கைங்கர்யங்களைப் பெறுகைக்கு ஸ்ரீமாநனநாராயணன் திருவடிகளையே உபாயமாக அத்யவஸித்து ப்ரார்த்தநா பூர்வக ஆத்ம ரக்ஷா பரஸமர்ப்பணம் பண்ணுகிறேன்என்று ஒரு வாக்யார்த்தமாகிறது.

த்வயத்தின் வாக்யார்த்தம்

நேரிசைவெண்பா

சேர்க்கும் திருமகள் சேர்த்தியில் மன்னுதல் சீர்ப் பெரியோர்க்கு *
ஏர்க்கும் குணங்கள் இலக்காம் வடிவில் இணையடியைப் *
பார்க்கும் சரணத்தில் பற்றுதல் நன்னிலை நாம் பெறும் பேறு *
ஏர்க்கும் அவற்றினுளெல்லாம் களையற எண்ணினமே. 34

---

1 தான் புருஷகாரமாக இருந்து பகவானுடைய திருவடிகளிலே சேர்ப்பவளான லக்ஷ்மியின் ஸம்பந்தத்தினுடைய நித்யமாக இருத்தலையும், கல்யாண குணங்களினால் உத்க்ருஷ்டனான பகவானுக்கு (அகிஞ்சநனான அதிகாரியின் விஷயத்தில் உபாயாந்தர ஸ்த்தாநத்தில் நிற்பதற்கு) தகுந்ததான கல்யாண குணங்கள், ப்ரணாகதிக்கு உத்தேச்யமான திவ்ய மங்கள விக்ரஹத்தில் பரஸ்பர ஸதृசங்களான இரண்டு

1 திருமால் அடியிணை சேர்ந்து திகழ்ந்த அடிமை பெறத் *
திருநாரணன் சரண் திண் சரணுகத் துணிந்து அடைவோர் *
ஒரு நாள் உரைக்க உயிர் தரு மந்திரமோதிய நாம் *
வரு நாள் பழுதற்று வாழும் வகையதில் மன்னுவமே. 35

த்வயாதிகாரம் முற்றிற்று

திருவடிகளையும் அகிஞ்சநர்களான நமது அதிகாரத்திற்குத் தகுந்ததாகப் பார்க்கப்பட்ட உபாயானுஷ்டானத்தில் பிடித்துக் கொள்ளுதலையும், நல்ல இருப்பு, நாம் அடையும் ப்ரயோஜநம், அந்தப் பரம புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைவதற்குள் (இங்கிருந்த காலம் செய்கிற கைங்கர்யங்கள் இவை எல்லாவற்றையும் ஸ்வாதீந கர்த்ருத்வாதிதோஷங்கள் இல்லாமல் அனுஸந்தித்தோம்.

1 ச்ரிய:பதியினுடைய இரண்டு திருவடிகளையும் (பரம பதத்தில்) கிட்டி அனுபவித்து, கீழ் நிருபித்த தோஷங்கள் ஒன்றுமில்லாமல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற கைங்கர்யத்தை அடைவதற்காகத் திருநாரணனுடைய திருவடிகளை த்ருடமான உபாயமாக மஹா விச்வாஸத்துடனே பரஸமர்ப்பணம் செய்தவர்கள் நமக்காக ஒரு ஸமயத்தில் பரஸமர்ப்பணத்தைச் செய்ய ஜீவாத்மாவைத் தருகிற (ஆத்மா உஜ்ஜீவிக்கும்படி செய்கிற) த்வய மந்த்ரத்தை அப்யஸித்த நாம், அன்றிக்கே துணிவுடன் பகவானை ஆச்ரயித்த ஆசார்யர்களிடத்தில் ஓதிய, நாம் உபாயாநுஷ்டாநத்திற்குப் பிற்பட்ட காலத்தில் ப்ரயோஜனாந்தராதிதோஷமொன்றுமில்லாமல் வாழும் ப்ரகாரத்தில் ஸ்த்திரமாக இருப்போம்,

சரம ச்லோகாதிகாரம் என்னும் மூன்றாவது அதிகாரம்.

நேரிசை வெண்பா

1 மற்றொரு பற்றின்றி வந்தடைந்தார்க்கெல்லாம் *
குற்றமறியாத கோவலனார் *—முற்றும்
வினை விடுத்து விண்ணவரோடு ஒன்ற விரைகின்றார் *
நினைவுடைத்தாய் நீ மனமே நில்லு. 36

திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த உபாய விசேஷத்தை அதிகாராதிகளுடனே கூட விதிமுகத்தாலே வெளியிடுகிறது சரம ஶ்லோகம். இத்தால் ஸபரிகரமாஸுதுஷ்கரமாய்ச்சிர கால ஸாத்யமான உபாயாந்தரம் அல்பஜ்ஞனாய் அல்ப ஶக்தியாய் அல்பகாலவர்த்தியான தனக்குத் தலைக்கட்ட அரிதென்று ஶோகித்தவனுக்கு ஸாங்கமாகஸுகரமாய் ஸக்ருத் கர்த்தவ்யமான உபாய விசேஷத்தை உபதேசித்து நீ ஶோகிக்க வேண்டாம் என்கிறான்.

சரம ச்லோக க்ருத்யம்

'ஸர்வதர்மாந்' என்றது எல்லாத் தர்மங்களையும் என்றபடி. தர்மமாவது ஶாஸ்த்ரமே கொண்டு அறியவேண்டும அபிமத ஸாதநம். இங்கு தர்மம் என்றது கீழ்ச் சொன்ன பக்தியோகத்தை. இது பலவகையானபடியை பஹுவசநம் காட்டுகிறது. இவற்றில் ஒன்றும் ஒழியாமைக்காக ஸர்வ ஶப்தம். பரிகரங்களையும்கூடக்காட்டுகைக்காகவுமாம்.

ஸர்வதர்ம சப்தார்த்தம்

'பரித்யஜ்ய' என்றது துவக்கற விடுகையைச் சொல்லுகிறது. தர்மங்களை விடுகையாவது அவற்றினருமையைக் கண்டு நிராஶனுகை. 'பரி' என்கிற உபஸர்க்கம் ஸர்வ காலத்திலும் ஸர்வ ப்ரகாரத்திலும் யோகயதை

பரித்யஜ்ய சப்தார்த்தம்

1 (பகவானுகிய) தன்னைத் தவிர வேறு உபாயமில்லாமல் வந்து தன்னையே அடைந்தவர்களுக்கு எல்லாம் ஆச்ரிதர்களின் குற்றத்தை அறியாதவனான கோபாலனாய் அவதரித்த பகவான் எல்லாப் பாபங்களையும் போக்கடித்து நித்யஸூரிகளுடன் ஸமமான போகத்தையுடையவர்களாம்படி செய்யத்வரைப்படுகிறார். மனமே நீ இவ்வர்த்தத்தைத் தெரிந்து கொண்டு,நில் - ஸந்தேஹம் இல்லாமல் இரு.

இல்லையென்று நைராஶ்யாதிஶயத்தைக் காட்டுகிறது. அபிமத ஸாதநங்களில் ஶக்தனுக்கும் அஶக்தனுக்கும் இங்கு த்யாகம் விதிக்கக் கூடாமையால் இது அநுவாதம். ஸர்வ தர்மங்களினுடைய ஸ்வரூப த்யாகத்தை விதிகிறதென்கை பஹு ப்ரமாண விருத்தம். ஸாத்த்விக த்யாகமாத்ரம் விவக்ஷிதமானால் இங்கு த்யாக விஶிஷ்ட தர்மங்கள் அங்கங்களாக ப்ரஸங்கிக்கும். ஆகையால் த்யாக விதி கொள்ளப் பார்க்கில் ஸாத்விகத்யாக விஶிஷ்ட ஸர்வ தர்ம நைரபேக்ஷ்யாதிகளிலே தாத்பர்யம் கொள்ள உசிதம். ப்ரபத்திக்கு நைரபேக்ஷ்யம் சொன்னாலும் ஸ்வதந்த்ர விதியாலே வர்ணாஶ்ரம தர்மங்களிலும் நிலை குலையாது.

(த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா '

என்றதை ஸ்வபாவார்த்த ஶாஸ்த்ர ப்ராப்தங்களோடே பொருந்தக் கொள்ளவேண்டும்.

இப்படி அபிமதத்துக்கு வேறு கைம்முதலற்றுப் பற்றிலார் பற்ற நின்ற தன்னை 'மாம் ஏகம் ஶரணம்' என்கிறான். 'மாம் ஏகம்' என்கிறது என்னை ஒருவனையும் என்றபடி. விஹிதத்தினுடைய அநுஷ்ட்டாந ப்ரகாரத்தை ப்ரகாசிப்பிக்கிற த்வயத்தில் கண்டோக்தமான வைஶிஷ்ட்யத்தையும்,

மாம் ஏகம் பதங்களின் அர்த்தம்

(ஏஷ நாராயண: ஸ்ரீமாந்)

இத்யாதிகளையும் அடியொற்றி இங்கே அநுஸந்திப்பது. இங்கு ஆஶ்ரயணீயதைக்கு உறுப்பான ஸௌலப்யாதி குண பூர்த்தியையும் அதில் ஏகவசநமுண்டாயிருக்க மிகுதியான ஏகம் என்கிற பதத்தாலே இனிச் சுமையும் எடுக்காமைக்கு நிற்கிற நைரபேக்ஷ்யத்தையும் அருளிச்செய்கிறான். ஏக ஶப்தம் உபாய உபேயமாகத தான் நிற்கிற நிலையைக் காட்டுகிறதாகவுமாம். ப்ரபத்தியின் கர்த்தாவான தன் பக்கலிலும் தன் க்ரியையான ப்ரபத்தியிலும் பிறக்கும் ப்ராதாந்யபுத்தியைப்பராதீநத்வாதிகளாலேகழிக்கிறதாகவுமாம். நாநா வித தர்மங்களுக்கெல்லாம் ஸநாதந தர்மமான தானொருவனுமே எதிர்த்தட்டாக நிற்கிற நிலையைக் காட்டுகிறதாகவுமாம்.

சரணம்சப்தார்த்தம்

'ஶரணம்' என்றது உபாயமாக என்றபடி.

'வ்ரஜ' என்றது அடை என்றபடி என்னை ஒருவனையே ஶரணமாக அடை' என்கிற இத்தாலே அஶரண்ய ஶரண்ய

வ்ரஜ சப்தார்த்தம்

னான என் பக்கலிலே அத்யவஸாயாதி யுக்தமான ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணம் பண்ணு என்றதாயிற்று. மற்றும் கழிக்கிற உப யங்களுடைய ஸ்த்தாநத்திலே அகிஞ்சநனான ஶேஷபூதனுக்கு அவலம்பநமான திருவடிகள்நிற்கிற நிலையைக் காட்டுகிறது.

இப்படி ஆகிஞ்சந்யாதி விஶிஷ்டனான அதிகாரிக்கு அநுரூபமான க்ருத்யத்தைப் பூர்வார்த்தத்திலே விதித்துத் தன் க்ருத்யத்தை 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்றருளிச்செய்கிறான். இதில் 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற பதத்திலே நான் என்று தோற்றாநிற்க,

சரண்ய க்ருத்யமும் அஹம்சப்தார்த்தமும்

அஹம் ஶப்தத்தால் தன்னையொழிந்தாரில் தான் விலங்கிட்டு வைத்தவனுக்கு மோக்ஷம் கொடுக்க வல்லார் இல்லை என்றும், ஸ்வதந்த்ரனாய் விலங்கிட்ட தான் விலங்கை வெட்டிவிடும்போது விலக்க வல்லார் இல்லை என்றும் தனக்குள்ள வாசி காட்டுகிறான.

'த்வா' என்றது உன்னாலும் பிறராலும் உன்னை முக்தராக்கவொண்ணாதபடியைத் தெளிந்து ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியாய்ப் பரம காருணிகனான என்

த்வா சப்தார்த்தம்

பக்கலிலே பரந்யாஸம் பண்ணின உன்னை என்றபடி.

'ஸர்வ பாபேப்ய:' என்றது எல்லாப் பாபங்களினின்றும் என்றபடி. பாபமாவது ஶாஸ்த்ரமே கொண்டு அறியவேண்டிய

ஸர்வ பாப சப்தார்த்தம்

அநிஷ்ட ஸாதநம். இத்தால் பாப வர்க்கம் அநாதி கால ஸஞ்சிதமாய் அநேக ப்ரகாரமாக நிற்கிற நிலையைக் காட்டுகிறான். பாபங்களில் ஒன்றும் ஒழியாமைக்காக ஸர்வ ஶப்தம். இங்குப் பாப ஶப்தத்தாலே முமுக்ஷுவுக்கு அநிஷ்ட பல ஹேதுவான புண்யமும் ஸங்க்ருஹீதம். அவித்யாதி

களும் இங்கேஸங்க்ருஹீதங்கள். இத்தால் ப்ராரப்த வ்யதிரிக்த மான பூர்வாகத்தில் புத்திபூர்வ அபுத்திபூர்வங்கள் இரண்டுவகையும், ப்ராரப்தத்திலும் இவறுக்கு அநிஷ்டமாய் போகஹேதுவான அம்சமும், உத்தராகத்தில் ப்ராமாதிகாம்சமும், ஸங்க்ரஹிக்கப்படுகிறன. புத்தி பூர்வமான உத்தராகத்திற்குப் புந:ப்ரபத்தியை ப்ராயச்சித்தமாக சாஸ்த்ரம் சொல்லிற்று. இதுவும் கூட இங்கு ஸர்வ சப்தத்தாலே விவக்ஷிதமானல் ப்ராயச்சித்தத்திலே மூட்டியாதல் சிக்ஷா விசேஷங்களாலேயாதல் அவற்றையும் கழிக்கும். பக்தி தத்த்வ ஜ்ஞாநாபிவ்ருத்திகளுக்காகவாதல் பகவத் பாகவதார்த்தமாகவாதல் வரும் காம்யங்களொழிய மற்றும் வரும் காம்யங்களும் பாப கோடியில் அந்வயிக்கும். இதுக்குப் புந: ப்ரபத்தி பண்ணுதொழியில் பகவதநுபவ விச்சேதாதி ப்ரத்யவாயம்வரும். ப்ரபத்திக்கு அநந்தரமே முக்தராவார்க்கும் இருந்தாலும் ப்ரபத்தி பலத்தாலேயாதல் ப்ராரப்த ஸுக்ருத விசேஷங்களாலேயாதல் நிரபராதராயிருப்பார்க்கும் அபராதம் புகுந்தாலும் அநுதாபாதிகளாலே பிரிவு வருமாகையாலும், இல்லாதபோது ஹிதைஷியான சிக்ஷகன் புத்ர சிஷ்யாதிகளைப்போலே அல்பதண்டத்தாலே பிரிக்கப் பிரிவு வருமாகையாலும் சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கு எல்லாம் மரணமானல் வைகுந்தம் கொடுக்கும். பரமகாருணிகனுய் அவஸர ப்ரதீக்ஷனுன ஶரிய:பதி அஜ்ஞாத ஸுக்ருதாதிகளை முன்னிட்டுக் கொண்டு ஸத்த்வாதி விரோதிகளையும், ஆசார்யனைமுன்னிட்டுக் கொண்டு தத்த்வஜ்ஞாநாதிவிரோதிகளையும், புருஷகாரத்தைமுன்னிட்டுக் கொண்டு உபாய விரோதிகளையும், பக்தி ப்ரபத்திகளை முன்னிட்டுக் கொண்டு ப்ராப்திவிரோதிகளையும் கழிக்கும். இவ்விடத்தில் அத்யந்த அகிஞ்சநனுய் ஶோகித்தவனுக்குப் பரந்யாஸத்தை விதித்து "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கையால் இது ப்ராப்தி விரோதி விஷயம். இப்படி ப்ரஸாதநங்களாலே நிக்ரஹ நிவ்ருத்தி. நிவ்ருத்த நிக்ரஹனுன ஈஸ்வரனுலே ஜ்ஞாந ஸங்கோச நிவ்ருத்தி. இது தானே ஜ்ஞாந விகாஸ ரூபையான ப்ராப்தி.

'மோக்ஷயிஷ்யாமி' என்றது விடுவிக்கக் கடவேன் என்றபடி, இத்தால் ஸம்ஸரிக்கப்பண்ணிவைத்த ஸங்கல்பத்தை விடக் கடவன் என்றதாயிற்று. மோக்ஷத்துக்குப் பவிஷ்யத் காலத்து

க்கு ப்ரபந்நன் கோலி(ரி)னதுஎல்லை. ஆ ர்த்யதிஶயமுடையவனுக்கு ,அப்போதே பல ஸித்தி, ஆறுதலுடையவனுக்குத் தன்குறைவால் வந்த நாளிழவொழியப் பொருளிழவில்லை.

ஆகையால் 'மா ஶுச:' என் கிற வாக்யத்தாலே இனி உனக்கு ஶோகிக்க ப்ராப்தியில்லை என்கிறான். முன்பு ஶோகித்த இடம் அதிகாரத்தோடே கூடி குணமாயிற்று. மேல் ஹர்ஷஸ்த்தாநத்தில் ஶோகிக்கில் அநபிஜ்ஞக்ருத்யமாம். உன் அதிகாரத்துக்குப் பொருந்தாத உபாயாந்தரத்திலலையாதே அநாலோசித விஶேஷ அஶேஷ லோக ஶரண்யனான என்னையே உபாயமாக அத்யவஸித்து அடைக்கலம் புகுந்தஉன்னை அர்த்தி கல்பகனாய் அப்ரதிஹத ஸங்கல்பனான நான் ஸத்தாநுபந்திகளாய்ப் போந்த ஸர்வ விரோதி வர்க்கத்தினின்று விடுவித்து, ஸ்வ ஸ்வரூப ஆவிர்ப்பாவத்தை உண்டாக்கி, மேலாத் தேவருடனேகூட்டி, பிரியாது ஆள்செய்ய என்றும் மீளா அடிமை கொள்ளக் கடவேன், நீ இனி ஒன்றுக்கும் சோகியாதே

மாசுச: சப்தார்த்தம்

'நாவலிட்டு ழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே'

2: நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை'

3 'நமன் கூறு செய்துகொண்டு இறந்த குற்றம் எண்ண வல்லனே'

என்று அநுஸந்தித்து, யமவஶ்யத்வாதிகள் இல்லாமையாலும் கைங்கர்ய ஸாம்ராஜ்யம் கைபுகுகிறபடியாலும் ஸந்துஷ்டனாய், வருகிற நல் விருந்தைப் பார்த்திருப்பாரைப் போலே

4 'மாக வைகுந்தம் காண்பதற்கு என் மனம் ஏகமெண்ணும்'

என்று இரு என்று ஶரண்யனுக்கு அபிப்ராயம். இப்படி ஸத்யமான ஸத்யஸங்கல்பன் வாக்யத்தில் ஊன்றுதவன் விலக்க ஒண்

1 திருமாலை—1 2 திருவாய்—5 - 2 - 1
3 திருச்சந்த—116 4 திருவாய்—9 - 3 - 7

ணுதகால ப்ரவாஹம் கழியக் கழிய மேல் எந்த நிலை நிற்கப் போகிறோமோ என்று தளும்பும். இதில் விஶ்வாஸமுடையவன் ஸ்வயத்ந நிரபேக்ஷமாகக் கைங்கர்யத்திலே கடுக அந்வயிக்கப் போகிறோம் என்று மேன் மேலும் அதிப்ரீதனும். கத்யத்தில்

1 ‘ नित्यकिङ्करो भवानि ’

(நித்யகிங்கரோ பவாநி) என்றதறுதியாக இதில் பூர்வார்த்தத்தில் விஹிதத்தினுடைய அநுஷ்ட்டாந ப்ரகாரம், மேல் உத்தரார்த்தத்தின் தாத்பர்யப்ரகாரமும்.

1 எல்லாத் தருமமும் என்னை இகழ்ந்திடத் தானிகழாது *
எல்லாம் தனதென எல்லாம் உகந்து அருள் தந்த பிரான் *
கல்லார் மதக்களிறு ஒத்த வினைத் திரள் மாய்ப்பனென்ற
சொல்லால் * இனி ஒரு கால் சோகியாத்துணிவு உற்றனமே, 37

2 வினைத்திரள் மாற்றிய வேதியர் தந்தருள் வாசகத்தால் *
அனைத்தும் அறிந்த பின் ஆறும் பயனுமென அடைந்தோம் *
மனத்திலிருந்து மருத்தமுதாகிய மாதவனார்*
நினைத்தல் மனத்தில் அரிதாகி நின்ற நீள் கழலே. 38

எட்டில் ஆறிரண்டில் ஒன்றில் எங்கும் ஆறு இயம்புவார் *
விட்டவாறு பற்றுமாறு வீடு கண்டு * மேவுவார்

---

1 மோக்ஷத்திற்கு உபாயமான பக்தியோகம் முதலிய எல்லாத்தர்மங்களும் ஜ்ஞாநாதிகள் இல்லாத என்னை அலக்ஷ்யம் செய்து விட்டுப் போக, ஸர்வ தர்ம ஸமாராத்யனான தான் அலக்ஷ்யம் செய்யாமல் அந்தத் தர்மங்கள் எல்லாம் தனக்குப் பரமென ஸந்தோஷித்து க்ருபையினால் அத்தர்மங்கள் கொடுக்கக்கூடிய எல்லாப் பலன்களையும் கொடுத்தருளி உபகரித்த பகவான் கல் மயமான மதம் பிடித்த யானைக்கு ஸத்ருசமான ,அதாவது இந்த அபூதோபமையால் ஒருவராலும் ஜயிக்கமுடியாதது என்பது ஏற்படுகிறது, பாபங்களின் ஸமூஹங்களை நாசம் செய்வேன் என்கிற சரம ச்லோகமாகிற வார்த்தையினால் உபாயாநுஷ்ட்டானத்திற்குப் பிறகு ஒரு ஸமயத்திலும் துக்கிக்காமல் இருக்கும்படியான தைர்யத்தை அடைந்தோம்.

2 இந்தப் பாட்டுக்குக் கீழ் 215 ம் பக்கத்தில் அர்த்தம் காண்க.

3 திருவஷ்டாக்ஷரம், ஆறு பதங்களுடன் கூடிய த்வயம், அத்விதீயமான சரம ச்லோகம், இவற்றில் எல்லாவற்றிலும் உபாயத்தை உப

சிட்டரான தேசுயர்ந்த தேசிகர்க்கு உயர்ந்து மேல் *
எட்டு மூன்றும் ஊடறுத்தது எந்தை மால் இரக்கமே. 39

3 त्रिभिरनवधिकार्थं संगृहीतं रहस्यैः विपुलतरमतीनां व्यासतः ख्यापयिष्यन् ।
व्यतनुत रमणीयं वेङ्कटेशो वदान्यः समुचितरसिकानां सारसंक्षेपमेतम् ॥

த்ரிபிரநவதிகார்த்தம் ஸங்க்ருஹீதம் ரஹஸ்யை:
விபுலதரமதீநாம் வ்யாஸத: க்யாபயிஷ்யந் ।
வ்யதநுத ரமணீயம் வேங்கடேஶோ வதாந்ய:
ஸமுசித ரஸிகாநாம் ஸாரஸங்க்ஷேபமேதத் ॥

சரம ச்லோகாதிகாரம் முற்றிற்று

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेंकटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु
॥ श्रीरहस्यत्रयचुळकं संपूर्णम् ॥
॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

இப்படி கவிதார்க்கிக ஸிம்ஹமும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும்
வேதாந்தாசார்யருமான ஸ்ரீமத் வேங்கடநாதரால்
அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகளுள்

ஸ்ரீ ரஹஸ்யத்ரய சுளகம் முற்றிற்று

தேசிப்பவர்களும், அன்றிக்கே எட்டில்- திருவஷ்டாக்ஷரத்தில், ஆறு - ஆறு அர்த்தங்களையும், இரண்டில் - த்வயத்தில், ஒன்று - ப்ராப்யமும் ப்ராபகமும் ஒன்றே என்று, இலங்குமாறு - ப்ரகாசிக்கும் ப்ரகாரத்தையும் உபதேசிப்பவர்களும், பரித்யஜித்த உபாயங்களையும் அங்கீகரிக்கப்பட்ட உபாயத்தையும், ஸர்வபாபங்களினின்றும் விடுபடுகையையும் அறிந்து அதில் ஆதரத்துடன் இருக்குமவர்களும் இதுவே உபாயம் என்கிற விஷயத்தில் ப்ரமாதிகள் இல்லாதவர்களும் மிகுந்த தேஜஸ்ஸை உடையவர்களுமான ஆசார்யர்களுக்கு ச்ரிய:பதியினுடைய க்ருபை மேல் ப்ரதேசத்தில் நம்மைப் போன்ற மேட்டு நிலத்தில் ஏறிப் பாய்ந்து, இருபத்து நான்கு தத்த்வங்களின் பரிணாமமான சரீரத்தை ஸம்பந்தப்படாமல் அறுத்துவிட்டது.

1 த்ரிபி: - மூன்று, ரஹஸ்யை: - ரஹஸ்யங்களினால், ஸங்க்ரஹீ - சுக்கிச்சொல்லப்பட்ட, அநவதிகார்த்தம்-எல்லையில்லாத அர்த்தத்தை

யுடையதாய், விபுலதர மதீநாம் -விசாலமான புத்தியுடையவர்களுக்கு வ்யாஸத: - விஸ்தரமாக, க்யாபயிஷ்யந் - ப்ரகாசம் செய்யப்போகிறவராய், அதாவது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் என்னும் க்ரந்தத்தை அருளிச்செய்யப்போகிறவராய், (இந்த க்ரந்தத்தையிறே ஸ்வாமி தேசிகனே தம் அவதாரத்திற்குப் பரம ப்ரயோஜனமாய்க் கருதியது,) வதாந்ய: - பரமோதாரரான, வேங்கடேச: - வேங்கடநாதன் என்னும் ஆசிரியன், ஸமுசித ரஸிகாநாம் - உசிதமான அர்த்தத்தில் ஆசையுடையவர்களுக்கு, ரமணீயம் - மனோஜ்ஞமான, ஏதம் - இந்த, ஸாரஸங்க்ஷேபம் – ஸார ஸங்க்ஷேபம் என்கிற ஸ்ரீ ரஹஸ்ய த்ரய சுளகம் என்னும் க்ரந்தத்தை, வ்யதநுத - அருளிச்செய்தார்.